அகஸ்தியர் அருளிய

மணிகண்ட
கேரள சோதிடம்

(மூலமும்—உரையும்)

K. A. மதுரை முதலியார்
ஷண்முகானந்த புத்தகசாலை
பார்க்டவுன் மதராஸ்

உ

அகஸ்தியர்—அருளிய

மணிகண்ட
கேரள சோதிடம்

மூலமும்—உரையும்

இஃது

சுந்தர ஜெயவீர சூரபராக்கிரம கவிராஜ
கந்தசாமிபிள்ளை அவர்களும், நித்யானந்தசுவாமி அவர்களும்
உரை எழுதப்பட்டு,

காவரிபாக்கம்

பால சோதிட கணித நூல் புலவரும் சோதிட ஆசான் பார்க்கட் சோதி
டம் இன்னும் பல சோதிட நூல் கர்த்தருமான

மா. தெய்வசிகாமணி சோதிடர் அவர்கள்

பார்வையிடப்பட்டது

பதிப்பாளர் :

சண்முகானந்த புத்தகசாலை,

97, நைனியப்ப நாய்க்கன் தெரு, பார்க்டவுன், சென்னை-3.

ரிஜிஸ்டர் காப்பிரைட்] [விலை ரூ. 10

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1	முகவுரை	1
2	பூர்வவரலாறு	1
3	நூலின் சிறப்பு	2
4	மூக்கிய கையாள வேண்டிய முறைகள்	3
5	லக்ணஸ்புடம்	6
6	நக்ஷேத்ரம்	6
7	நவக்கிரக பார்வை	7
8	நோக்கினளவு	7
9	பாயிரம்	9
10	நூற்பயன்	10
11	அரிஷ்டகாண்டம்	11
12	நலந் தீங்கு காண்டம்	23
13	நஷ்டி	24
14	சதா முகூர்த்தம்	24
15	அற்பாயுட்காண்டம்	26
16	யோககாண்டம்	29
17	இராஜயோகம்	29
18	பேரியோகம்	34
19	ஏகசக்ராதிபன்	34
20	கெஜயோகம்	37
21	சாம்பிராஜ்ய யோகம்	38
22	பாலபலகாண்டம்	38
23	உறவுபகை சமன்	38
24	பலன் சொல்லும் விபரம்	39
25	தீர்க்கா யுட் காண்டம்	40
26	தீர்க்க வயது	40
27	பிரதியோககாண்டம்	45
28	ஏக சக்ராதிபன்	53
29	நரயோகம்	53
30	சதபாரியனுப் உலகாலும் அரசு	54
31	குமுதயோகம்	55
32	முரசயோகம்	55
33	சகடயோகம்	55
34	செல்வன்	56
35	தரித்திரன்	57
36	குருபகவான் சொன்னயோகம்	66
37	சுக்கிரன் சொன்ன யோகம்	72
38	அவயோகம்	89
39	சிவிகையோகம்	93
40	ஆயுர்யோகம்	94
41	கெண்டயோகம்	95
42	ஆயுள்காண்டம்	103
43	ராசிசர்க்கரம்	103
44	தீர்க்காயுள்	103
45	அற்பாயுசு	110
46	அற்பாயுள்	114
47	பிரதி அரிஷ்டகாண்டம்	118
48	தோஷ நிவர்த்தி	128
49	தனகாண்டம்	134
50	தனலாபம்	134
51	ரோககாண்டம்	138
52	ரோகமின்மை	138
53	தன நஷ்டம்	140
54	ரோகம்	142
55	புத்திரகாண்டம்	146
56	வெகுபுத்திரர்	151
57	மலடரிய	152
58	சகோதரகாண்டம்	157
59	மாதுருகாண்டம்	162
60	பிதுருகாண்டம்	167
61	களத்திர காண்டம்	173
62	தானுதி பலக்காண்டம்	178
63	திசை சக்கிரகாண்டம்	184
64	குருசொல்லுவது	184
65	சுக்கிரகாண்டம்	191
66	சுக்கிரன் சொல்லுவது	191
67	திரை பொசிப்பு மாரக காண்டம்	195

குரு-சிஷ்ய சம்பாசனை என்னும்

ஹஸ்த ரேகை சாஸ்திரம்



தற்காலம் எத்தனையோ ரேகை சாதிரங்கள் வெளி வந்திருக்கலாம் ஆனால் அது போல் இல்லாமல் இதனில் சிஷ்யன் முக்கியமான கேள்வி கேட்பதையும் குரு சொல்வ தும் வெகுவிமரிசையாக யிருக் கிறது தானே புத்தகத்தை வைத்து பார்த்துக் கொள்ள லாம். பிறருக்கும் சொல்லலாம். வெகு எளிய நடை யிலும் ஏராளமான படங்களுடன் தெளிவாகவும் சுலப மாகவும் மேனாட்டு அறிஞர்கள் பிரபல. மேதாவிகள் படங்களுடன் வெளிவந்து விட்டது சுமார் 400 படங் களுடன் அடங்கியது. பெரிய மேதாவியும் கைரேகை அனுபவம் வாய்ந்த நிபுணருமான சிவசுப்பிரமணியம் அவர்களால் இயற்றப்பட்டது.

விலை ரூ. 10

கிடைக்குமிடம் :-

சண்முகானந்த புத்தகசாலை பார்க்டவுன் சென்னை-3.

மணிகண்ட கேரள ஜோதிடம்

முகவுரை

பூர்வ வரலாறு :

ஆழி சூழ் இவ்உலகை ஆக்கியவன் இறைவன். முத்தொழில் தலைவனும், முக்கண்ணனும் முழுமுதற்சக்தியுமாகிய பரமேஸ்வரன் உலகை ஆக்கினார், உலகம் சுற்றிக்கொண்டேயிருந்தது. ஆனந்த மூர்த்தியாகிய பெருமான் நர்த்தனமிட்டவாறு ஆத்மாக்களை-சகல ஜீவராசிகளை ஆட-அசைய-வாழவைக்கிறார். மக்கள்-வனங்கள்-விலங்குகள்-யாவும் வாழ்கின்றன. வாழ்வின் தாத்பர்யங்களையோ அல்லது வாழ்க்கை தத்துவங்களையோ வாழ்க்கையில் ஏற்படும் மாறு பாடுகள் உயர்வு-தாழ்வு-நன்மை தீமைகள்-சுபம், அசுபம் இந்யாதி களையோ அறிந்து மக்களினம் அதற்கு ஏற்றபடி நடக்கிறதா? என அறியவேண்டி மோன நிலையில் அமர்ந்தார். நிஷ்டையிலிருக்கும் பரமேஸ்வரனை அனுகினாள் பார்வதி காரணம் புரியாமல் கணவர் ஏன் அமைதிநாடி நிஷ்டை ஏற்றார் என புரியவில்லை உடனே உமைக்கு ஒரு யோசனை கிளம்பியது. வில்வபத்திரத்தை யெடுத்து சுவாமியை அர்ச் சிப்பதுபோல் பொன்மேனியில் வர்ஷீத்தால், மெய்யில் மெல்லிய வில்வ இலைகள் மென்கரங்கலால் வர்ஷிக்கப்படுவதை பார்த்தார் பரமன். அகமகிழ்ச்சியோடு கண் திறந்தார். உமையவளான பார்வதிதேவி யைப் பார்த்தார்! பரமேஸ்வரன் அவள் புன்னகைப் பூத்தாள்! பரமேஸ் வரன் பார்வதியின் புன்னகையின் பொருளை புரிந்து கொண்டார். மெல்ல சிரித்தார் சிவபெருமான், காரணத்தை விலக்குவதைப்போல் பார்வதிக்கு சொல்ல ஆரம்பிக்க—அதே நேரத்தில் அங்கே அகஸ்தியமுனிவர் வர அவர் வணங்கி எழுந்து பரமேஸ்வரர் கூறுவதை கேட்கலுற்றார். அதாவது உலக படைப்பின் தத்துவத்தையோ, வாழ்க்கையின் சென்ற கால-எதிர்கால பலன்களையோ மக்களறியாமல் உழல்கிறார்கள் என அறிகிறேன் அதற்குறிய வழிக்கே இந்த நிஷ்டை, ஆகையால் அவர் களுக்கு உணர்த்தவேண்டியிருக்கும் அவ்வுண்மைகளுக்கு தகுதியான வர் யாவர்? அவர்களுக்கு வேண்டிய சக்திகள் எப்படி அனுகிரகிப்பது என்பதே இப்போதைய நினைவு என பரமேஸ்வரன் கூறினார் உடனே பார்வதிதேவியார் ஸ்வாமி! நம் திருக்குமாரர்களில் விநாயகன், சுப்பிர மணியன் ஆகியோர் இருக்கிறார்களே அவர்களை இத்தொழிலுக்கு அனுப்பி அனுகிரகிக்ககூடாதா? அதற்கு பரமேஸ்வரன் அவர்கள் பூ

உலகில் போல் மானிட உருவில் உணர்ந்துவது எளிதன்று, இதோ இருக்கும் அகஸ்தியனும் நம்குமாரர்களுக்கு சமமானவன், அவனே பூ உலகில் பழகியவன். அவன் மூலம் அதை உலகம் அறியட்டும் என்ருர். சந்தோஷித்த உமை உடனே அகஸ்தியனுக்கு ஆசீர்வதித்தாள் பரமேஸ்வரன் ஆசி கூறினுர்.

பரமேஸ்வரன் மொழிந்ததை தண்டனிட்டு கேட்டு அதன்பின் ஆசியும்பெற்று பூலோகம் வந்தார் மக்கள் வாழ்கிருர்கள். இதையெல்லாம் பார்த்த அகஸ்தியர் மக்கள் தங்கள் வாழ்வதை-அனுபவிக்கும் பயன்களின் நோக்கம் இவைகளை அறியக்கூடிய ஒரு சக்தி இல்லை என்பதை வெகுவாக புரிந்துகொண்டவருய் தான் வணங்கும் தனிப்பெரும் தலைவரான முருகக்கடவுளை நினைத்தார். அந்நினைவினுடே தெற்கேயுள்ள திருச்செந்தூர் விறைந்தார். இறைவனைப்போற்றி இறைவனே! எந்தையே! அடியேன் சந்தேகத்தை நிவர்த்திக்க இறைஞ்சுகின்றேன். அதாவது பூமண்டலத்தில் ஜனனமாகிற ஆண், பெண் ஆகியவற்றின் நலம், தீமை, அசுபம், இவைகளை தெறிந்து கொள்ளுவதெப்படி என்பதறிய உம்மை வேண்டுகிறேன் என்ற உடன் முருகக்கடவுள் அகஸ்தியரிடம் தன் பக்தியைக்காட்ட, உடன் அகஸ்தியர் முருகக்கடவுளின் பத்தியாராகிய நாயகியாரை வணங்க கேட்கலுற்றும், அவர் உபதேசித்து அறிவித்தவைதான் இந்த ஜோதிடநூல்.

நூலின் சிறப்பு:

தவயோகிகள்-முனிபுங்கவர்கள் - சித்தசிரோன்மணிகள் ஆகியோரெல்லாம் சோதிடநூலைப்பற்றி தர்க்கித்து அதனை நிலை நிறுத்தினர் ஆனல் தற்போது இந்நூல் மிகவும் சிதறுண்டுபோய்விட்டதெனலாம். காலவெள்ளத்தில் இது இயற்கை ஜோதிடம் கூறுவோர் காலை கடன்களை முடித்து பூஜை நைவேத்தியங்கள் நடத்தி பின் சத்தியம் தவருமல் பிறருக்கு சொல்லவேண்டும். மனிதன் தன்கால நிலையை அறிவதற்கே சோதிடம் கேட்கிருன். ஜோதிடர்களிடம் அவன் எதிர்பார்ப்பது முக்யமாக அவனுடைய எதிர்காலத்தையே! ஆகையால் ஜோதிடர்கள் ஜாதகனுடைய குறிப்புகளை வைத்துக்கொண்டு ஒழுக்கமுடனும் உயர்ந்த நோக்குடனும் கூறவேண்டும். கிரகநிலை-கிரகபலன்கள்-ஆகியவைகளை ஜோதிட சாஸ்திரத்தில் இருக்கும் பாடல்களைக்கொண்டு அக்கால

நிலையை உத்தசித்து சூழ்நிலைக்கேற்ப பலன்களை கூறி ஜாதகனை மகிழ்விக்கலாம். தெய்வ வழியில் வந்த சிறப்புடையதாகையால் இந்த நூல் தகுந்தமுறையிலும், போதிய சான்றுகளும் கொண்டவை, நடந்தகாலம் நிகழ்காலம்-எதிர்காலம் ஆகியமுக்காலங்களுக்கும் மூலகருவியாகஉடையதே ஜோதிடநூல். பலசிறப்புகள் கொண்ட இந்த சாஸ்திரம் ஆதி பரம்பரை சொத்து எனலாம். மக்களை உலகில் நம்பிக்கையுடன் வாழவைக்கவும். அவர்கள் ஆறுதல் தேறுதல் ஆகியவற்ருேடு உலகில் நடமாடுவதற்கு முக்ய வழிகாட்டி. மக்கள் தங்கள் அபிலாஷைகள், நம்பிச்கைகள் நற்பண்புகளையும் கொண்டு துலங்கவும் இத்தகைய நூல்களே உலகில் வழிகாட்டியாக இருந்துள்ளது. இந்த ஜோதிடநூலின் பயன் அவரவர்கள் தங்கள் நிலைகளை உணர்ந்தவர்களாகி வாழ்ந்துவருவதற்கும், அவர்களின் நிலைமையில் எப்படி மாற்றங்கள் வருகிறது என்று அறிவதற்கும் மாற்றங்களுக்கு ஏற்றபடி தங்களை தயார்செய்துகொள்வதற்கு போதிய படிப்பினை இதிலுண்டு.

முக்கிய கையாளவேண்டிய முறைகள்:

இதனை பிறருக்கு (ஜோதிடம் கூறும்போது) தெரிவிக்கையில் லக்ன ஸ்புடம்-நடசத்திரஸ்புடம்-கிரகஸ்புடம் கிரக அடைவு பார்வை, சேர்க்கை, சத்ருமித்ருநட்பு, உச்சம் பகை நீச்சம், மண்டலம், சாரம், சமயம் பருவம், காலச்சக்கரம் அட்டவர்க்கம் முதலியவைகளால் ஆராய்ந்து நல்லபடி கூறவேண்டும். அவரவர்கள் சக்திக்கேற்ப கொடுக்கும் காணிக்கையே பெற்றுக்கொள்ளவேண்டும். அதைவிட்டு ஜோதிடம் சொல்பவர் பசியுள்ளபோதும் நித்திரை நேரத்திலும், அகாலங்களிலும், பிணியுற்றபோதும். காலை கடனை முடிக்காதபோதும், ஸ்நானம் செய்யாதும், கூறுவார்களேயாயின் பயன் சிறிதும் ஏற்படாதென்று அறியவும். மேலும் இச்சோதிடத்தை சாஸ்திரநம்பிக்கையற்றவனும் தெய்வபக்தியற்றவனும், ஜோதிடம் கூறுகையில் கேலிபேசுபவனும், கபட வேடதாரியும் கேட்டால பலன்கிடையாது. துர்க்காரியம் செய்வதற்கு கேட்போர், பத்னிதுரோகம்-ராஜதுரோகம்-குருதுரோகம்-மாதாபிதா துரோகம் சினேகதுரோகம் போன்ற துரோகங்கள் செய்பவற்கள்-முடியுமா முடியாதா என கேட்போர் புதையில், கிடைக்குமோ கிடைக்காதோ, பெண்ணை கன்னி வைக்கலாமா என்று வினவுவோர், ஆகியவர்களுக்கு இந்நூலை உரைக்ககூடாது பாபம் செய்

வோர். யாவரும் தங்கள் பாபநிவர்த்திக்கு ஏது தேடிக்கொள்ள துடித்து காலத்தை எதிர்ப்பார்த்திருக்கிலாம். அவ்வகையினருக்கு தகுந்த வற்றை உடனுக்குடன் இந்நூலின் உதவியால் அறிந்து கூறலாம்.

உலகின் கண் உற்பத்தியாகும் ஆண்மைகோடிகள் பல்வேறு யோனிபேதங்களைக்கொண்டு ஜனிப்பது பார்வதி குமாரன் ஸ்ரீ சுப்பிர மணியக் கடவுளருளாளேயேதான். அகஸ்தியர் சகல லோக சம்பிர தாயங்களை அறிய ஆவல் மேலீட்டால் திருசெந்தூர் குமரனை வேண்ட அவர் கூறியதாவது சோதிடத்தால் அறியக்கடவர் மாந்தர் அதாவது ஜோதிடம் கூறும் இரகசியம் யாதெனில் சூரியமார்க்கத்தில் சென்று முக்தியடைபவர் புண்ணியர் எனவும் பாபாத்மாக்கள் சந்திரமார்க்கத் தில் சென்று தமதுவினைகளுக்கு ஏற்ப ஜனன, மரணங்களையடையவர், அவ்வாறு தோன்றலாம் தரித்திரம் தீமை-நன்மை-யோகம்-துற்குணம்-அற்பாயுள் தீர்க்காயுள், போன்றவற்றை யடைவார்கள் இதனையறிதல் பொருட்டே ஆகாயத்தில் நட்சத்திரங்கள் சிருட்டிக்கப்பட்டன என்றும் உறைத்தார். என பண்டைய சாஸ்திரங்கள் ஏட்டுச்சுவடி மூலமாக தெளிவாக்குகிறது. மனோதத்துவ சாஸ்திரங்களிலும், இரேகை சாஸ்தி ரங்களிலும் நிகழ்காலங்களைத்தான் அறியலாம் முக்யமாக, மேலும் அறியமுடிந்தாலும் எதிர்காலத்தைப்பற்றி சிறிது அறியலாம் ஆனால் இந்த ஜோதிட நூல் ஒன்றிலே மட்டுந்தான் கடந்தகால மர்மங்களை ஸ்பஷ்டமாக அறியமுடியும். இப்பூமண்டலத்தில் பிறக்கும் மனித ராசிகள் யாவும் செயல். குணம், நிறம், பால். உருவபேதம், அறிவு ஆகி யவைகளால் மாறுபட்டுள்ளதல்லவா ? அதன் மூலகாரணம் யாதெனில் மக்களாகப்பட்டவர்களின் கர்மவினைதான் என சுறுக்கமாக கூறப்பட் டுள்ள ஒரு கருத்தை பொதுவாக யாவரும் அறியும்படி தெளிவாக்கி உரைக்கப்பட்ட பொக்கிஷம் தான் ஜோதிட சாஸ்திரம்! இந்த ஒப்புய வர்வற்றநூல் ஆதியில் பல வேதரிஷிகள் மக்களிடம் பரவவேண்டி பிர சாரம் நடத்தியதாகக்கூட உண்மையான உரைகள் பல ஏட்டு சுவடி கள் எழுதப்பட்டுள்ளது. ஜோதிடர்களின் மன நிலை என்றும் ஒரு பண்பை யிழக்காமல் இருந்து இந்நூலின் உட்பொருள் கருத்துக்களை நிதானமாகவும் தெளிவாகவும் கேட்பவர்களுக்கு எடுத்துக்கூறி நல்ல பயனடைய செய்யலாம். அவர்களின் தாழ்வுகால நிலைகளைக்கூட சூட்சமமாக உபதேசித்து அதன்படி அவர்கள் புரிந்துக்கொள்ளவும் செய்யமுடியும். நம் சரீரமானது, எலும்புகளாலும நரம்புகளாலும், தசைகளாலும் கட்டிய ஓர் வீடாகும். எலும்பாகிய கழிகளை நரம்பாகிய

கயிற்றால் கட்டி, தசையாகிய கூரையால் மூடி காற்றென்றும் ஓர் ஜீவனை அதனுள் குடி வைத்திருக்கிறது. இக்கட்டிடமானது நாம் பூமியிலு தித்தவன்றே. கட்டடம் முடிவடைந்ததாக எண்ணுதல்கூடா; அக்கட் டடத்தில் அநேக குறைகள் இருக்கிறது. சிலருக்கும் சுமார் ஒரு வருஷம் பொருத்த பிறகே ஓர் பல் முளைக்கும் சிலருக்கு இரண்டு வருடம் கழிந்த பிறகே, தவழும் சக்தியுண்டாகிறது. இவ்விதம் நாம் ஆராயச்சி செய்வோமானால், சிலநாள் கழிந்த பிறகே அந்த கட்டி டம் முடிவடைகிறது எனத்தென்படுகிறது இதுபோலவே நம் தேகத்தி லுண்டாகும் வியாதி செய்கை குணம் இவைகளை, கவனிக்குமிடத்து இவைகளுக்கு காரணம், உஷ்ணத்தைப் பெற்று சூரியனாலும் குளிர்ச்சி யைப் பெற்ற சந்திரனாலுமேயாம் நாம் எந்நேரமும் உஷ்ணமாகிய சூரிய வெளிச்சத்திலேயே இருப்போமானால், நம் திரேகத்தில் ஓர் வித வியாதியுண்டாகிறது. சந்திரனுடைய குளிர்ச்சியிலேயே இருப்போ மானல் ஓர்விதமான குளிர்ச்சியுண்டாகிறது. இப்படி சூட்டினாலும் குளிர்ச்சியினாலும், ஓர்விதப் பக்குவமடைந்து வருங்காலம் நாளுக்கு நாள் அதிகமடைத்தால், பருவகாலம் ஒன்றோம். சிலர் திரேக உஷ்ணம் மதீகமாகியும், சிலர் திரேகம் குளிர்ச்சியுடையதாயும் இருப்பதையும் நாம் காண்கிறோம். இவ்வாறே பெண்களுடைய திரேகத்தை கவனிக் குமிடத்து, அவர்கள் திரேகமாகிய கட்டிடம் முடிவடைந்துவரும்போது, அவர்களுடைய திரேகமும் சூடடினால், குளிர்ச்சியாலும் பொருந்தி யுள்ளது. அப்படிப்பட்ட குளிர்ந்த திரேகத்தின் மீது சூரியன் தன் முழு கிரணத்தோடு, தன் சுவாலையை அப்பருவ பக்குவமுடைய பெண்ணின் மீது வீசுவானாகில், அவள் திரேகத்திலுள்ள பித்தந்தினால் அதிகமாகி ரத்தம் வெளியாக வரும் மார்க்கம் தேடுகிறது. உஷ்ணதேகத்தின்மீது, சந்திரனுடைய குளிர்ச்சி தன் முழுகிரணந்தோடுரைத்தாலும், இவ்வித மேற்படுகிறது. ஆனால் அவ்வுதிரமானது பல வழிகளில் வெளியாக வழியுண்டெனினும் அவ்விதம் வேறுவழியில் மேல்நோக்கிச் செல்லுமா கில் ஓர்வித ஆபத்துண்டாகி மரணத்திற்கேதுவாகும் அதனாலேயே கடவுள் தன் மர்மஸ்தானவழியாய் வெளியாக்குகிறார் அதையே ருது எனப்படும். அது முதல்மாதத்திற்கொருமுறை, மாதவிடாயாகி வருகிறதுஎனெனில் அனுதினமும் சூரியன் உஷ்ணமும் சந்திரன் குளிர்ச்சியும் உண்டெனினும் அவரவர்கள் உடலில் மருபடியும் அவ்வு திரம் சேர சுமார் ஒரு மாதங்களாகிறது. இப்படியே தன் திரேகமாகிய கட்டிடம் தளர்ச்சியடைந்து இரத்தவிருத்தி குறைந்துபோகிறபடியால்

அந்த ஸ்ரீகளுக்கு மாதந்தோருமுண்டாகும் மாதவிடாயும் நின்றுவிடுகிறது. சிலருக்கு தன் திரேகத்திலேர்ப்படும் வியாதியால் மத்தியகாலங்களிலும் நின்றுவிடுகிறது, சிலருக்கு தன் தாய் கெர்ப்புத்திலுண்டாகும் பிணியால்தான் பருவபக்குவமடைந்த பின்னங் கூட, அவள் திரேகத்தை இந்த உஷ்ணமும் குளிர்ச்சியும் ஒன்றும் செய்யக்கூடாமையா எந்த நாளும் அவ்வாறில்லாமலேயே நின்று விடுகிறது. முன் சொல்லியபடி தாராளமாய் அவ்வுதிரம் வெளிவரவே அக்காலத்தில் அத்துவாரமானது அதிகமாகிறது, அதை ருது என்கிறோம் ஜோதிடர்களும் யான் சொல்வது யாதனில், ஒவ்வொர் நாளையும் முன் சொன்ன சூரியனும், சந்திரனும் பூரண கலையுடன் தன் முழு கிறகணமுண்டாகும் தரத்தை கண்டு பிடித்துக்கொண்டால் ருதுநேரம் என்று தீர்மானிக்கலாமாகையால் நீங்கள் சூரியன் சந்திரன் இவர்கள் தன் உச்சகிரகண காலத்தைக் தெரிந்து அக்காலப்படி லக்ணமெடுத்துருது பலன் சொல்ல வேணுமாய் கோருகிறேன் இவை என் கற்றறிவுக் கேற்றவாறு. எழுதியனவாதலால் கற்றுத் தெரிந்தோர் குற்றமிருக்கின் மன்னிக்கக் கோருகிறன்.

லக்ண ஸ்புடல்

உதையாதி நாழிகையை 4 ஆல் பெருக்கி அதனோடு ஜெனன ராசி சரமாகில் சரம் 5 ஸ்திரம் 10 உயரம் 15 எனக்கூட்டியும் ஸ்திர ராசியாகில் ஸ்திரம் 10 உபயம் 15 எனக்கூட்டியும் மொத்தமாக்கி 27ஆல் வகுத்த மீதியை கஜனன காலப்போது சுக்ல பக்ஷமாகில் அஸ்வனி முதலாகவும் கிருஷ்ணபக்ஷமாகில் அவிட்ட முதலாகவும் எண்ணி வரும் நக்ஷேத்ரமும் ஜெனன நக்ஷத்திரமாகவோ அல்லது அதற்கொன்பதாம் நக்ஷேத்திரமும் அத்ரக்கொன்பதாம் நக்ஷேத்ரமாக வரின் அவை உதையாதிகை சரி எனவும், மாருக வரில்முன்னாகவும் பின்னாகவும் கழித்தும் காடடியும் மேற்சொன்னபடி பார்பதேயாகும்.

நட்க்ஷத்ரம்

அஸ்வணி	மகம்	மூலம்
பரணி	பூரம்	பூரம்
கார்த்திகை	உத்ரம்	உத்ராடம்
ரோகணி	அஸ்தம்	திருவோணம்
மிருகசிரம்	சித்திரை	அவிட்டம்
திருவாதிரை	சுவாதி	சத்யம்
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி
பூசம்	அனுஷம்	உத்திராட்டாதி
ஆயில்யம்	கேட்டை	ரேவதி

மேர்சொன்னபடி 9க்கு 9ஆம் நக்ஷேத்ரங்கள் வரின் அந்த நாழிகை சரி என்பதாகும் இப்பால் ராசிகள் 12க்கும் சரம் ஸ்திரம் உபய மென்பவைப் பின்வருமாறு :

12 உபயம் 15	1 சரம் 6	2 ஸ்திரம் 10	3 உபயம் 15
11 ஸ்திரம் 10			4 சரம் 5
10 சரம் 5			5 ஸ்திரம் 10
9 உபயம் 15	8 ஸ்திரம் 10	7 சரம் 5	6 உபயம் 15

இவ்வாறிந்த பிறகு அவன் ஜெனன நட்சத்திரம் அறிந்து அந்த நட்சத்திரத்தில் சென்றவை போக இருப்பு நாழிகையைக் காண வேண்டுவது அவசியம் நக்ஷேத்திரத்தையும் ஸ்புடம் செய்வது உத்தமமாகும்.

நவக்கிரக பார்வை

இரவிக்கும் சசிக்கும் புகர் புதர்க்கும் ராகு கேதுக்கும் ஏழேயாம் கருணைதீயர், நாலேழெட்டு. சுவிக்கும் பொன்னன் ஐந்தேழொன்பது, குவிக்கும் சனிக்கும் முன்றேழுபது என்ற வாக்யபடி சூரியனுக்கும் புதனுக்கும். சந்திரனுக்கும் கக்ரன் ராகு கேது இவர்களுக்கு 7ஆம் வீடு பார்வை குஜனுக்கு நான்கு 7, 8 இவ்விடம் பார்வையாகும் குருவுக்கு ஐந்து ஏழு ஒன்பது பார்வையாகும், சனிக்கு 3 7 10 பார்வை எனப்படும்

நோக்கினளவு

தோற்றுமதி பொன்னவனு மெதிர்ராக நோக்கும்
சூரியனும் செவ்வாயுங் கடைக்கண்ணால் நோக்கும்
சாற்றியமால் வெள்ளி தலைக் கவிழ்ந்து நோக்கும்
நனி பாம்புமொரு கண்ணுற்ருன் பார்க்குமென்பர்
போற்றிரவிபுகர் செவ்வாயிராகு சனிதிங்கள் என்பதாம்.

இவ்விதமாக ஆதார மேற்கோள்களைக்கண்டு ஜாதகம் பார்க்க தகுதியடைந்தவர்களானவர் இந்த அகஸ்தியர் மணி கண்ட கேரளம் எனும் திவ்ய ஜோதிட பூர்வீக நூலை படித்து அதனை ஜோதிட முறையில் விளக்கவேண்டும்.

இதில் உள்ளவை யாவும் செய்யுட்களே, அந்த செய்யுட்களின் கீழ் பொழிப்புரையை கருத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆதலில் அதனை பாவத்துடன் கிரகித்து பலன் சொல்லுதல் வெண்டும். அவ்விதம் சிறப்பு முறையில் நூலை படிப்பதனாலும் அதன் பலனை பிறருக்கு தெரிவிப்பதனாலும் இப்புனித நூலின் பலாபலனை திறமையும் கேட்டு அறிந்துகொள்ளுவதனாலும் ஏற்படும் சுபங்களை சொல்ல இயலாது. இந்த ஜாதக நூலை சொல்பவர்-பலனை கேட்பவர் இருவகையாகும் முருகனுடைய திவ்ய அருளை பூரணமாகப்பெற்று ஒழுகுவர்.

இங்ஙனம்,

தங்கள் அன்பன்

மா. தெய்வசிகாமணி சோதிடர் அவர்கள்

அகஸ்தியர்—அருளிய

மணிகண்ட கேரள சோதிடம்

(மூலமும்—உரையும்)

(பாயிரம்)

பார்வதிவாணிலக்ஷிமி பரமேசன்பிரமன்விஷ்ணு
கார்முகன் கந்தனேழு கனத்ததோரிஷிகடங்கள்
சீர்பதந்தெண்டனிட்டுத் தெரிசித்தல்வேண்டல்செய்தே
ஓர்மதியுதையங்கொண்டிங் குற்றதுகூறலுற்றும்.

(இ-ள்) உலகெலாம் படைத்தருளிய பரமனையும் அவரின் பத்தினியாகிய பார்வதாதேவியும் கல்வியை ஆபரமாக அணிந்திரா நின்ற, வீணையேந்தும், சரஸ்வதியும், ஆதியுல், இவ்வுலகத்தை தந்தருளிய, ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பத்தினியாகிய லஷ்மிதேவியும் சிருஷ்டி யென்னும் தொழிலையுடைய பிரம்மதேவனையும், ஆதிசேட சயனனென்னும் ஸ்ரீமகாவிஷ்ணுவையும், மேகத்தைப்போன்ற இருண்ட முகத்தையுடைய விக்னேஸ்வரனையும் சூரசம்மாரம் செய்வற்கே ஒருருவாயவதரித்த கந்தவேலையும் தெண்டனிட்டும் மன உண்மைக் கருத்தோடு தெரிசித்து பணிந்தும், இவ்வுலகோர்க்கு பூர்ண சத்திரன் பிரகாசிக்கும் காலம் எவ்வண்ணம் சந்தோஷிக்குமோ அதுபோல் சந்தோஷமடையும் வண்ணம், உண்மையான மொழிகளைக் கூறுவோம் எ று.

வி-ரை. இந்நூலானது அகஸ்தியரானவர், இப்பரதகண்டத்தின் ஓர் பகுதியான செந்தமிழ் நிறைந்த, திருசெந்தூரென்னும் நகருக்கு அடிக்கடி வருவார் போவாராயினும் உலகத்தில் ஜெனித்த சிலர் தரித்திரராகவும் சிலர் செல்வந்தராகவும் சிலர் அழகிய சரீர உறுப்பினராகவும் சலர் கூன், குருடு, செவிடு, பேடி முதலிய பின்னமுடைவராகவும் சிலர் வைராக்கியமுடையவராகவும் சிலர் கோபமில்லாத சாந்தமுடையவராகவும் இன்னும் பற்பலவாறு ஒருவர்க்கொருவர் பேதப்பட்டிருப்

பதைக் கண்ணுற்று. இச் சம்பிரதாயங்களை எவ்விதத்தாலரியலாமென யோசித்து முடிவில் கணித ஆராய்ச்சியாகிய சோதிடத்தினுலேயே அறியலாமென தீர்மானித்தும் இவையாவும்.

நல்லதோர்வேதமூர்த்தி நாதனுர் சொன்னநூலாம்
வல்லதோர்கிரந்தவாக்கிய மதையிந்தமாநிலத்திற்
சொல்லதுதெரியாதார்க்குந் தமிழ்சொன்னசீரூர்வேத
வல்லவன்சோழிநூலில் வகுத்தலங்காரந்தானே.

(இ-ள்) இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் சிவ சுப்ரமணிய கடவுளாலேயே அறியலாமென தீர்மானித்தார். ஏனெனில் உயிராகிய இரவி என்னும் பரமசிவன் புத்திரனுன சிவகிப்ரமண்ய கடவுளென்றும் சகல தேவர்களாலும் வெல்லுதற்கரிய அறிய சத்ருசங்காரனும் நமச்சிவாயாவென்னும் பஞ்சாக்ஷரத்திற்கு மூலாதாரமான ஐம்பத்தோரக்ஷரத்திற்கு ஆதாரமான பிரு திவு என்னும் நகரமாகிய குருவென்னும் பிரகஸ்பதியையும், அப்பு வென்னும் மகாரமாகிய சுக்கிரனையும் தெய்வென்னும் சிகாரமாகிய குஜனையும் வாயுவென்னும் வகாரமாகிய புதனையும் ஆகாயமாதிய யகாரமாகிய சனியையும் இப்படித் தவத்துவார்த்தங்களை யமைத்த அகார. உகார. இகார, மகார, விந்து நாதமே ஆதாரமாய் இடைபின்கலை, சுழிமுனை என்னும் அறிய கயிற்ருல மேற்சொன்ன நவகோட்டைகளையும், சரியாய் நிறுத்தி, நல்வினையிடமாய் வரும் மக்களுக்கு சவுக்கிய சந்தோஷமும் தீவினையிடமாய் வரும் மக்களுக்கு துன்பம் வறுமை மனஸ்தாபம் முதலியவைகளையும், தந்தருளிய சிவசண்முகக்கடவுளே கண்கண்ட தெய்வமெனத் தீர்மானித்து அவரை யனுகிகேட்க, அவர் தமது பத்தினியைக் காட்ட அவ்வம்மையார் உபதேசித்தபடியால் இந்நூலை நம் போன்ருேர் காணும் பொருட்டு இந்த நூலை உறைத்தருளினுராகையால் முதன் முதலாக பார்வதி என்னும் தமது அன்னையின் பெயரைக் கூறலாயினுர் என்றறிக.

நூற் பயன்

செகத்தினிலுதித்தபேர்க்குச் செல்வமும்பகையுங்காண
மிகுந்ததோர்துயரந்தன்னின் மிகயோகமதிப்புங்கண்டு
யுகத்தினிடக்குங்கர்மம் வேதனுண்டாக்கிச்சொன்ன
***விதத்திலுள்ளபேர்க்கு விவரமேதெரியச்சொல்வாம்.**

***விதக்தினுலென்பது இனிவெதுகை இவ்வெ துகைஇந் நூலில் பெரும்பாலும் வருவன காண்க.**

(இ-ள்) இப்பூவுலகிலுதித்தோர்களில் செல்வம்பகை வருமை கொடிய துயரம் யோகம் யோகமுண்டாகுங் காலம் அவன் ஆயுளிலுண்டாகும் கருமம் இவைகள் ஏற்கெனவே ஒவ்வொருவருக்கும் கடவுளால் ஏர்ப்படுத்தப்பட்டனவாயினும் அவையுண்டாகுங் கால விபரங்களை வேதமூர்த்தியின் திருவருளால் இங்கு விபரமாக கூறுவாம் எ-று.

நூல்

அரிஷ்டகாண்டம்

பாலாரிஷ்டம்

உதித்ததுவிரையமெட்டி லொளிர்மதியரசன்கூடித்
திதித்தனிநின்ருராகிற் றிறபலனுறுதியாகும்
கதித்தவராறெட்டாகிற் கடினமாய்க்கண்டமுண்டு
விதித்ததியாண்டீரிரண்டில் விளையுமேதீம்பாய்மாதே.

12	ல 1	2	3
11	இராசி12		4
10			5
9	8	7	6

(இ-ள்) ஜெனன லக்கிணத்திற்கு 12-8-ஆம் ராசிகளில் பிரகாசத்தையுடைய சந்திரனும் குருவும் கூடியிருக்க அல்லது மேற்சொன்ன ஸ்தானங்களில் ஒருவருக்கொருவர் சகிதமின்றி தனித்திருந்தாலும் அவன் ஆயுளுண்டு. சுப கோட்கள் ஜெனனலக்கினபதி இவர்கள் 6 8-ஆம் ராசிகளிலிருப்பாரேயாமானுல் கட்டாயம் கெண்டமுண்டு. அவை அவன் ஜெனித்த 12-ஆம் வருஷம தீம்பும் கெண்டமு முண்டாகுமென்றுங் கூறுக எ-று. 1

மந்தன்சேயிருவர்கூடி யிருந்திடத்ததுவுந்தீது
அந்தெதிரிடமுமாகா தறுதியாய்த்தீம்புண்டாகும்
உந்தவர்நான்குமூன்று மோரெட்டும்பத்துநோக்க
அந்தமாய்நினைப்பர்கண்டா யாறிருமாதந்தன்னில்.

(இ-ள்) சனியோடு குஜன்கூடி எந்த ராசியிலிருந்தாலும், துன்பமேயுண்டாகும் மேற்சொன்ன இரண்டு கிரகங்களும் ஒருவருக்கொருவர் நோக்கினுலும் தீதே விளையும் சுபகோட்க்கள் சுகஸ்தானம் சகோதரஸ்தானம் ஆயுள் ஸ்தானம் காரியஸ்தானம் இவ்விராசிகளை நோக்குவரேல் அந்த ஜாதகன் ஜெனித்த ஒரு வருடத்திற்குள் துன்பம் கிடைக்கும் எ-று.

வி ரை. குஜனும் சனியும் கூடில் துன்பம் என்பது சனிக்கும் குஜனுச்குமுள்ள சத்ருத்துவத்தினு லென்பதாம் நோக்கமுற்றிருந்தாலும் கூட அவர்களுக்குள்ள விரோதத்தால் பகையே செய்வார்கள் அவர்கள் 4 3 8 10 இவ்விடங்களைப் பார்த்தால் ஒரு வருஷத்திற்குள் துன்பங்காடடும் என்றது. அவர்கள் 6 8 12-ஆம் இராசிகளிருக்கக்கூடாதென்பது சாஸ்த்திர சித்தம் சுபர்கள் திரிகோணங்களிலேயே நிற்கின் சுப பலனுண்டு.

வலமதிலரவங்காரி வந்திடத்ததுவுந்தீது
குலமதிலீன்றசுற்றங் குடியதமாகச்செய்யும்
பலனதுசெய்யுந்தீது பன்னிரண்டாண்டிற்காணும்
சலமதுவாகத்துன்பஞ் சலிப்பிடனிருப்பன்மாதே.

(இ-ள்) ஜெனராசிக்கு வலப்புறத்தில் அவையாவன: 6 ராசிக்குள் சந்திரனும் இராகுவும் சேர்ந்து இருப்பார்களானல் கொடியதேயாம். அதன் பலனென்னவெனில் அந்த ஜாதகன் ஜெனித்த 12 வருஷங்களுக்குள் தன்னை ஈன்ற தாய் வம்சத்தாரையும் சுற்றத்தாரையும் இல்லற முதலியவைகளையும் அதம் செய்யும். ஷ 12 வருஷம் வரையிலுமே துன்பம் சலிப்பு இவையாவும் உண்டாகும் எ-று. 3

வி-ரை. சந்திரனோடு இராகு சேர்வது கிரகணதோஷ மென்பர். சந்திரன் மாதுரு காரகனுகையால் தாய்வம்சத்தாருக்கும் தாய்க்குமே கொடிய தோஷம் உண்டு இத்தோஷம் நீங்கும் நீங்காதென வறியவேண்டில் 4-ஆம் வீட்டோனுலும் நாம்காம் வீட்டுலிருக்கும் கோட்களாலும் நிலை கூறவேண்டும்.

கரும்பாம்புஞ்சனியுங்கூடிக் கலந்துடனிரவிநிற்க
வரும்பாடுபிதுர்க்குத்தோஷம் வகைவங்கிசத்தைகொல்லும்
திரும்பாதுதீதாய்நிற்குந் தீன்கொன்பதாண்டிற்கொல்லும்
கரும்பூதமறைந்திட்டாற்போற் கலங்குவன்புவியின்மாதே

(இ-ள்) கேதுவோடு சனிசேர்ந்திருக்க அவ்விருவரோடு சூரியன் சகிதம்பெற பிறந்த ஜாதகன் பிதாவுக்கு அவன் ஜெனித்த 9 ஆண்டில் பிதுர் வங்கிசத்தாரையும் பிதாவையும் கொல்லும் மேலும் கொடிய துன்பங்களும் உண்டாகும். பிதுர் குடும்பமானது பூதம் கண்டது போல அலைந்து திரியும் எ-று.

வி-ரை. சூரியன் பிதுருகாரகனுகையால் சூரியனோடு கேது சகிதமாவது கொடியதென்பது இந்நூலுடையார் கொள்கை. ஆயினும் திரிகோணமான 9 ஆம் இராசியில் சூரியனுவது அல்லது அந்த ஸ்தானுதிபதியாவது பலம் பெற்றும். 9 ஆம் இராசியை உச்சம் ஆக்ஷி, நட்புபெற்ற சுபகோட்க்களால் பார்க்கப்படுமிருந்து, மேற்சொன்ன சூரியனோடுகேது சகிதம் பெற்றிருந்தாலும் தோஷம் செய்யாது.

பூமனுமதியுங்கூடிப் புகுத்திடப்புந்திதானும்
சோமனுக்கேழிற்காரி சோபித்துநின்ருனுகில்
மாமனுமாதுருவம்ச மடியுமேயிருமூன்ருண்டிற்
காமனுக்கினியமாதே கருத்திலார்க்குரைக்குங்காலே.

(இ-ள்) குஜனோடு சந்திரன் சகிதம் பெற்றிருக்க அவர்களோடு புதனும் சகிதம் பெற்றிருக்க சந்திரன் நின்ற ராசிக்கு 7 ஆம் இராசியில் சனி பலம்பெற்று நின்றிருப்பானுகில் அவன் தாயுடன் பிறந்த மாமனும் அந்த வம்சத்தார்களும் அவன் ஜெனித்த 6 வருடங்களுக்குள் மறிப்பரென்று மன்மதனுக்கு அன்பும் ஆசையுமுடைய பெண்ணே கொடிய கிரகங்களைப்பற்றி இவ்வாறு சொல்வாயாக எ-று.

வி-ரை. புதன் அம்மான் காரகனும் சந்திரன் மாதுரு காரகனுமாகையால் சந்தரனுக்கு 7ல் சனி நின்றதாலும் புதன் குஜனோடன் சகிதம் பெற்றதாலும் அம்மான் வகையார் தோஷம் சொல்லப்பட்டன.

சுங்கனுஞ்சனியுங்கூடச் சூரியன்வந்துநிற்கப்
பொங்கமாயவர்க்கேயேழிற் புகுந்திடப்பூமனும்
அங்கனேவிவாகங்கூடி யோராண்டிற்றீம்புண்டாகும்
இங்குள்ளமாதர்கட்கு மிவன்சோரபுருஷனுமே

(இ-ள்) சுக்ரனோடு சனியும் சூரியனும் கூடி இருக்க அவர்களிருந்த ராசிக்கு 7ஆம் ராசியில் குஜன் நிற்க. அந்த ஜாதனுக்கு விவாகமாகிய 1 வருஷத்திற்குள் தோஷத்தைக்காட்டும், மேலும் அவ்வீட்டிலுள்ள ஸ்ரீகளை சோரத்தனம் செய்யும் கொடியவனுக மிருப்பான் எ-று.

வி-ரை. சுக்கிரன் களத்ரகாரகனுவான் சுக்கிரன் எந்தராகியிலிருந்தாலும் சனி சம்மந்தப்படுவது கொடிதாகும் அவர்கள் நின்ற ராசிக்கு 7ல் குஜனிருக்கில் மேற்சொன்ன சுக்கிரனையும் சனியையும் குஜன் முழுநோக்குடன் பார்ப்பான். ஆனதால் விவாகமான 1 வருஷத்திற்குள், அவன் மனைவிக்கு தோஷம் காட்டும் என்பதே இச்செய்யுளின் கருத்து.

மன்னவனிரவிகூடி மனைக்கேழிற்காரிசெவ்வாய்
நின்றிடிற்றீம்பேதென்னி னில்லாதுபுத்திரவம்சம்
அன்னதிற்சோமன்கூடி லவன்பிதுதாய்க்குமாகா
தென்றவர்சொன்னதீம்ப தேழிரண்டாண்டிற்றுனே.

(இ-ள்) குருவும் சூரியனுங்கூடி ஓர் ராசியிலிருக்க அவர்கள் நின்ற ராசிக்கு 7ம் ராசியில் சனியும் குஜனும் கூடியிருக்க. அவர்களால் விளையும் துற்பலனென்னவெனில் அந்த ஜாதகனுக்குப் புத்திரவம்சமானது நாசமாய்ப்போம். மேற்சொன்ன குரு சூரியனோடு சந்திரனும் கூடி இருப்பாரேல் அவன் தாய் தந்தையருக்காகாது. அத்தோஷமானது அந்த ஜாதகன் ஜெனித்த 14வருஷங்களுக்குள் காட்டும்எ-று.

துலக்கமாய்வெள்ளிமூன்றிற் றேன்றியேயொருவர்பாரா
நலக்கமில்லாமநின்றுல் ஞசமாங்குலமுந்தீதாய்க்
கலக்கமில்லாமநின்ரு கருவற்றுமனையும்பாழாம்
விலக்கவுமொருவராலே விண்ணிலுமில்லைமாதே.

(இ-ள்) பிரகாசத்தையுடைய சுக்கிரனும் புதனும் சேர்ந்து ஜெனன ராசிக்கு 3ஆம் ராசியிலிருக்க அவர்கள் சுபவர்க்கமடையாமலும் வேறு கிரகங்கள் பாராமலிருந்தால் அவன் வம்சமானது நாசமாய்ப்போய் விடும் அன்றியும் அவன் வர்க்கமானது புத்திர விருத்தியின்றி யும் அவன் ஜெனித்த மனை முதலியவைகளும் பாழாய்ப்போகும். அதை விலக்க நவகோட்க்களாலும் விண்ணுலகத்தாராலும் மூடியாது எ-று.

இணக்கமாய்க்காரிசெவ்வா யிருவருங்கூடிநின்ற
அணைகந்தமனையுமேழு மம்பலமாகிநிற்கும்
வணக்கமுநன்மைசெய்யார் வருமதிற்றீம்பேயுண்டாம்
இணைக்கரிசெய்வர்கண்டா யீராறுமாதந்தன்னில்

(இ-ள்) குஜனும் சனியுங்கூடி இருப்பார்களேயானல் கொஞ்ச மேனும் நன்மை என்பது கிடையாது. அக்குடும்பத்தில் கொடிய துன் பமே விளைந்துக்கொண்டிருக்கும் அவன் ஜெனித்த 1 வருஷம் வரை யில் கொடிய துன்பம் சூதகப்பீடையும் காட்டும். ஷ கோட்க்கள் நின்ற 7ஆம் இராசி எந்த வர்க்கத்தாருடையதோ அந்த வர்க்கத்தா ரும் நாசமாய்ப்போவார் எ-று.

வி-ரை. அணைக்கள் தமனைக்குமேழு மம்பலமாகி நிற்கும் என்றத னல் அவர்கள் நின்ற ராசிக்கு ஏழாம் ராசிக்குடையவரும் நாசமாய் போவார் என்றனவாம்.

முணிநிற்செவ்வாய்நிற்க மும்மூன்றிற்காரிசேரக்
காணுமேயுடன்பிறப்புக் கடினமாய்க்கெண்டமுண்டு
நாணியேபிதுர்க்குக்கண்ட நாலுதிங்களிலேகாணும்
வேணுமென்பகையோர்பார்க்கின் விளைவதுதீம்பைந்தாண்டில்.

(இ-ள்) சகோதர ஸ்தானமாகிய 3ஆம் இராசியில் குஜன் நிற்க 9ஆம் இடமென்றும் பிதுருஸ்தானத்தில் சனி இருக்க அந்த ஜாதக னுக்கு உடன் பிறக்கும் சகோதரனுக்கு கண்டம் சம்பவிக்கும் அவன் பிதாவுக்கும் 4 மாதத்திற்குள் கெண்டாதி பீடைகாட்டும், 9ஆம் ராசிக் காவது 3ஆம் ராசிக்காவது பகைகோட்கள் நோக்குவரேல் ஜெனித்த 5 ஆண்டுகளில் கட்டாயமாய் கொடிய துன்பம் உண்டாகும் எ-று

வி-ரை சகோதர ஸ்தானத்தில் குஜன் நின்ருல் அந்த ஜாதகனுக் குப் பிறகு ஜெனிக்கும் சகோதரனுக்கு கண்டம் என்பது கணிதவல் லோர் பலரும் சம்மதிப்பர். ஆயினும் அந்த ஜாதகனுக்கு இரண்டாவ தாம் ஜெனிக்கும்குழவிக்கு மாத்திரம் மேல் சொன்ன தோஷம் உண்டேயன்றி அதன்பிறகு ஜெனிக்கும் சகோதரர்களுக்கும் அதற்கு மூன்ரும் ராசியைக் கொண்டே சொல்லவேண்டியது முறையாகும்.

பத்தினிற்சனியும்நிற்கப் பனிமனியீனமாக
ஒத்துநாலிரவிநிற்க வோரேழிற்பூமன்சேர
மற்றுளோராறெட்டாக மரணமாங்குழவிமாதா
அற்றவன்றிரவுதன்னி லாகாது மனைக்குந்தோஷம்.

(இ-ள்) ஜெனன ராசிக்கு 10ஆம் இராசியில் சனி நிற்க இறவிற் கரசனுகிய சந்திரன் நீச்சம்பகை அஸ்தமயம் முதலியவைகளால் ஈன மடைந்திருக்க நான்காமராசில சூரியனிருக்க சப்தம ஸ்தானமென்கிற 7ஆம் இராசியில் புதனிருக்க மற்றுமுள்ள கோள்கள் 6 8 இவ்விடங் களிலமர்ந்திருப்பார்களேயானல் அவனைப் பெற்றதாய் இறந்துபோ வாள். அந்த ஜாதகனுதித்தது நிசியாகில் அவன் ஜெனித்த மனைக்கே தோஷம் எ-று.

உதித்தவராறிற்காரி யுடையவனீனமாக
எதிர்த்ததோரேழிநின்ற இரவியும்பெலத்துநிற்கப்
பதிக்குருவுடனேபூமன் பற்றியேநின்ருனுகில்
பிதுர்க்கொருதீம்பாய்பெற்ற பிள்ளையுமரணமாண்டில்.

(இ-ன்) உதய ராசிக்காருமட்டமென்னும் ரோகஸ்தானத்தில் சனி நின்ற ராசிக்குடையவன் தன்பலமிழந்துமிருக்க ஏழாமிராசியில் சூரியன் எவ்விதத்திலாயினும் பலம் பெற்றிருக்க, ஆக்ஷிபெற்ற குருவுடன் புதன் சகிதம் பெற்றுமிருந்தால் அவன் ஜெனித்த ஒரு வருஷத்தில் அந்த குழவியும் அவன் தந்தையும் மரணமடைவார்கள் எ-று. 12

அஞ்சுடனுயர்ந்த வீட்டிலம்புலிசனிபுங்கூட
மிஞ்சியேவிடத்திற்பூமன் வெங்கதிரிரவிநின்ருல்
கொஞ்சமாய்ப்பாட்டன்பாட்டி குலமுளோர்குழவிமாதா
வஞ்சியேமூன்றுமாத மடிவதுநிசமேமாதே.

(இ-ள்) ஜெனனராசி முதலைந்து வீட்டிற்க்கப்பால் சனியும் சந்திர னும்மிருக்க 7ஆம் ராசியில் புதனும் சூரியனுமிருக்க அந்த ஜாதகனும் பாட்டன் பாட்டி அவன் தாய் முதலியோர் அவன் ஜெனித்த 3 மாதத் தில் கட்டாயமாய் மடிவார் என்று அழகு பொருந்திய பெண்ணே கூறு வாயாக எ-று. 13

ஏழுடனிரண்டுவீட்டா னிருவருமஸ்தமிக்கத்
தாழ்வுடன்மதியுமாறிற் றலைவனுமுதையங்காரி
சூழிடம்பாம்புபின்சேய் சுங்கனுங்கூடிநின்ருல்
வாழ்வுடன்குலைந்துவந்த குழவியுமரணமாண்டில்.

(இ-ள்) ஜெனனராசிக்கு 7ஆம் வீட்டோனும் இரண்டாம் வீட் டோனும் அஸ்தமயமடைந்திருக்க ராது கேதுக்கள் அங்காரகன் சுக்ரன் ஜெனன ராசிக்குடையோன் சனி இவர்கள் ஒரே ராசியிலிருப்பார்களே யானல் அவர்கள் வாழ்க்கைக் குலைவதோடு ஜெனித்த குழவியும் 1 வருஷத்தில் மறிக்கும் எ-று. 1

எட்டிணிலரசன்சேர விதற்கேழிற்சுங்கனிற்க
மட்டியிற்சோமன்மூன்றின் மனையவனீனமாக
எட்டினிலுதையங்காரி தொனிப்பவன்பூமன்கூட
விட்டிடுங்குழவிசீவன் விரையமாய்க்கொஞ்சநாளில்.

(இ-ள்) ஜெனன ராசிக்கு 8ஆம் ராசியில் சுக்கிரனிருக்க 7ஆமிட மென்னும் சகோதர ஸ்தானத்தில் சந்திரனிருக்க சந்திரனின்ற வீட்டிற் குடையவன் ஈனமடைந்திருக்க ஜெனன ராசியிலேனும் எட்டாமிராசி யிலேனும் சனி இருக்க அவனோடு புதனும் சகிதம்பெற அந்த குழவி ஜெனித்த சில நாளையில் மரணமடையும் எ-று. 15

இன்பமாய்லாபலாபத் தினியவரஸ்தமிக்கில்
ஒன்பதிற்சனியேநிற்க வொருநான்கிற்செவ்வாய்சேர
அன்பதாய்விரையலாப மரசனுஞ்சுங்கனீனம்
துன்பமாய்மதியுமானுற் சொற்றனங்குழவிபோமே.

(இ-ள்) ஜெனன ராசிக்கு 1 ஆம் வீட்டோனென்னும் லாபாதிபதி யும் அதற்கு 11ஆம் விட்டோனென்னும் ஜெனனராசிக்கு 9ஆம் வீட் டோனும் அஸ்த்தமய மடைந்திருக்கவும்ஷெ 9ஆம் ராசியில் சனி நிற்க ஜெனனராசிக்கு நான்காமிராசியில் குஜன் சம்மந்தப்பட்டகுருவும் லாபா திபதி விரயாதிபதி சுக்கிரனும் ஜெனனகாலப்போது சந்திரனும் ஆக ஐவரும் ஈனமடைந்திருந்தால் அந்த குழவியானது உடனே இறந்துப் போம். 16

சிறந்தவன்மதியுமீனஞ் க்ஷீணமாயரசன்சுங்கன்
மறந்துடனிருந்தாராகின் மற்றதீக்கோளார்மேலாய்
இறந்துடன்போகச்செய்வ ரிதுகுறிதப்பாமாதே
அறிந்துகோணிணைவதாகி யவனியிலுதித்தபேர்க்கே.

(இ-ள்) சிறப்பு பொருந்திய வென்மை பிரகாசத்தையுடைய சந்திரன் மீனராசியிலிருக்க குருவும் சுக்கிரனும் க்ஷீணம் பேற்றிருக்கவும் மற்றுமுள்ள கொடிய கோட்கள் எந்த ஸ்தானத்திலிருந்தாலும் அந்த குழவியானது தவருமல் இறந்து போம். மேற்சொன்னபடி கிரகங்கள் அமர்ந்திருக்க ஜெனித்தோர்கள் மறிப்பதில் சந்தேகமில்லை. எ-று. 17

உலகினிலுதித்தபேர்கட் கொளிர்மதியரசன்சுங்கன்
கலக்கமில்லாமனின்றுற் கண்டவன்மதிவீட்டானும்
நிலமதிலுறவேயாகி னிச்சயநன்மையுண்டு
சலமதாய்த்தீயர்தீம்பாய்ச் சாகவுமொட்டார்மாதே.

(இ-ள்) உலகில் ஜெனித்தோர்களுக்கு பிரகாசத்தையுடைய சந் திரனுக்கும் குரு சுக்கிரன் இவர்கள் கொடியக்ஷேத்ரங்களிளும் பார்வை முதலியவைகளால் தன் வலி விழக்காதிருக்கவும் சந்திரனின்ற விட்டோ னும் உறவு க்ஷேத்ரங்களிலிருக்கவுமானுல் அந்த குழவிக்கு நன்மையே உண்டாகும், தீய கோட்கள் கொடிய க்ஷேத்ரங்களிலிருந்தாலும் கொல்லமாட்டார் எ:று. 18

ஒருசுபன் மிகுத்திருந்தா லொட்டார்கடீயர்சூழ்ந்து
இருசுபர்மிகுத்திருந்தா லீரெட்டாப்பகையேசெய்வார்
திருநலமானோர்நன்மை தீயருங்கிட்டார் தூரம்
பெருசுபர்நாலேயாகிற் பேர்சொலக்காணுர்தீயர்

(இ-ள்) சுபகோட்க்களில் யாரேனு மொருகிரகம் வலுபெற்றிருக்கு மேயாயின் தீயகோட்க்கள் எவ்வித தீமையும் செய்ய இடமில்லை இரண்டு சுப கிரகங்கள் வலுபெற்றிருக்குமாகில் 6,8 ஆம் ராசி குடை யோர் தீயக்ஷேத்ரங்களிலுமிருந்தால் கொடிய பலன்செய்ய இடமுண்டு 3 சுபகிரகங்கள் வலுபெற்றிருப்பார்களயானுல் எவ்வித தீயகோட்களும் அருகில் வரமாடடார் நான்கு சுபகிரகங்கள் வலுபெற்றிருப்பாரேயானுல் கொடியோர் என்று பேர் சொல்லவும் கிடைக்கார் எ-று.

உதையாதிசுங்கன்ராஜ னொளிர்மதிபதியுநல்லோர்
இதமில்லாப்பாபியந்த னிரவிசேயெட்டேன் பாம்பும்
இதுவைந்துபேருமாகு மெழிற்புதன்சமனேயாகும்
இதிலாகுநன்மையெண்ணி யினிப்பலன் சொல்லாய்மாதே

(இ ள்) ஜெனனராசி யதிபதியும் சுக்கிரன் குரு வளர்பிறைச் சந் திரன் இவர்கள் நல்லோரெனவும் சூரியன் அங்காரகன் 8ஆம் ராசிக் குடையோன் இராகு கேது இவர்களை வரும்பாபி எனவும் பெருமை பெற்ற புதன் சமன் என்றும் அழகு பொருந்திய பெண்ணே இவர் களால் கவனித்து பலன் சொல்வாயாக எ று 20

உதித்தற்கெட்டோன்காரி மதிக்கெட்டோன்பகையாய்நிற்க
மதித்தந்தவிடத்தினின்ற மன்னரும்பகையேயாவர்
கதித்தவர்மேலால்நின்றுற் கண்டமுந்தோஷமுண்டு
பதித்துடன்மாறிநின்றுற் பாவமுமில்லைமாதே

(இ-ள்) ஜெனன ராசிக்கு எட்டாம் வீட்டோனும் சனியும் சந்திர னின்ற ராசிக்கு 8 ஆம் வீட்டோனும் பகைப்பெற்று நிற்பார்களே யானுல் மேற்ச்சொன்ன கிரகங்களின் ஆட்சி வீடுகளிலிருக்குங் கோட் களும் பகைவரே யாவர் கொடியோர்கள் வலி பெற்றிருப்பரேல் அக் குழவிக்கு கெண்டங்களும் தோஷமும் காட்டும் கொடியோர்கள் மேற்ச் சொன்ன கோட்களின் ஆட்சி வீடுகளிலின்றிமாறி நிற்பார்களே யானுல் தோஷமில்லை. எ-று 21

**இப்படியுறினட்பாட்சி யுச்சமுமிழ்ந்துபோகும்
பொய்படவிருந்தபேர்கள் கோய்பகைநிசமானால்
நற்படியாகிநின்று நலந்தரும்வகையேசெய்வார்
சொற்படித்தப்பாதாகுந்தொபுவியோர்க்குமாதே**

(இ-ள்) மேலே சொன்ன சனி 8ஆம் வீட்டிற்குடையோன் சந்திரனுக்கு 8ஆம் வீட்டோன் முதலியவர்கள் மேற்சொன்னடியே அமர்ந்திருப்பார்களேயானால் அவர்கள் நடப்பு ஆட்சி உச்சமாயிருக்கினும் அவர்கள் தன் வலுவை இழந்த போவார்கள் கொடிய கோட்க்களாயினும், (அ)மேலே சொன்னகிரகங்களே ஒருவருக்:ஒருவர் சேர்க்கையின்றி தனி யநின்று நிச்சம் பெற்றிருந்தாலும் அவர்கள் நற்மலனும், சந்தோஷத்தையுமே விளைப்பார் இவை இப்பூமியிலுதித்தோர்க்கு தப்பாது உண்மையாகும் எ-று,

**புந்தியோநிவர்க்குநாலி லிருந்திடகுற்றமுண்டு
அந்தெதிர்சோமநின்றா லவனுக்கேயீனமுண்டு
வந்தித்தவடைவேயாகில் வருமதிதீமையாகும்
இந்திரும்பகையாற்சீவ னிறங்குமெட்டாண்டினமாதே.**

(இ-ள்) மேலே குறிப்பிட்ட கோட்களுக்கு நான்காமிராசியிலிருப்பரேல் கொடியதேயுண்டு, புதனுக்கு எதிராக அதாவது 7 ஆம் இராசியில் சந்திரனிருந்தாலும் ஜெனித்த குழவிக்கே ஈனமுண்டு, மேற்சொன்னடியே இருந்தால் ஒரு மாதத்தில் தீமையுண்டு, இவ்வாறு பகைப்பெற்றிருப்பரேல் அக்குழவியானது 8 வருடத்தில் இறந்துபோம்,()

**மதிநின்றவிட்டுக்காறின் மந்தனாரரவங்கூட
விதியெட்டிலிரவிபூமன் வீறியேநின்றாராகில்
பதியெட்டுமாதந்தன்னிற் பறந்திடும்பிறந்தபிள்ளை
தாதிரிட்டுநிறுத்தவல்லா ரெவர்களுமில்லைமாதே.**

(இ-ள்) சந்திரனின்ற ராசிக்கு ஆறாமிராசியில் சனியும் இராகுவும் சேர்ந்திருக்க ஆயுள் ஸ்தானத்திற்கு எட்டாமிராசியில் சூரியனும் புதனும் நிற்பாரேயாமானால் அந்தக் குழவியானது பிறந்த 8 மாதத்திலிறந்துபோம் ஷை கோட்க்களை எதிரிட்டு தோஷத்தை மறுக்கவல்ல கோட்க்கள் எவரும் கிடையாது எ-று.

**சோமற்குமுன்னேகாரி பின்னுமோற்பூமனிற்க
ஆமவர்க்கெட்டிற்பாம்பு மலரியுநின்றாராகில்
சாமதுகுழவிதானுஞ் சரியீருமாதந்தன்னில்
போமதைநிருத்தவல்லார் பூமியிலில்லைமாதே.**

(இ ள்) சந்திரனிருந்த ராசிக்குள் (முன்னால்) சனி நிற்கவும் முன்னால்) அதாவது 6 முதல் 12ராசிகளுக்குள் குஜனும்நிற்கமேற் சொன்ன

சந்திரனுக்கு 8 ஆமிராசியில் பாம்பாகிய இராகு கேது சூரியன் இவர்கள் நிற்பாரேயாமானால் அக்குழவியானது ஜெனித்த இரண்டு மாதத்தில் இறந்துபோம் அதை மறுக்கவல்லவர்கள் இப்பூமியில்லை எறு

**மதியுதையத்துக்கெட்டின் மன்னவனொருவனிற்க
அதிர்விரையத்திற்காரி யாவமுவர்க்கேயேழிற்
கதிரூஞ்சேய்நின்றாராகிற் கண்டாறுமாதந்தன்னில்
விதிமுடிந்தோடிப்போமே மேதினியுதித்தகாலை**

(இ ள்) இரவிர்க்கு அரசனாக விளங்கும் சந்திரனுக்கு 8 ஆமிராசியில் குரு தனித்திருக்க அவர்களுக்குப் பன்னிரண்டாமிடமென்னும் விரய ஸ்தானத்தில் சனியும் பாம்பும் நிற்க அவர்கள் நின்ற ராசிக்கு 7-ஆம் ராசியில் சூரியனும் குஜனும் நின்றாரேயாமானால் அக்குழவியானது ஜெனித்த 6 மாதத்தில் ஆயுள்முடிந்து பறிக்கும் எ-று. 26

**சந்திரனிருப்பிடத்திற் சூரியன்முன்னேநிற்கக்
சந்திரக்கெட்டிற்காரி சத்தமஞ்செவ்வாய்சேர
இந்திரலாபஞ்சுங்க னிருந்திடவொருவனாக
மந்திரியஞ்சிநின்றான் மரணமாங்குழவிநாவில்**

(இ ள்) சந்திரன் எந்தராசியி லிருந்தானோ அந்த ராசிக்கு முன்னால் சூரியனும் மேற்படி சந்திரன் எந்த ஸ்தானத்திலிருந்தானோ அந்த ஸ்தானத்திற்கு 8ஆம் ராசியில் சனியும் 4ம் இராசியில் குஜனுமிருக்கப் பிறந்தால் அந்த ஜாதகனுக்கு தேவேந்திர யோகமென்றும் பேசுவர் 3ஆம் ராசியில் குருவும் சுக்கிரன் தனித்து மிருப்பரேல் அக்குழவி ஜெனித்த நான்காமாதமிறந்துபோம் எ-று, 27

**ஒருபிறையாகிநிற்க வொருநான்கிற்காரிசேர
இருமூன்றிலொன்றிற்செவ்வா யிருந்திடவரவங்கூட
மருமணராசன் சங்கண் மதிக்கெட்டினின்றாராகில்
வருவதோர்குழவியன்றே மன்றினிற்சாகுமாதே**

(இ-ள்) ஜெனனகாலம்போது பூர்ண சந்திரனாக இருந்து அவனிருந்த ராசிக்கு நான்காமிராசியில் சனி சேர்ந்திருக்க 7 ஆமிராசியில் குஜன் திற்க அவனோடு பாம்பு சகிதம்பெற சுக்கிரன் குரு இவர்கள் சந்திரனின்ற ராசிக்கு 8 ஆமிராசியிலு மிருப்பாரேயாமானால் அக்குழவி பிறந்த இறவே இறந்துபோமென்றுங் கூருவாயாக எ-று 28

**பிறைநிறைவித்திற்காரி பூமனுமஞ்சிநிற்க
அரையுமீரைந்துவீட்டி லரவமுமிரவிநிற்கக்
குறைவிலாச்சுங்கன்ராஜன் கூடாமலாறெட்டாகில்
முறையிட்டிங்கெட்டுநாளின் முன்னிட்டுபோமோபிள்ளை**

(இ ள்) சந்திரனிருந்த ராசியிலேயே சனி இருக்க அவர்களுக்கு விட ஸ்தானத்தில் குஜனிருக்க ஷ சந்திரனிருந்த ராசிக்கு 10 ஆம் ராசியில் சூரியனும் பாம்பும்கூடி இருக்க துன்பத்தை தாப்படமாடாத சுக்கிரனும் குருவும் ஒருவருக்கொருவர் சகிதமின்றி 6 8 என்னுமிடங் களிலிருப்பாரேனுல் அக்துழவியாள் மெத்த வருத்தப்பட்டு, 8நாளையில் உயிர்விடும். 20

பூரணமதியேயாகிப் புந்தியுமேழினிற்கக்
காரணமானமந்தன் கடும்பத்துநாலின்செவ்வாய்
ஏரணியிரவியாதி யிருந்திடவெட்டிற்பொன்னும்
வாரணிதனத்திஞளே வருமந்தக்குழிவிசரமே.

(இ.ள்) ஜெனனகாலப்போது பூரணசற்திரஞக இருக்க சந்திரனிருந்த ராசிக்கு 7 ஆமி ராசியில் புதன் தின்க. 10 ஆமடமென்னும் காரியஸ்தானத்தில் சனி நிற்க நான்காமிராசியான சுக ஸ்தானத்தல் குஜனும் சூரியனுமிருக்க 8ஆமி ராசியில் சந்திரனுமீருந்தால் முலலே யரும்புபோன்ற ஸ்தனத்திஜ யுடையவளே அக்குழவியானது உடனே இறந்துபோம். 30

குறைமதிநின்றவீட்டுக் கொருபக்கங்குரு வநிற்க
அறியவர்க்கேழிற்காரி யரவமுங்கூடிநிற்க
நறியதோர்தனத்திற்செவ்வாய் நற்சுங்கனவர்க்கேயேழில்
நிறைமதியதற்கேழ்புந்தி யூழ்நிற்கிற்குழவிசாமே.

(இ ள்) தேய்பிறை சந்திரனுக்கு ஏதேனுமொருபக்கம் அல்லது ராசியில் குருவிருக்க அவன் நின்ற ராசிக்கு 7 ஆமிராசியில் சனி நிற்க (பின்னும்) இராகுவும் நின்ற மேன்மைபெற்ற தன ஸ்தானமென்னு மிறண்டாமிடத்தில் குஜனிருக்க குஜனிருந்த ராசிக்கு 7 ஆம் ராசியில் நன்மையைதரும் சுக்கிரனிருக்க அல்லது பூரணசந்திரக்கு 7ம் ராசியில் புதனும் சூரியனுமிருந்தால் அக்குழவியானது இறந்துபோம். 31

அரவுடன்மதிபுங்கூட வவர்க்குநால்சனிசேய்நிற்கத்
திரமுடன்சேய்க்கேழ்சுங்கன் றிருப்புந்திகூடிநிற்கக்
குருவுடனிரவியெட்டிற் கூடியேநின்ருராகில்
வருவதுதீம்பாடெட்டின் மரிப்பவரில்லைமாதே.

[இ.ள்] இராகுவோடு சந்திரன் சகிதம்பெற அவர்களுக்கு நான் காமி ராசியில் சனியும் குஜனும்ருக்க குஜனிருந்த ராசிக்கு 7ஆம் ராசியில் சுக்கிரனேடு புதனும் கூடி இருக்க அஷ்ட்டம் ஸ்தானமென்னும் 8ஆமிராசியில குருவும் சூரியனும் கூடியிருக்க அக்குழவியானது ஜெனிந்த 8வது ஆண்டில் இறந்துபோம் அதை மறுக்க ஒருவராலும் முடியாது. எ.று, 32

சனிமதியரவங்கூடச் சத்தமஞ்செவ்வாய்நிற்க
மணியதாமிரவிபுந்தி மன்னவர்க்கெட்டாய்நிற்கிற்

பணிசுங்கன்சனிக்கெட்டாகிற் படிதனிற்பிறந்தபிள்ளை
இனியொருநாளுநில்லா திறந்திடுமென்பர்மாதே

(இ-ள்) சனியோடு சந்திரனும் பாம்பும் சகிதம்பெற அவர்கள் நின்ற ராசிக்கு 7 ஆமிராசியில் குஜன்நிற்க சூரியனும் புதனும் குரு நின்ற ராசிக்கு ஆமிராசியிலிருக்க யாவரும் போற்றும் சுக்கிரன் சனி ராசிக்கு 8 ஆமிராசியிலிருக்கவும் ஜெனித்த குழவியானது ஒருநாளேது மில்லாது உடனே இறந்துபோமென்னுப் கூறுவர்

மதியிருபிறையுமாக மன்னவர் பகையாய்நிற்க
விதியொருநீச மாக வெள்ளியுமஸ்தமிக்கப்
பதிமதியிடத்தான்காரி பக்கலிற்சேர்ந்தாஞகில்
கதியறைக்குள்ளேமாண்டு கவிழ்த்துடல்வீழுமாதே.

(இ ள்(சந்திரனிந்த ராசிக்கு முன் ராசியிலேனும் பின் ராசியிலேனும் குரு பகைபெற்று நிற்க ஆயுள் ஸ்தாஞதிபதி நீச்சம் பெற்றிருக்க சுக்கிரன் அஸ்தமன மடைந்திருக்க சந்திரனின்ற ராசிக்கு இடதுபக்கத்தில் சனி சேர்ந்திருப்பர்களேயாஞல் அக்குழவியானது தன் தாய் கர்ப்பத்துக்குள்ளேயே இறந்துபோய ஜெனனமாகுவனென்று கூறுவாயாக

நிறைகொண்டமதிக்கேமூன்றி னின்றதனிரவிலைமந்தன்
அறைகின்றவைங்கிற்செவ்வா யதற்கேழிலிறவிநிற்க
முறைகொண்டுவெள்ளியாறின் முன்குருவிரையநின்ருற்
சிறைகொண்டமதியும்புந்தி சேர்ந்திடக்குழவிசாமே.

(இ ள்' பூரண சந்திரனின்ற ராசிக்கு 3ஆமி ராசியுல் சூரியனும் சனியும் நிற்க, 5ஆம் இடமென்னும் பஞ்சம ஸ்தானத்தில் குஜனிருக்க அவர்களுக்கு 7ஆமிராசீ என்னும் சப்த்தம ஸ்தானத்தில் சூரியனிருக்க, 6ஆம்மிடமென்னும் ரோகஸ்தானத்தில் சுக்கிரனிருக்க விறைய ஸ்தானமென்னும் 12ஆமிராசயில் குருநிற்க, அக்குழவியானது ஜெளித்த ஒரு மாதத்திற்கு முன்ஞள் இறந்துபோகும் எ-று 35

அரவுடன்மதியுநிற்க வைந்தினிலலரிமைந்தன்
உரமுடனலத்திற்செவ்வா யொளிற்வெள்ளியாறினிற்கத்
திரமுடன்குருவுமெட்டிற் றிரும்பியேநின்ருஞகில்
முறையிட்டுப்பிறந்தபிள்ளை மூன்றிருமாதஞ்சாமே.

(இ-ள்) இலக்கினத்தில் இராகும் சந்திரனுமிருக்க ஐந்தாமிடத்தில் செவ்வாயும் சுக்கிரன் ஆருமிடத்திலும் குரு அஷ்டமஸ்தானத்திலுமிருந்தால். அந்த சமயத்தில் பிறந்தபிள்ளை ஆருவது மாதத்தில் மரணமாகுமென்றறிவீர்கள் எ-று.

விதியற்றுப்போனபேர்க்கு மதியத்தைப்பார்த்துச்சொல்லு
மதியற்றுப்போனபேறகுச் சனியத்தைபார்த்துச்சொல்லு

சனியற்றுப்போனகாலே யுதயத்தைப்பார்த்துச்சொல்லு
சனிமதியுதயந்தப்பா தகப்படுமரணகாலம்

(இ·ள்) மீன லக்னத்தில் சந்திரனிடனே சனி அஸ்தமயமாயிருந்தால் அந்த சமயத்தில் பிறந்தபிள்ளை சிசு எவ்விதமாயினும் மரணமாகும் அதேனென்ருல் குற்ற கிரகங்கள் பகை க்ஷேமத்திலிருந்தால் சொற்பழுதாகமல் அந்தகுழந்தை மரணமாகுமென்றுணர்வீர் எறு

சாவதுமேதோவென்னிற் சனிமதியுதையமீனம்
ஆவதுபகைமரிப்பு மஸதமமாகிநின்ருற்
போவதுமெய்தான்சீவன் பொல்லாதுபகையேயாஞல்
நாவதுதப்பமாதே நாட்டுளோர்க்குரைக்குங்காலே

(இ·) இலக்கினம் சரியா யில்லாவிட்டால் ராசியைப் பார்த்துச் சொல்லவேண்டும் இராசிசரியா யில்லாவிட்டால் சனியிருந்த ஸ்தானத்தை பார்த்துச் சொல்லவேண்டும் சனியிருந்த ஸ்தானப் சரியாயில்லாவிட்டால் ஜனஞேதயத்தைப்பார்த்துச் சொல்லவேண்டும் இவ்விதமாய் சனி சந்திரன் உதயமும் தப்பாமல் மரணகாலம் இன்னதென்று அகப்படும் எ-று

மதிக்கேலோலுதையத்திற்குஞ் சனிக்குமேயாய்ந்துபார்க்க
இதற்குமிவ்வண்ணமாய்ந்தா லேறியவீதியுந்தீது
விதிக்குறிதப்பாதாகு மேதினிதனிலுற்ருேர்க்குப்
பதிக்குறிமாதேகேளாய் பாரினிற்றப்பாவாறே

(இ-ள்) சந்திரனின்ற இராசிக்கு ஜனஞேதயத்திற்கும் சனிநின்ற ஸ்தானத்திற்கும் கனிதாராய்ச்சியுடன் சோதித்துப் பார்த்தால் ஆகும் பலனுடன் விளங்குவதுடன் உலகில பிறந்தவர்களுக்குபலாபலனனுபவிக்கும்படியான விதிமுறையின் குறிப்பு தப்பாது இதனை கவனித்துச் சொல்லுவாய் எ-று

இதைவிடவேறேயில்லை யேதேதுபார்த்திட்டாலும்
அறையவர்நின்றதீம்பு மனைந்துமேமதியாலாய்ந்து
உதயமுஞ்சனினின்ருேருக் கொருவறையூடுதாக்கிச்
சிதைபதஞ்செல்லலாகுஞ் செகத்தினிலுதித்தபேர்க்கே

(இ ள்) இதைவிட வேறேதுவுமில்லை எந்தெந்த சாஸ்திரத்தை ஆராய்ந்துப் பார்த்து சொ.லப்பட்டவர் கணித ஆராய்ச்சி செய்து உண்டாகும்படியான துன்பமெல்லாம் தமம அறிவினுனுணர்ந்து ஜன்ன லக்கின காலமும் சனியிருந்த ஸ்தானத்திற்கும் சரியாம் பார்த்து உலகத்தினர்க்கு ரிரியாய்ச் சொல்லவேண்டும் எ-று

அரிஷ்டகாண்டம் முற்றிற்று
ஆகமொத்தம் 43

நலந்தீங்கு காண்டம்

மீனம் $4\frac{1}{4}$ 11	மேஷம் $4\frac{1}{4}$ 1 இலக்னம்	ரிஷபம் $4\frac{3}{4}$ 2	மிதுனம் $3\frac{1}{4}$ 3
கும்பம் $4\frac{3}{4}$ 11	ஒருநாள் இரவும் பகலும் 24-மணி நாழிகை, 60 இலக்கினம் 12 இவ்விதமாய் கனிக்கவேண்டியது.		கடகம் $5\frac{1}{4}$ 4
மகரம் $5\frac{1}{4}$ 10			சிங்கம் $5\frac{1}{4}$ 5
தனுசு $6\frac{1}{2}$ 9			
	விருச்சிகம் 6 கால் 8		கன்னி 3 6

கருதியகருமங்கட்குக் காரிழைமாதேகேளாய்
வருநலமதிதனக்கும் வகுத்தைந்துநான்குபேரை
பொருமதியுதையங்கண்டு பொல்லாதபேரைத்தள்ளி
குருமதிசுங்கனின்ற குறிநடுவாகச்சொல்லே

(இ-ள்] பெண்ணே மனிதர்கள் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால் சந்திரனின்ற இராசியை ஐந்தால் வகுத்து நான்கு கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்குப் சந்திரன் நின்ற ஸ்தானத்திற்கு அசுபரை விலக்கி குரு சந்திரன் சுக்கிரன் நின்ற ஸ்தானத்தின் பலன் ஆராய்ந்துணர்ந்து துற்பலன் சொன்ஞல் சரியாயிருக்குமென்றுணர்வாய் எறு 1

நல்லவர்நாலுபேர்க்கு நடுவதிர்சொல்லமேலாம்
பொல்லவர்க்கதுவேயாஞற் போய்விடுங்கருமங்கிட்டாப்
பின்னலங்கலந்துநின்று பிறிவினையில்லாதாகில்
சொல்லுவர்மதியைப்பற்றித் தொனியுரைநடுவாய்மாதே.

[இ-ள்] சுபகிரகங்களாகிய குரு, சுக்கிரன், புதன், வளர்ப்பிறைச் சந்திரஞகிய இந்நான்கு கிரகங்களுக்கும் மத்தியில் சனி, சூரியன், செவ்வாய், கேதுகளாகிய கிரகங்களிருந்தால் ஜாதகர் செய்யும்படியான காரியமெல்லாம் கிட்டாமல் தடைப்பட்டுப்போய்விடும் அவர்கள் ஒருவருக்கொருவர் சேர்ந்திருக்கும்போது தமது காரியத்தை நடத்துவதற்கு உத்தேசங்கொண்டால் சந்திரனிருந்த இராசியைப் பார்த்து நடுநிலையாக பலன் சொல்லுவாய் எ-று

நல்லதோர்பொருளைபோக்கி நாடியேவருவோர்க்கெல்லாம்
வல்லதோரரவங்காரி யிரவிசேய்க்கேட்பானுகிற்
சொல்வதுவன்றேசேருந் தொனிப்பவர்கோணமானுல்
அல்லதுமும்மூன்றைந்தி லலறியேவருமேமாதே.

[இ:ள்] நல்லக் கைப்பொருளை போக்கிவிட்டு, அது மறுபடியும் வருமோ? வராதோ என்று கேடபவர்கள் நிற்குப் ஸ்தானத்தைக் கவனித்து அந்த சமயத்தில் உதய இலக்கினத்திற்கு கணித ஆராய்ச்சி செய்து சனி. இராகு. சூரியன் மூன்ருரெட்டு பனிரெண்டிலிருக்க குரு உதய லக்கினத்தைப்பாத்தால் உடனே கிடைக்கும் அவ்விதமின்றி இலக்கணம் ஐந்து ஒன்பதாகிய கோண திரிகோண ஸ்தானத்தில் குரு விருந்தால் ஓன்பது நாளைக்குள் எவ்விதமாயினும் கிடைக்கும் என்று.

இப்படி நல்லோர்நின்ற விடத்தினிற்கேட்பானுகிற்
பொய்ப்படப்போனநஷ்டம் போயவன்மெதுவேயென்று
மெய்ப்படச்சொல்லலாகு மேலன்றிக்கோட்கணின்ருற்
சொற்படிவேதமூர்த்தி சொன்னசொற்றவராமாதே.

[இ-ள்] இவ்விதமாய் குரு. சுக்கிரன். புதன், வளர்பிறைசந்திரன் உதயஸ்தானத்திலிருககும்போது போனபொருள் கிடைக்குமாவென்று கேட்பாராகில் கைவிட்டுப்போன பொருள் மெதுவாய் வருமென்று சொல்லவேண்டும் அன்றியும் மற்ற கிரகங்களெல்லாம், நல்ல ஸ்தானத்திலிருந்தால் சந்தேகமின்றி சொன்ன வாக்கியம் தவருதென்றுணர்வீர்கள் எ.று

சதா முகூர்த்தம்

நினைத்திடுகருமங்கட்கு நிட்சயநாளே சோமன்
அணைத்தரோகணியாநாட்கொண்டைம் மூன்றுநாழிதள்ளி
இணைத்தொருநன்மைசெய்தா லிடையூறுவருவதில்லை
பனைத்தடிபருவதம்போற் பாரினிலிருக்குமாதே.

[இ·ள்] மனிதர்கள் நினைத்துச் செய்யும் காரியங்களுக்கு நிக்ஷயஞ் சொல்லும்போது சம்திரன் உச்சமாயிருக்கும் ரோகணி நக்ஷத்திரம் அறுபது நாழிகையில் பதினைந்து நாழிகைதள்ளி அதன் பிறகு எந்த காரியத்தைச் செய்தாலும் இடையூறில்லாமல் காரிய சித்தியாகும் மென்றுணர்வாய் பெண்ணே எ.று.

ஐந்தொருநாட்குநாளா யமர்ந்தநாளதுவுஞ்சுத்தம்
முந்தொருசொன்னநன்மை மூன்றிலொண்பலனேயாகும்
இந்தநாளன்றிவேறு சுபமேற்கவேறேயில்லை
தொந்தமாங்கனகமாதே சொல்லுநீயவனியோர்க்கே

(இ-ள்) வளர்பிறை பஞ்சமியும் அந்த நாளிலமைந்த திதியுஞ் சுத்தமாயிருந்தால் முன்பு சொன்ன சுப, பலனில் மூன்று பாகத்தில் ஒரு பாக பலன்கிடைக்கும், இந்த நாடகளல்லாமல் சுபகரமான நான்வேறு கிடையாது என்று பொன்போன்ற அழலோய்ந்த பெண்ணே உலகத்தார்களுக்கு சொல்லுவாய் எ-று.

இந்தனுள தற்குக்குற்றங் குருவிற்குச் சகடந்தள்ளி
எந்தனுளேனுநன்மை யிருக்குமேன் மேருவாகி
அந்தனுள தனினன்மை யாயிழைமாதேகேளாய்
இந்தொருகுறிதப்பாதே யிந்திரபதிபோல் வாழ்வன்.

(இ ள்) இவ்விதமாயமைந்த நாளிற்குங்குற்ற முண்டாவ தெவ்விதமென்ருல் குருநின்ற இராசிக்கு சகடந்தள்ளி மற்ற எந்த தினத்திலாகிலும் நன்மையான சுபதின மேற்படுமாகில் அந்தநாளின் சுபலக்ஷணத்தை ஆராய்ந்துணர்ந்து சொன்னுல் இந்தகுறி தப்பாமல் இந்திரனைப்போல சுக ஜீவியால் ஜீவித்திருப்பதற்காகும், அன்றியும் கொடைவள்ளல்போல் செழித்து வாழ்வான் தீர்க்கதரிசியாகவும், தெய்வ தன்மையும் ஞானிகளையும் தேவராயும் சித்தராயும் ராஜயோகியும்மாவார் எ-று.

நலந்தீங்குகாண்டம் முற்றிற்று.

ஆகமொத்தம் 50

<table>
<tr><td>பூரட்டாதி ¼
உத்திரட்டாதி1
ரேவதி 1
மீனம் 4¼</td><td>அஸ்வனி 1
பரணி 1
கிர்த்திகை¼
மேஷம்4¼
மேஷம்4¼</td><td>கிர்த்திகை¾
ரோகனி 1
மிருகசீரிடம் ½
ரிஷபம் 4¾
ரிஷபம் 4¾</td><td>மிருகசீரிடம் ½
திருவாதிரை1
புனர்பூசம் ¾
மிதுனம் 5¼</td></tr>
<tr><td>அவிட்டம் ½
சதயம் 1
பூரட்டாதி ¾
கும்பம் 4¾</td><td colspan="2" rowspan="2">இவ்விதமாய் ஒவ்வொரு மாதத்திலும் நடந்துகொண்டிருக்கின்ற 27நக்ஷத்திரங்களில் சந்திரன் சஞ்சரிக்கும்போது அதன்இராசியென்றும், ஜனன காலத்தின் நாழிகையைக் கணிதாராய்ச்சி செய்துஜனன லக்கினம் இன்னின்னதென்று பன்னிரண்டுலக்கினத்தில் ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்.</td><td>புனர்பூசம் ¼
பூசம் 1
ஆயில்யம்1
கடகம்5½</td></tr>
<tr><td>உத்திராடம் ¾
திருவோணம் 1
அவிட்டம் ½
மகரம் 5¼</td><td>மகம் 1
பூரம் 1
உத்திரம் ¼
சிங்கம் 5¼</td></tr>
<tr><td>மூலம் 1
பூராடம் 1
உத்திராடம் ¼
தனுசு 5½</td><td>விசாகம் ¼
அனுஷம் 1
கேட்டை1
விருச்சிகம் 5¾</td><td>சித்திரை ½
சுவாதி 1
விசாகம் ¾
துலாம் 5</td><td>உத்திரம் ¾
அஸ்தம்1
சித்திரை½
கன்னி 5</td></tr>
</table>

அற்பாயுட் காண்டம்

உதையா திசுபருபங்கூடி யோரிடநிற்கத்தானு
மதியாகிப்பாபர் கூடி மற்றெருருவிடத்தினிற்கச்
சிதையாமற்சுபரும்பாபர் சேர்ந்துடனிற்ராகில்
இதையாதித்தீம்புண்டாக்கி யிருப்பதாண்டிருபத்தைந்தே.

(இ.ள்) இலக்கினுதிபதியும் ஒன்பதாமடததாஞகிய கருமஸ்தானு திபதியும் சேர்ந்திருக்க, சந்திரனுடனே, சனி இராகு சேர்ந்திருக்க, கபக் கிரகங்களும், அசுபக்கிரங்களும் சேர்ந்திருந்தாலும் ஜாதகன் பிறந்து வளர்ந்து இருபத்தைப்து வயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும், அக் கினியால் மரணமாவான் எ று.

செனித்ததோருதையந்தன்னிற் சேர்ந்துநற்சுபருநிற்க
இளிக்குருவுடனேபாப ரிருந்திடவரவஞ்சுங்கன்
தனித்தொருசென்மத்தானுஞ் சனிக்கேழினின்ருராகில்
மதிக்கொருவீணமாஞன் மரணமாண்டிருப்பைத்தைந்தே.

(இ-ள்) ஜாதகன் ஜனனமான லக்கினத்தில் சுபக்கிரகங்களிருக்க குரு பகவானுடனே சனி இராகு சேர்ந்திருக்க இராகும் சுக்கிரனும் இராசி நாதனும், சனிக்கு ஏழாமிடத்திலிருந்தால் சந்திரன் நீச்சமாயிருந் தால் அந்த ஜாதகன் பூமியில் பிறந்து வளர்ந்து வெகு பிரக்யாதியா யிருந்து இருபத்தைந்து வயதில் மரணமாவான், கடை முடிவில் துர் மரணமாவான் எ று.

சென்மாதிசனியுங்கூடிச் சேர்ந்துடனேழில் நிற்க
கன்மாதிக்கெதிரோன் கூடிக் கலந்துடனிரவிநான்கில்
தன்மாதிதனத்தோன்சேர்த்து தரைமகனுடனே் கூடப்
பொன்மாதினரசேகேளாய்ப் போய்விடுமீரெட்டாண்டில்.

(இ-ள்) ஜென்மராசி நாதனும்சனியும்சேர்ந்து ஜனன இலக்கினத் திற்கு சப்தம ஸ்தானத்திலிருக்க, ஒன்பதாமிடத் ததிபதியாகிய கரும ஸ்தாதிபதியாகிய கரும ஸ்தானுதிபதியும் சூரியனுடனே சேர்ந்திருக்கும் போது, சூரியன் சுக ஸ்தாளமாகிய நான்காமிடத்திலிருக்க, தருமஸ்தா னுதிபதியாகிய பத்தாமிடத்தாலும் இரண்டாமிடத்தோனுகிய தனுதிபதி யுடனே, சேர்ந்து செவ்வாயுடன் கூடியிருந்தால் பொன்போன்ற ரூபமு டைய பெண்ணே அந்த ஜாதகன் பூமியில் பிறந்து வளர்ந்து மகா உத்தமனுயிருந்து பதினுருவது வயதில் மரணமாவானென்றுணர்வீர், ஆயுதத்தால் மரணம் எ று. 3

மன்னவனுதையந்தன்னின் மதியுடன் காரிநிற்க
அன்னரித்தானபூம னணுகியேயிரவிக்கேழில்
நின்றவர்சுங்கற்காறி னிலேயதிற்பாம்பேயாகில்
சொன்னதோரீராண்டிற் சோதனேயாகப்போவன்.

[இ ள்] ஜனன லக்கினத்தில் சந்திரனும் சனியுமிருக்க அவர்களு டனே செவ்வாயுஞ்சேர்ந்து சூரியனுக்கு ஏழாமிடத்திலிருக்க, சுக்கிர னுக்கு ஆருமிடத்தில் இராகுவாகிலும், கேதுவாகிலுமிருந்தால், அந்த ஜாதகன் பனிரெண்டு வயதில் மரணமாவான், வயற்று மார்பு கழுத்து நோயில் மரணம் எ று, 4

குறித்தலக்கினத்திற்காரி கூடியேமதியு நிற்க
வெறித்தங்கேயுதயத்தானும் வெள்ளியுமிரவியேழில்
பறித்தலக்கினுதிக்காறிற் பாம்புடன் குருவுநிற்க
நெறித்தவனெருபத்தாண்டு நிலேயதிற்சாவுண்டாமே.

[இ ள்] ஜனன லக்கினத்தில் சனியும் சந்திரனுமிருக்க, லக்கினுதி பதியும் சுக்கிரனும், சூரியனும் சப்தம ஸ்தானமாகிய ஏழாமிடத்நி லிருக்க லக்கினுதிபதிக்கு ஆருமிடத்தில் இராகும் குருவுமிருக்கும் போது ஜனனமான ஜாதகன் பத்துவயதில் மரணமாவானென்றறிவீர்கள் எ று.

ஆறுமீராறுக்காறீ லம்புலிசனியுநிற்க
வேறுபட்டுதையத்தானும் விடையும்பெண்ணிடமேசேர
மாறுமுக்கோணரீன மாயினுன்மாதேகேளாய்
ஈறுபட்டு யிரேழாண்டி லிறப்பனென்றியம்பலாமே.

[இ ள்] ஜனன லக்கினத்திற்கு ஆருமிடத்திற்கு ஆருமிடத்தில் சந்திரனும் சனியுமிருக்க, லக்கினுதிபதி கன்னியா ராசியிலிருக்க கோண திரிகோணுதிபதிகள் பங்க நிச்சமாயிருந்தால் அந்த ஜாதகன் ஏழு வருஷத்தில் மரணமாவானென்றறிவாய் பெண்ணே உ று 6

உதையத்திற்கேழிற்வேந்த னுத்தமர்கெட்டிற்காரி
மதிபத்திலவர்க்கேழ்புந்தி மணிசுங்கனெட்டாய் நிற்கத்
சிறைவுற்றமதிக்கேயாற்ற நீயருளின்ருராகில்
அதையொத்தநட்பாஞலு மாரைந்தாமாண்டிற்சாவே.

[இ ள்] ஜனன லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் குருவும் சுபக்கிர கங்களுக்கு அஷ்டமஸ்தானத்தில் சனியும், சந்திரனுககு பத்திலும் அவர்க்கு ஏழாமிடத்தில் புதனும் சுக்கிரனும் அஷ்டமஸ்தானத்திலிருக்க சந்திரனுக்கு ஆருமிடத்தில் சூரியன் அங்காரகன் சனி இராகு நின்ருல் அவர்கள் நட்பு ஸ்தானத்திலிருந்தாலும் ஜாதகன் ஐந்தாவது வயதில் ஜன்னி சயித்தியம் என்ற ரோகத்தால் மரணமாவானென்றறீவீர் ஜன்னி சயித்தியம் என்ற ரோகத்தால் எ று. 7

ஒன்பதுபேருனின்ற நிலேயதற்கொருவரெட்டாய்
இன்பமற்றிருந்தாராகி லிவனுமோராண்டிற்சாவன்
அன்பதாய்மதிக்கெட்டாற்சகினியைந் தாண்ட னிதற்சாவன்
தன்பதிசுங்கற்கெட்டிற் றரைமகனிருந்தார்சாவே.

(இ ள்) நவகிரகங்களுக்கும் ஸ்தானத்திற்கு ஒருவர் அஷ்டம ஸ்தானத்திலிருந்தால் ஜாதகன் ஒரு வருஷத்திற் மரணமாவான். சந்திரனுக்கு அஸ்டம ஸ்கானமாகிய இராசியில் சனியிருக்க ஐந்து வயதில் மரணமாவானென்றறிவீர், சனி துர் மரணமும் உண்டு செய்யும்,

மதிக்கெட்டின் மந்தனிற்க மன்னவன் பூமற்கெட்டாய்
விதிக்கெட்டில் வெள்ளி நிற்க விடையுமோயிரவிக்கெட்டில்
உதிக்கெட்டிற்புந்திக்கேழி லொருவனுய்ச்சாமநிற்கக்
கதித்தெட்டுவருடந்தன்னிற் கண்டிடுமாதேசாவே

(இ-) சந்திரனுக்கு அஷ்டம ஸ்தானத்தில் சனியிருக்க குரு செவ்வாய்க்கு அஷ்டமத்திலிருக்க லக்கினத்திற்கு எட்டில் சுக்கிரனிருக்க, சூரியன் எட்டாமிடத்தினும் புதனுக்கேழாமிடத்திலும் சந்திரனிருக்க ஜனனமான ஜாதகன் எட்டு வருஷத்தில் மரணமாவானென்றறிவாய், சீதளம், பிர்மை வியாதியாலும் மரணம் எ-று..

சூரியர்க்கெட்டிற்சோமன் சுன்னுதையத்துக்கெட்டில்
வீரியர்க்கெட்டில் வேந்தன் விடைக்கேழிலுதையனிற்கக்
காரியர்க்கெட்டாய்சுங்கன் கடுமதிக்கேழிற்பூமன்
பார்வை நின்ருராகிற் பத்தரை வருடஞ்சாவன்

(இ-ள்)சூரியனுக் கெட்டில் சந்திரனும் சுக்கிரன் ஜனன லக்கினத்திற்கு அஷ்டமஸ்தானத்தில்குருவும் ரிஷபராசிக்குஜனனலக்கினமிருக்க சனிக்கு அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரனிருக்கி, தேய்பிறை சந்திரனுக்கு சப்தம ஸ்தானத்தில செவ்வாயிருக்கவும், பார்வை செலுத்தினுலும், ஜாதகன் பத்தரை வருடத்தில் மரணமாவான் எ-று.

பூமனுர் மந்தன் வீட்டான் புந்திடவுதையந்தன்னிற்
காமனுரிருந்தவீட்டான் காரியுங்கலந்தேனிற்கச்
சோமனுரிரவிகூடிச் சொன்னதிலுதையனிற்க
ஆம்திமர்கெட்டிற்பொன்சே யாண்டிரண்டதனிர்சாவே

(இ-ள்) செவ்வாயும், சனியிருந்த ஸ்தானத்திற் குடையவனும் புதனிருந்த ஸ்தானத்தில் சுக்கிரனிருந்த வீட்டோனும் சனியுங்கூடி இருந்தால் சூரியனும் சந்திரனும் சேர்ந்து இலக்கினத்திலிருக்க அந்த ஸ்தானத்திற்கு அஷ்டமத்தில் குருவுமிருந்தால் இரண்டு வருஷத்தில மரணமுண்டாகும், ஆனல் மீண்டும் 5ம் வருடத்தில் மரணவாவான்,

அற்பாயுட்காண்டம் முற்றிற்று.

ஆகமொத்தம் 61

———

பனிரெண்டாவ 12 விரயஸ்தானம் மீனம் $4\frac{1}{4}$	இலக்கினம் 1 உபாஸ்தானம் மேஷம் $4\frac{1}{4}$	இரண்டாவது 2 தனஸ்தானம் ரிஷபம் $4\frac{3}{4}$	மூன்ருவது 3 தீரஸ்தானம் மிதுனம் $5\frac{1}{4}$
பதினொராவது 11 இலாபஸ்தானம் கும்பம் $4\frac{3}{4}$	ஜாதகன் ஜனன மரண நாழிகையில் லந்த லக்கினம் உதயமாகிறதோ அதையே முதலாக வைத்துக் கொண்டு அங்கிருந்து வரிசைக் கிரமமாய் 1 2 3.4 5 6 7 8 9 10 11 12 யென்று ஸ்தானங்களை குறிப்பிடவும்,		நான்காவது 4 சுகஸ்தானம் கடகம் $5\frac{1}{2}$
பத்தாவது 10 ஜீவனஸ்தானம் மகரம் $5\frac{1}{4}$			ஐந்தாவது 5 புத்திரஸ்தான சிங்கம் $5\frac{1}{4}$
ஒன்பதாவது 9 பாக்கியஸ்தானம் தனுசு $5\frac{1}{2}$	எட்டாவது 8 ஆயுள்ஸ்தானம் விருச்சிகம் $5\frac{1}{4}$	ஏழாவது 7 களஸ்திரதானம் துலாம் 5	ஆருவது 6 சத்துருதான கன்னி 5

யோக காண்டம்

குரு சொன்னது

இராஜயோகம்

இசைத்தொருவுதயத்தன்னி லிருப்பவரிளையோர்சோமன்
உசந்தொருகுருவுமேழி லொருவனுய் நிற்கத்தானும்
அசைந்தொருபாம்புஞ்சுங்க னவருமேபத்தினிற்கத்
கசந்தவர்நவத்தினின்ருர் கரிகிரிராஜயோகம்

(இ-ள்) இலக்கனத்நிலிருப்பவருடனே செவ்வாய் சேர்ந்திருந்தால் குருபகவான் சப்தம ஸ்தானத்தில் தனியாயிருக்க, சுக்கிரனும், இராகும் பத்திலிருந்தாலும் லக்கினதிபதிக்கு பகை கிரகங்கள் ஒன்பதாமிடத்திலிருந்தால், யாணை, குதிரை. கருடன் மிகவும் கீர்த்தி பிரகாசமாயமைந்த இராஜயோகத்தையனுபவித்த ஆனை, குதிரைகளுடன் மிகவும் மேன்மையாய் வாழ்ந்திருப்பதற்காகும். வெண்மை நிரம் உள்ள வாகனப் ரத மூலமும் உண்டுசெய்யும். 1

தஞ்சமாயுதையோன் கூடச் சந்திரனிடத்தான் சேரக்
கொஞ்சியேசுங்கனேழிற் கோலமாய்நின்ருனுகில்
மிஞ்சியே குருவும் பாம்பு மிகைத்துடன் பத்தினிற்க
வஞ்சனையோரும் பாக்கியம் வந்திடிலிராஜயோகம்

(இ ள்) இலக்கினுதிபதியுடனே சந்திரனிருந்த இராசிநாதன் சேர்ந்திருக்க சந்திரன் சப்தம ஸ்தானத்திலிருக்க குருவுடனே இராகு சேர்ந்து பனிரெண்டாமிடத்திலிருந்தால் வஞ்சகஞ் செய்தாகிலும் வெகு விரவியஞ் சேகரஞ்செய்து இராஜயோகத்தை அனுபவிக்கச்செய்யும் எ-று.

நேசமாயரசனின்ற னிலைதேவுதையமாகிப்
பாசமாய் மதியமேழிற் பதியவன் சுங்கன்கூட
ஆசையாய்பத்தினின்றால் லாபனு மதிலேசேரத்
தேசமாய்ப்பாவர்கோணஞ் சேர்ந்திடிலிராஜயோகம்

(இ-ள்) குருநின்ற ஸ்தானமே லக்கினமாக சந்திரன் சப்தம ஸ்தானத்திலிருக்க அவருடன் சுக்கிரனும் சேர்ந்திருக்க அன்றியும், இலாபஸ்தானுதிபதியும் அவர்களுடனே சேர்ந்து பத்தாமிடத்திலிருந்தாலும் அவர்கள் கோண திரிகோண ஸ்தானத்திலிருந்தாலும் இராஜயோகத்தை அந்த ஜாதகன் அனுபவித்து சுக சவுக்கியமாயிருப்பதற்காகும் எ-று.

ஒத்தவனுதையன்சுங்க னொருமையாயுதையந்தன்னின்
மத்தவன் மதிதன் வீட்டான் மகிழ்ந்துடனேழினிற்க
எத்துடன் குருவும் பாம்பு மிருவரும்பத்தினிற்க
கத்தவன்பாபரீரா ருயினுமிராஜயோகம்

(இ-ள்) இலக்கினுதிபதியும் சுக்கிரனும் லக்கினத்திலேயே இருக்க சந்திரனிருந்த இராசிக்குடையோன் சப்தம ஸ்தானத்திலிருக்க குருவும் இராகுவும், ஜிவன ஸ்தானமாகிய பத்தாமிடத்திலிருக்க பனிரண்டு வயதிற்குமேல் ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று.

உதையாதிசுங்கன் பத்தி லொருமையாயிருக்கத்தானும்
சிதையாமன்மதியினுலிற் சேர்ந்துடன் குருவும் பாம்பும்
பதியாகவேழிற் சேரப் பாபருமிலாபனிற்க
விதையாகனின்றாகி லிவனுக்கே இராஜயோகம்

(இ-ள்) இலக்கினுதிபதியும் சுக்கிரனும் பத்தாமிடத்திலிருக்க. சுகஸ்தானமாகிய நாலாமிடத்தில் குருவும், இராகுவும் சந்திரனிருந்தாலும் ஏழாமிடத்திலிருந்தாலும் சனி, இராகு, செவ்வாய். சூரியனிவர்கள் இலாபஸ்தானத்திலிருந்தால் இந்த ஜாதகனுக்கு இராஜயோகத்தை யனுபவிக்கும்படியான தன தான்ய சம்பந்துண்டாகும் எ-று

5

அந்தமாயுதைத்தோனு மரசனுநாலினிற்கத்
தொந்தமாய்மதியினுலே சுகமதில்லாமற்பத்திற்
சொந்தமரய்ச் சுங்கனேழிற் சுகமுடன் பாம்புங்கூட
அந்தமாய்ப்பாபரீரா றிருக்கினுமிராஜயோகம்

(இ ள்) இலக்கினுதிபதியுடனே குருசேர்ந்து சுகஸ்தானமாகிய நான்காமிடத்திலிருக்க சுக்கிரன் ஏழாமிடத்திலிருக்கும்போது, சனி, இதற்கு செவ்வாய் பனிரெண்டாமிடத்திலிருந்தாலும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று.

நன்றுள்ளவுதையத்தானு நன்மதிசுங்கனுலில்

அன்றுள்ள மதியும்விட்டா னரசனுவிடையுமேழில்

என்றுள்ள விரவிமூன்றி லிருந்திடச் சனிசேய்லாபம்

ஒன்றுலகாளும் ராஜ யோகமேயுண்டுமாதே

(இ-ள்) இலக்கினுதிபதியும் வளர்பிறைச் சந்திரனும் சுக்கிரனும் நாளிலிருக்க சந்திரன் அஷடம ஸ்தானத்தில் குரு ஏழாமிடத்திலும் சூரியன் மூன்றிலும், சனியும், செவ்வாயும் இலாபஸ்தானத்திலிருந்தால் இந்த ஜாதகன் தனகான்ய சம்பத்துடனே இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று.

சந்திரலக்கினுதி தனிவிடையரசநாளிற்

சுந்திரவுதையத்தானுஞ் சோகமில்லாமற்பத்தில்

வந்தரசானேனேழில் வருமதியுதையனிற்க

இந்தவர்பாபர் லாபமிருந்திடில் ராஜயோகம்

இ-ள்) சந்திர லக்கினஸ்தானத்தில் இராசிநாதனும், சுக்கிரன் நான்கிலும். ஜனன லக்கினுதிபதி பத்தாமிடத்திலுமிருக்க சந்திரன் இலக்கினத்திலுமிருக்க, சூரியன், செவ்வாய், இராகு. சனி இவர்கள் இலாப ஸ்தானத்திலுமிருந்தால் மிகவும். கௌரவமும் பொருந்திய இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று,

சொன்னதிலுதையத் தானுஞ் சுங்கனுமரவம்பத்தில்

நின்றதில் வேந்தன்சோம னிலையேழினிற்கத்தானும்

நன்னதிர் காரிசெவ்வா யிலாபத்திற்புந்திவேந்தன்

பன்னதாயிருந்தாராகில் பாராளுமிராஜயோகம்

(இ-ள்) இலக்கினுதிபதியும், சுக்கிரனும் இராகும் பத்தாமிடத்திலிருக்க குருவும், சந்திரனும் ஏழாமிடத்திலிருக்க சனி, செவ்வாயும் புதனும், குருவும் இலாப ஸ்தானத்திலிருந்தால் சகலமும் மெச்சுந்தன்மையான பிரபுத் தன்மைபொருந்திய இராஜயோகத்தையனுபவிப்பதற்காகவும் எ-று.

குருமதிபுதையத்தானுங் கூடியே பத்தினிற்க
மதிபதிசுங்கன்ருனு மகிழ்ந்துடனுதயனிற்கத்
தருமதிற் பாம்பு நான்கிற் றரும்புந்தியிரவிசேர
இருமூன்றிற் செவ்வாய்காரி யிருந்திடிலிராஜயோகம்

(இ-ள்) குருவும், சந்திரனும், இலக்கினதிபதியும் சேர்ந்து பத்தாமிடத்திலிருக்க, சந்திரனிருக்க இராசிநாதனும், சுக்கிரனும், இராகும் இலக்கின த்திலிருக்க, புதனும், சூரியனும், நாலாமிடத்திலிருக்க, ஆருமிடத்தில் செவ்வாயும், சனியுமிருக்கும்போது பிறந்த ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 10

அரவுமேயிருந்த வீட்டா னம்புலிகேழி நிற்கத்
திரமுடன் சென்மவாதி சேர்ந்துடன் குருவும் பாம்பும்
மரபுளசுங்கன் பத்தில் மகிழ்ந்துடனிருந்தாராகில்
குறைவிலாராஜயோகங் கொடுங்கணே விழியினுளே

(இ·ள்) இராகு கேதுக்களிருக்கும் இராசிநாதன் சந்திரனுக்கு ஏழாமிடத்திலிருக்க ஜனன லக்கினதிபதியும், குருவும், கேதும் -ச்ச்ர னும் பத்தாமிடத்திலிருந்தால் சதாகாலமும் குறையாத இராஜயோகமுண்டாகும் எ-று.

சென்மாதிபனும் பெருமதியுஞ் சேர்ந்தேயொருவர்க்கொரு
[நான்கிற்
கன்மாதிபனும் பின்னிடத்தார் கலந்தேயரவத்துடன் சேரப்
பொன்மாநகருக்கதிபதியும் பொன்னேயிரண்டாகியு நின்ருல்
பெண்மானரசேநரயோகம் பெரியோருரைத்தபடி சொல்லே

(இ ள்) ஜனன லக்கினதியும், வளர்பிரைச்சந்திரனும், நான்காமிடத்திலிருக்க பாக்கியஸ்தானதிபதியும், அவருக்குப் பின்புரமாகிய அஷ்டமஸ்தானதிபதியும், இராகுடனே சேர்ந்து குருவும் இரண்டாமிடத்திலிருந்தால் பிரபுத்தன்மையான இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகுமென்று பெரியோர்கள் சொல்வார்கள் எ-று. 12

சொல்லிலே சுங்கன்றனித்திருக்கச் சோதிமதியுமரவமுடன்
நல்லோரைந்தினயந்திருக்க நலமாய்ப் பதினொன்றதிற்குருவும்
பொல்லார் கூடியிருந்தாலும் போகாதிவர்வாகனயோகம்
கல்லார் மதியின் கனங்குழலே காணுதவர்க்கிங்குரை செய்வாய்

(இ-ள்) வாக்குஸ்தானத்தில் சுக்கிரன் தனியேயிருக்க சந்திரனுடனே கேது சேர்ந்தாலும் சுபகிரகங்கள் ஐந்தாமிடத்திலிருக்க, பதினோராமிடத்தில் குருவுமிருக்க அவருடனே சனி, செல்வாய், இராகு, சூரியன், முதலான கிரகங்களிருக்கும் அவர்களுக்கு நால்வருக்கும் வாகனயோகம் பெரிதென்று சொல்வாய் எ-று,

அரவுடன்கூடசோமன் குருபதினொன்றினிற்க
விரகுடன்சங்கன்வாக்கில் வெய்யவன்பஞ்சங்காக்க
மரபுடைலக்கினதி மனமகிழ்ந்திருக்கக்கூட
விரைசெறிகுழலாய்கேளாய் வேண்டியசிவிகையேறும்

(இ-ள்) இராகு, சந்திரன் குரு இவர்கள் மூவரும் இலாபஸ்தானமாகிய கடகத்திலிருக்க ஜனன லக்கினமாகிய துலாவில் சுக்கிரனும் ஐந்தாமிடத்தில் சூரியனும் இலக்கினதிபநயுடனே சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் வித்யாச மர்த்தனய் வெகுபொருள் சேகரஞ்செய்து பல்லக்கு வாகனத்தையுடையவனு யிருப்பதற்கான இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று

பாம்பொக்கப்பக்கம்மூன்றிற் பரவியேசுபர்கணிற்க
வேம்பொக்கச்சனிசெவ்வாய்தான்வீரியவிலாபஞ்சேரக்
காம்பொக்கமுலேயினுளே கருதியேநிற்பாராகில்
ஆம்பொக்கநரயோகந்தா னறிந்துரையவனியோர்க்கே

(இ ள்) இராகுடன் சுபர்கள் சேர்ந்து மூன்ருமிடத்திலிருக்க சனியும், செவ்வாயும், மூன்ருமிடத்திலும், இவர்கள் ஸ்தானத்திலும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன பிரபுத்தன்மையான யோகத்தை யனுபவிப்பதற்காகு மென்றுணர்வேன் எ று 15

குருசுங்கனிருந்தவீட்டான் கூடியேயரவஞ்சேர
அரவுச்சங்கதிரோனட்பி லாறினின்மூன்றினிற்கப்
பருமுச்சங்கதனுப்பொன்னும் பாம்புக்குநாலாய்நிற்க
மருவுச்சங்குழலாய்கேளாய் மருவிலாந்தோளியுண்டே

[இ-ள்] குருவுஞ் சுக்கிரனிருந்த இராசிநாதன் இராகுடனே சேர்ந்திருந்தாலும் சூரியனும், இராகும், மூன்ருமிடத்திலும், ஆருமிடத்திலும் நட்பாயிருக்க குரு உச்சமாயிருந்து, இராகு, கேதுகளுக்கு நாலாமிடத்திலிருந்தால் குற்றமில்லாத கப்பல் வியாபாரஞ் செய்து குறையாத இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ,று.

அரவோட ரவமதின்வீட்டானமர்ந்தேயொருவர்க்கொருநான்கில்
உரவாயரசணீரிரண்டி லொளிசேர்வெள்ளிஇருந்தாலும்
பரவாயுயர்ந்தசந்திரனும் பாம்புமதற்குச்சதிரத்தே
உரவாயிருந்தாலென்நாளு மொழியாதவர்க்குநரயோகம்

[இ.ள்] இராகும் இராகி இருந்த இராசிநாதனும் சேர்ந்து இலக்கினத்திற்கு நான்கில் குருவும், பன்னிராமிடத்தில் சுக்கிரனிருந்தாலும் வளர்பிறைச் சந்திரனும், இராகு கேதுகளும் கேந்திரம் பெற்றிருந்தாலும் நட்பு ஸ்தானங்களிலிருந்தாலும் பிரபுயோகமாய் ஜீவித்திருப்பதற்காகும் எ று.
17

சீவாதிபனுஞ்சென்மமுடன் சேர்ந்தேயரனுர்க்கேழாகில்
ஈவாவுடன்சேர்ந்திடப்பாம்பு மேழைமதியுமீரிரண்டிற்
பாவாய்பாகமிடமறிந்து பத்தியிருந்தாற்சுங்கனுமே
ஆவாதொருகாலமுமில்லை யறையாயவர்க்குநரயோகம்

[இ.ள்] ஜீவனஸ்தானுதிபதி ஜன்மாதிபனுடனே சேர்ந்து சூரியனுக்கு ஏழாமிடத்திலிருக்க இலா ஸ்தானத்தில் இராகுமிருக்க தேய்பிறைச் சந்திரன் பன்னிரெண்டிலுமிருந்தாலும், அவர்களிருக்கும் பாகத்தைகவனித்தும் சுக்கிரன் பத்தாமிடமாகிய ஜீவனஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகனுல் ஆகாத காயமொன்றுமில்லை அடிமையாட்களால சகலநன்மையும் பெருமையும் அமைந்த யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று.

பேரியோகம்

சென்மாதிக்கிருபான்மூன்றிற் சேரவேசுங்கன்பொன்னும்
கன்மாதிபின்ஞேனேழிக் கலந்துடனிருப்பாராகில்
பொன்ஞன்கிலரவஞ்சேர்ந்து போதவேயிருக்கத்தானும்
பின்சாய்ந்தகுழலிஞளே பேரியங்கிசமுண்டாமே

[இ.ள்] உதயாதிபதி நின்ற ராசிக்கு வலமிடங்களிலும் 3ஆமிராசியிலும் சுக்கிரனும் குருவுமிருக்க 10 ஆம் வீட்டோனுடன் 9ஆம் வீட்டோனும் கூடி சப்த்தம கேந்திரத்திலிருக்க குரு நின்ற ராசிக்கு நான்காமிராசியில் இராகு நின்று மிருக்கப் பிறந்தவர்கள் அழகிய இனிய குரலையுடையவனே அவன் பேரியோகத்தை யனுபவிப்பான் எ-று,

ஏகசக்ராதிபன்

மதிக்காறிற்புந்திநிற்க மற்றபொன்னேழிற்சேர
விதிக்காறிற்சுங்கனிற்க வீரியவிராகுதானும்
மதிக்காறிஞலினல்ல மஞ்சுமன்மின்ஞேன்சேர
எதிர்த்தாடவெவருமில்லா வேகபூபாலஞமே

(இ-ள்) ஆராமிடம் என்னும் தைரிய ஸ்தானத்தில் புதனிருக்க நற்கோடக்களில் முக்கிய பெயருடைய குரு 7ஆம் மிராசியிலிருக்க ஆயுள் லக்கினமாகிய 8 ஆம் மிராசிக்கு 6ஆம் மிடத்தில் சுக்கிரனிருக்க பலத்தைப் படைத்த ராகு சந்திரனிருந்த ராசிக்கு 9 ஆம் மிராசியிலிருக்க நான்காமிராசியிலில் சுயஸ்தானத்திற் உடையவன் ஆக்ஷி பெற அவனேடு பஞ்சம ஸ்தாஞதிபதியும் சேர அந்த ஜாதகனை எவரும் எதிர்த்தாடுவதற்கு இல்லாமலிருந்த ஜாதகனே ஏக சக்ராதிபதியாத இருப்பான், எ-று.
20

அரவஞ்சுங்கன்மதியரச னமர்ந்தவீட்டோஞேருநான்காய்
உரவாயிவர்க்குமேழன்றி யொருபத்தாகவிருந்தாலும்
குருவுமதியுங்கூடவதற் கொருபத்தாகவிடைசுங்கன்
இரவும்பகலுமொருகுடைக்கீ ழேகச்சக்கிரவர்த்தியுமாம்

(இ-ள்) இராகு சுக்கிரன் சந்திரன் குரு இவர்கள் நின்ற ராசிக்குடையோன் நான்கா மிராசியிலாவது அல்லது மேல் சொன்ன கிறகங்களுக்கு உறவாய் 10 ஆமிராசிலிருந்தாலும் குரு சுக்கிரன் சேர்ந்து ஓர் ராசியிலிருச்க அவர்களுக்கு 10ஆம் மிராசியில் சுக்கிறனிருக்க ஜெனித்தவர்கள் அந்த ஜாதகன் அல்லும் பகலும் ஒரே குடையின்கீழ் அரசு செய்யும் ஏக சக்ரவர்த்தியாவான் எ று,
21

குருவுக்கைந்திடத்தேசுங்கன் கோலமாநவத்திற்சேர
இரவுக்குப்பகையோன்விண்டா ணிவருடன்கூடிநிற்க
அரவுக்குச்சோமன்வீட்டா னவனுமேயீரிரண்டேல்
மருவொக்குங்குழிலிஞளே மணிமுடியிராஜயோகம்

(இ-ள்) குரு நின்ற ராசிக்கு 5 ஆம் வீட்டிற்குடையோனும் சுக்கிறனும் சேர்ந்து ஒன்பதாமிடமென்றும் பாக்கியஸ்தானத்திலிருக்க சூரியனுக்குப் பகை க்ஷேத்திரத்திற்குடையவனும், சத்துருவும் கூடியிருக்க சந்திரனிருந்த வீட்டிற்குடையோன் பாம்பு நின்ற ராசிக்கு 4ஆம் மிராசியிலிருக்க முல்லை யரும்புபோன்ற ஸ்தனத்தையுடையவளே மணிகளிலமைந்த முடியைத் தாங்கும் ராஜயோகமுன்டென்றும் கூறுவாய் எ,று

வருவதுயோகந்தானும் வளர்பிறையுச்சமாகிற்
குருவதுகடகந்தன்னிற் கூடிலக்கினத்தானத்துக்
கரவதுபத்தினிற்க வவ்வெள்ளியுச்சமாகில்
இருபதுகடகத்தானை யேறியேயரசேயாள்வன்

(இ-) வளர்பிறைச் சந்திரன் உச்சம் பெற லக்கிணத்ததிபதி 10 ஆம்மிடமென்னும் ஜீவன ஸ்தானத்திலும் சுக்கிரன் மீனராசியில உச்சம் பெற்றிருக்க மதப் பொருந்திய 20 பரிகளிலேரி ஊர்வலம் வரத்தக்கதாய் அரசாண்டிருப்பானென்றும் கூறுவார் எ-று)
23

சீவாதிபனுமரவமுமே சேர்ந்தேயரசனுலாகிற்
பாவாதிபனுநிறைமதியும் பத்தேசுங்கன்கலந்திருக்க
ஆவாவிடையினவ்வீட்டா னம்புலினின்றவதிபதியும்
ஈவாரொருவர்க்கொருநான்கி லிருந்தாலரசேயாளுவனே

(இ ள்) ஜெனனலக்கிணத் தோனென்றும் ஜீவஸ்தானுதிபதியும் இராகுவும் சேர்ந்து குரு நின்ற ராசிக்கு நான்கா மிராசியுலிருக்க பாவக் கோட்க்களுடன் பூர்ண சந்திரனும் சேர்ந்து சுக்கிரன் வீடாகிய ரிடப துலாத்திலிருக்க ரிடபத்திற்கதிபதியான சுக்கிரனும் சந்திரனிற்கவீட்டிற் குடையோனும் ஒருவருக்கொருவர் நான்கிற்கு நான்காயிருக்க அந்த ஜாதகன் உலகை யரசாலத்தக்க ராஜயோகமூடையவனுவான். 24

சதிரெதிர்வீட்டானைந்திற் சரசமாய்முன்பின்னேரும்
அதிர்தருமிலக்கினத்தே யவருமேனிற்பாராகில்
எதிரவேயிலக்கினத்தா னிருவருந்தர்மஞ்சேர
மதுரமாய்நிலவும்பாம்புஞ் சதிரமேயாகில்ராஜன்

(இ-ள்) நான்கு ஏழு இவ்வீட்டிற்குடையவர்கள் ஐந்தா மிராசியிலிருக்க முன்வீட்டிற்குடையோரும் பின் வீட்டிற்கு டையோரும் மேன்மை பெற்ற ஜனன லக்கினத்திலேயே நிற்க ஜென னலக்கினத்தோன் மேர்ச்சொன்ன இருவருக்கும் 10 மிராசியிலிருக்க சந்திரனும் பாம்பும் கூடி 1,4,7,10 ஆம் மிராசியிலிருந்தாலும் ராஜ யோகமென்றே கூறுவர் எ.று. 25

யோகமூண்டென்றுசொல்ல வொருநான்குமைந்துஞ்சேர
ஆகமுமூன்றுமுன்னே னவருமேசேர்ந்திருக்க
நாகமுமிருந்தவீட்டா னடுப்பதிநாலாய்நிற்க
ஏகமாயச்சுங்கன்சென்மத் தாதியுங்கூடில்ராஜன்

(இ-ள்) நான்காமிடந்தோனும் 5 ஆம் மிடத்தோனும் ஒன்று சேர வும் 9 ஆம் வீட்டோனும் 10ஆம் வீட்டோனும் சேர்ந்து ஓர் ராசியி யிலிருக்க பாம்பு நின்ற வீட்டிற்குடைய கிறகம் 4,7 ஆம் மிராசியி லிருக்க ஜனன லக்கினுதிபதியும் சுக்கிரனும் ஒன்று கூடி இருக்கிறவ னுக்கு ராஜயோகமும் அரசனுமாக இருப்பான் எ.று. 26

கண்டுசொல்யோகந்தன்னைக் கருத்திலாரறியவேண்டி
விண்டுநல்லரசன்சோமன் வீரியசுங்கன்பாம்பும்
அண்டிடிலிருரெண்டாகி லவரவரிடந்தானுலாய்
வண்டுநேர்விழியாய்கேளாய் வருவதுயோகந்தானே.

(இ-ள்) யோகத்தையறிய வேண்டியதெனில் குரு சந்திரன் சுக்கி ரன் பாம்பு இவர்கள் ஜனன லக்கினத்திற்கு நான்கா மிராசியிலிருக்க அவ்விட்டிற்குடையோன் அவர்களுக்கு நான்கிமிராசியிலிருக்க வண்டு களின் குதலையும் விழியையும் பழிக்கத்தகுந்தவனே பிரபல்ய யோக மூண்டாகுமென்றும் கூறுவாயறகே எ.று. 27

அம்புலியிருந்தவீட்டா னரசற்கோரேழினிற்க
வெம்புலிசுங்கனூரான் வீரியசோமற்கேழில்
நம்புலிபாம்பிடத்தா னயந்துடனவர்க்கேபத்திற்
செம்புலியாகினின்ருர் செகச்சக்கிரவர்த்தியாமே.

(இ-ள்) சந்திரனிருந்த இராசநாதன் குருபகவானுக்கு ஏழாமி டத்திலிருக்க சுக்கிரனிருந்த இராசிநாதன் சந்திரனுக்கு ஏழில் நிற்க இராகு கேதுகளிருந்த இராசிநாதன் மேற்குறிப்பித்த கிரகங்களுக்கு பத் தாமிடத்திலிருக்கும் ஜனனமான ஜாதகன், சுக்கிரேஸ்வரன் போல பிரபுத்தன்மையான யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 28

ஒன்பதுபேருநட்பி லொருவருக்கொருவர்நாலாய்
இன்பமாயிருந்தாராகி லிரவொளிபகலால்நின்ற
அன்பதோடாறுதேச மகன்றசாம்பிராச்சியோகம்
என்பதுநாலாயொன்றி லிருத்தரசாளும்யோகம்

(இ.ள்) நவகோட்க்களும் நட்ப்புபெற்றும் ஒருவருகொருவர் நான் குக்கு நாலாய் அமர்ந்திருக்க அந்த ஜாதகன் இரவும் பகலும் ஓர் நாளெ னக்கொள்ளுப் 56 தேசத்ததிபதிகளுக்கும் மேம்பட்டவனுய்சாம்ராச்சிய யோகமுண்டென்றும் ஜெனித்த 5 வருஷங்களுக்கு மேல் யோகமுண் டென்றும் கூறுவாயாக எ.று.

இடைசிறு முகமுநல்ல வேந்திழையாளேகேளாய்
குடையுடன்குஞ்சம்வீசு மியோகமேகூறவேண்டில்
படைமன்னரசன்சுங்கன் மதிபுந்தியிவையர்கூட
விடையனின்னிடத்தாரீரெண் டாயினுமிராஜயோகம்

[இ ள்] இடை தொடை அழகு பொருந்திய வதனம் முதலியவை களை யுடையவனே பிரகாசமும் பிரக்யாதியும் யோகம் முதலியவை களைப்பற்றி சொல்லவேண்டுவதெனில் குருசுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் ஒன்றுகூடி இருக்க சுக்கிறனின் வீட்டிற்குடையவன் 12ம் மிராசியிலிருந்தாலும் ராஜயோக முண்டென்றே கூறுவர் எ.று.

கெஜயோகம்

அரசனுமிலக்கினத்தானரவு மேயீரிரண்டாய்ப்
பரிசமாயிருக்கநல்ல பாக்கியவானுங்கூட
விரசமாய்மதிக்குநாலில் வீரயேசுங்கனிற்க
அரசியங்குழலேகேளா யாயிரம்யானைகட்கும்

[இ ள்] குருவும் ஜெனன லக்கினத்ததிபதியும் 9 ஆம் விட்டோ னும் சகிதம் பெற்றிருக்க சந்ரனிருந்த ராசிக்கு நான்காமிராசயில் சுக்கிற னுமிக்க பெண்களில் சிறப்புபொருந்தியவளே ஆயிரம் யானைகளையுடை யயோகமுடையவானேனென்று கூறுவர் எ-று. 31

சாம்ராஜ்யயோகம்

அரசனுரிருந்தவீட்டானம் புலிக்கேழிநிற்க
விரசமாமதிதனூரான் வீரியேவெள்ளிக்கேழில்
வரிசையாயரவுநின்ற வதிபதியவர்க்குநாலிற்
சரசமாயிருந்தாராகிற் சாம்ராஜ்யயோகமாமே

[இ-ள்] குரு நின்ற ராசிக்குடையவன் சந்திரனின்ற ராசிக்கு 7ம் மிராசியிலிருக்க சந்திரனிருக்க விட்டிற்குடையவன் சந்திரனுக்கு ஏழாமி ராசியிலிருக்க இராகு நின்ற விட்டிற்குடையோன் மேர்ச்சொன்ன கிரகத்திற்கு நான்கிமிராசியிலிருக்க அந்த ஜாதகனுக்குசாம்ராஜ்ய ராஜ யோகம் சித்திக்குமென்றும் கூறுவாயாக எ-று. 32

யோககாண்டம் முற்றிற்று

ஆகமொத்தம் 93.

மீனம் உபயம்	மேஷம் சரசம்	ரிஷபம் ஸ்திரம்	மிதுனம் உபயம்
கும்பம் ஸ்திதம்	இவ்விதமாய் இராசிகளின் ஸ்திர உபயம் பார்ட்பதுடன் கிரகஹம்சமமும் கவனிப்பீர்.		கடகம் சரம்
மகரம் சரம்			சிங்கம் ஸ்திரம்
தனுசு உபயம்	விருச்சிகம் ஸ்திரம்	துலாம் சரம்	கன்னி உபயம்

பலாபலக் காண்டம்

உறவு பகை சமன்

இரவுசனிசெவ்வாய்தானு மிவர்மூன்றுபேரும்பாவி
அரவுமதிராசன்வீட்டா ராயிடிற்சுபரேயாவர்
வரவுதிதனிசேய்வீட்டா ராயிடிரசுபரும்பாபர்
உரவரிந்துணரக்கலாகு முபமதுகேளாய்மாதே.

[இ ள்] சூரியன் குஜன் சனி ஆகிய முக்கோட்க்கலும் தினசரிப் பாவக்கோளென்றும் இராகு, சந்திரன், குரு இவர்களும் ஷெ சந்தி

ரன் குரு இவர்கள் க்ஷேத்திரங்களில் நின்றவர்களும் நற்கோட்க்களாவார் சனி, குஜன் இவர்கள் வீட்டிலிருந்தவர்கள் சுபரும் பாபருமாயிருப்பார்கள் இவ்வாரு சுபன் அசுபன் என்பதை உறவறிந்தே சொல்லவேண்டும் எ-று. 1

உதையமேழ்நான்குபத்து மவர்க்குறவுள்ளோர்கோணர்
மதியமுஞ்சதிரத்தாரும் பதியகோணர்க்குநட்பு
விதியதாரீராரெட்டில் வீரியேயிவர்க்குபொல்லார்
பதியதாங்குரிதான்கேளாய் பகைநட்புமறியும்வாரே.

(இ ள்) ஜெனனலக்கினம் நான்கிமிராசி 7 ஆம் மிராசி 10ஆம் மிராசி இவ்விராசிக்குடையோர்க்கு கோணராசிக்குடையோர் உறவுள்ளவராவர் சந்திரனும் சந்திரனின்ற ராசிக்கு 1,4,7,10 ஆம் வீட்டிற்குடையவரும் கோணராசியதிபதிகளுக்கு நட்பினராவார், மேர்சொன்ன கிரகங்களுக்கு 6,8'12 ஆம் ராசிக்குடையவர்கள் பகைவரும் கொடியவருமாவார் இவ்வாறே பகை நட்பு முதலியவைகளை யறிந்து சொல்லுதல் வேண்டும் எ-று. 2

ஆறுமீராறுமெட்டோர் கோணமேசமனேயாவர்
வீரியேசெய்வாய்காரி விளங்குமான்கதிரோன்கூட
ஏரியகோணஞ்சேர விவர்க்குமேசமனேயாவர்
கூறியகண்ணுப்கேளாய் குறியதாய்சமனேசொல்லும்.

(இ-ள்)ஜெனனராசிக்கு 6,8,12ஆம் ராசிக்குடையவர்கள் கோணராசி யதிபதிகளுக்கு சமத்துவம் உடையவர்களாவர் பருக்கிறமமுடைய செவ்வாய், சனி, சூரியன், இவர்கள் ஒன்றகூடி கோணராசியிலிருந்தால் ஒருவர்க்கொருவர் சமத்துவமுடையவர்களாவார் அம்புகளைப் பழிக்கும் விழிகளையுடையவளே இவ்விதமிருப்பதேசமன் என்று சொல்வார், எ-று.

பலன் சொல்லும் விபரம்

பத்தெழுமுதையநான்கு பேருக்கும்பகைவர்கேளாய்
ஒத்தெழுமாறுமெட்டு மொருபன்னிரண்டுமாகக்
கத்தேழிலொன்றுபோகக் கருத்துளோர்சொன்னநூலை
விந்தேழுகமலமாதே விளம்பிடாய்விண்ணுலோர்க்கே.

(இ-ள்) அழகு வாய்ந்த பெண்ணே, கணிதவல்லோர்களாகிய சாஸ்திரிகளுரைத்த வேத வாக்கியத்தை இந்த பூமியிலுதித்தோர்க்கு பலாப்பலன்களை யறிந்து சொல்லவேண்டுவது எப்படியெனில் 1,4,7,10ஆம் வீட்டோர்க்கு பகைவர் யாரென்றுல் 6,8,12ஆம் ஸ்தானத்திற்குடையவர்களே யாவார்கள் எ-று 4

அரவிருந்திடும்வீட்டார்க்கு மம்புலியிரவிக்காகார்
இரவியிந்திருந்தவீட்டா ரிவருமேரவுக்காகார்
உரவன்றிப்பார்க்கலாகா வுபமதுவறியாதார்க்கு
விரைசெரிகுழலினளே விளம்பிடாய்ளங்கத்தானே.

(இ-ள்) பாம்புகளாகிய இராகு கேதுகளிலிருந்த ராசிக்குடையோர்க்கு சூரியன் சந்திரன் இவர்களுக்குப் பகைவர் சூரியன் சந்திரனிருந்த வீட்டோர்க்கு ஷ பாம்பிருந்த வீட்டோர்க்கு ஆகாது. ஒருவருக்கொருவர் உறவாகிய நட்பின்றி நோக்குதலுமாகாது, என்று அழகும் இன்பமும் வாய்ந்த குரலையுடையவளே இப்பூமியிலுதித்தோர்க்கு இவ்வாரறிந்து பலன் கூறுவாயாக எ-று.

பலாபலக் காண்டம் முற்றிற்று

ஆகமொத்தம் 98.

—————

விரய ஸ்தானம்	இலக்கினம்	குடும்ப ஸ்தானம்	திரஸ் ஸ்தானம்
இலாப ஸ்தானம்	மாரகஸ்தானம் 2 4 7 8 9 10 11 12வது ஸ்தானங்கள்.		சுகஸ் ஸ்தானம்
ஜீவனம் ஸ்தானம்			டத்திர ஸ்தானம்
பாக்கிய ஸ்தானம்	ஆயுள் ஸ்தானம்	களத்திர ஸ்தானம்	சத்ரு ஸ்தானம்

தீர்க்காயுள் காண்டம்.

—————

தீர்க்கவயது

மந்தனிருந்தவீட்டார் மறைப்பிலாச்சுபரேசேரில்
தொந்தமாயெட்டோனட்பிற் சுகமுடனிருந்தாராகில்
அந்தமாயாதிக்காறி லவனுக்குமுன்பின்னோரும்
வந்துநாளுறவேயாகில் வயதுமே நூறதாகும்,

(இ-ள்) சனியிருந்த ஸ்தானதிபதி மறைவுஸ்லானத்தி லில்லாமல் அவருடனே சேர்ந்திருந்தும் அஷ்டமஸ்தானதிபதி நட பாயிருந்தால் சூரியனுக்காருமிடத்திலும், அவனுக்கு முன்பின் னிருந்த ஸ்தானதிபதிகள் உறவாயிருந்தால் நூறுவயதுவரையிலும் ஜீவத்திருப்பதற்காகும் எ-று. 1

அட்டமவிடத்திற்பாப ரன்றியேசுபர்கனிற்கத்
துட்டமாங்காரிநட்பிற் சுகமுடனிருந்தானகிற்
சட்டமாயிரண்டோனின்ற சனிவீட்டான்சமனய்நாலில்
இட்டமாயிருந்தானகி லிவனுக்கேவயதுநூறு.

(இ-ள்) அஷ்டமஸ்தானத்தில் பாபரில்லாமல். சுபரிருந்தால் சனி நட்பு ஸ்தானத்திலிருக்க, இரண்டாமிடத்தாலின்றவனும், சனி நின்ற இராசிநாதனும் சமமாய் நாலில் இருந்தால். நூறு வயதுவரையிலும் ஜீவித்திருப்பதற்காகும் எ-று. 2

சனிசதிபக்கமாறி சலிப்பில்லாச்சுபர்கணிற்க
விதிக்கொருவாட்சி நட்பாய் வீரியேயிருக்கத்தானும்
பதிக்குருநாளாய் நின்றால் பரமனூர்லபியே நூறு
அதிற்குறையா மனிறகு மம்புலிக்கதிகமாதே

(இ ள்) சனிக்கு இருபக்கத்திலாயினும், ஆருமிடத்திலாயினும், சுக்கிரனிருக்க இலக்கினதிபதி ஆக்ஷி நட்பாயிருக்க, இலக்கிணத்திற்கு நாலில் குரு இருந்தால் ஜாதகனுக்கு வயது நூறு என்றுரைக்கப்படும் எ-று. 3

விதிக்கோரீராறிலெட்டில் வெள்ளிபொன்றிங்கணிற்கச்
சதிக் சனிகாறினட் போர்னிற்கச் சமனகைச்சனி வீட்டானும்
அதற்காக நாலிற்பொன்னு மமர்திருந்தேட்டோன் கூட
மதிக்கிணை மாதேகேளாய் வயதுமே நூறதாகும்

இ-ள்) இலக்கினத்திற்கு, எடடு பன்னிரெண்டாமிடத்தில், சுக்கிரனும் குருவும், சந்திரனுமிருக்க, சனிக்கு ஆறில நட்பு கிரகங்களிருக்க இவர்களுக்குசமமாக சனி இருந்த ராசிநாதனுமிருக்க, நான்காமிடத்தில் குரு இருக்க அவரை அஷ்டமத்தோன் சேர்ந்திருந்தால் சந்திரப்பிரகாசமுடைய மாதே, ஜாதகன் நூறுவயதிருப்பான் எ-று. 4

எட்டாறு பனிரண்டோனு மிவருமேயொரு நான்காகத்
தொட்டாறு பனிரண்டெட்டோர் சுபமுடன் சேர்ந்திருக்க
நட்டாறிற்காரினிற்க நலமுள்ளோர்|பார்வையாகிப்
பெட்டாறு மூன்றுமொன்றிப் பூமியிலிருப்பன்மாதே

(இ-ள்) அஷ்டமத்தோனும், பனிரெண்டாமிடத்தோனும், நான்காமிடத்திலிருக்க, அஷ்டமாதிபதியும், பனிரெண்டாமிடத்ததிபதியும் சுபக் கிரகங்களுடனே சேர்ந்திருந்தால் ஆருமிடத்நில் சனி இருக்க சுபகிரகங்கள் பார்வைச் செலுத்தி இலக்கினம், மூன்று ஆருமிடத்திலிருந்தால் பூர்ணயுசாய் இருப்பதற்காகும் எ-று. 5

கார்க்கு மீராறெட்டிற் கனக நற்சுங்கன் புந்தி
சேரிக்கையாகி நின்றூர் சென்மமாதிக்கு நாலாய்க்
கோரிக்கையாக வெட்டோன் கூடவே மதியுஞ்சேரப்
பாரிக்க மொன்றுய் நூறு வயதாக நிற்குமாதே

[இ,ள்] சனிக்கு எட்டு பனிரெண்டில் குரு, சுக்கிரன். புதன் சேர்ந்திருந்தால் இலனதிபதிக்கு நாளில் அஷ்டமஸ்ததானதிபதியும் சந்திரனுமிருக்க நூறு வயது வரை ஜீவித்திருப்பதற்காகும் எ-று. 6

எட்டுடனுட்சி நட்புமிருந்துடனுச்சமாகில்
நட்டுடன் காரியுச்ச நட்புடனுட்சி சேரக்
கட்டுடனல்லோர் பார்க்கக் காரியிலிரவியன்றித்
தொட்டிடாதிருக் கின்மாதே தோன்றிய வயது நூறு

[இ-ள்] அஷ்டமஸ்தானுதிபதி நட்பு ஆக்ஷி நடபு, உச்சமாயிநக்க சுபகிரகங்கள் பார்வை செலுத்த சனியும், சூரியனும் சேராதிருந்தால் ஜாதகனுக்கு நூறுவயது எ-று. 7

எட்டிருபக்கனல்லோ ரிருத்திடக்காரி நட்பில்
தொட்டு முன்பின்னோர் நட்பாய்ச் சுபருமேயிருந்தாராகிற்
கட்டுடனெட்டு வீட்டான் கனக நற்சுங்கன் சே
மட்டிலாதிருப்பன் மாதே வயதுமே நூறதாக

[இ ள்] அஷ்டமதஸ்ானத்தி லிருப்பவர்கள் சுபராயிருந்திட சனி நட்பாயிருக்கவும் இலக்கினத்திற்கு முன் பின்னிருக்கும் ஸ்தானுதிபரும் நட்புஸ்தானத்திலிருக்க சுபராகவுமிருந்தால், அஷ்டமஸ்தானுதிபதி குரு. சுக்கிரனுடன் சேர்ந்திருக்க ஜாதகனுக்கு வயது நூறு ஏ-று. 8

எட்டுடனெட்டு வீட்டார் னினியவராட்சியாகில்
மட்டுடன் பாபர்பாரா ராயினுஞ்சுபரே பாக்கக்
கட்டுடனுதையந்தன்னிற் கனகநற் சுங்கனிற்க
விட்டிடாதிருக்கினூறு வயதாக விருப்பன்மாதே

[இ-ள்] அஷ்டமஸ்தானுதிபதியும், அவர்க்கு அஷ்டமத்தானும் ஆசாரியாயிருகக, அவர்களை பாபர் பாராமலிருக்க சுபக்கிரகங்கள் பார்த்தால் ஜனன இலக்கினத்திற் சுக்கிரனும், குருவிக்கஜாதகனுக்கு வயது நூறு எ-று. 9

எட்டவனிரண்டினிற்க வேழுடனுதையஞ்சேரத்
தொட்டவன் தர்மமூன்றிற் ரேன்றியே பாபர்பாரா
விட்டவனரசன் பத்தில் வீரியேனிற்ருகில்
இட்டவனுகி வாழ்வ னிவனுக்கே வயது நூறு

[இ-ள்] அஷ்டமஸ்தானுதி இரண்டிலிருக்க, 7ஆம்மிடத் ததிபதி யுடன் லக்கினுதிபதி சேர்ந்திருக்க, அவர் மூன்று. பத்திலிருக்க பாபர் பாராவிட்டாலும், குரு பத்திலிருந்தாலும் சகலரும் மெச்சும்படியான நூறுவயது யிருப்பார் எ-று. 10

ஆறெட்டுக் குடையோர் சேர்ந்திட்ட டவ்விரையத்தினிற்க
மாறெட்டு விரையத்தானு மறுத்துமாறெட்டினிற்க

கூரெட்டு முதையந்தன்னிற் குருவாகிச் சுங்கனிற்க
ஏறிட்டு வயது நூறு யிருப்பனே புவியின்மாதே

(இ ள்) இலக்கினத்திற்கு ஆறு எட்டுக்குடையோர் சேர்ந்து விரய ஸ்தானத்திலிருக்க, பனிரெண்டாமிடத்தான் அஷ்டமத்திலிருக்க மூன்ருமிடத்திலாகினும், அஷ்டமஸ்தானத்திலாகிலும் குருசுக்கிரனிருக்க ஜாதகனுக்கு வயது நூறு எ:று. 11

சோமனுர் பெருமையாகிச் சோதிசேர் வெள்ளிக்கேழிற்
காமனுரரசனுலிற் காரியுனிற்ருகிற்
பாமனுரிவிசேயும் பாம்புமே பாராராகில்
ஏமனுரழை திட்டாலு மிருப்பவனே வயது நூருய்

(இ-ள்) வளர்பிறைச்சந்திரன் சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலிருக்க குரு நான்காமிடத்தில் சனியுடனிருக்க சூரியன், செவ்வாய் இராகு, கேதுக்கள் பாராதிருந்தால் எமபயமில்லாமல் நூறு வயதுவரை ஜீவித் திருப்பதற்காகும் எ:று, 12

உதயத்திற்சுபரேனிற்க வொருபகையாரும் பாரா
மதியத்தினல்லோரன்றி மற்றயரிருக்கலாகா
அதையத்திற்சுபரே கூடி யம்புலி பெருமையாகில்
விதியற்று போகாதாகி மேதினியிருப்ப நூருய்

(இ:ள்) ஜனன லக்கினத்திற் சுபரிருக்க அவர்கள் பகைவர் பாராதிருக்க பத்தாமிடத்தில் சந்திரனும் சுபக்கிரகங்களுமிருப்பதல்லாமல் மற்ற பாபக்கிரகங்களில்லா திருந்தால் அந்த ஜாதகன் உலகத்தில் நூறு வயதுவரை ஜிவித்திருப்பதற்காகும் எ:று, 13

உதையாதிபதியு நட்பா யாட்சியு முச்சமாகில்
மதியாகிலாட்சியுச்ச நட்புடன் பெருமையாகில்
இசையதிபாபர்பாரா ரென்னினுஞ்சுபரே பார்க்கச்
சிதையாமனூற்தாகிச் சிரியதோர்மாதே நிற்கும்

(இ:ள்) ஜனன லக்கினத்தான் ஆஷி உச்சம் நட்பு ஸ்தானங்களிலிருந்தாலும், வளர்பிறைச் சந்திரனும் நட்பு, ஆஷி, உச்சமாயிருக்க பாபர் பாராமல் சுபர்பார்வை பெற்றிருந்தால் ஜாதகன் நூற வயதுவரை ஜீவிததிருப்பதற்காகும். 14

சிதிரெதிரெழுந்தோர் சமர்த்தராய்க்கோணஞ் சேரக்
சதிரெதிர் வீட்டோனட்பாய்ச் சரசமாய் நிற்கத்தானும்
எதிரதிர் குருவேநிற்க விந்து நட்புச்சமாகிற்
கதிரவன் போலவாகிக் கனக்கவேவயது நூறு

(இ:ள்) சூரியனுக்கு ஏழாமிடத்ததிபதிகோணத்திலிருக்க இரண்டாமிடத்தான் நட்பு ஸ்தானத்திலிருக்க, அவர்கட்கு எதிரில் குருவிருந்து பார்வை செலுத்த சந்திரன் நட்பு உச்சஸ்தானத்திலிருந்தும். சூரியப்பிரகாசமாய் நூறுவயதுவரையில் ஜீவித்திருப்பதற்காகும் எ-று.

தோணியவிலக்கினத்தான் சோமனுரிருந்த வீட்டான்
பேணிய வெட்டோன்காரி பிறிவினையில்லாதாகிக்
காணியேசுங்கன்புந்தி கனகனல்லரசன் சேரப்
பூணியேவிதியுயர்ந்து பூமியிலிருப்பன்மாதே

(இ:ள்) இலக்னுதிபதியும் சந்திர நின்ன இராசிநாதனும், அஷ்டமஸ்தானுதிபதியும் சனியும் பிரியாமலிருந்தால் சுக்கிரனும், புதனும. குருவும் சேர்ந்நிருந்தால் உலகத்தில் பூர்ணயுசாய் வாழ்வதற்காகும் எ:று, 16

சனியுடன் பாபர் கூடித் தானுமேயாறெட்டாகில்
விதியுமேயாட்சி நட்பாய் வீரியசுபரே பார்க்கப்
பதிமதியரசன் சேரப் பாங்குடன் சுங்கனிற்கில்
அதிபதியாகி நிற்ப னவனுக்கே வயது நூறு

(இ-ள்) சனியும் பாபரும் சேர்ந்து ஆறு, எட்டாவது ஸ்தாளத்திலிருந்தால் இலக்கினுதிபதி ஆக்ஷி, நட்பு ஸ்தானத்திலிருந்து சுபர் பார்வை பெற்றிருக்க அவர்களுடன் சந்திரனும் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருக்க, அந்த ஜாதகனுந்கு வயது நூறு எ:று. 17

உற்பதியாதினின்ரு யுதையாதி பதிக்கு நட்பா
நற்பதி சேர்ந்து நிற்க ஞாயிறு பாராதாகிச்
சர்ப்பதிகாரி செவ்வாய் சரசமாய்க் கோணஞ்சேர
நிற்பது வயது நூறு நினைவதாயுரைப்பர்மாதே

(இ-ள்) இலக்னுதிபதிக்கு இராசிநாதன் நட்பாய் உத்தமஸ்தானத்திலிருந்து சூரியன் பாராதிருந்தால் சனியும் செவ்வாபும் கோணமேறியிருந்தால் ஜாதகனுக்கு நூறி வயதென்று சொல்லுவார் பெண்ணே எ-று.
18

மதிபதியதர்க்கு நாலின் மன்னவன் புந்திசுங்கன்
அதிபதியதர்க்கும்பத்தி லவரிருந்திடவே நோக்க
விதிபதியிரவிகாரி வீரிய செவ்வாய் தானும்
மதிபதிகோண நின்ருல் விதியது நூறதாகும்

(இ-ள்) சந்திரனிருந்த இராசிநாதனுக்கு நாலில் சுக்கிரனும் புதனும். குருவுமிருக்க அவர்க்கு பத்தாமிடத்தில் அந்த சுபர்கள் பார்வை செலுத்தினுலும், இலக்கினுதிபதி, சூரியன், சனி செவ்வாய் இராசிநாதனும் கோணமேறினுல் வயது நூறு எ-று. 19

தீர்க்காயுள் காண்டம் முற்றிற்று

ஆகமொத்தம் 117.

விரய ஸ்தானம்	இலக்கினம்	குடும்ப ஸ்தானம்	சகோதர ஸ்தானம்
இலாப ஸ்தானம்	இவ்விதமே ஒவ்வொரு லக்கினத்திற்கும் அனைபும்.		மாதுர் ஸ்தானம்
காரிய ஸ்தானம்			புத்திர ஸ்தானம்
பிதுர் ஸ்தானம்	ஆயுள் ஸ்தானம்	17 ஸ்திர ஸ்தானம்	சத்ரு ஸ்தானம்

பிரதியோக காண்டம்

சத்தமவிடத்தான்ருனுஞ் சதிரெதிர்பதியார் கூடி
உத்தமபாக்கியத்தி லுடையவன் கூடச்சேர
அத்தமமில்லாதாகி யைந்துளோன் சன் மஞ்சேர
உத்தமசீவனேந்தி லிருந்திடில் ராஜயோகம்

(இ-ள்) ஏழாமிடத்தானும் இலக்கினுதிபதியும் சேர்ந்து பாக்கிய ஸ்தானுதிபதியுடனே கூடினுலும் ஐந்தாமிடத்தான் அஸ்தமயமில்லாமல் இலக்கினத்தில் இருந்தால் பத்தாமிடத்தான் ஐந்தாமிடத்திலிருக்க ஜாதகன் இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று. 1

ஏழிடமுதையமெட்டி லிருக்கவே யெட்டிற்பின்னேன்
வாழ்வுடனனியாய் நிற்க வருமந்த ராஜயோகம்
ஆழியின் தீவுமெல்லா மவனதாயா சாயாள்வான்
தோழினற்கமலமாதே சொல்லிதையவனியோற்கே

(இ-ள்) ஏழாமிடத்தானும் இலக்கினத்திலாகிலும், அஷ்டமஸ்தானத்திலாகிலுமிருக்க ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும்படியான தன தான்யசம்பத்துடன் சகல தேசத்திலும் அரசனைப் போல கீர்த்தி செலுத்திக்கொண்டிருக்கும்படியாயிருப்பதாகும் எ-று, 2

இராஜயோகம்

சதிர்ப்பஞ்சத்தானுங்கூடிச் சத்தமஞ்சேர்ந்திருக்க
அதற்கெதிர்பதியே சேர்வுற் றேழிரண்டதனினிற்க
அதிர்நவத்திடத்தானுரி லன்றியேலக்கணஞ்சேர
மதுரமாய்ச் சீவலர்பஞ் சேர்ந்திடிலி ராஜயோகம்

(இ-ள்) பஞ்சமஸ்தானாதிபதீ சப்தமஸ்தானத்திலிருக்க அவர்கெதிரில் இலக்கினாதிபதி சேர்ந்திருந்து இரண்டாமிடம், ஏழாமிடத்திலிருக்க பாக்கியஸ்தானாதிபதி இலக்கினத்திலிருக்க, பாக்கியஸ்தானாகி ஜீனனஸ்தானத்திலாகிலும், இலாபஸ்தானத்திலாகிலும் சேர்ந்திருந்தால் இராஜயோகம் எ-று 3

மதிபதியரசன்ருனோர் பக்கமாய்ச் சுங்கநிற்க
விதிபதியாட்தி நட்பு வேண்டியே நிற்குமாகில்
அதிபதியரசற்கேழி லவனிருந்திட நேர்நோக்கச்
சதிபதிமாதேகேளாய் தாழ்விலாதரசேயாள்வன்

(இ ள்) சந்திரனின்ன இராசிநாதனும் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருக்க இலக்னாதிபதி ஆக்ஷி நட்பாயிருந்தாலும், குருவுக்கு எழாமிடத்திலிருந்தாலும் பார்வை செலுத்தினாலும், அந்த ஜாதகன் இராஜயோகத்தை அனுபவிப்பான் பெண்ணே எ-று. 4

உதயமெய்யினியவாளு மொன்றியே நடுவாய் நிற்கக்
கதிர்காரி செவ்வாய் தானுங் கனத்த வீராறிற்சேரக்
கதிரொளி யெங்குந்தீபங் கனமொக்க சேஷனாகி
மதிதவழ்கயிலை காத்த வண்மை போலிருப்பன் மாதே

(இ ள்) இலக்னாதிபதி இரண்டாமிடத்தானும் சேர்ந்து துவாதஸ்தானத்தின் மத்தியிலிருக்க, சூரியன், செவ்வாய். சனியும் பனிரெண்டாமிடத்திலிருக்க அந்த ஜாதகன் சூரியப்பிரகாசம்போல, சுக போக சவுக்கியமுடன் பலருக்கும் உபகாரியான இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று, 5

அரவுடனிருந்த வீட்டானுறிரண்ட தனிலில்லாத்
திரமுடனுன் கிற்பத்திற் சேய்காரி யிரவியன்றிக்
கரமுடனரசன் சோமன் கடுவெள்ளியிருக்கக்கூட
உரமுடனிலக்கினத்தா னுடற்பதி சேர்ந்தால் யோகம்

(இ-ள்) இராகுடன் சேர்ந்த இராசிநாதன் பனிரெண்டவாது ஸ்தானத்திலில்லாமல், நாலாமிடமும் பத்தாமிடத்திலிருக்க சனியும் சூரியனும் சேராமல் அவருடனே குருவும், சந்திரனும்யிருக்க இலக்கினாதிபதியுடன் இராசி நாதனும் சேர்ந்திருந்தால் மிகவும் மேலான யோகத்தை யனுபவிப்பதற்காகும் 6

பறித்தலக்னாதியாகிப் பாக்கியவிடத்துக்கிப்பாற்
குறித்தைந்து நான்கு பேருங் குறையில்லாதணியாய் நிற்க
நெறித்து லோகாதியல்லா நிலையதாயர சேயாள்வன்
வெறித்தகாமத்தினாலே விண்ணுளோர்க்குரைப்பாய்மாதே

(இ:ள் இலக்கினாதிபதியானவர் பாக்கிய ஸ்தானத்திற் பின்புறமாயிருக்க ஐந்தாமிடத்தானும், நான்காமிடத்தானும், தனித்தனியேயிருக்க மிகவும் நீதிநெறி தவருமல் சகலருக்கும் உத்தமனாயிருந்து உலகத்தையாளும்படியான சமர்த்துடையவனாயிருப்பதற்காகும் எ;று.7

பத்துடன் முன்னும் பின்னும் பருமதிச்சுங்கன் புந்தி
இத்துடனரவஞ்சேர்வற் றிருக்கவேயிரவியன்றி
ஒத்துடனுதையந்தன்னி லுதையாதிகுருவு நின்றூர்
கத்துடன் பெருமையாகிக் கனக்கவேயர சேயாள்வன்

(இ:ள்) பத்தாமிடத் ததிபதிக்குமுன்னும் பின்னும் சந்திரன், சந்தி, சுக்கிரன், புதனும் இராகு சேர்ந்து சூரியன் சேராமலிருக்க ஜனன லக்கினத்தில் இலக்கினாதிபதியும் குருவும் சேர்ந்திருந்தால் மகா சமர்த்தால் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 8

நாலுகேந்திரத்தாராட்சி நல்லுச் சமாகி நிற்கக்
கோலெதிர் நவத்தார் கூடிக் கொடும்பகையாருமின்றி
மேலுகந்திடவே சோமன் மேருவினின்றுனாகில்
ஆலுகந்தமர்த்தமாதே யரசாளுமிராஜயோகம்

[இ-ள்] இலக்கினாதிபதிக்கு, நான்கு கேந்திரஸ்தானாதிபதிகளும் ஆக்ஷி உச்சமாயிருக்க கிரகங்கள் ஒருவருக்கொருவர் பார்வை பெற்று பகையாயிருந்தாலும் வளர்பிறைச் சந்திரன் இலக்கினத்திலிருந்தால், ஜாதகன் அறிவிற் சிறந்த கீர்த்திவந்தனாய் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 9

பத்துடன் பத்துவீட்டிற் பதியைந்து பேருநிற்க
ஒத்துட நான்குபேரும் மூடுப்பதி சேர்ந்து நிற்க
எத்துடன் சிங்கம் போலே யிருப்பவனேயரசேயாண்டு
வித்துடன் கமலமாதே விளம்பிடாயுலகுள்ளோர்க்கே

[இ-ள்] இலக்கினத்திலிருந்து பத்தாம் ஸ்தானம் வரையிலும் ஐந்து கிரகங்கள் தனித்தனியாயிருக்க, மற்ற நான்கு கிரகங்களும், இலக்கினத்திலேயே சேர்ந்திருக்கும்போது பிறந்த ஜாதகன் மகா சமர்த்தனும் வீரசிங்கத்தைப்போல தாரணியோரை தன்வசப்படுத்தி யாளும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 10

ஏழுடனேழுவீட்டா னிருந்தைந்து பேருநிற்கத்
தாழ்வுடனிருந்த பேருந் தனியாய்க் கூடி லாபம்
வாழ்வுடதிருந்தாராகில் வருமந்தராஜயோகம்
வீழிடரதரசேயாண்டு மேதினியிருப்பன் மாதே

[இ-ள்] ஏழாமிடத்தானும் அவருக்கேழாமிடத்தானும் ஐந்தாமிடத்தாலும் சேர்ந்திருந்து பகை நீசமானலும் சாதாரண யோகமாயிருப்பார்கள், நட்பு ஆக்ஷி உச்சமாயிருந்தால் மேலான இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று. 11

வாகத்திற்பதியுமூன்று பேருமாய் கூடி நிற்க
நாகத்திற்சேர்ந்து நான்கு பேருமாயுதையஞ்சேர
யோகத்திற்றூழ்வில்லாம லொளிகண்ட தூரமெல்லாம்
போகத்திற்சமர்த்தனுகிப் பொருந்தியேயரயோன்வன்

[இ-ள்] இலக்கினபதியுடன் மூன்று கிரகங்கள் சேர்ந்திருக்க இராகுடனே நான்கு கிரகங்கள் சேர்ந்து இரண்டாமிடத்திலிருந்தால் இந்த ஜாதகனுக்கு யோகபாங்கியத்திற்கு யாதொரு குறைவில்லாமல் தனது மனதிற்கெட்டிய தூரமெல்லாம் சுகபோக பாங்கியத்தில் குறைவில்லாமலிருக்க ஜீவியாய் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 12

நாகமன்னிடத்தார் சேர்ந்து நற்பதிலாபஞ்சேரக்
காக மன்னிரவிசேய்க் தக் கனத்த வீராறினிற்க
வாகமன்னிடத்தாண் சோமன் வந்தநாள தனினிற்க
யோகமன் சோமன் வீட்டா னுதையத்திலிருக்கில் ராஜன்

[இ-ள்] வாக்குஸ்தானுதிபதிகள் இலக்கினுதிபனுடனே சேர்ந்து இலாபஸ்தானத்திலிருக்க, சனியானவர் சூரியன் செவ்வாய்க்கு பனிரெண்டாமிடத்திலிருக்க சந்திரனின்ற இராசிநாதன் சந்திரன் விட்டிலிருந்தாலும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 3

அஞ்சுடனஞ்சுவீட்டி லதிபதி நான்குபேரும்
கொஞ்சியே கூடி நிற்கக் கோலமாய் மற்றோர் லாபம்
மிஞ்சியே யிருந்தாராகில் மிருகத்தின் மேடைமீதில்
வஞ்சியேயரசனுகி வையகமெங்குங்காப்பன்

(இ-ள்) சந்திரனிருந்த இராசிநாதன் சப்தமஸ்தானத்திலிருக்க, கேது நான்காமிடத்திலிருக்க, குரு நட்பாய் இலக்கினத்திலிருக்கும்போது பிறந்த ஜாதகன் உலகத்தை அரசுபுரியும் இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும். 15

சந்திரலக்கினுதி சரசமாயுச்சமாகி
வந்தெதிரேழினின்று வளர்பாம்பு நாலாய் நிற்க
தந்திரராஜனட்பாய்த் தனியதனுதைய நின்ருற்
கொந்தலர்குழலினுளே குவலயமெங்கு மாள்வன்

(இ-ள்) சந்திரனிருந்த இராசிநாதனும் இலக்கினத்திலிருந்த இலக்னுதிபனும், சந்திரனும் சேர்ந்நா பத்தாமிடத்திலிருக்க, அந்த ஸ்தானத்திற்கு குரு ஏழாமிடத்திலிருந்தால், அந்த ஜாதகன் உலகத்தை அரசுபுரியும் இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று. 16

மதியிருந்துறும் வீட்டானு மகிழ்ந்துடனுதயஞ் சேரப்
பதியவன் மதியுங்கூடிப் பத்தினினிற்கத்தானும்
அதிபதியரசனேழி லமர்ந்துடனிருந்தாராகிற்
பதிவித மாதேகேளாய் பாராளுமிராஜயோகம்

[இ-ள்] குருபகவான் ஆக்ஷி உச்சமாயிருக்க வளர்பிறைச் சந்திரன் சுக்கிரன், புதனுடன் சேர்ந்து இராகுடனே கூடினலும் இலக்கினுதிபதியும் இராசி நாதனும் நட்பாயிருப்பார்களானுல், இந்த ஜாதகனுக்கு இராஜயோகம் வளர்ந்துக்கொண்டே இருக்கும் எ-று. 17

அரசனுர்பலத்துநிற்க வம்புலி பெருமையாகிச்
சரசமாய்ச்சுங்கன்புந்தி சலிப்பிலாவரவங்கூட
அரசமாயிலக்கினுதி யாதிசென்மாதி நட்பாய்
உரசதிர் நின்ருராகி லோங்கிடுமிராஜயோகம்

[இ-ள்] குருபகவானும் புதனும், சுக்கிரனுமிருந்த வீட்டோர் இராகு பார்வைபெற்று இலக்கினுதிபதியுடனே சேர்ந்து இராசிநாதனும் நட்பு உச்சமாயிருந்தால் ஜாதகன் இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும். எ-று. 18

சுந்திரவியாழம்புந்தி சுக்கிரனிருக்கில் வீட்டார்
வந்தெதிரரவத்தோடே வருமிலக்னுதிகூடச்
சந்திரவிலக்கினுதி சதிரமாய் நின்ருராகில்
உந்தரசாளுமியோக முண்டென்று சொல்வாய்மாதே

[இ-ள்] இலக்கினுதிபதிக்கு பகையாகிய கிரகங்கள் ஆக்ஷி நட்புஸ்தானத்திலிருக்க வளர்பிறைச் சந்திரனும இராகு கேதுக்கள் கேந்திரஸ்

தானத்தில் நட்பாயிருக்க, குரு, அவர்களுக்கேழிலிருந்து பார்வை செலுத்த சுக்கிரன் சந்திரனுக் தெதிரிலிருந்து பார்வை செலுத்தினுல் சுபக்கிரகங்கள் வலம்டறமாக இருக்கும்போது பிறந்த ஜாதகன் இராஜ யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ:று. 19

பகையோராட்சி நட்பாகப் பருமதியரவஞ்சதிராக
மிகையோர்குருபுதற்கேழாக மீன் வெள்ளி மதிக்கேயெதிராகப்
புகையோரிவர்க்கிங்கிடமாகப் புண்ணியரிசற்க்குவலமாக
இகையோரிப்படி நலமாக விருந்தால் வருமேயரசாள

[இ:ள்] இலக்கினபதி ஜன்மராசி நாதனுடனே சேர்ந்தாலும் பார்த்தாலும் சந்திரனுக்கு முன்ஞலும், பின்புரமும் சுபக்கிரகங்களிருந்தால். பனியை விலக்கி பிரகாசிக்கச்செய்யும் சூரியனைப்போல வறுமையை யகற்றி பெருமை யடையச் செய்யும் இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ:று. 20

செனித்தலக்கினுதி நல்ல சென்மாதி கூட பார்க்கப்
பனித்திடுமதிக்கு முன்பின் பாதியினின்ருராகிற்
பனிக்கெடுமிரவிபோலப் பாராளயோகமுண்டு
இனிப்பொருள் சகலயோக மேந்திழைமாதேயுண்டு

[இ:ள்] ஜனன லக்கினத்தில் சுபக்கிரகமொருவனிருக்கமூன்ருமிடத்தில் ஒரு கிரகமிருக்க, தன்புறமாகிய தனஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் கூடியிருக்க பிறந்த ஜாதகள் உலகத்தையாளும் சிங்கத்தைப்போல பல்லக்கின் மீதேறி பவனிவரும் இராஜயோகத்தையனுபவிப்பார் எ:று.

உதித்திடமொருவனிற்க வொருமூன்றிற்கிரகமுன்னே
உதித்திடப்பின்னே நாலு கிரகமுங்கலவாநிற்கச்
செனித்தவற்றுடனே சிங்கஞ் செகமெலாமாளும் யோகம்
விதித்திடமுண்டு பாக்கியம் வேண்டியசிவிகையேறும்

[இ;ள்] சுபக்கிரகங்கள் இருக்கும்படியான ஸ்நானத்திற்கு இடபுறமும் வலபுறமும் கிரகங்கள் பார்வை செலுத்தாமல் முன் பின்னுமாய் சூழ்ந்து நின்ருல் இந்திரவிமானம்போல் சிவிகை யோக மேற்படுமென்று சொல்லுவாய் மலர்சூடுங் கூநதலையுடைய பெண்ணே எ:று. 22

சுந்திரரிருப்பிடத்துச் சூழ்கின்ருேர் முன்ஞல் பின்ஞல்
வந்திவரெதிரில்லாமல் வலமிடஞ்சூழ்ந்து நின்ருல்
இந்திரவிமானம்போலவிருக்குமே சிவிகையோகம்
கொந்தலர்குழலினுனே குறியிதுதப்பாமாதே

[இ-ள்] சந்திரனுக்கு மூன்பின்ஞகிய ஏழு ஸ்தானங்களிலும் வேறு எந்த கிரகமுமில்லாமல் தர்ம கர்மாதிபதிளிருந்தாலும், ஆருவது

ஸ்தானத்தில் சனி இராகு கிரகங்கள் வலுத்து நட்பு, ஆக்ஷி, உச்சமாயிருந்தாலும் இராஜயோகமுண்டு எ று. 23

மதிக்குமுன்பின்னேழ் வீட்டின் மற்றெரு கிரகமில்லா
விதிக்குயர் தர்மகர்மம் வீறிலாதிஞதிலாருற்
பதிக்கொருகிரகமாகிற் பாராளயோகமுண்டு
இதற்கொருகலனேயில்லை யேந்திழைமாதே சொல்வாய்

[இ:ள்] சந்திரனிருந்த வீட்டுக்கு ஆறு ஏழு எட்டாம் ஸ்தானத்தில் கிரகங்களிலிருக்க, புதன் சப்தமஸ்தானமாகிய ஏழிலிருக்க செவ்வாயுடன் இராகு சேர்ந்திருக்க சூரியன், ஆறு, எட்டாவது ஸ்தானத்திறிருக்கும்போது பிறந்த ஜாதகன், இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ:று. 24

அம்புலி நின்றவீட்டுக் காறெட்டேழ் கிரகனிற்க
நம்புவியாண்டாளப்பானடு மனேயேழி நிற்கச்
சொம்புடன்ரவங்கூடிச் சூரியனுறெட்டாகில்
இன்புவியாள் வன்கண்டா யிதுகுறிதப்பாமாதே

[இஎள்] சந்திரனுக்கு ஐந்தாவது ஸ்தானத்தில் கிரகங்கள் நிற்க பாக்கிய ஸ்தானத்திலும், எட்டாவது ஸ்தானத்திலும் சந்திரனுக்கு ஏராமிடத்திலும் குருபகவான் நட்பு ஆக்ஷி உச்சமாய்த்தனியாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு வம்சவிர்த்தியாவதுடனே இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ.று. 25

இந்துவுக்கைந்திர் கோட்க ளிருந்திடிற்பாக்கியமெட்டிற்
சந்திரற்கேழின் மன்னன் றனியனுய்னின்ருனுகில்
வந்திடும்யோகமெல்லாம் வம்சமும்விர்த்தியாகும்
அன்னியமாகுமெட்டு மவனியின்மாருயோகம்

[இ.ள்] சுக்கிரனிருந்த இராசிநாதன் பார்த்தாலும் இலக்கினத்திற்கேழிலும் சந்திரனிருந்த இராசிக்கேழிலும் குரு இருந்தால், செவ்வாய் உதயஸ்தானமாகும் குருவுக்கு ஏழாமிடத்தில் இராகு சுக்கிரன் சேர்ந்தாலும் பார்த்தால் இராஜயோகமுண்டாகும் எ.று. 26

காமனுரிருந்தவீட்டான் கண்டிடிலுதயத்தேழிற்
சோமனுர்க்குதையோனேழிற் ருேய்ந்துடன் குருவேநின்ருற்
பூமனுர்க்குதையமாகும் பொன்னவர்க்கேழோனுலிற்
பர்ம்புநால்சுங்கன்கூடப் பற்றினுல்யோகமுண்டே

[இ.ள்] சுக்கிரனும், குருவும், சந்திரனும் மற்ற கிரகங்களுடனே சேராமல் மேற்குறிப்பித்த மூன்று கிரகங்களும் ஐந்து ஒன்பதாவது ஸ்தா

னத்திலிருந்தால், தன தான்ய சம்பத்துடன் கீர்த்திப் பிரகாசமாய் இராஜ யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 27

வெள்ளியும்வியாழஞ்சோமன் வேறொருகிரகங்கூடாத்
தெள்ளியேமூன்றுபேருஞ் சீருடனவமஞ்சானுல்
ஒள்ளிய தனமுமுண்டோ யோங்கிடும்யோகமெல்லாம்
அள்ளியவமிர்தமன்னுயரசாளும்யோகமுண்டே

[இ.ள்] இலக்கிண கேந்திரமாய் நாலாமிடத்தில் குருவும். சந்திரனு மிருக்கவும். அல்லது சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலாகிலும், நாலாமிடத்தி லாகினும் வளர்பிறைச் சந்திரனிருந்தால், அந்த ஜாதகனுக்கு தன தான்ய சம்பத்தும் பொன்பொருள் பூஸ்திதியும் பொருந்திய இராஜயோக மும் சிவிகையோகமும் உண்டாகும் எ.று. 28

குருமதி நாலாய்நிற்கக் குணமுள்ள வெள்ளிக்கேழிற்
பருமதிநாலேயானுற் பாக்கியம் வேணதுண்டு
திருகதேயில்லைகண்டாய் செல்வமும்யோகமுண்டு
வருவதுசிவிகையோகம் வையகமாளுமாதே

[இ.ள்] ஏழாமிடத்தானுடனே சந்திரனிருக்க சுபக்கி,கப் இலக்க னத்திலிருக்க, பாக்கியஸ்தானுதியும், சுக்கிரனும் சந்திரனும் குருவும், இலாப ஸ்தானத்திலிருக்க, அவர்களுடன் பாப கிரகங்கள் சேராமல் சுத்தமாயிருப்பார்களானுல். எக்ககலத்திலு தாழ்வில்லாத இராஜயோ கத்துட சிவிகையோகமும் பொருந்திய மேன்மையும் பொருந்தும் எ று.

ஏழுடன்மதியுனிற்க வினியவனிதயஞ்சேர
வாழுமோர்பாக்கியன்சுங்கன் வருமதிலாபம்பொன்னும்
சூழ்வதிர்பாபரன்றிச் சுத்தமாய் நின்றுராகில்
தாழ்வொருநாளுமின்றித் தழைத்திடுஞ்சிவிகையோகம்

[இ.ள்] சந்திரன், சனி, புதன் குரு இலக்கினத்திற் கேழாமிடத்தி லும் இன் நான்கு கிரகங்களுக்கு எட்டாவது ஸ்தானத்தில் சுக்கிரனும். சனி, செவ்வாய் சம்பந்தமில்லாமல் சூரியன் தனித்தனியேயிருந்தால், ஜாதகனுக்கு சிவிகை ஏறும்படியான இராஜயோகத்தையனுபவிக்கும் படியான நன்மையுண்டாகும் பெண்ணே எ-று 30

சந்திரர்க்காரிபுந்தி சலிப்பிலாவரசனேழிற்
சுந்திரர்க்கெட்டிற்சுங்கன் சூரியன்கரிசேய்கூடா
வந்திவர் தனியே நின்றுல் வருமந்தராஜயோகம்
உந்திவன்சிவிகையேறு மோங்கிடுமாதேகேளாய்

சிதனிருந்திடு வீட்டானுஞ் சிந்தையோர்க்கேழேயாக
மதனிருந்திடும்வீட்டானுஞ் மந்திரிக்கேழேயாகிற்
பதவிதபோகபாக்கியம் பருவதம்போலேநிற்
இதமுள மாதேகேளா யேறுவர்யானையோகம்

(இ-ள்) சந்திரனிருந்த ஸ்னுதாதிபதியும் வாக்குஸ்தானத்திற்கு ஏழா மிடத்திலிருக்க, புதனிருந்த இராசிநாதன் குருவுக்கு ஏழாமிடமாயிருந் தால் ஜாதகனுக்கு நல்ல பதவியாகிய யோகபாக்கியம் மலைபோல ஓங்கி நிலைத்திருக்கு மென்றிவாய் பெண்ணே எ-று. 31

ஏகசக்கிராதிபன்

நாளுகோளுச்ச மாகி நகருளோராட்சியாக
மாலுளகேந்திரத்தின் மறுத்தங் கேயொருநான்காக
ஏலுடனின்றுராகி லிவனுக்கேராஜயோகம்
சேலுடன்செங்கோலாளுஞ் செகச்சக்கிரவர்த்தியாமே

(இ-ள்) ஜெனன லக்கினதிபதி ஆக்ஷிபெறவும் நான்கு கிரகங்கள் உச்சம் பெறவும் புதனின்றராசிக்கு கேந்திரங்களென்னும் 1,4, 7,-ஆம்மி ராசியில் மேற்சொன்ன கிரகங்கள் இருப்பானேயாமானுல் அந்த ஜாத கனுக்கு ராஜயோகமுண்டென்றும் இந்த ஜெகத்திற்கே சக்கரவர்த்தியாயு மிருப்பான் எ-று.

நால்சதிரமுக்கோண நலமாண தனலாபநாலிரண்டாறீறினும்
மால்பெருகுமாட்சியாய் மருநீசவுச்சமாய்மகிமைபகை நட்ப
ல்தமும்
ஏல்பெருகுமிதினின்றவேழிரண்டவர்தாமிருக்குமது கோணமாகச்
சேலுடனிரண்டுநாள் குற்றிடப்பெற்றிற் செகச்சசக்ரேவர்த்தி
யாமே

(இ-ள்) 1, 4, 7, 10, என்னும் கேந்திரங்களிலும் திரிகோணமாகி 5, 9, லும், 2, 11, ஆம்ஸ்தானத்திலும் 6, 8-லும் மாலாகிய புதன் ஆக்ஷி பெற்றிருக்க அல்லது நீசம், பகை, நட்பு, அஸ்தமயம் பெற்றிறுக்க சந்திர னிருந்த வீட்டிற்கு 2, 7-ஆம் ஸ்தானத்திற்கு குடையோர் மேற்சொன்ன 5, 9 ஆம்ஸ்தானத்திலிருக்க குருவோடு இரண்டு கிரகங்களும்கூடி இருந் தால் அந்த ஜாதகன் ஜெகசக்கிரவர்த்தியாக இருப்பான்.

நரயோகம்

பாம்புளபதிக்கிரண்டு பண்புடனிற்பானுகில்
ஆமுடவனுமேனின்ற வதங்காறிலைந்திற் சேயும்
போமிளமதிக்குநாலிற் பொன்னவனிற்றுனுகிற்
காம்பிள முலைபினுளே கரிநரயோகமுண்டே

(இ-ள்) இராகு துக்ககே ளிருந்த ராசிக்கு வலமிடங்களில் நட்ப்பு கிரகங்களிருக்க சதிநின்ற ராசிக்கு 6, 5-ஆமிராசியில் குஜனிருக்கவும் ஜெனன லக்கிணத்திற்கு நான்காமிராசியில் குருவிருக்கவுமானல் அழகு பொருந்திய பெண்ணே யானை முதலியவைகளையுடைய நற்போக முன் டென்று கூறுவாயாக.

மதிநின்றவிடத்தினலின் மன்னவனதனல்சுங்கன்
விதிநின்றவிடத்துக்காறில் வெண்கதிர்பூமனிற்க
பதியரவின்னிடத்தார் பற்றியேநாலேழாகிற்
குதிகொளுநரயோகந்தான் கொடுங்கணேவிழியினளே

(இ-ள்) சந்திரனிருந்தராசிக்கு நான்கில் குருவிருக்கவும் 8-ஆமிடத் தோனின்ற ராசிக்கு ஆருமிராசியில் சூரிய, புதன் சுக்கிறனிருக்க 10-ஆப் ராசிக்குடையோர் 4, 7 ஆமிராசியிலிருக்கவும் அழகுவாய்ந்த பெண்ணே அவனுக்கும் நற்யோகமுன்டென்று கூறுவாயாக. எ-று.

ஈரஞ்சுதலத்தோன்கூட விருலாபமானேர்சேர
ஓரஞ்சுநாலேழோனு மொருமையாய்க்கூடிநிற்கப்
பாரச்சுவிடத்திர்சோமன் பரித்தவனுடனே கூட
ஆரஞ்சோரிடத்தான்லாப மாயினல்யோகமுண்டே

(இ-ள்) 4 ஆமிராசியதிபனுடன் இரண்டாம் வீட்டிற் குடையோனும் 11 ஆப் வீட்டோனும் கூடியிருக்க ஜெனன லக்கிணத்திற்கு 4, 5, 7-ஆம் வீட்டிற்குறியவன் அமர்ந்து ஓர்ராசியிலிருக்க ஜெனன லக்கிணற் திற்கு 5 ஆம்ராசியில் சந்திரன் சூரியனுடன்கூடி 5, 6ஆம் வீட்டிற்குடையவர்கள் லாப ஸ்தானமும் பெற்றிருக்க அவனுக்கு நல்ல லாபமும் நற்யோகமுமுண்டென்று கூறுக, எ று.

சதபாரியனுய் உலகாளும் அரசு

உதித்தவன் புருடனுகி யுயர்மதியிடத்தோன் பெண்ணுய்க்
கதித்தவர்நடுவாய்நிற்கக் காரியவானுமானுய்
மதித்திடம்வந்துநிற்க மணியரிவிரவிக்கேழில்
விதித்ததுபாரிநூருய் விண்ணுலகெங்குமாள்வன்

(இ-ள்) ஜெனன லக்கினதிபதிபுருடர்காளாயும் சந்திரனிருந்த வீட்டிற்குடையோன ஸ்ரீகிறகமாயும் மேற்சொல்லிய இருவரும் ஜெனன லக்கினத்திற்கும் சந்திரலக்கினத்திற்கு மத்தியிலிருக்க 10ஆம் வீட்டிற்க் குடையோன் சூரியனின் ராசிக்கு ஏழாம் ராசியில் மேன்மைபெற்ற நற் சுபஸ்தானத்திலிருக்கவும் அந்தஜாதகன் பூரணவயதென்றும் நூறு வயதோடு இவ்வுலகெங்கிலும் அரசாள்வான்.

உதைமதியிவர்களானும் பெண்ணுமாய்நடுவேயேழில்
அதையவன்புருடனுகியம்புலியுடனேசேர
இதவுடனிரவிசேர்வுற் றிருக்கவும்பக்கமாகச்
சதமனையுடனேசேர்ந்து தாகமாயரசேயாள்வான்

(இ-ள்) ஜெனனராசிக்குடையோனும் சந்திரனிருந்தாராதக் குடையே ஆண்கிரகமும் பெண்கிரகமுமாகவிருந்து ஜெனனலக்கிணத்திற்குச் சப்த்தம ஸ்தானமாகிய 7, ஆம் கேந்திரத்திலிருக்க அவ்வீட்டின் குடையோன் ஆண்கிரகமாய் சந்திரனுடன் சகிதம் பெற்றிருக்க மேற்சொன்ன கிரகங்களோடு ஆரியனும் சகிதம் பெற்ருலும் (அ) 10 ஆமிராசியிலிருந் தாலும் அந்தஜாதகன் அரசாலத்தக்கவனுவன் எ று.

அனந்த பாரியனுய் உலகாளும் அரசு

உதையாதிபெண்பெண்ணேயாகி யுயர்மதியிடத்தோனுனுய்
மதியாமனடுவேயேழின் மனையிட மதியும்பெண்ணுய்
பதியதாராயிரவிகூடப் பாம்புமேசேர்ந்துநிற்க
அதிகுதாயநேகம்பாரி லதுவுண்டாயரசேயாள்வான்

(இ-ள்) ஜெனன லக்கினத்திற்குடையவன் பெண்கோளாகவும் சந்திரனிருந்தா ராசிநாதன் புருடக்கோளாகவும் ஜெனன லக்கினத்திற்கு மத்திய ஸ்நானமான சப்தமஸ்தான ராசியும் பெண்கிரகமாய் மேற்சொன்ன ராசியில் சூரியனிருக்க அவர்களோடு இராகு கேதுக்லோருவரிருக்க இப்பூமியில் அனேகசெல்வத்தைப்படைப்பதுடன் அரசாண்டுமிருப்பான் எ று.
39

குமுதயோகம்

கரிமதிசுங்கன்ராஜன் கனக்கவேயுச்சமாகிக்
கொரிமரவுக்குநாலாய்க் கோணமாய்நின்ருராகிற்
பரிபொருசத்துமாகப் பரிமளகுமுதேயோகம்
அருமவரெதிரில்லாமல் லர்சதாயாளுமன்னன்

(இ ள்) சனி, குரு, சந்திரன் சுக்கிரன் இந்த நால்வரும் உச்சம் பெற்று இராகு கேதுக்கலிருந்த ராசிக்கு நான்காமிடத்திலேயும் 5, 9 என்னும் திரிகோண ஸ்தானங்களிலும் மிருந்தால் அந்த ஜாதகன் சத்துருக்கலின்றி குதிரை முதலாகிய வாகனங்களைப் படைத்து மேன்மையும் வாசனையும் படைத்த குமுதயோகத்தையும் யுடையவனுய் அரசாளதக்க மன்னவனுமாவான் எ று.

முரசயோகம்

ஆதித்தன் சுங்கன் காரி யமர்ந்தொருசெவ்வாயுச்சம்
வேதந்தினரவஞ்சேர்ந்து விண்மதிபதிக்கு நான்கிற்
சோதித்துநின்ருராகிற் சொல்லுநன் முசரயோகம்
நாதித்துமுழங்கத்தானே நாடெலாமரசேயாள்வன்

(இ-ள்) சூரியன் சுக்கிரன் சனி இவர்கள் உச்சம் பெற்றிருக்கவும் குருவோடு இராகு கேதுக்களிலொருவர் சகிதம் பெற்று சந்திரனிருந்த ராசிக்கு நான்காமிராசியிருக்க அந்தஜாதகனுக்கு முரசயோகமுன்

டென்றும் இப்பூமி எங்கும் முழக்கமும் பிறகாசமுடையவனுய் அரசாண்டிருப்பானென்றும் கூறுவர் எ-று. 41

சகடயோகம்

ஏழிடமுதயமட்டிலிருக்கவேகுருவுநட்பில்
தாழ்வுடனீராறெட்டிற் றனியனுய்ச்சோமனுகில்
வாழிடங்குலேந்து நின்று வருவதேயோகந்தப்பி
போழிதழ்க்கமலமாதே பொல்லாத சகடயோகம்

(இ-ள்) ஜெனனலக்னத்திற்கு சப்தமஸ்தானமான 7 ஆம் விடு முதல் ஜெனனலக்கினம் வரையிலுள்ளராசிகளில் குருநட்பு பெற்றிருக்கஷெகுரு நின்றராசிக்கு-8 12 ஆமிராசியில் சந்திரன் தனித்திருப்பானேயாமாளுல் அந்த ஜாதகனுடைய வாழ்க்கைக் குறைந்த அவன் யோகமெல்லாம் குறைந்து நாசமாய்போவானென்று அழகு பொருந்திய பெண்ணே இச்சகடயோகம் பொல்லாதென்றுங் கூறுவாயாக எ-று. 42

சொற்குறிகடனலாபமாகவே நின்றதன் சுகமான பாக்கியமீதில்
வெற்பொரும்பன்னிரண் டெட்டாறினிற்கிலுமிக்கத்தரித்திர யோக
சொற்கினியசகலருங் கூறியாருகவொரு கோணமதில்கேந்திர மெட்டில்
பற்கினிபதனலாபமாயினிவர் பாக்கியம்பற்றியும் பற்ருததே

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்கு இரண்டாமிடத்தோனுகிய தனுதிபதி லாபஸ்தானமாகிய 11 ஆம் ராசியிலும் (அ) பாக்கியஸ்தான மென்னும் ஒன்பதாம் ராசியிலும் 2, 6, 8 ஆமிராசியிலிருக்கினும் அந்த ஜாதகனுக்குக் கொடிய தரித்திரயோகமே உண்டாகுமென்று கூறுக நற்கோட்க்களெல்லாம் ஒன்ருய்சேர்ந்து கேந்திரத்திலேனும் திரிகோணத்திலேனும் 8-ஆமி ராசியிலேனும் ஆராமிராசியிலெனும் 2, 11-ஆம் மிடங்களிலெனும் மிருந்தால் அந்த ஜாதகருக்கு எல்லா செல்வமுமிருந்தும் பிரயோஜனப்படாது எ-று. 43

ஒருவிதமாகவுண்டோ வுலகுள்ளமாந்தர்க்கெல்லாம்
வருபதவாக்கியமுண்டே வகுத்துடன் மதியாலாய்ந்து
பொருந்ததைப்பார்க்கவுண்டோ போவதுமனந்தங்கோடி
கருவினுக்கினியசாரங் கண்டுடன் சொல்வாய்மாதே

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்க்கு நான்காமிடமான சுகஸ்தான முதல் நான்கு வீடுகள் வரையில நற்கோட்க்களென்னும் சுபக்கிரகங்களிருக்கவும் குருவுடன் ஜெனனலக்கினத்திற் குடையவன் சேரவும் சுப

செல்வன்

நாலுடனுலினல்லோர் நயந்துடனிருக்கத்தானும்
சேலுடன் சென்மமாதி சேரவேசுபர்கள் பக்கம்
மாலுடன் பாபர்பாரா ராயினு மாதேகேளாய்
பாலுடன் பவிசுண்டாகிப் பாக்கியவானு மாமே

கிரகங்களையும் கொடிய கிரகங்கள் பாராத இருப்பாரேயாமானுல் அந்த ஜாதகனுக்கு நல்ல பல்பாக்கியங்களுண்டாகி நல்லபலன் பெற்றிருப்பானென்றுங் கூறுவாயாக

தனமொடுவினத்தான்லாபந் தனியனுய்நிற்கத்தானும்
மனமொடிலாபந்தானு மகிழ்ந்துடன்றனமேசேரத்
மனமொடிலக்ணத்தான் றனித்துகோணத்திநிற்கத்
தனமிடுபேர்கட்கல்லாந் தலைவனுயிருப்பன்மாதே

(இ-ள்)ஜெனனராசியதீபனேடு இரண்டாம் வீட்டோனும் சேர்ந்து 11-ஆம்மிடத்தில் பலம்பெறவும் 11 ஆம் வீட்டிற்குடைய கிரகம்தானஸ்தானமான இரண்டாமிராகியிலிருக்க மேற்படி தனுதிபதியும் லக்கினந்தோனும் 5, 9, ம்மிடங்கலிருந்தாலும் அந்த ஜாதகன் செல்வத்தைப் படைத்த மேதாவிகளுக்கெல்லாம் தலைவனுக இருப்பான் எ-று

மூணு கோணத்தார்கூடி முன்சதிரத்தினிற்கக்
காணுமேயிலக்கினத்தான் கலந்தொருசதிரத்தாரும்
வேணிமென்றவற்றினின்ருல் வேண்டிய பாக்கியமுண்டு
சேணுயரிரியவிபோலச் செகத்தினிலிருப்பன்மாதே

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்கு 1,5,9 க்குடையோர் கூடி 1,4,7 10, ஆம் ராசியிலிருக்க மேற்சொல்லிய 1,4,7,10 க்குடையவரோடு இரண்டாமிடத் தோனுனதிபதியும் சகிதம் பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக செல்வம் சித்திக்கும் அன்றியும் சூரியன்போல் பிராகாசித்து புகழ்ச்சி பெற்றிருப்பானென்றும் கூறிவர்

தரித்திரன்

இந்தொருகுறியிற்பாபர ரிருந்திடவஸ்தமிக்க
வந்தெதிரீராறெடோன் வலத்திடத்திருந்தாராகின்
முந்தொருசொன்ன யோக முதற்பாதியாகி நிற்கும்
கொந்தலர்குழலினுளே குறியிதுசொல்லுவாயே

(இ-ள்) சந்திரனிருந்த ராசியில் பாலகிரகங்களும் அஸ்தமயம் பெற்ற கோட்க்களுமிருக்க 12 8, ஆம் ராசியதிபர்கள் சந்திரனிருந்த ராசிக்கு வலமிடத்திலிருக்க மேர்ச்சொன்ன யோகத்தில் அரைபாகயோகத்தை

அனுபவிப்பான் என்னும் இவை தவராதுண்டாகு மென்றும் அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக எ று, 47

சென்மாதி தனக்கு நான்கிற் சேர்ந்திடக்காரி செவ்வாய்
தன்மாதிதனத்தோனெட்டிற் றனித்தாறிற்குருவேநிற்கக்
கன்மாதிபதியுஞ்சேசர்ந்து கனந்த வீராறிற்சேர்ந்தாற்
பொன்மாதினரசேகேளாய் புகழில்லா தரித்திரயோகம்

[இ-ள்] ஜெனனலக்கிணத்தோனின் ராசிக்கு சுகஸ்தானமாகிய நான்காமிராசியில் சனியும் செவ்வாயுமிருக்க 10, ஆம் வீட்டோனும் இரண்டாம் வீட்டோனும் அஷ்டமஸ்தானத்திலும் குரு ஆருமிராசியில் தனித்துமிருக்கவும் 10ஆம் வீட்டதிபதி 12 ஆமிடனென்னும் விறயஸ்தானத்திலிருக்கவும் பூஷணங்களையணிந்த பெண்ணே புகழ்ச்சியில்லாத தரித்திரயோகமே உண்டென்று கூறுவாயாக,

யோகமேயில்லேகேளா யொருநான் கிற்சனிசெவ்வாயும்
நாகவேயிதற்குநான்கி னடுவேதிரிரவிநிற்க
வேகமேயிலக்கினுதி வெண்மதிகேட்டோன் கூடிற்
சாகவேநினைவதாதிச் சலிப்புடனிருப்பன்மாதே

[இ.ள்] ஜெனன லக்கினத்திற்கு நான்காமிராசியில் சனி செவ்வாயிவர்களும் மேற்படி கிரகங்களுக்கு நான்காமிராசியில் ராகு கேதுக்களிலொருவரும் ஆருமிராசியில் சூரியனும் ஜெனனராசயதிபதி சந்திரனிருந்தராசிக்கு அஷ்டாதியுடன் கூடியும் அந்த ஜாகன் யோகமென்பதே கொஞ்சமேனும் மில்லாது இறப்பதற்கும் துணிந்தவனாய் இருப்பானென்று கூறுவாயாக எ,று 49

சந்திரவிலக்கினுதி தனியராயிரவிகூட
வந்தேதிருதயத்தானும் பருமதிற்சனியும் பாம்பும்
அந்தோருநடுவேராஜ ணவர்க்கேழிற்சுங்கன் செவ்வாய்
இந்தொருவிதமாய் நின்ரு லிவனுக்கேயோகமில்லை

[இ.ள்] சந்திரனிருந்த விட்டிற்குடையோன் தனியே சூரியனுடன் சகிதம்பெற ஜெனனலக்கினபதி ஆரும் வீட்டோனுடன் சேரவும் சனியும் இராகுவும் ஆராமிராசியிலும் குருநின்றராசிக்கு 7 ஆமிராசியில் சுக்கிரனும் குஜன்மிருக்க அந்த ஜாதகனுக்கு யோகமென்பதே கொஞ்சமேனும்யில்லை என்றும் தரித்திரத்தையே அனுபவிப்பார்னென்றும் கூறுவாயாக எ.று

பாம்புடனினியவர்க்கும் பத்தினிற்சுபரில்லாமல்
ஆமிடத்தனிற்றீய ரவரிருந்திடவே சேரச்
சோம்புடனிலக்கினித்திற் சூரியநின்ருனுகிற்
காம்பிள முலையினளே காணுதியோகந்தானே

[இ ள்] இராகு கேதுக்கன் நின்ற ராசிக்கும் சுபகிரகங்கள் நின்ற ராசிக்கும் 10 ராகியில் நற்கோட்க்கள் சகிதமின்றி அவ்வீட்டில் கொடிய கிரகங்களிலிருந்தாலும் ஜெனன லக்கிணத்திலும் சூரியனிருக்க அழகு பொருந்திய பெண்ணே அந்த ஜாதகனுக்கு யோகமென்பதே கொஞ்சமேனுமில்லை என்று கூறுவாயாக எ.று

யோகமில்லேகேளா யுதையாதிசனிசெவ்வாய்க்கும்
நாகமேபனிரண்டாகிற் நற்குருசோமனேட்டில்
வேகமேசோமன்புந்தி வேந்தற்குபனிரண்டாகிற்
சோகமேயடைந்துநிற்பன் ரெல்புவியோர்க்குமாதே,

[இ-ள்] ஜெனனலக்கினத்தில் சனி குஜனிவர்களிருக்கவும் 12ஆம்மிராசியில் இராசி கேதுக்களிலொருவரும் 8 ஆமிராசியில் குரு சந்திரனும் புதனும் குரு நின்றராசிக்கு 12 ஆம்மிராசியிலுயிருந்தால் அந்த ஜாதகன் மெத்தவருத்தத்துடன் இவ்வுலகிலுள்ளவர்கள் யோகமில்லாதவனாய் தரித்திரத்தோடிருப்பானென்று கூறுக எறு 52

உதையத்திலாரெட்டோனு மவர்கோர் பத்திலிரவிசுங்கன்
அதையத்துக்கேழிற்காரி யம்புலிமிரவினிற்கச்
சிதையுற்றசென்மத்தாதி சேர்ந்துசேய்க்குருவுமெட்டில்
இதையுறின்யோகமின்றி யிருப்பனென்றிசைத்திடாயே

[இ-ள்] 6,8, ஆம் ஸ்தானுதிபர்கள் ஜெனன லக்கினத்திலும் அவர்களுக்கும் பத்தாமிராசியில் சூரியன் சுக்கிரனும் ஜெனனலக்கினத்திற்கு ஏழாமிராசியில் சனி சந்திரன் சூரியன் இவர்களிருக்கவும் ஜெனனலக்கினுதிபதி தான்வலிவீழத்து குஜன் குருவுடன் 8ஆம்மிராசியிலிருக்கவும் அந்த ஜாதகன் யோகமென்பதே கொஞ்சமேனுமின்றி தரித்திரத்தோடிருப்பான் எ.று 53

எட்டவனுதயஞ்சேர்ந்தங் கிருப்பவனெட்டினிற்க
மட்டவனிலாபஞ்சேர வதின்மன்னன்விரையஞ்சேர
தொட்டவன்றர்மமாறிற் றெனிப்பவன்றர்மஞ்சேர
விட்டவன்போலநின்று வியனுலகிருப்பன்மாதே

[இ-ள்] ஜனனலக்கினத்தில் ஆருமிடத்தானும் அஷ்டமாதிபதியும் அவர்களுக்கு பத்தாமிடத்தில் சூரியன் சுக்கிரனிருக்க அவர்களுக்கு ஏழாமிடத்தில் சனி சந்திரன் சூரியனிருக்க ஜென்மாதிபனுக்கு குரு எட்டாமிடத்திலிருக்க இந்த ஜாதகன் யோகபாக்கியமில்லாமல்வறுமையோடுயிருப்பதர்க்காகும் எ-று 54

நற்படிமன்னர்தானு நலமிலாவாறெட்டாகப்
பொற்படித்தீயரெல்லாம் பொருந்தியேசதுரமாகிற்
கற்படிப்போல்நின்று கலங்குவன்புவியின் மாதே
இப்படியிருந்தால்யோகமிழந்துடனபோமென்செல்வாய்

[இ-ள்] அஷ்டமாதிபதி ஜெனன லக்கினத்திலும் ஜெனன லக்கினாதிபதி 8ஆம் மிடத்திலிருக்க ஆரும் வீட்டோன் 11 ஆம் வீட்டிலும் ஆரும் வீட்டாதிபதி விறயஸ் தானத்திலுமிருக்க 10 ஆம் வீட்டோன் ஆகினும் இரண்டாம் வீட்டோன் 10லும் இருந்தால் எல்லாவற்றையும் துறந்து இறந்தவன்போல் இப்பூமிலிருப்பான்

வருவதேயில்லையோகம் வளர்பிறையில்லாதாகி
இருபதிலுதையமேழுக் கினியாவாசனிக்கோனலாய்
மருவதுமில்லாக்கோண மன்னவரவிசெவ்வாய்
ஒருபதிசனிக்கேழ்நின்றுலொருநாளும்யோகமில்லை.

[இ.ள்] குரு ஜெனலக்கினத்திற்கு 6,8 ஆமிடத்தில் குருவும் 1.4, 7.10 அம் ஸ்தானங்களில் கொடிய கிரகங்களும் இருந்தால் அந்த ஜாதகன் ஆற்றில் நட்ட கம்பம்போல் கலக்கமுற்றும் தான்யோகமும் தனங்களை எல்லாமிழந்து தரித்திறத்தோடிருப்பானென்று கூறுவாயாக எ-று.

சனிக்குநாலரவநிற்கச் சத்தமஞ்செவ்வாய்சேர
மதிக்குநாலிரவிநிற்கமற்றபொன்சுங்கன்புந்தி
பதிக்குகொருவீனமாகிப் பார்க்கவும் பாபர்தாமும்
இனிக்கையில்யோகமில்லை யேந்திழைமாதேகேளாய்.

(இ ள்) கிருஷ்ண பக்ஷத்து சந்திரன் 2,10,7 ஆம்மிடத்திலும் சனிநின்ற ராசிக்கு நான்கிமிராசியில் கிரகமில்லாமலும் 1,59குடையோர் சூரியன் குஜனாகவும் அவர்கள் சனிநின்ற ராசிக்கு ஏழாமிராசியிலுமிருப்பாரானால் மேன்மையும் அழகும் பொருந்திய பெண்ணே அவனுக்கு யோகமே இல்லை என்று கூறுவாயாக எ,று,

ஈறெட்டானோர்சதிரத்தி லிருநான்குதையமேழோனும்
மாறெட்டாகவீராறின் மறுத்துநின்றூராமாகில்
ஆறெட்டாகவதறகேழி லமர்ந்தேகோணத்தவ்வீட்டார்
சீருட்டாகவிருந்தானுஞ் சிதையுஞ்செல்வந்தரித்திரனே.

(இ-ள்) சனி எந்த ராசியிலிருந்தானோ அந்தராசிக்கு நான்கிமிராசியில் இராகு கேதுக்களுலொருவரும் ஏழாமிராசியில் சூரியனும் சந்திரன் எந்தராசி யிலிந்தானோ அந்த ராசிக்கு நான்காமிராசியில் சூரியனும், சுக்கிரன் புதன், குரு இவர்கள் தான்வலி விழந்திருக்கவும் பாலகிரகங்களாழ் பார்க்கப் பட்டுமிருப்பாரேயாமானால் அழகு வாய்ந்த பெண்ணே அவனுக்கு யோகமே இல்லை என்றும் தரித்திரமே உண்டென்றுங் கூறுவாயாக எ.று. 58

அயர்ந்ததோரிரண்டுவீட்டி லணுகியேசுபர்கணிற்க
உயர்தொருகேந்திரகோண மோங்கியேபாபர்சேர
விறன்றருமதிதமீன மாகினன் மாதேகேளாய்
பயன்றருபாக்கியமில்லை பரதேசியாகிநிற்பன்.

(இ-ள்) 8,12 ஆம் ராசிபதிபர்கள் 2,4,1,7,க் குடையவர்கள் தன்க்ஷேத்திரத்திற்கு 8,12 ஆம் மிராசிகளிலும் அவர்கள் நின்ற ராசிக்கு 6,8. ஆம்ராசியில் 1,5,9 க்குடையோர் பலம் பெற்றிருக்கினும் அவன் செல்வமெல்லாமிழந்து தரித்திரனாய் மெத்தவருத்தத்தோடு கஷ்டப்பட்டிருப்பானென்றுங் கூறுவாயாக எ று, 59

வயந்தருவுதையந்தன்னில் வலமதிற்பாபர்நிற்கச்
சயந்தருகளையுஞ்சோமன் சப்தமாய்ச்சனியுஞ்சேர
முயன்றிடுகேந்திரத்தின் முழுகதிர்வெள்ளிராஜன்
இயங்தொருவிதமாய்நின்று லிவனுக்கேயோகமில்லை

(இ-ள்) ஜெனனராசிக்கு வலமிடங்களில் நட்கோட்க்கள் சகிதம் பெறவும் கேந்திரமாகிய 1,4,7,10 ஆம்ராசியில் பாவ கிரகங்களிருக்கவும் 5, 9. ஆமிடமென்னும் திரிகோணஸ்தானங்களிலும் பாபிகளிருக்கவும் 5, 9, ஆமிடமென்னும் திரிகோணஸ்தானங்களிலும் பாபிகளிருக்கவும் சந்திரன் மீனராசியிலுக்கப் பிறந்தவனுக்கு தான் சவுக்கியமடையத் தக்கபாக்கிய மென்பதே கொஞ்சமேனுமில்லை என்றும் பரதேசிபோல் அலைந்துத் திரிவாமென்றுங் கூறுவாயாக எ று 60

ஆருமிடத்துக்கதிபதியு மம்புலிசனியரவங்கூட
மாருத்தனை யொபதிருசேயு மறுத்தேபணிரண்டவன் கூடப்
பேருயிடத்தான் பிருகாசு புந்தியிரவிபெட்புரினும்
ஏருட்டத்துக்கினியவனை யெடுத்தேதிரிவன்புவிமீதில்

(இ ள்) ஜெனன லக்கினத்திற்கு வலப்புரத்தில் கொடிய கிரகங்களிருக்க அவனோடு சனி சகிதம்பெற கேந்திரமாகிய 1,4,7.10 என்னுமிராசிகளில் சூரியன் சுக்கிரன் குரு இவர்களிருக்கவும் ஜெனித்த ஜாதகனுக்கு யோகமென்பதே இல்லை என்று கூறுவாயாக எ று 61

நாலாமிடத்துக்கதிபதியு நயந்தேபணிரண்டவன்சேர
மேலாமிடத்துக்கெட்டோனும் விண்மதிசனியுஞ்சேர்ந்திடவே
ஆலாவிடத்துக்கதிபதியோ னமர்ந்தேசெவ்வாயிரவியுடன்
சேலாவிழியாயிருக்கினுமே சேருமிடமுமரிதாமே

(இ-ள்) சத்துரு ஸ்னாதிபதி என்னும் ஆரும் வீட்டாதிபதி இராகு, சந்திரன் குரு சனி, இவர்களுடன் சகிதம் பெற மேஷ விருக்ஷீகங்களுக்கு அதிபதியாகிய குஜன் 12ஆம் மிடத்தோனுடன் ஜெனனலக்கினாதிபதி சூரியன் புதனுடன் சகிதம்பெரினும் அந்த ஜாதகன் பிச்சை எடுத்துன்பதில் மிக்க சந்தோஷமுடையவனாய் திரிவான் எ,று, 62

நண்டோரதிபதிநலனில்லா நற்குருசுங்கன் சனியல்லார்
உண்டோரிவர்க்குண்டாகி லுரையிடுமதிபதியேழாகிற்
வண்டார் குழலாயுலகதனில் வந்துற்பவித்தோர் தமக்கெல்லாம்
கண்டோதூஷணமது செய்யக் கலங்கித் தவித்திங்கிருப்பானே

(இ-ள்) நான்காமிடத்தோனுன சுகஸ்தானுதிபதி 12 ஆம் மிடத்தோனுன விறையஸ்தானுதிபதியுடன் சகிதம் பெற்றிருக்கவும் அஷ்டமஸ்தானுதிபதி சந்திரன் சனி இவர்களுடன் சகிதம் பெற்றிருக்கவும் பிறந்த ஜாதகன் சேர்ந்த இடத்திலும் தரித்திரம் குடிகொண்டிருக்கும் மென்று கூறுக எ று 63

தொந்தமாய்ப்பாபர் சேர்ந்து சோபமாய்ச் சுபர்கணிற்க
அந்தமாய்ப்பாபர் நான்கி லரவுடுமநின்ருராகில்
விந்தமாயிலக்கினுதி விண் மதியஸ்தமிக்கில்
எந்நாளிருப்பு மட்டு மிவனுக்குயோகமில்லை

[இ-ள்] சந்திரன் நற்ஷேத்திரங்களிலில்லாமலும் சந்திரனிருந்த ராசிக்கு ஏழாம் ராசியில் குரு சுக்கிரன் சனி இவர்களன்றி வேறு கிரகங்கள் சம்மந்தமுறவும் ஜெனனமாணவர்களுக் கெல்லாம் மேன்மை பொருந்திய பெண்ணே அவனைக் காண்போர் யாவரும் மெத்த வருத்தமாய் தூஷனவார்த்தைகளைச் சொல்லவும் அதைக்கேட்டு விசனித்துமிருப்பானென்றுங் கூறுவாயாக எ று 64

சேர்ந்துடன் பாபர்நாலாய்ச் சென் மாதிபதிக்குப்பத்தாய்
சேர்ந்துடநின்ருராகிப் பிருகரசவனேநீசம்
சேர்ந்துடன் சுபர்கணிற்சிற் செப்பவேயோகமில்லை
வாழ்ந்துடனிருப்பதுண்டோ வந்நாண்முதலாய்மாதே

(இ ள்) பாவகிறகங்கள் கூட்டங் கூடி இருக்கவும் அவர்களோடு சுபகிறகங்கள் சம்பந்தமுறவும் ஷ பாவகிரகங்கள் நின்ற ராசிக்கு நான்காமுராசியில் இராகு சம்பந்தப்படவும் ஜெனன லக்கினுதிபதியும் வெண்ணிறப் பிரகாசமுடைய சந்திரனும் அஸ்த்தமயம் பெற்றுமிருக்க அந்த ஜாதகன் எவ்வளவு நாளிருக்கினும் அவனுக்குயோக மென்பதே இல்லை என்று கூறுவாயாக

இரவிசனியிருந்தவீட்டுக் கேழிடமரசன் சுங்கன்
பரவியசோமன்பற்றிப் பாக்கியவானுங்கூட
அரவுசெய்நாலிநின்ரு லவனுக்கேயோகமில்லை
மரபுகண்டுரைத்தல்வேண்டு மனத்திஞலறிந்துமாதே

(இ ள்) கொடிய கோட்க்கள் கூட்டங்கூடி ஜெனனலக்கிணத்திற்கு நான்கிலிருந்தாலும் சந்திரனும் குருவும் நீச்சப் பெற்றும் அவர்களோடு சுபகிரகங்கள் கூடி இருக்கினும் அவனுக்கு யோகமென்பதே இல்லையென்றும் அவன் ஜெனித்த நாள்முதல் சவுக்கிய மடைந்ததேயில்லை என்றும் கூறுவாயாக 66

மந்தன்மாமதிகெட்டோனு மருவி யெட்டயன்ருஞலாய்த்
தொந்தமாய்ச்செவ்வாய்நின்ருர் செபல்லவேயோகமில்லை

வந்நாண் முதலாய்த்தானே வண்ணிலிவ்வுடலமாளும்
அந்நாளளவுமேழை யாகியேயலைவன்மாதே

(இ ள்) சூரியனும் சனியுமிருந்த வீட்டிற்கு ஏழாமிராசியில் சுக்கிரனிருக்கவும் சந்திரனை பாக்கியாதி என்றும் 9ஆம் வீட்டதிபதி சகிதம் பெறவும் ஜெனன லக்கினத்திற்கு நான்கா மிராசியில் சூரியன் குஜனிருக்கவும் அந்த ஜாதகனுக்கு யோகமென்பதே இல்லை என்றும் இவையாவும் கிரகங்களிருக்கும் தராதரமறிந்தும சொல்லுதலும் வேண்டும் எ று 67

உதயாதிநின்ற வீட்டுக் கெட்டவனுதயநிற்க
மதியான தீனமாகி மந் ஞர் கூடிநிற்க
அதிலாக விரவிபொன்சேய்க் கமர்ந்துஞலினிற்க
இதமாக விருந்தாராட லிவனுக்கே யோகமில்லை.

(இ ள்) சனி சந்திரனிவர்கள் நின்ற ராசிக்கு 8 ஆம் மிராசியதிபதி ஜெனனலக்கினதிற்கு மேற்படி 8 ஆம் மிராசியிலேயே இருக்கவும் நான்காமிராசியில் குஜனிருக்கவும் அந்த ஜாதகனுக்கு யோகமென்பதே கொஞ்சமேனுமில்லை உயிருள்ளளவும் ஏழையாகவே அலைந்துத்திரிவானென்று கூறுக எ று 68

மதியுறுமிடத்துக் கெட்டோன் மதிழந்துடனுதயநிற்கப்
பதியுதயத்துக்கெட்டோன் பனிமதியுடனேசேர
இதுபதியிடத்தார் தாமு மிருவருமாறெட்டாகச்
சதிபதிமாதேநின்ருற் சற்றுமேயோகமில்லை.

(இ ள்) ஜெனன லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி ஜெனன லக்கினத்திலிருக்கவும் சந்திரனிருந்த விட்டுக்குடையோன் சனியோடு சகிதம் பெற்றிருக்கவும் சூரியன் குரு அங்காரகன் இம்மூவர் கூடி ஜெனன லக்கினத்திற் நான்காமிராசியிலிருக்கவும் ஜெனித்தவனுக்கு யோகமென்பதே இல்லை என்றுங் கூறுக

இப்படிச்சொன்ன நூலி லிதிற்குருசுங்கன் புந்தி
நற்படி சோமனின்ரு னலமுள்ளோன் பாக்யவானுய்ச்
சொற்படி கல்வியுண்டாய்ச் சுகமுடனிருப்பன்மாதே
பற்படி நன்மைதீமைப் பலனறிந்தினிது சொல்லே.

[இ ள்] சந்திரனிருந்த வீட்டிற் கெட்டாமிடத்திற்கு குடையோன் ஜெனன லக்கினத்திலிருக்க ஜெனனலக்கினத்திற்குளட்டாமிடத்தோன் சந்திரனுடன் சகிதம் பெற்றிருக்கவும் சந்திரனிருந்த வீட்டிற்குடையோனும் ஜெனனலக்கினுதிபதியும் 9, 8, ஆம் ஸ்தானத்திலிருக்க அழகு பொருந்திய பெண்ணே அவனுக்குயோகமென்பதே இல்லை என்று கூறுக எ று

நண்டவன் குறிகிநிற்க நடுமனை நீலநிற்க
உண்டுபொன்விரையமாக வோரேழுற்றீயர்நிற்க
ரெண்டவனெட்டினிற்க ரெத்தமேனியனுங்கூட
விண்டுமேலாபமாறில் விரையமம் யோகமில்லை

[இ ள்] மேற்சொன்ன சாஸ்திர ஆராய்ச்சி விதிப்படி சுக்கிர, புதன் சந்திரன் முதலிய சுபகிரகங்களிருப்பாரேயாமானுல் அந்தபூர்ண அயிஸ்வர்யமுடையவனுய் நல்ல கல்வி பயிற்சியுடையவனுய் இருப்பானென்றும் இவ்விதமே நன்மை தீமை முதலியவையறிந்து பலாபலனுரைக்க வேண்டுமென்றுங் கூறுக

தனலாபபாக்கியமானேர் தனிபராவீராறெட்டிற்
குணமிலாவீராறேட்டோர் குறிந்ததனலாபபாக்கிபம்
இணமதிலொருவராகி யிருந்திடில்யோகமில்லை
மனமதிற்றுயரமாகி மண்ணினிலிருப்பன்மாதே

(இ ள்] கடகராசிக்குடையோன் தலைவலி விழுந்திருக்க மத்தியஸ்தானத்தில் சனி நிற்கவும் குரு விரயஸ்தானமாகிய 12 ஆம் மிராசியிலிருக்க 7 ஆம் மிராசியில் கொடிய கோட்கள் சகிதம் பெற தனுதிபதி இரண்டாம் விட்டோன் அஷ்டமஸ்தானம் பெற அவனேடு சூரியனும் சகிதம் பெற லாபதிபதி ஆருமிராசியிலுமிருக்க அவனுக்கு யோமென்பதே இல்லை என்று கூறுக

வீரியமந்தன்கூடி வெண்கதிர்நாலேயாகப்
பாரின்வெய்யோனுக்கேழிற் பாராளுமரசன் சுங்கன்
சூரியனுலிற்பூமன சுத்தமாய்நின்ருராகிற்
கூறியபதியும் பின்னேகுறிகிடும்யோகமில்லை

[இ ள்] இரண்டு ஒன் பது இவ் விட்டிற் குடையோர் 8 12 ஆம் ராசியிலிக்கவும் 12, 8 ஆம் ராசிக்குடையோர் 2.8, 11 ஆம்மிடங்களிலும் மேர்ச் சொன்ன கிறகங்களில் யாரேனுமொருவர் ஷேஸ்தானத்திலிருக்கில் அவனுக்கு யோகமென்பதே இல்லை என்றும் மெத்த வருத்தமும் துன்பமும் உடையவனுய் இப்பூமியின் தக்ஷித்திருப்பாரென்றுங் கூறுவர் எ று 73

அரவுமேசனிக்குநாலா யந்தணணிரவிக்கூட
மறைவுளோன்புதற்க்குநாலாய்மந்திரிசனிக்கேழாகில்
திரமுளவுதையத்தானுஞ் செவ்வாயும்விரையாமானுற்
குறையுளோனுகிவாழுங் கொடுங்கனைவிழியினுளே

[இ ள்] ஜெனனலக்கினத்திற்கு நான்காமிராசியில் சூரியன் சனியுடன் சம்பந்தபட்டிருக்க சூரியனின்ற ராசிக்கு ஏழாமிராசியில் அரசனென்றுப் பெற்ற, குருவும், சுக்கிரனுமிருக்க ஷ சூரியனின்ற ராசிக்கு நான்காமிராசியில் புதனும் சகிதம் பெற்றிருப்பார்களேயானுல் தன் செல்வமெல்லாம் குறைந்து கஷ்டப்படுவதோடு யோகமும் இல்லை என்று கூறு எ று 74

விறையாதிலாபமாக வெண்கதிருடனேசோமன்
மறையோனும் விரையமாக மந்திரியாரெட்டாகப்
பிறையோனுஞ்சனிக்குநாலிற் பெரியராப்பூமன் கூடில்
நிரையாகயோகமின்றி நிற்பனேபுவியின்மாதே

(இ-ள்) சனிநின்ற ராசிக்கு நான்காமிராசியில் இராகு கேதுக்களிலொருவரிருக்க அவர்களோடு சூரியன், குரு, இவர்களும் சகிதம்பெற, புதனுக்கு நான்காமிராசியில் ஜெனனலக்கினத்திற்கு மூன்ரும் வீட்டிற்குடையோன் சகிதம்பெற, சனிராசிக்கு ஏழாமிராசியில் குரு விருக்க. ஜெனனலக்கிணுதிபதியும், குஜனும் விறயஸ் தானம் பெற்றிருக்கவும் அந்தஜாதகன் மெத்தவருமையுடையவனுகவே வாழ்ந்திருப்பான் எ று.

வில்லவனேட்டி நிற்க விறையனுமுதையமாக
னில்லொணுமதியுஞ்சீர்ண னிறைதனலாபமானேர்
வல்லவனிரவிகூடில் வகையுரத்தனமேநாசம்
நல்லதுமில்லைமாதே நலங்குன்றும் யோகமில்லை

(இ-ள்) 12, ஆம் வீட்டோனுன விறயஸ்தானுதிபதி 11, ஆமிடமான லாபஸ்தானத்திலிருக்க சூரியனுடன் சந்திரன்சகிதம்பெற குருவும் விறய ஸ்தானம்பெற்றிருக்க (அ) 7, 8. ஆம்ஸ்தானங்களிருக்க சந்திரன், சனிநின்ற ராசிக்கு நான்காமிராசியிலும் அவர்களோடு புதனும் சகிதம் பெற, அந்த ஜாதகன் கொஞ்சமேனும் யோகமின்றி இப்பூமியில்யிருப்பான் என்றுங் கூறுக எ று. 76

விதித்தவனுதையளித்த விரையனும்லாபமாக
உதித்தவனெட்டினிற்க வொருபிறைசனிக்கேழாகிற்
செனித்தவனுடனேழ்வேந்தன் செவ்வாய்க்கு நாலேயாகிற்
கதித்கொரு நாளுங்யோகங் கண்டிடாதரி வாய்மாதே

(இ-ள்) குரு, ஜெனனலக்கினத்திற்கு 8-ஆமிராசியிலிருக்க 12.ஆம் வீட்டாதிபதி ஜெனனலக்கினத்திலிருக்க சந்திரன் தன் கலைகுறைந்தாவது நீச்சம் பகை பெற்ருவதிருக்க 2, 11-க்குடையோர் சூரியனுடன் கூடியிருக்க, அந்தஜாதகன் தனம்யாவும் நாசமடைந்தும் யோகமில்லாமலும் மயங்கித்திரிவானென்றுங் கூறுக.

யோகமேயில்லைகேளா யொருநான்கிற்சனி செவ்வாயும்
நாகமேகலந்திருக்க நண்டவனீனமாக
வேகமாய்ச்சுங்கன்பொன்னும் வேந்தனுடேழேயாகிற்
போகமும்யோகமில்லை பொல்லாது கெடுதிமாதே

(இ-ள்) ஜெனனலக்கினாதிபதிக்கு 8-ஆம் வீட்டோன் ஜெனன ராசியிலும் 12-ஆம் வீட்டோன் லாயஸ்தானம்பெற்றிருக்க ஜெனனலக்கினாதிபதி அஷ்டமஸ்தானத்திலும் சனிக்கேழில் சந்திரனும் ஜெனனலக்கினாதிபயோடு குருகூடி. குஜன் நின்றராசிக்கு, நான்காமிராசியிலிருக்கவும் ஜெனித்தவன் யோகமென்பதையே ஒரு நாளிளேனும் கண்டிருக்கமாட்டாள் எ று. 78

குருபகவான் சொன்னயோகம்

செனித்தவர்க்கேழ்நால்பத்தோர் சேர்ந்துடன் மதிக்கைந்தாகி
மதித்தவர்கோணர்கூடிச் செனித்தவர்கர்மஞ் சேர்ந்தால்
இனிப்பெருஞ்செல்வமுண்டோ மென்னவே கெஜமேற்கொண்டு
தொனித்தவனரசேயாண்டு தொண்ணூறும்பத்துநிற்பன்

(இ-ள்) ஜெனனராசிக்கு நான்காமிராசியில் சனி குஜன் இவர்களிருக்க, அவர்களோடு இராகுகேதுக்கலிருக்க, கடகத்திற்கு டையோனுன சந்திரன் தனலரிவிழந்து ஈமைபெற்றிருக்க, சுக்கிரன், குரு, இவர்கள் 7 ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகனுக்கு யோகம் முதலானவைகள் விக்கினமாவதோடு கொடியதுன்ப முண்டாகும் என்றும் கூறுவாயாக. 79

சென்மலக்கினத்துக்கோரொன் பதினைந்தோன் கூடிநிற்க
தன்பதிமதிக்கேழ்நாலிற் பத்தினிற்கூடிநிற்க
இன்பராக்கதிரிராஜ னிருந்ததிற்கேந்திரங்கூடித்
துன்பமற்றுதையோன் கோண மாயினிமுற்பலனேயாகும்

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்கு ஒன்பது ஐந்தாமிடத்தோனும் சேர்ந்திருக்க, இராசிநாதன் சந்திரனுக்கு நான்காமிடம் ஏழாமிடம் பத்தாமிடத்திலிருக்க, இராகு, சூரியன் குருவும். கேந்திரஸ்தானத்திலிருக்க, இலக்கினாதிபதி கோணஸ்தானத்திலிருந்தால் வாலிபகாலத்தில் ஜாதகன் முற்பலனாக தனதான்ய சம்பத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும் எ-று. 80

உதையாதிமகிக்யேழின் மதிபதியுதித்தோர்கசேழின்
சிதைவறநிற்கமற்றோந் சிறந்திருபுறமுநிற்கிற்
குறைவரச்செல்வமுண்டாய்க் குபேரனுயுலகையாண்டு
அரையிலாதிருப்பநூறு யாயிரம்பிறைதான்கண்டே

குருபகவான்சொன்ன ராஜயோகம்

(இ ள்) ஜெனனலக்கினத்திற்கு 1, 4, 7, 10-க்குடைய கிரகம் ஒன்றுகூடி சந்திரனிருந்த ராசிக்கு 5 ஆமிராசியிலிருக்க அவ்வீட்டிற்குடைய கிரகமும் 5, 9-க்குடைய வரும் ஜெனனலக்கினாதிபதியும்கூடி 20 ஆமிராசியிலிருக்க அந்த ஜாதகன் பெருஞ்செல்வ முண்டாவதோடு இப்பூமியில் நல்ல மென்மையான பதவியிலிருப்பானென்றும் நூறுவயதுவரையில் அரசாண்டுமிருப்பானென்றுங் கூறுக எ-று. 81

பிறைநின்றவிடத்துநாலோன் பின்புதையத்துக்கைந்தில்
இறைவன்பிறைக்குபத்தி லிருந்திடிலிராஜயோகம்
குறையன்றிச்செல்வமேலாய்க்கொடுப்பரிப்படிமேனின்றால்
அரையொன்றுமில்லைகேளா யம்புலிக்கனையமாதே

(இ-ள்) சந்திரனிருந்த நாலாம் வீட்டுக்கதிபதி இலக்கினாதிபதிக்கு ஐந்தாம் வீட்டில் குருவிருந்து சந்திரனுக்கு பத்தாமிடத்திலிருந்தால் ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்கிசைந்த குறையாத செல்வமும் பொருந்தி யிருப்பதற்காகும் பெண்ணே.

நின்றவிலக்கினத்துக் கோர்பததோனிறை மதிக்கு
அன்னையொனைந்திற்க்கூடி லவனுக்கே ராஜயோகம்
துன்மைபொன்றில்லரச்செல்வஞ் சுபமதாயிருப்பநூறுய்த்
தன்னையொப்பிலாயோகந்தரணியிலவர்க்குண்டாமே

(இ-ள்) சந்திரனின்ற வீட்டிற்கு நான்காமிராசிநாதன் ஜெனனலக்கினத்திற்கு கைந்தாமிராசியிலிருக்க சந்திரனுக்கும் பத்தாமிராசியில் குருவும் இருக்க அந்த ஜாதகனுக்கு ராஜயோகமுண்டு அன்றியும் எந்நாலும் குறைவில்லாத செல்வத்தைப் படைத்தவனுய் இருப்பானென்றுங் ஏதொரு துன்பமுமில்லாதவனுக இருப்பானென்றுங் கூறுக எ-று. 72

கண்டுதையத்தோன்பத்தோன் கனமதியதர்க்குத்தர்மன்
கொண்டுதையத்துப்பத்திற் கூடவுமதிக்கு நாலோன்
உண்டுயிர்க்கைந்தினின்று னுலகுக்கேராஜராஜன்
அண்டினோர்க்கமுதுமீயு மதியோகசாலியாவன்

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்கு 10-ஆம் வீட்டிற்குடையவனும் சந்திரனின்றராசிக்கு நான்காமிவீட்டிற் குடையோனும் ஜெனனலக்கினத்திற்கைந்தாம் ராசியிலிருக்க அந்த ஜாதகனுக்கு ராஜயோகமுண்டு மேலும் யாதொரு துன்பமுமில்லாதவனுய் செல்வத்தோடு நூறுவயதுவரையில் தனக்குயாரும் நிகரில்லையென யோகத்தையுடையவனுக வாழ்ந்திருப்பானென்றுங் கூறுவாயாக.

உதித்தவர்கைந்தினுலோன் மதித்தவர்நவநாலாக
மதித்தவர்கர்மத்தமனு முதித்தவர்க்கென்பதாகக்

குதித்தவர்மதிக்கைந்தோனுங் கூடிறையுடனே நின்ருற்
கதித்தவர்ராஜராஜ யோகமுமுண்டுமாதே

(இ-ள்) ஜெனனலக்கினத்திற்கு 10-ஆம் வீட்டிற்குடையோனும் சந்திரனுக்கு 10-ஆம் விட்டிற்குடையோனும், ஜெனனலக்கினத்திற்கு பத்தாம் ராசியிலேயே இருக்க அந்த ஜாதகனுக்கு ராஜயோக முண்டு மேலும். தன்ணை நம்பியவர்களுக்கு ஒப்பற்ற அரிய அமுதத்தையும் கொடுக்கும் மேலானயோகசாலியாக இருப்பான் எ று. 85

பெற்றிடத்தைந்துவீட்டான் தறைக்குமேநவநாலாக
மற்றிடமதியுநாலோன் பெற்றிடத்தைந்துணிற்க
இத்துடன்பத்துவீட்டா னிருக்கவும்ராஜராஜன்
பெற்றுடனிருக்கும்ராஜ பேருக்கேராஜசிங்கம்

[இ.ள்] ஜெனனராசிக்கு 4,5, ஆம் விட்டிற்குடை யோன் சுபகிரகங் களுடன் கூடி நான்கு அல்லது ஒன்பதாம் ராசியிலிருக்க சுபகிரகங்க ளோடு 10ஆம் மிடத்தோன் கூடி லக்கினதிபதி நின்றராசிக்கு 9 ம் ராசியிலிருக்க கொடிய கோட்க்கலும் சந்திரனுக்கு 5, ஆம் ராசிநாதனும் குருவுடன் கூடி இருக்க அந்தஜாதகனுக்கு ராஜாதிராஜயோக முண் டென்று கூறு 83

மதிக்கிலாபதிமன்னன் மகிழ்ந்துதைதனத்தினிற்க
அதற்குதைதனலாபத்தா னவ்வெள்ளியுடனே கூடி
எதிர்த்துடன் மதிக்கிலாப மிருந்திடிலிராஜயோகம்
குத்தித்துடன்யானைமாவுங் கூட்டமுமனேகமுண்டு

[இ ள்] ஜெனலக்கினத்திற்கு 5ஆம் விட்டோன் குஜன் நின்ற ராசி நான்காமிராசியிலிருக்க சந்திரனுக்கு நான்காமி ராசிநாதனும் வேறு கிரக மும் கூடி ஜெனனலக்கினத்திற்கு 5ஆம் ராசியிலிருக்க இவர்களோடு தந்மாதி பதியும் சகிதம்பெற்றிருக்க அந்த ஜாதகன் ராஜாதிராஜனுகவும் அரசர்களுக்கெல்லாம் ராஜகிங்கமாகவுமிருப்பான் எ று

செனித்தலாபாதிமன்னன் சேர்ந்துடன் மதிக்கிரண்டில்
இனிப்பெருமதிக்குதித்தோ னிவரிவர்நலத்தோர்கூடிப்
பெருந்துதைகர்மஞ்சேர்ந்தாற் பேருள்ளராஜனுவன்
தனித்தன்றிச்செனமேற்கொண்டு தானுமேயுலகையாள்வன்

[இ-ள்] சந்திரலக்கினத்திற்கு லாபாதிபதியும் குருவும் சேர்ந்து ஜெனன லக்கினத்திலிருக்கவும் ஜெனனலக்கினத்திற்கு 2, 11, க்கு டையகிரகம் சுக்கிரனுடன் சகிதம்பெற்றிருக்க சந்திரனுக்கு 11 ஆமிடத்தி லிருக்கினும் ராஜயோகமுண்டாகும் அன்றியும் ஜெனன கால முதற் கொண்டு ராஜங்க மாளதக்கவனுவான் 88

கண்டிடுமிலக்கினத்தான் கனமதியிடத்தான்கூடி
உண்டுயிர்மதிக்குப்பத்தி லொருமையாய்நிற்கமற்ருேர்
அண்டியேயிவர்க்கிலாப மாயினுன் மாதேகேளாய்
தெண்டிரைசூழுநாடுந் தேசமுமாளவல்லன்

(இ-ள்) ஜெனனராசிக்கு 11 ஆம் விட்டதிபதியும் குருவும் சேர்ந்து சந்திரனிருந்த ராசிக்கு இரண்டாமிராசியிலிருக்க சந்திரனிருந்த ராசிக்கு டையோனும்9ஆம் வீட்டதிபதியும் சேர்ந்து10ஆமிடமான உத்யோகஸ் தானப் பெற்றிருப்பானே யானுல் அந்த ஜாதகன் மிக்க பிராக்தியும் செல்வத்தையும் படைத்த அரசனுவதோடு தான் ஜெனித்தது முதல் அரசாளத்தக்க யோக்கியதை யுடையவனுமாவான் எ னு 89

உடற்குநாலைந்தோன் கூடி யுமிர்க்குமிரைந்துநிற்க
மடற்பெருமதிக்குநாலின் மன்னவனவத்தோன்கூட
விடத்திடத்துயிரிறசந்திர னவ்விடத்தனின்ருற்
கிடப்பருஞ்செல்வமுண்டாய்க் கனக்கவேயரசேயாள்வன்

(இ-ள்) இராசிக்கு நான்காமிடத்ததிபதியும் ஐந்தாமிடத்ததிபதியும் இலக்குனத்திற்கு பத்தாமிடத்திலிருக்க, சந்திரனுக்கு நாலாமிடத்தில் குரு வும் ஒன்பதாமிடத்ததிபதியும் சேர்ந்திருக்க இலக்கினத்தில் சந்திரனிருந் தாலும் தனதான்யசப்பத்துடன் ஆஸ்தியும் பொருந்திய இராஜயோகத் தையனுபவிப்பதற்காகும் 90

குறினிலைதனத்தோன் மந்திரிக் கோர்மதிலாபத்தானும்
மறிநிலைலாபமாகிப் பத்தவன் மதிக்கைந்தாக
அறியவேநவத்தோணின்ற வம்மனைமதிக்குநாலாய்
நெறியிலாதிருக்கில் ராஜயோகந்தானிஜமாயுண்டே

(இ-ள்) இலக்கினதிபதியும், தானுதிபதியும் குருவுமிருக்கின்ற ஸ்தா தானத்திற்கு இலாபஸ்தானத்திலிருக்க பத்தாமிடத்ததிபதி சந்திரனுக்கு ஐந்தாமிடத்திலிருக்க ஒன்பதாமிடத்ததிபதி யிருந்த ஸ்தானம் சந்திர னுக்கு நாலாமிடமிருக்க அந்த ஜாதகனுக்கு இராஜயோகமாகும் மாதே எ று 91

பறித்தவன் மதியோடாயப் பதியவனுதையனிற்கச்
செனித்தவர்க்கேழின்மந்திரி சென்மாதிக்கேழின்சுங்கன்
குறித்தவர்நிற்கவீவர்க் கவர்கோணகேந்திரமாகில்
மறித்தொருவரையும்பாரா ராயினுஞ்செகமேயாள்வன்

(இ-ள்) இராசிநாதன் இலக்கினத்திலிருக்கும்போது ஏழாமிடத்தில் குரு இருந்தாலும் ஜன்மாதிக்கு ஏழாமிடத்தில் சுக்கிரனிருக்க இவர்க்கு கோண கேந்தரக்களிருந்து பகை கிரகங்களின் பார்வைபெருமலிருந்தால் அந்த ஜாதகன் சகல வித்யாசமர்த்தகனுகி செங்கேல் பிடித்து அரசாளும் இராயோகத்தையனுபவிப்பதற்காகும்

இந்தொருவுயந்தானு றிருந்திடமதிக்கிலாபம்
அந்தொருமதிவீட்டானு மரசனுமுதித்தோர்லாபம்
சந்திருந்ததற்கேழ்சுங்கன் சாய்விலாப்பிறையுமாகில்
உந்தொருசேடனுகி யுலகுக்கோர்மன்னனுவன்

(இ-ள்) சந்திரநின்ற இராசிநாதன் சந்திரனுக்கு லாபஸ்தானதிலும் இராசிநாதனும் குருவும் இலாபஸ்தானத்திலுமிருக்க சந்திரனுக்கு ஏழாமிடத்திற் சுக்கிரனிருக்கும்போது வளர்பிறைச்சந்திரனுயிருந்தால் இந்த ஜாதகன் உவகிலுள்ளோர் மதிக்கத்தகுந்த இராஜயோகத்தை யனுபவிப்பதாகும் எறு
93

நல்லதோர்மதிக்குப்பத்தோ னலமுள்ளகுருவுங் கூடச்
சொல்லதற்குதையமைத்திற் சோம்புடனிருக்க மற்றோர்
வல்லதாயிவர்க்குலாப மாகவேனின்றாராகில்
வெல்லவுங்கீர்த்திபெற்று வேண்டியவரசேயாள்வன்

(இ-ள்) சந்திரனுக்கு பத்தாமிடத்தோனுடனே குரு சேர்ந்திருக்க ஐந்தாமிடத்திலும் பத்தாமிடத்திலும் மற்ற கிரகங்களிலிருக்கும் லாபஸ்தானத்தில் சந்திரனிருக்கும் ஸ்தானுதிபதி சேர்ந்திருக்க இலக்கினத்திற்கு ஏழில் சந்திரனிருந்தாலும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு.

இருவுதையத்தோர் கூடி யிருத்திமதிக்கலாபம்
குருபதியதற்கேழ்சோமன் கோணருமுதையமாகில்
வருவது செங்கோல்சிங்கம் வாகனமிதமில்லாமல்
ஒருபதில_சங்கோடி சூழ்ந்திடவுலகமாள்வன்

(இ ள்) இராசிநாதனும் இலக்கினுதிபதியும், சேர்ந்து சந்திரனுக்கு இலாபஸ்தான்த்திலிருக்க குருநின்ற ஸ்தானத்திற்கே ஏC,மிடத்தில் சுக்கிரனிருக்க சந்திரனும் கோணதிபர்களும் உச்சமாயிருந்தால் அந்த ஜாதகன் சிங்காரவாகனமேறும் தனமேறும் சமர்த்தனைப்போல இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு
95

வகுத்துதையத்திலாப மிலாபாதியிருவர்கூடிச்
சகத்துதித்தோர்க்கிலாபஞ் சந்திரனிடத்தான் கூட
மகிழ்பதரசாள்வனின்ற மனைக்கேழின்மதியுமாகில்
உகந்தொருகோடிசூழ வுலகுக்கோரரசனுவன்

(இ-ள்)இலக்கனத்தினத்திலும் இலாபஸ்தானத்திலும் இந்தஇரண்டு ஸ்தானுதிபதிர்களும் சேர்ந்திருக்க இலாபதியுடனே சந்திரன் சேர்ந்திருக்க இலக்கினத்திற் கேளாமிடத்தில் சந்திரனிருக்க அந்த ஜாதகன் பலபேர் தனக்கு தவியா யிருக்கும்படியான இராஜயோகத்தை அனுபவிக்கும்படியாயிருக்கும் எறு
96

ஒருதையத்திலாப மொன்பதினிரண்டோன்கூடிப்
பார்மதியிருந்திடத்துப்பத்தினினின்றாராகிற்
சேரவும்யானைக்கூட்டந் திரளுடன்சிவிகையுமாவும்
பேரெ றச்செல்வங்கோடிப் பெருக்கவேயரசேயாள்வன்

(இ-ள்) இலக்கினத்திலும் இலாபஸ்தானம் ஒன்பதாமிடத்திலும் இரண்டாமிடத்தா னிருந்தாலும் சந்திரனின்ற ஸ்தானத்திற்கு பத்தாமிடத்தாலும் ஆனை, சேனை பரிவாரங்கள் சூழும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு

ஒந்தசந்திருத்திடத்துக் கொன்பதிலாபம்ரெண்டோன்
மெத்தவுங்கூடிலக்ன மேலாகபத்திநின்றால்
நித்தமுமநேகங்கோடி நெருங்கிடாராஜகூட்டம்
பெற்றுடனுலகமெல்லாம் பேருள்ளவரசனுவான்

(இ-ள்) சந்திரனின்ற ஸ்தானத்திற் ஒன்பதாமிடம் இலாபஸ்தானத்தில் இரண்டுக்குடையவன் சேர்ந்து இலக்கினத்திற்கு பத்தாமிடத்நிலிருந்தால் தினந்தோறும் அநேக அரசர்கள் சூழ்ந்து உலகாளும் அரசனுக்கும் மேன்மையான இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு

பதியுதையவனுநாலேழ் பத்தவன் கூடிச்சோமற்
கதுவைந்துமாறிநிற்க வம்புலிவீட்டானுலேழ்
விதிக்குமுடத்தான்கூடி விறைந் தின்பின்னேநின்றாற்
குதிக்குமாவநேகங்கோடி கோடிமன்னவர்கள் காண்பார்

(இ-ள்) இலக்கினுதிபதியும் இராசிநாதனும், நான்கு, ஏழு பத்தாமிடத்தானுடனே சேர்ந்திருக்க அந்த ஸ்தானத்திற்கு சந்திரனுக்கு ஐந்தாமிடத்திலிருந்தாலும் சந்திரனிருந்த இராசிநாதனுக்கு ஏழாமிடத்திலாயினும் இலக்கினத்திற்கு ஆருமிடந்தான் சேர்ந்து அவர்களுக்கு பின்புரமிருந்தால் சிலபேர் புகழ்ந்துரைக்கும் சமர்த்தனென்னும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும்,

மதிக்குமூன்றைந்துதர்மன் மதிக்குமேற்பத்திநிற்கப்
பதிக்குமேயைந்தொன்பானு மொருமூன்றேன் மதிக்குப்த்திற
பதித்தவர் நிற்றாராகிற்பணு முடிச்சேடனுகி
அடிக்கொருகோடிசூழ வரசாள ராஜயோகம்

(இ ள்) சந்திரனுக்கு மூன்று ஐந்துபத்தாமிடத்தில் இலக்கினத்திற்கு ஐந்தாமிடத்தானும் சூரியனும் மூன்றுமிடத்தோன் சந்திரனுக்கு பத்தாமிடத்திலிருக்க அந்த ஜாதகன் மகாவீரப்ரதாப வித்யாசமர்த்தனுகி திரவியலாபத்துடனே இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு

**சென்மலக்கினத்திற்காறேன் சோமற்குவிறையமாகி
இன்பமொத்திருக்குஞ்சோமன் விரையத்தானுதையத்தாறில்
துன்பமுற்றிருக்கிறசெல்வங் துரகதகெஜமேயுண்டு
பொன்பதராஜயோகம் பொற்சிங்காதனந்தானுண்டே**

(இ-ள்) ஜன்ம லக்கினத்திற்கு ஆருமிடத்ததிபதி சந்திரனுக்கு விரயஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகன் துன்பமில்லாத அனுபவத்தை அனுபவிப்பதுடன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 101

**அதியுதையத்தோன்வீறி யந்தசோமற்கிலாபம்
மதியுதையத்தோன்வீறி மகிழ்ந்துதையத்திலாபம்
பதிவிலாத்தனியராகிப் பண்புடநின்றராகிற்
குதிகொளுங்கோடி மன்னர் சூழும்வெண்குடையனுவன்**

(இ-ள்) இலக்கினதிபதி வீறியஸ்தானதிபதி யாகிய சந்திரனுக்கு லாபஸ்தானத்திலிருக்க இராசிநாதனிருந்த ஸ்தானதிபதி இலகினயனும் இலாபஸ்தானத்திலாகிலு மிருக்க ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 102

**கதிரெழவுயிக்கிலாபங் கனத்தசந்திரனுர்நிற்க
மதியுளவகற்கிலாப மகிழ்ந்துடனுதித்தோனிற்கப்
பதியுறவுதித்தோன் லாபம் பருமதியிடத்தானிற்கில்
அதிகமேகோடிராஜ ரவனுக்கே சூழவிற்பன்**

(இ-ள்) சூரியனுக்கும் இலக்கினத்திற்கும் லாபஸ்தானத்திலிருக்கும் சம்பந்தமாய் சந்திரனிருக்க சந்திரனிருந்த ஸ்தானத்திற்கு லாபஸ்தானத்தில் இலக்கினதிபதி யிருந்தால் இராஜயோகமாகும்

**இன்னமுமநங் தங்கோடி யிருக்குமேயோகதிட்டம்
சொன்னதுவியாழங்கொஞ்சஞ் சொற்றவருத நீதி
பொன்னவன் சொன்னயோகம் பொய்யாது செகத்துளோர்குச்
சின்னதோரிடையினுளே செப்பினேனறியத்தானே**

(இ-ள்) இன்னும் அநேககோடியான யோகதிடங்கலிருந்தாலும் குரு சொன்ன நீதிவாக்கியபடியே உலகில் வசிக்கும் ஜாதகர்க்கு யோக பலனைச் சொன்னேன் கவனித்துக் கொள்வீர் எ று

சுக்கிரன் சொன்னயோகம்

**குறனிலமதிக்கீரெட்டோன் குந்தினவிடத்தார்தாமும்
மறிபகைநீசமுட மன்னவன்கூடவன்றிப்
பறிபடவீனமாகிற் பண்புளோனுகிவாழ்வன்
செறிதருமுன்னும்பின்னுஞ் சிவிகையுமனேகநிற்கும்**

[இ-ள்] இலக்கினதிபதி இராசிக்கு எட்டாமிடத்தானு மிருந்தஸ்தானத்தில் பகைநீச அஸ்தமமாய் குருசேர்ந்திருக்க அந்தனரையும் மதியாமல் தனக்குதானே பெரியவனென மதித்திருப்பான் எ.று 105

**ஆறிரண்டிடத்தானின்ற வம்மனையாளர்நீசம்
வீறியவிறையத்தானும் வேறன்றிமதிக்கெட்டாகக்
கூரியமதிக்கெட்டோனுங் கூடாமல் விறையமாகிற்
சீறியகரியநேகங் தேசமுமாளவல்லன்**

[இ-ள்] பனிரெண்டிடர்தானின்ற ஸ்தானதிபதி நீசமாகவும் விரயாதிபதி சந்திரனுக்கு அஷ்டமத்திலிருக்க சந்திரனுக்கு அஷ்டமத்தோன் அவர்களைச் சேராமல் விரயஸ்தானத்திலிருந்தாலும் வீண்செலவு செய்து படாடோபமாய் இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எறு

**ஈராறெட்டாரிருந்திடத்தோ ரீனபெலனுயிருக்கிலுமே
ஆராறெட்டிற் சுபரில் தம் புலிக்கவ்விரையமாறெட்டோர்
வேருக்குறிகியாறெட்டில் வெகுண்டுனின்றராமாகிற்
பேராயுடனேசிவிகையுமாய்ப் பெலத்ததேசத்ததிகனுமாம்**

(இ ள்] பனிரெண்டாமிடம் எட்டாமிடத்திலிருந்தோர் பலஹீனமாய்யிருந்தாலும் ஆருமிடம் எட்டாமிடத்தில் சுபகிரகங்களிருந்தாலும் சந்திரனுக்கு ஆறு எட்டிலிருந்தாலும் இராஜயோகமாகும் எ.று 107

**நாலுநாலிடத்தானின்ற நகரவனஸ்தமிக்க
ஏலுளமதிக்கெட்டோனு மிருந்திடநீசனேடே
மேலுகந்தன்றினின்ற விறையமாரககனுமெட்டிற்
செலவிழிக்கண்ணிணுளே செப்பிடும்யோகமென்றே**

(இ ள்) கேந்திராபதிகளிருந்த இராசிநாதன் அஸ்தமயமாக சந்திரனுக்கு எட்டாமிடத்தோனும் சேர்ந்திருக்க நீசகிரகத்துடனே செவ்வாயிருந்தாலும் சூரியன் அஷ்டமஸ்தானத்திலிருந்தாலும், அந்த ஜாதகனுக்கு யோகமுண்டு எ-று. 108

**ஆட்சிவீடதற்குகேந்திர கோணமோடதிகலாபம்
மாட்சியாய்னிற்கவிந்த மன்னவரேழுபேரும்
சேஷ்டனுயுலகையாண்டு செங்கோலுக்கதிகனுவன்
சூட்சியாய்மறையோன் சொன்னசொற்றப்பாதிருக்குமாதே**

(இ ள்) கிரகங்களுக்கு ஆக்ஷிவிடும் அதற்கு கேந்திரகோணமாயிருந்தால் அதிக லாபங்கிடைக்கும் சப்தகிரகங்களும் பெருமையாய் வலுத்து நிற்தும்போது ஜெனனமான ஜாதகன் இராஜயோகத்தை யனுபவிந்பதற்காகும் எ று 109

அரசனின்றிடத்தான்யோக காரகனுடனேசேரச்
சிரசதுவிடத்தான் சந்திரக் கேந்திரமானல்யோகம்
முரசொடொக்காளமூதி முன்நிற்குஞ்சிவிகையோகம்
விரசதிர்முலேயாவீது வேந்தனுர் சொன்னநீதி

[இ.ள்] குரு இருந்த ஸ்தானுதிபதி யோகக்காரகனுடனே சேர்ந்திருந்தால் இலக்கினுதிபதியாயிருந்த ஸ்தானுதிபதி சந்திரகேந்திரயானல் யோமாகும் உச்சஸ்தானத்திலிருந்தால் முரசு எக்காளமூதும்படியாய் சிவிகைமீதமர்ந்து செல்லும் இராஜயோகமாயிருக்கும் எ,று, 110

வெள்ளியுமிருந்தவீட்டான் விடையுடன் கூடிநிற்க
அள்ளியந்திடத்தான்சோமற் கதிகேந்திரமாகிநின்ருல்
துள்ளியேசிவிகைநேகத் துடருமேகரிமாநேகம்
தெள்ளியேசேஷணுகித் தேசமேயாளவல்லன்

(இ-ள்) சந்திரனிருந்த இராசிநாதன் ரிஷபத்திலிருக்க அந்தஸ்தானம் சந்திரனுக்கு கேந்திரஸ்தானமாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு ஆனை சேனையுடன் பல்லக்கிலேறி உலாவும் இராஜயோகமாயிருக்கும்எ.று 111

சந்திரனிருந்தவீட்டான் சுபமதாயரவஞ்சேர
மந்திரியுதையோனந்த மனையவன்கூடிநிற்க
இந்திருவோர்க்குங்கோண கேந்திரமாய்லாபமாக்கச்
சந்தினுதயமாகிற் சத்தியமரசேயாள்வன்

[இ.ள்] சந்திரனிருந்த இராசிநாதன் சுபகிரகமாயிருந்து இராசிகுடனே சேர்ந்திருந்தால் குருவிருந்த இராசிநாதனும் மேற்குறிப்பித்த இராசிநாதனுடனே சேர்ந்திருக்க இந்த கிரகங்களுக்கு கேந்திரகோண இலாபாதிபதி சந்திரனிருந்தாலும் இராஜயோகமாகும் எ று 112

அரசனேடரவனிற்க வதர்க்கினியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினிற்கச் சனியுமேயைந்தாருகிற்
சிரசின்மேற்கீரீடணுகச் செகமுளு தாதிவல்லன்
ரதகெஜதுரகங்கோடி நடக்குமேசிவிகையோகம்

(இ-ள்] குருவுடனே கேது சேர்ந்திருக்க சுக்கிரன் அவர்களுக்கு பத்தாமிடத்திலிருக்க சனி ஐந்தாமிடம், ஆருமிடத்திருந்தால் சிரசில் மணிமகுடமணிந்து ஆனேசேனை பரிவாரங்களுடன் பல்லக்கில் பவனி வரும் இராஜயோகத்தை யனுபயிப்பதற்காகும் எ று, 113

செனித்தவன் சுங்கன்கூடிச்சேர்த்துநின்றிடத்திர்ப்பத்தில்
இனிக்குருசோமன்வீட்டா னிருவருங்கூடிநிற்கத்
தனிந்தரவத்துநாலிற்றனியனுய்ச்சோமனிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வர்கோடி

[இ ள்] இலக்கினுதிபதியின் சிங்கத்திலிருக்க அவர்க்குப் பத்தில் குரு இருந்த இராசிநாதனும். சந்திரனிருந்த இராசிநாதனுமிருந்தாலும் இராகு கேதுகளுக்கு நான்காமிடத்தில் சந்திரனிருந்தால் அந்தஜாதகன் சிவிகைமீதமர்ந்து பவினிவரும் இராஜயோகததை யனுபவிப்பதற்காகும் எ று

குறித்தவனரசன்கூடக் குருமதியிடத்தான்சுங்கன்
மறுத்துமீரைந்திநிற்க மனையவனுதயமாகச்
செனித்தவனரசன்வீட்டான் சேர்ந்தரவத்துநாலில்
எதிர்த்தவர்னின்ருராகி லீரேழுபுவனமாள்வன்.

(இள்) குரு. சந்திரன், சுக்கிரன் பத்தாமிடத்திலிருந்தால் அவர்களிருந்த ஸ்தானுதிபதி, ஜனன உதய லக்கினத்திலிருக்க குரு இருந்த இராசிநாதன் இராகு கேதுகளுக்கு நாலாமிடத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு இராஜயோகமாகும் எ று 115

பரித்திடஞ்சுங்கனிற்கப் பதியவன்மனையும்வீட்டான்
இனித்துயர்குருவுங்கூட விவர்பத்தினின்ருராகிற்
குரித்துயர்சதிரஞ்சோம னொருவர்கூடாமனின்ருற்
செனித்தநாலாகத்தேச முழுதுமோர்குடைக்கீழாள்வன்.

[இ-ள்] இலக்கினத்திற் சுக்கிரனிருக்க சுக்கிரனிருக்கும் ஸ்தானுதிபதியுடன் குருவும் சேர்ந்து பத்தாமிடத்திலிருக்க, சதுர்த்த கேந்திரத்தில் சந்திரன் வந்த கிரகங்களுடன் சேராமலிருந்தால் அந்த ஜாதகன் சகல தேசத்தையும் தனது அதிகாரத்தில் ஆளும்படியான இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ,று, 116

மதியாட்சியாகிநிற்க மனைக்குநாள்சுங்கன்பாம்பும்
பதியுதித்ததனின்மந்திரி பதியநனவர்க்கோநாலாய்
விதியுமேயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
குதிகொளும்பரிமாவேறங் கொடிமன்னர்புடையேசூழ்வர்

(இ-ள்) சந்திரன் ஆக்ஷிபெற்றிருக்க இலக்கினத்திற்கு நான்காவது ஸ்தானத்தில் சுக்கிரனும் இராகுமிருந்தால் இலக்கினத்தில் குருவுமிருக்க அவர்க்கு நான்காமிடத்தில் இலக்கினுதிபதி ஆக்ஷியாயிருக்க அந்த ஜாதகனுக்கு அநேகவிதமான பல்லக்கு ஆனைசேனை குதிரையுடன் கொடி குடையுடைய அரசாகள் சூழ்ந்திருக்கும்படியான இராஜயோக முண்டாவதாகும் எ று 117

உதையாதிபதியுமாட்சி யொருமையாய்நாலேந்தோனும்
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பத்தோனுட்சி யிருந்திடக்கூட்டமாக
மிதமிலாச்சிவிகைவரசன் முன்னிற்கச்செங்கோலாள்வன்

[இ-ள்] இலக்கினாதிபதி ஆக்ஷியாயிருக்கும் நாலுக்குடையோனும் ஐந்துக்குடையோனும் தனலாபஸ்தானத்தில் இலக்கினாதிபதியுடனே சேர்ந்திருந்தாலும், பத்தாமிடத்ததிபதி ஆக்ஷியாயிருந்தால் அந்த ஜாதகன் அநேகபல்லக்குகளுடைய இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 118

குறியுண்டவிடத்திற்புந்தி கூடவேசுங்கனாரும்
அறிவுண்டசோமன்மந்திரி யவருமேலாபமாகிற்
பறிவுண்டவிடத்தான்பாம்பும் பத்தினின்மதிவீட்டானும்
செறிவுண்டுநின்றாராகிற் செகமெலாமாள்வன்மாதே.

[இ-ள்] இலக்குனாதிபதியிருக்கும் ஸ்தானத்தில் புதனுடனே சுக்கிரனும் குரு சந்திரனும் சேர்ந்து இலாபஸ்தானத்திலிருக்க இலக்கினாதிபதியும் இராகும் சந்திரனும் பத்தாமிடத்திலிருந்தாரானால் உலகெலாம் பிரசித்தமடைந்த இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று. 119

அரவுநின்றிடத்துக்கைந்தி லமர்ந்திடமந்தனாரும்
உரமதாயரவவீட்டானெளிம திசுங்கனார்க்கும்
பரவுறுமவேதனார்க்கும் பத்தினிநின்றால்யோகம்
துரகபதாதிசேனை திரளனியுண்டாய்வாழ்வன்.

[இ-ள்] இராகு நின்ற ஸ்தானத்திற் கைந்தாமிடத்தில் சனியும் இராகு இருந்த ஸ்தானாதிபதியும் வளர்பிறைச் சந்திரனும், சுக்கிரனும் பத்தாமிடத்திலிருந்தால், ஆனைசேனை குதிரைகள் நிறைந்த பிரபுத்தன்மையான இராசி யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 120

அரவமுமுறையோர்கூட வலதுகேந்திரமாய்நிற்கப்
புரமதாயிருந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்லாய்மாதே பாக்கியயோகமென்றே.

(இ-ள்] இராகும் குருவும் சேர்ந்து கேந்திரஸ்தானத்திலிருக்கஅவர்களிருந்த ஸ்தானாதிபதிகள் கேந்திரஸ்தானத்திலிருந்தாலும் குருவும் இராசிநாதனும் கேந்திரஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகன் பாக்கிய யோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று, 121

மறையோர்கேந்திரகோணத்தார் மதியினிடத்தானுதித்தோனும்
குறையொன்றில்லாச்சுகப்படினுங் கொடுக்கும்யோகம்பாம்பாகும்
அறையுற்றிருக்கும்பாம்பினுக்கு வவர்க்கேந்திரங்கோணமல்
இறையோத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகைமாவுடனே.

(இ-ள்) குருவுடன் இராகு சகிதம்பெற அல்லது 1 4,7,10என்னும் கேந்திரங்களிருக்க அவர்களுக்கிருபுறமிருந்த கிரகங்கள் கேந்திரம்

பெற்றிருப்பாரேனும் 'அல்லது, குரு ஜெனனலக்கினாதிபதி இவர்கள் கேந்திரம் பெற்றிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு நல்ல பாக்கியயோக்கிய சிலாக்கிய முதலியவைகளுண்டாகுமென்று அழகு பொருந்திய பெண்ணே நிச்சயமாய் சொல்வாயாக எ-று 122

முடவனார்கீராரெட்டில் முனிபிறைபுதனிருக்க
விடையிருந்தல்விடத்துக் கதிர்சுன்சேயாரெட்டாகிற்
குடையுடன்செங்கோலுண்டு கொத்தளக்கரிமாநேகம்
புடைகண்டுசூழ்வரென்று புண்ணியவியாழஞ்சொன்னார்.

(இ-ள்] சனிக்கு பனிரெண்டாமிடம் எட்டாமிடமாகிய ஸ்தானத்திற்கு சந்திரனும் புதனுமிருக்க அவரிருந்த ஸ்தானத்திற்கு அஷ்டஸ்தானத்தில் சூரியனும். சனியும் செவ்வாயுமிருந்தால் அந்த ஜாதகன் தொடியுடன் கரத்திற் செங்காலேந்தி ஆனைசேனை குதிரைகளும் சூழ்ந்திருக்கும்படியான இராஜயோகத்தை யனுபவிப்பாரென வியாழ பகவான் சொன்னார் எ-று. 123

உறைத்ததுவியாழங்கொஞ்சந்திட்டமுமநேசமுண்டு
திரத்திருலறியவேண்டிச் செகமெலாமுறைக்குநீதி
உரைத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்லமந்திரி
விரைத்ததுவினையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம்.

(இ-ள்) வியாழபகவான் சுருக்கமாய் உரைத்தாலும் பலன் விசேஷமாயிருக்கும். இதை க்வனிக்கவேண்டுமானால் உலகிலுள்ளோருரைக்கும் நீதியிலும் குருசொன்ன வாக்கியமே விசேஷமாய் நடப்பது தவராத இராஜயோக மாயிருக்கும் எ-று 124

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுபமதுதெறியா தார்க்கும்
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ள பேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே

(இ-ள்) இமயமலையில் வசிக்கும் பிர்மதேவனுக்கு சொன்னவிதமே கலியுகத்தில் பிறந்தவர்களுக்கும் விபரந்தெரியாதவர்களுக்கும் சுகயோகங்களும் உலகத்திலுள்ளவர்களுக்கு சுகமாக இதனை தெரிவித்தோம் பெண்ணே எ-று. 125

அந்தொருமொழியைக்கொண்டு வகஸ்தியர் தமிழாற்செய்து
விந்தியபருவதத்து மேலிடங்கீழ்தெற்கோர்க்கு
எந்தொருவருமேகாண வியம்பினவசனம் பற்றி
இந்தொருகுறியைச்சொல்ல விடையூறுவருவதில்லை

(இ:ள்) அந்த வாக்கியங்களை அகஸ்திய முனிவர் தமிழில் செய்து விந்தியமலை பர்வதத்தின் மேற்கு கிழக்குதெற்கு தேசத்தினரும் கவனிப்பதற்காக சொன்ன வாக்கியத்தைப்பற்றி இதனை வெளிப்படையாய்ச் சொன்னேர் இதற்கு யாதொரு இடையூரும் வருவதில்லையென்று எ று

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்ததேமுதலாய்க்கொண்டு
அனைத்திவர்விரையமட்டி லவரவரிருப்பதரிந்து
இனித்திருந்தவரைக்கண்டு விடர்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுங்கனுரு மியம்பியசனந்தப்பா

(இ-ள்) ஜெனன காலத்தில் கிரக கூட்டஞ் சேர்ந்திருப்பதையே முதலாக கவனித்து இலக்கினத்திலிருந்து விரயஸ்கானம் வரையில் அந்தந்த கிரகமிருப்பதை கவனித்து இந்த கிரகங்களிருப்பதை கவனித்து சொல்லும்போது சுக்கிரபகவான் சொன்ன விதமாகவே நடக்கும் மேற்சொன்ன வாக்கியம் தப்பாது எ று

சந்திரனிருந்தவீட்டான் சுபமதுாயரவஞ்சேர
மந்திரியுதயோனந்த மனைவயன்கூடிநிற்க
இந்திருவோர்க்குங்கோண கேந்த்ரமாய்லாபமாக்கச்
சந்திரனுதைமாகிற் சத்தியமரசேயாளவன்

[இ-ள்] இலக்கினுதிபதிக்கு நான்கு கேந்திரத்திலும்கிரகங்களிருக்க மற்ற கிரகங்கள் ஆக்ஷி உச்ச நட்பாக இருந்தால் ஜாதகனுக்கு இராஜ யோகமாகும்படியான தனதான்ய சம்பத்துடனே உலகிலிருப்பவர்கட்கெல்லாம் மேன்மை பொருந்தியவனுயிருப்பதற்காகும் எ று 128

அரசனேரவனிற்க வதற்க்கினியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினிநிற்கச் சனிமேயைந்தாருகிற்
சிரசின்மேற்கிரீடனுகச் செகமிளதாதிவல்லன்
நரகெஜதும்கரகோடி றடக்குமேசிவிகையோகம்

[இ ள்] சந்திரனிருந்த ராசிக்கு ஏழாமிடத்தில் நான்கு கிரகங்களுமிருக்க மற்றவர்கள் ஓருபக்கம் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு குறையில்லாத இராஜயோகத்தை விசேஷமாக கொடுப்பார்கள் பெண்ணே எ று 129

செனித்தவன் சுங்கன்கூடிச் சேர்ந்துனின்ரிடத்திற்பத்தில்
இனிக்குருசோமன்வீட்டா னிருவருங்கூடிநிற்கத்
தனித்தரவத்துநாலிற் றனியனுய்ச்சோமனிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வார்கோடி

[இ ள்] சந்திரனிருந்த இராசிநாதனிருந்த ஸ்தானத்திற்கு ஏழாமிடத்தில் குரு இருக்க அதற்கு நாலில் இராகு நிற்க அதன் பக்கத்தில் எந்த கிரகமிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு இராஜயோகமாயிருக்கும் எ று 130

குறிந்தவனரசன்கூடக் குருமதியிடத்தான்சுங்கன்
மருந்துமீரைந்திநிற்க மனையவனுதையமாகச்
செனித்தவனரசன்வீட்டான் சேர்ந்தரவற்துநாலில்
எதிர்த்தவர்னின்ருராகி வீரேழுபுவனமாள்வன்.

(இ ள்) இலக்கினத்திற்கு சந்திரனின் ஸ்தான்த்திற்கு ஏழாமிடத்திலிருந்தாலும் இரண்டு பத்கத்திலும் கிரகங்கலிருக்கப்பிறந்தஜாதகனுக்கு பாதாள யோகமுண்டாகும் அன்றியும் மேற்குறிப்பித்த கிரகங்களை எந்த கிரகங்களும் பாராமலிருந்தால் உலகாதிபனுகிய ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 131

பரித்திடஞ்சுங்கநிற்கப் பதியவன்மனையும்விட்டான்
இனித்துயர்குருவுங்கூட விவர்பத்தினின்ருராகிற்
குறித்துயர்சதிரஞ்சோம னெருவர்கூடாமனின்ருற்
செனித்தநாலாகத்தேச முழுதுமோர்குடைக்கீழாள்வன்.

(இ ள்) சந்திரனும் குருவும் ஆக்ஷி உச்சமாயிருக்க அவருக்கு ஏழாமிடத்தில் இரணடுபக்கத்திலும் மற்ற கிரகங்களிருந்தால் எங்குமில்லாத யோகபாக்கியம் ஜாதகனுக்குக் கொடுப்பார் பெண்ணே சகலதேசத்தையும் ஆளுந்தன்மையான சமர்த்தனுயிருப்பதற்காகும் எ று 132

மதியாட்சியாகிநிற்க மனைக்குநாள்சுங்கன்பாம்பும்
பதியுதித்தனின்மந்திரி பதியறனவர்க்கேநாலாய்
விதியுமேயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
குதிகொளும்பரிமாவேறுங்கொடிமன்னர்புடையேசூழ்வர்.

(இள்) இராகுடனே ஒரு கிரகம் சேர்ந்திருக்க அவர்களுக்குயிரண்டு பக்கத்திலும் மற்றகிரகங்களிருந்தால் மகா சமர்த்தாக சகல தேசத்திலும் சமர்னென புகழ்ந்துறைக்கும் இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 133

உதையாதிபதியுமாட்சி யொருமையாய்நாலைந்தேனும்
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பத்தோனுட்சி யிருந்திடகூட்டமாக
மிதமிலாச்சிவிகைவாசன் முன்னிற்கச்செங்கோலாள்வன்.

[இ ள்] குரு இருக்கும் ஸ்தானத்திற்கு ஏழாமிடத்திலும் புதனும் நிற்க மற்ற கிரகங்கன் யிருபுரமுமிருக்க. அந்த ஜாதகன் சகலருக்கும் உத்தமனுயிருந்து சகல தேசத்தரசரும் புகழும்படியான இராஜயோகத்தைஅனுபவிப்பதற்காகும் எ று 134

குறியுண்டவிடத்திற்புத்தி கூடவேசீங்கனுரும்
அறிவுண்டசோமன்மந்திரி யவருமேலாபமாகிற்

பறியுண்டவிடத்தான்பாம்பும் பத்தினின்மதிவீட்டானும்
செறிவுண்டுநின்ருராகிற் செகமெலாமாள்வன்மாதே

(இ ள்) சுக்கிரனிருந்த ஸ்தானுதிபதி புதனுக்கேழாமிடத்திலிருக்க இவர்க்கு மற்ற கிரகங்கள் இருபுறமுமிருப்பாராகில் ஆனைசேனை பரிவாரங்களுடனே சக்ரேஸ்வரனுக இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ று

அரவுநின்றிடத்துக்கைந்தி லமர்ந்திடமந்தனும்
உரமதாயரவவீட்டா னெளிமதசுங்கனுர்க்கும்
பரவுறும்வேதனுற்கும் பத்தினினின்ருல்யோகம்
துரகயபதாதிசேனை திரளணியுண்டாய்வாழ்வன்.

[இ ள்] குருவுடனே இராகு சேர்ந்திருக்கும்ஸ்தானத்திற்கு நான்கு ஏழு, எட்டாமிடங்களில் இரண்டாமிடத்ததிபதி உச்சமாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு ஆனை குதிரை, சேனைகளுடனே அரசாளும் இராஜயோகமுண்டாகும் பெண்ணே எ று 136

அரவமுமுறையோர்கூட வலதுகேந்திரமாய்நிற்கப்
புரமாதாயிருந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே.

[இ ள்] சந்திரனின்ற ஸ்தானத்திற்கு நான்கு ஏழு எட்டாமிடத்தில் மற்ற கிரகங்களிருந்தால், அந்த ஜாதகனுக்கு யோகமுண்டு தனதான் சம்பத்தும் ஆனை குதிரை முதலான பிரபுத்தன்மையான யோகமுண்டு புதனுக்கும் இவ்விதமாயிருந்தால் இராஜயோகமுண்டு எ று 137

மறைபோர்கேந்திரகோணத்தார் மதியினிடத்தானுதித்தோனும்
குறையொன்றில்லாச்சுப்படினுங்கொடுக்கும் யோகம்பாம்பாகும்
அறையுற்றிருக்கும்பாம்பினுக்கு வளர்க்கேந்திரங்கோணுமாகில்
இறையோத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகைமாவுடனே.

[இ ள்] இலக்கினுதிபதி நாலு. ஏழு, எட்டாமிடத்தில் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு தன தான்ய சம்பத்துடன் இராஜயோகத்தையனுபவிப்பானென்று சொன்ன நீதிவாக்கியம் தவருதென்றுணர்வீர் எ று. 138

முடவனுர்க்கீராறெட்டில் முனிபிறைபுதனிருக்க
விடையிருந்தவ்விடத்துக் கதிர்சுன்சேயாறெட்டாகிற்
குடையுடன்செங்கோலுண்டு கொத்தளக்கரிமாநேகம்
புடைகண்சூழ்வரென்று புண்ணியவியாழஞ்சொன்னுர்.

[இ ள்] இராகு விருந்த ஸ்தானத்திற்கு ஐந்தாமிடத்தில் 5 கிரகங்கள் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் மகாசமர்த்துடன் அரசுபுரியுங் சர்மாந்திற் கிணங்க இராஜயோகத்தை யனுபவிப்பதற்குகாகும் எ று

உரைத்ததுவியாழங்கொஞ்சந் திட்டமுமநேகமுண்டு
திரத்திருலறியவேண்டிச் செகமெலாமுறைக்குநீதி
உரைத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்ல மந்திரி
விரைத்ததுவிளையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம்.

(இ-ள்) நான்கு கிரகங்கள் சுபகிரகங்களுடன் சேர்ந்திருக்க மற்ற கிரகங்கள் இவர்கட்கு நான்காமிடத்திலிருந்தால் அருமையான கடல் சூழ்ந்த உலகத்தை ஆளும் படியான பிரபுத்தன்மை பொருந்த இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று. 140

மகமேருகிரியில்வாழு மலரவன் பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுபமதுதெரியாதார்க்கும்
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ளபேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே.

[இ ள்) ஒரு ஸ்தானத்தில் மூன்று கிரகங்களும் நான்காமிடத்தில் இரண்டாமிடத்ததிபதியுமிருக்க அவர்கு நான்காமிடத்தில் சுபகிரகங்கள் மூன்று பேரிருந்தால் சகல தேசத்தினரும்-புகழுந்தன்மையான போக தேவேந்திரனைப்போல இராஜயோகத்தை யனுபவிக்கும்படியாயிருக்கும் பெண்ணே எ று 141

அந்தொருமொழியைக்கொண்டு வகஸ்தியர் தமிழாற்செய்து
விந்தியபருவதத்து மேலிடங்கீழ்தெற்கோர்க்கு
எந்தொருவருமேகாண வியம்பினவசனம்பற்றி
இந்தொருதுறியைச்சொல்ல விடையூறுவருவதில்லை.

[இ-ள்] ஒவ்வொரு கிரகமாய் நான்கு நான்கான கேந்திரங்களிலிருந்தால் சீரான பதவி பெற்று செல்வம் பொருந்தியவனுய் ஜெகசக்ரவர்த்தியாயிருக்கும் யோகசாலியா யிருப்பதற்காகும் இரண்டிரண்டு கிரகங்கள் மேற்சொன்ன ஸ்தானங்களிலிருந்தால்உலகத்தார்புகழும்படியானசெல்வமும் பாக்கியசம்பத்தும் பொருந்திய இராஜயோகமாயிருக்கும் எ-று 42

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்ததேமுதலாய்க்கொண்டு
அணைத்திவர்விரையமட்டி லவரவரிருப்பறிந்து
இனத்திருந்தவரைக்கண்டு விடர்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுங்கனுரு மியம்பியவசனந்தப்பா.

[இ-ள்) ஜனன லக்கினத்தில் ஆறுகிரகங்கள் கூடியிருக்க மற்ற கிரகங்கள் அதற்குமேலிருந்தால் குறைவில்லாதசூரியன் பிரகாசிக்கும் தேசமெல்லாம் அரசாளும்படியான செல்வமும் பொருந்தியவனுயிருப்பதற்காகும் எ று 143

உதயாதியதர்க்குமேருக் கொருபக்கநான்குபேரும்
சிதையாமல்மற்றோர்நான்கு பேருமோர்பக்கமாக
இதமாகவிருந்தாராகிலிவனுக்கேராஜயோகம்
மிதமிலாதிருப்பன்மேலாய் மேதினியுள்ளோர்க்கெல்லாம்.

(இ-ள்] குருவிருந்த ஸ்தானத்திற்கு வலபுரமாக சுக்கிரன் சந்திரனிருந்த ஸ்தானாதிபதிபரும் இலக்கினபதியும் சேர்ந்து இரண்டு பக்கத்திலுமிருந்தால் தன தான்ய சம்பத்துடன் முரசு முழங்கும் இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ று 144

பிறைநின்றவிடத்துக்கேழுக் கொருபக்கநாலுபேரும்
நிறையன்றிநாலுபேர்மற் றொருபக்கநின்றாராகிக்
குறைவின்றிராஜயோகங் கொடுப்பரேமிதமில்லாமல்
அறையில்லைநிஜமேயுண்டா மம்புலிக்கணையமாதே.

(இ.ள்) பஞ்சமஸ்தானாதிபதிக்கும் குருவுக்கும் மேற்குறிப்பித்த அடைவாயிருந்தால் விசேஷமான இராஜயோகமும் மிதமில்லா தசிவிகையும் உண்டாகும் பஞ்சமஸ்தானாதிபதிக்கு குரு ஏழிலிருந்து இவ்விதம் பொருந்தியிருந்தால் விஷமுண்ட கண்டனைப்போல வையகமெலாம் ஆளும் இராஜயோகமாய்யிருக்கும் எறு 145

சந்திரனிருந்தவீட்டா னிருந்தவரதற்கேழ்மந்திரி
வந்தொருநாலிற்பாம்பு வலமிடமற்றோர்நிற்க
இந்திரப்பதிபோல்வாழ்வ னிவனுக்கேராஜயோகம்
கொந்தலர்குழிலினாளே குவலையமெங்குமாள்வன்.

(இ-ள்) அஞ்சாமிடத்தானுக்கு குரு நான்காமிடத்திலிருந்து மேற்குறிப்பித்த விதமாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு மிதமில்லாத இராஜயோகத்தைதரும் மூன்று. இரண்டு, ஐந்தாமிடத்திலுமிருந்தால் செழுமைதங்கி ஜடையை யுடைய சிவபெருமானைப்போல ஜெகமெலாம் அரசு புரியும் இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 146

உதித்தவனிருப்பிடத்துக் கோர்மதியிடத்தானேழாய்க்
கதித்தவர்நின்றிடத்துக் கிருபக்கமற்றோராகப்
பதித்தவர்பாங்காய்நின்றால் பாராளயோகமுண்டு
மதித்தொருவரையும்பாரா ராயினுஞ்செகமேயாள்வன்.

(இ-ள்) இராகுடனே குரு சேர்ந்திருக்க அவர்கட்கு இந்த அடைவாயிருந்தால் விசேஷமான சுபபலனும், குறையில்லாத இராஜயோகத்தை யனுபவிப்பதுடன் ஆனை, சேனை குதிரை முதலான விசேஷத்தை தான்ய சம்பத்தும் பொருந்திய இராஜயோகமாயிருக்கும் எ று

சுங்கனுராகின்மந்திரி யாகினுஞ்சுபமாய்நிற்க
அங்கவரிடத்துக்கேழுக் கிருபக்கமற்றோராகில்
எங்க்ணுமில்லையோக மிவனுக்கேகொடுப்பர்கண்டாய்
செங்கரும்பனையமாதே செகமெலாமாளவல்லன்.

(இ-ள்) பஞ்சமஸ்தானாதிபதி குரு, சந்திரன், இராசிநாதனுககும் மேலான இராகும் இந்த அடைவாகயிருந்தால் ஆனை சேனை பரிவாரங்களுடன் இராஜயோகமுண்டாகுமென்று சுக்கிரன் சொன்னநீதி சரியாயிருக்கும் எ று 148

பாம்புடனொருவன்சேர விருபுரமற்றோர்நிற்க
வீம்புடனுலகமெல்லாம் விண்ணதிராளும்யோகம்
சோம்பலில்கெஜங்கள்கோடி துரதகங்கோடிசூழும்
காம்பிளமுலையினாளே கண்டிடுமிதுதப்பாதே.

(இ-ள்] குருவும் இலக்கினாதிபதியும் சுக்கிரனும் சந்திரனுமிருந்த ஸ்தானாதிபதிகள் நான்கு இரண்டு மும்மூன்று பேருமாய் கேந்திர கோணஸ்தானத்தில் சேர்ந்துப் பார்வை பெற்றுமிருந்தால் நரபதியைப்போல ஆனை சேனை குதிரையுடன் நாடாளும் அரசனை போல இராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ று 149

அன்புள்ளவரசனிற்க வம்மனைக்கேழிற்புந்தி
நின்றிடமற்றோரெண்டு புறமதாய்நிற்கத்தானும்
பண்புளோனாகிராஜர் பரிவுறவநேகங்கோடி
நன்றுளமன்னனாகி நாடெலாமரசேயாள்வன்.

(இ-ள்) பனிரெண்டாமிடத்தானுடனே இராகு சேர்ந்திருக்க மற்ற கிரகங்கலிருக்கும் அந்தஸ்தானத்திற்கு ஒவ்வொருவராய் இதன் கிரகங்கள் நின்றால் பலவிதசமர்ந்தில் செல்வமும் ஆனை சேனைகளும் பொருந்திய இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 150

சுக்கிரனிருந்தவீட்டான் சுந்திரமகனுக்கேழில்
நிற்கவீங்கிவற்குமற்றோ ரிருபுரநின்றாராகில்
மெய்குறவாகிராஜ யோகமேயுளதாமேக
சக்கிரமாகவாழ்வன் சரசசங்கீதபோகி

(இ-ள்) எந்த ஸ்தனாமானாலும் அந்தஸ்தானத்தில் இரண்டிரண்டு பேராய் வரிசையாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு யோகமாயிருக்கும் இந்த அடைவாய் நின்ற கிரகங்கள் இவரிவர்க்கு ஐந்து இரண்டு,ஆருமிடமாயிருந்தால் மகாலஷ்மிக்கொப்பான மாதே இந்த ஜாதகன் உலகப்பிரசித்திபெற்ற இராஜயோகமா யிருப்பதற்காகும் எ று 151

அரசனேடரவனிற்கவம்மனைலேமெட்டிற்
சரசமாயிரண்டுவீட்டிற் சரியதாய்நின்ருராகில்
பரிசையோடநேகங்கோடி பரியுடன்கரியுமுண்டு
அரசியல்மாதேகேளா யரசாளயோகமுண்டே.

(இ-ள்) ஐந்து கிரகங்கள் ஒரே ஸ்தானத்தில கூட்டாயிருந்த ஸ்தானத்தில் பகையில்லாமல் ஐந்து ஆருமிடத்திலிருந்தால் அந்தஜாதகனுக்கு அமிதம்போல் நல்ல பலன் கொடுத்து தனவந்தனயிருக்கும்படி செய்வார் எ று 152

மதனின்றவிடத்துநான்கே ழெட்டினின்மற்ருேர்நிற்க
விதம்போறதில்லையோகம் வேண்டியசிவிகையுண்டு
சிதனுமந்தடைவாகுகிற் செல்வமுங்கரிமாவுண்டு
புதனுக்கிப்படியேயாகுற் பொற்சிங்காதனந்தானுண்டே.

(இ-ள்) ஐந்தாயிடத்தானும் நான்காமிடத்தானும் சேர்ந்தும் அவர்க்கு பகையில்லா அந்தஸ்தானத்திலிருப்போர் ஐந்தாருகி நின்ருல் ஜாதகனுக்கு பகையில்லாமல் அமிர்தம்போல சுக பலன்கள கொடுத்து இராஜயோகத்தை தருவார் பெண்ணே எ று 153

இன்னம் ஒரு அடைவு

செனித்தவற்கேழ்நாலெட்டிற் சேர்ந்துமுன்னிடத்தினிற்க
தனித்தொருநாளுநில்லான் றனக்கோடியமகோணத்தின்
தொனித்தவனரசேயாள் வன்ருேன்றியமுதலாய்கொண்டு
முனித்தவர்சொன்னநீதி மொழிதப்பாதிருக்குமாதே.

[இள்] கேந்திரகோணத்தில் சுபகிரகங்களிருந்தால் வியாதியனுகாமலிருக்குந் தன்மையான நன்மையும், கிரகதோஷமும் நேரிடாமல் இராகு உச்சம் பெற்றிருந்தால் உலகோர் புகழும் சமர்த்தனய் இராஜயோகத்தை யனுபவிட்பதற்காகும் எ று 154

பணைத்தொருவிடத்திலைந்து பேருமேகூடிநிற்க
இணைத்திருவில்லாமற்ருே ரெங்கணுமொருவராகில்
அணைத்தொருபரிதிசூழ்ந்த செகமெலாமாளும்யோகம்
கணக்கொருமிதமில்லாமற் கண்டிடுங்கரியநேகம்.

[இ ள்] கிரகங்கள் கூட்டமாய் கேந்திரகோணஸ்தானங்களிலிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் குறையாத யோகமும் பொருந்திய கீர்த்திமிகுந்த இராஜயோகத்தை யனுபவிப்பதாயிருக்கும் எ று 155

இருந்திடநாலுபேரு மினியவர்கூடநிற்கப்
பொருந்தியமற்றபேர்க ளிவர்குநாலாகிநின்ருல்

அருங்கடல்சூழுகின்ற வவனியேயாளவல்லன்
நெருங்கிடவநேகங்கோடி நிற்கவேயரசேயாள்வன்.

(இ ள்] ஐந்தாமிடத்தில் ஐந்து கிரகங்களாக குருவுக்கு இலாபஸ்தானத்திலிருக்க குருவும் சூரியனுமிருந்தால் இராஜயோகமுண்டாகுமென்று சொல்வாய் பெண்ணே எ று 156

ஒருவிடமுன்றுபேரு மொருநான்கிலோரீரோரும்
இருந்திடவதற்குநாலி லினியவர்மூவர்நின்ருற்
பொருந்தியகுடைக்கீழாள்வன் போகதேவேந்திரனுகிக்
குருந்தடியிருந்தமாதே கொடுப்பதிப்படியாம்யோகம்.

[இ ள்) குருவும் சுக்கிரனும் சொன்ன நீதி சந்தேகமில்லாமல் ஜாதகர்களுக்கு இராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் இந்த விதமாய் பார்வை செலுத்திய கிரகங்களினுல் புத்திவிசேஷித்து இராஜயோகங்களையும் உண்டாக்கும் எ று 157

ஒரொருகிரகமாகியொருநான் கினின்ருராகிற்
சீர்பதம்பெற்றுசெல்வஞ் செகச்சக்கரவர்த்தியாவன்
ஈரிருகிரகமாக விந்தடைவாகிநின்ருர்
பார்பெருஞ்செல்வமுண்டு பாக்கியராஜயோகம்.

[இ-ள்] குருவும், சுக்கிரனுமிருந்த இராசிநாதரும் இலக்கினதிபதிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் சதாகாலமும் சுகசவுக்கி யோகமும் கொடுப்பார்கள் இவர்களல்லாதமற்றகிரகங்களில்விதந்தரமாட்டார்கள் எ று 158

ஆறுபேர்கூடிநிற்க வதற்குமேன்மற்ருேர்நிற்க
மீறுமட்டொன்றில்லாமல் வெயிலொளிதேசமெல்லாம்
பேருகொண்டுலகமெங்கும் பேருள்ளராசனுகி
நூறுமட்டுலகையாண்டு நுண்யனுயிருப்பன்மாதே.

[இ ள்] சனி சூரியன் செவ்வாயும் சந்திரனுக்கு எட்டாமிடத்தான் இந்த கிரகங்கள் ஜாதகனுக்கு பாக்கியங் கொடுக்கறென்பதாம் எ று

அரசிடமாகநின்றவவ்விடம் வலத்தினல்ல
உரமுடன்சுங்கன்சோம னெளிமதிநின்றவீட்டான்
திரமுடனுதயத்தானுஞ் சேர்ந்திருபுறமாய்நின்ருல்
முரசி-வநேகங்கோடி முன்னிற்கும்ராஜயோகம்.

[இ ள்) சனி சூரியன் அற்காரகன் சந்திரநின்ற ராசிக்கு எட்டாமி ராசிக்குடையோன் ராகு கேது ஜெனனராசிக்கு எட்டாமிராகிக்குடையோன் ஆகிய சஷ்டிக்கிறகங்களும் கொடியவரா யாவர் அழகு பொருத்திய பெண்ணே அவர்கள் செய்யும் பலனென்னவெனில் ஜெனித்தவனை மரணமடையச் செய்யவும் பாக்கியத்தை விறயப செய்யவுமே அதிகாரி யாவார்களென்று கூறுவாயாக எ று 160

அஞ்சனவனரசன்சேர வவர்க்குமிந்தடைவேயாகில்
மிஞ்சிடும்ராஜயோக மிதமிலாச்சிவிகையுண்டு
பஞ்சவர்க்கரசனேழிற் பற்றியிந்தடைவேயானுல்
நஞ்சுதின்றவரைப்போல் நாடெலாமாள்வன் மாதே.

[இ ள்) கூட்டமா யிருந்த கிரகங்கள் முன்பின்னுக சேர்ந்து ஒருவராய்த் தனித்திருப்பார்களானுல் அந்த ஜாதகனும் நாடு நகரத்திலும் விலகி சகலருக்கும் பகையாகி காண்போரிகழுந் தன்மையாவான் எ று

அஞ்சவற்கரசனுலா யவர்க்குமிந்தடைவேயாகில்
வஞ்சியேராஜயோகம் வருவதுநிஜமாயுண்டு
விஞ்சியேமூவீரோரு மிதைத்தேழுமைந்தாய்நின்ருற்
செஞ்சடைச்சிவனேயாகிச் செகமெலாமரசேயாள்வன்.

[இ ள்) துவாதசலக்கினத்திற்குள்ளாக நான்கு கிரகங்கள் சேர்ந்திருந்து ஒருவருக்கொருவர் எதிரெதியாக இரண்டு கிரகங்ளிருந்தால், பால்பாக்கியம் செல்வந்தன தான்யசம்பத்திருந்தாலும் பாக்கியம் சேராது எ று 162

அரவுடனரசனிற்கவவர்க்குமிந்தடைவேயாகிற்
குறைவில்லாராஜயோகங் கொடுப்பரேமித்மில்லாமல்
திரளுடன்யானைக்கூட்டங் தேடருஞ்சிவிகையாவும்
அரசுடனநேகங்கோடி யவனுக்கேயுண்டுமாதே.

[இ ள்] ஐந்தாமிடத்திலும், இரண்டாமிடத்திலும் பாபரிருக்க அவர் குருவுக்கு எட்டாமிடத்தில் சந்திரனிருக்க அந்த ஜாதகனுக்கு பலவித துன்பத்தால் யோகந்தவறிபோகும் எ று 163

அஞ்சனவரசன்சோம னந்தணன்மதிவீட்டானும்
மிஞ்சிபேயாவம்வேருேன் மிகைத்துமிந்தடைவேயாகிற்
சொஞ்சியேராஜயோகங் கொடுப்பரிப்படியேகண்டாய்
வஞ்சியேயிந்தயோகம் வருமுயர்சுங்கனீதி.

(இ ள்) ஐந்தாமிடத்திற்கு நாளில சனியும் குருவுக்கு ஏழில் செவ்வாயும் இராகுக்கு நாளில் சூரியனுமிருக்க சந்திரன் பகை நீசஸ்தானத்திலிருக்க ஐந்தாமிடத்தானுடனே சூரியனுமிருந்தால் அந்தஜாதகனுடைய செல்வமெம்லாம் அக்கினியிலகப்பட்ட பஞ்சுபோல பஸ்பமாய்ப் பறந்துபோகும் எ று 164

அரசன்ருனிலக்கினத்தா னல்வெள்ளிமதியும்வீட்டான்
முரசதிரிடத்தான்ரெண்டு மும்மூன்றுபேருநல்லோர்
பரவிதானிருக்கிற்கேந்திர கோணமாய்க்கூடிப்பார்க்கில்
நரபதியானைமாவு நாடாளயோகமுண்டே,

(இ ள்) சுக்கிரனும் சுபகிரகங்களும் சுற்றிலும் பகை கிரகங்களுமிருக்க ஐந்தாமிடத்திலிருந்த ஸ்தானத்திற்கு ஏழாமிடத்தில் சனியுமிருக்க குருவுக்கு ஏழில் சனிசெவ்வாயிருக்க அந்த ஜாதகனுக்குயோகமில்லாதிருப்பான் பெண்ணே எ று 165

பனிரண்டுவிடத்தினல்லோ ரிடமதிற் பணைத்துக்கூடி
அணைவுண்டுமற்ருேர்நிற்கு மம்மனைக்கொருவராக
இனிகண்டுகூடிரெண்டு பேருமாய்நின்ருகிற்
குதிகொண்டசெல்வமுண்டு கொத்தளந்தானையுண்டே.

(இ ள்] ஐந்தாமிடத்திலிருந்தால் விருந்த விரயஸ்தானத்தில் குருவிருந்தால் இலக்கினுதிபதியும் தனபாக்கியஸ்தானுதிபதிகள் பனிரெண்டிலிருந்தால் அந்த ஜாதகனுக்கு விசேஷ யோகமில்லை எ று

எந்தவீடாகினுலு மிடமதிலிரண்டுபேராய்
அந்தமாய்நின்ருராகி வலனுக்கேயோகமுண்டு
இந்தடைவாகினின்ருே ரிவரிவற்கைந்தீராகிற்
செந்திருமாதேகேனாய் ஜெகத்துக்கேமன்னனுவன்.

[இ ள்) ஆருமிடத்ததிபதியும் தேய்பிறை சந்திரன் ஆக்ஷி பெற்றிருக்து ஷ ஸ்தானத்திலிருக்க மற்ற கிரகங்கள் எட்டுக்கு எட்டாய்அவர்களைச் சேராமலிருக்க உலகத்திரிடமும் துஷ்டனு இருப்பதற்காகும் எ று

கூட்டமாயைந்துபேருங் கூடியவ்விடத்தின்மற்ருேர்
தேட்டமாயொருவராகத் திரண்டிரண்டாகிநிற்க
வாட்டமில்லாமல் மூன்ருே ணுகினும்வருமேயோகம்
சேட்டமாயுலகையாண்டு செங்கோலுக்கதிபனுவன்

(இ ள்) இராகுஞ் சனியும் சேர்ந்தும், குருவுஞ்சூரியனும் கூடி சுக்கிரனும் செவ்வாயும் ஒருவருக்கொருவரெட்டாமிடத்திலிருக்க தேய்பிறை

சந்திரனும் சேர்ந்து நின்றால் அந்த ஜாதகன் எவ்வளவு ஆஸ்தியுடையவனாயிருந்தாலும் எல்லாம் செலவாகி ஏழையாயிருப்பான் பெண்ணே என்று 168

அஞ்சுநால்பேருங்கூட வற்குமேபகையுமில்லைக்
கொஞ்சியேயைந்தைந்தாகி லிவற்கொரு வகையுமில்ப
வஞ்சியேயமிர்தம்போலப் பலனது கொடுப்பர்க்கண்டாய்
வஞ்சியின் கொடியனாளே மகாராஜயோகமென்னே

(இ ள்) சனியுடனே குருயிருக்க சந்திரனுடனே புதனுஞ்சேர சூரியனும் செவ்வாயும் சூரியடனிருக்க இந்த கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்கு ஜனன லக்கினம் ஆறு எட்டு ஆகயிருந்தால் சகல சம்பத்தும் பந்துமித்ரரையுமிழந்து தனியாக வறுமையாளனா இருப்பதற்காகும் என்று

அணியோட்டுங்கேந்திர கோண மார்த்தவரிருந்தாராகிற்
பிணியோட்டுங் கிரகதோஷம் பிடிப்பதுமில்லை கண்டாய்
மணியோட்டுமரவம்மீறி மண்டலாதிபமேசெய்யும்
எணியோட்ங்கிரகதோஷ மில்லையென்றுறைப்பாய்மாதே

(இ ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்து சந்திரனுக்கு ஏழாமிடத்தில் நிற்க சூரியனும் இராகும் இவர்களுக்கு நால மிடத்திலிருக்க சுக்கிரனும் குருவும் சந்திரனுக்கு ஆறு எட்டாமிடத்தில் இருந்தால் இந்த ஜாதகனுக்கு எந்த காலத்திலும் யோகமில்லை

நாட்டமாயோகஞ்செல்வ நரகெஜவசுவயோகம்
ஓட்டமமாய்வருதற்கிங் குபமதுகேளாய்மாதே
கூட்டமுமணியுங்கேந்திர கோண மாய்நின்றாராகிற்
சேட்கிமேயுடையோனாகிச் செகமெலாமாள்வன்றானே

(இ-ள்) சகல கிரகங்களும் கோண திரிகோண கேந்திரத்தினமைந்திருக்கும்படியான இந்த அடைவனால் அந்த ஜாதகன் பாக்கியவானல்ல அன்றியும் ஒன்றிரண்டிருந்தாலும் யோகமில்லை என்று மூன்று இரண்டாமிடத்திலிருந்தால் ஜீவனமே கிடையாது என்று 171

அஞ்சுடிமண்சுபேரா யரசுக்கில்பமாக
மிஞ்சினோர்நாலினிற்க வரசுடனரனின்றால்
வஞ்சியே ராஜயோகம் வருவதுநிஜமேகண்டாய்
தஞ்சபாயவேணசெல்வந் தழத்துடனிருப்பன்மாதே

(இ-ள்) ஒரு ஸ்தானததில் ஒரு கிரகமும் மற்றொருஸ்தானத்தில் இரண்டு கிரகமிருக்க பின்னால் ஒரு கிரகமிருக்க மூன்று கிரகங்களும் அருகிலிருக்க பின்னொரு கிரகமிருக்க அந்த ஜாதகனுக்கு யோகமே கிடையாது லிக்கிரன் மனிதவகுப்பினர் கவனிக்கும்படியாய் சொன்னார் என்று 172

அந்தனன்வேதமூர்த்தி யவ்வெள்ளிசொன்னநீதி
சந்தேகமில்லை யோகந் தப்பாதுசெனித்தோற்கெல்லாம்
இந்துணர்வாகப்பார்த்தோ ரியப்பியவசனந்தப்பா
புந்தியற்றிருப்பர்மாதே பூமியிலநேககாலம்

(இ-ள்) சந்திரனிருந்த இராசிநாதன் சதுர்த்தகேந்திர கோணத்திலிருந்தாலும் சேர்ந்தாலும் வலப்புறமும் இடப்புறமும் நாலாமிடம் ஐந்தாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகன் நூறுவயதுவரையிலும் இந்திரனைப்போல போகபாக்கிய மனுபவித்துக்கொண்டிருப்பதற்காகும் என்று 173

அந்தணன்மந்திரிசோமனவ னிருந்திடும்வீட்டானும்
உந்தொருவுதையத்தானு மோங்கியேயரவவீட்டார்
இந்தொருநவத்தோர்நன்மை யிவர்சுபங்கொடுப்பர்மேலாய்
சுந்தரரிவரேயல்லாற் சொல்லவும்வேறேயில்லை.

(இ-ள்) நான்கு கிரகங்களுக்கு இடையூறிலாமலும் குறைவில்லாமலுமிருந்து சந்திரன் யீனராசியில் குருவுடனே நில்லாமல் இலக்கினத்திற்கு நாலாமிடத்தில் சந்திரன் உச்சமான அம்ஸ இராசியிருக்க செந்தூரமணிந்த புருவமுடையவளே மிகுதியான சிவிகையோகமுண்டு என்று 174

அவயோகம்

நீலனுமிரவிசேயு நிலை மதிக்கெட்டோன்பாம்பும்
மூலமாமுதையத்தெட்டோன் மூவிருவோரும்பொல்லார்
ஏலவார்குழலேகேளா யிவர்செய்யும்வாறேதென்னிற்
பாலனேயுதித்திட்டாற்போல்பாக்கியங்கொடுக்கமாட்டார்.

(இ ள்) ஜெனன லக்கினத்திற்கு வளர்பிறைச் சந்திரன் நட்பாயிருக்க இவருக்கு ஏழுக்கேழாய் தாண்டி நான்கு ஐந்தாமிடத்தில் குரு சுக்கிரனுக்கும் இது நிலையாயிருந்தால் அந்த ஜாதகனுக்குச் சிவிகை யோகமுண்டாகும் என்று 175

ஒருவிடநான்குமூன்று பேருமாய்கூடிநிற்க
அருகிடதப்பாலொன்று மிரண்டப்பாலாகிநின்றால்
திருகிடும்யோகந்தப்புஞ் செல்வமுநிலமைதப்பும்
குருவிடமானசுங்கன் கொஞ்சியமொழிதப்பாதே.

(இ-ள்) குருவும், சுக்கிரனும் இலக்கினத்திலிருக்க சந்திரனும் சேர்ந்து நிற்க. சூரியனுடனே சனியும் அவருடன் செவ்வாயும் இராகு மிருந்தால் இந்த ஜாதகனுக்கு வேண்டிய யானைகளுண்டாகுமாதே

கூட்டமாய்நின்றோர்முன்பின் கூடிரண்டொருவராக
நாட்டமாநின்ருராகி னகர்விடும்பதிபோந்தீது
ஆட்டமாய்ச்செல்வங்குன்றிப் போமிதுயோகந்தப்பும்
சேட்டமுஞ்செல்வமில்லைச் செகத்துக்கேகடினனுவன்.

(இ-ள்) இராகும்மற்றோர்களும் முன்போலக்குறியாயிருக்க ஐம்பத் தாறு தேசமும் புகழும் அகண்ட சாம்ராஜ்யயோகபோகமும் சகல ராஜக் களும் வணங்கும்படியான கௌரமும் பொருந்திய யோகவானுயிருப்பா னென்று சுக்கிரன் சொன்ன நீதியேயாகும் எ று

நாலொருகிரகங்கூட நடுமனைக்குள்ளோனுக
ஏல்பிரியாமல்ரெண்டு பேருமாயெதிர்வொன்ருகிற்
பால்பெருஞ்செல்வங்குன்றிப் பாக்கியயோகந்தப்பும்
மால்பெருங்கண்ணினுளே மயங்குவனவயோகத்தால்.

(இ-ள்) சுக்கிரனுடனே இராகும் மற்ற கிரகங்களும் சூழ்ந்திருக்கு மானல் இந்த ஜாதகனை எங்கிருக்கும் இராஜகூட்டங்களும் சேர்ந்து புகழும் தன்மையான சுபபோக்கியங்களை அனுபவிக்கும் படியான ராஜ யோகத்தை யனுபவிப்பதற்காகும் எ று 178

அஞ்சினிலிரண்டிற்ப்பாப ராஜனுக்கேழின்மந்தன்
மிஞ்சியேசுங்கனின்ற முன்மனைபின்னேபாபர்
கொஞ்சியேயரசனின்ற வதற்கிளமதியெட்டாகில்
வஞ்சியேசெல்வங்குன்றி வருத்தமாம்யோகந்தப்பும்.

(இ-ள்) ஜனன இலக்கினத்ததிபதி லாபஸ்தானத்திலும் சந்திரனி ருக்கும் ஸ்தானத்திற்கும் லாபஸ்தானமாயிருக்க இராகும் குருவும் சுக்கிர னுமிருந்த ஸ்தானுதிபதிகள் இவருக்கு இலாபஸ்ததன த்திலிருக்காவிட் டாலும் தனியாயிருந்தால் நூறு வயதுவரையிலும் தேவலோகம் புகழும் பிரபுவாயிருப்பதற்காகும் எ று 179

அஞ்சுக்குநாலின்மைந்த னரசனுக்கேழிற்பூமன்
நஞ்சினுக்கிரவினாலி னன்மதியீனமாக
இன்சொர்க்கஞ்சாணைசூழ விரவியுநின்ருராகிற்
பஞ்சுக்குளங்கிபோலப் பறந்துடன்போமேசெல்வம்.

(இ ள்) எந்த கிரகத்தின் ஆக்ஷி வீட்டிற்கு லாபஸ்தானத்திலிருந் தால் காக்ஷிதரும் அருனுரைப்போல அதிக செல்வந்தராயிருப்பதற்காகும்

அந்த கிரகங்களுச்சம் பெற்றிருந்தால் குறையில்லாத அநேகவிதமான செல்வமும் சிவிகையோக முண்டாகும் எ று 180

சுங்கனுர்சுபமிருக்கச் சுற்றியேபகையோராக
அங்கையோரைந்தோனின்ற வம்மனைக்கேழின்மைந்தன்
சிங்கம்போலரசனின்ற சீர்மனைக்கேழிற்செவ்வாய்
பொங்கமாய்நின்ருராகிற் போய்விடும்செல்வமெல்லாம்.

(இ-ள்) இராகு நின்ற ஸ்தானத்திற்கு லாபஸ்தானத்தில் குரு சுக் கிரனும் பாபருக்கு மூன்றிலிருக்க புதன் இராகுக்கு ஏழிலிருந்கால் ஆனை சேனை குதிரைவாகன மமைந்த போய்விடும் செல்வமெல்லாம் எ று 181

அஞ்சவனின்றவீட்டுக் கவ்விரையத்தில்ராஜன்
கொஞ்சமாமதிவீட்டானுங் குறிகியேவிரையமாகத்
தஞ்சமேருதயத்தானும் தனபதிச்சீருராகில்
மிஞ்சவேயோகமில்லை மேலன்றிநிற்பன்மாதே.

(இ-ள்) வளர்பிறைச்சந்திரனுக்கு மற்ற கிரகங்கள் இலாபமாக அந்ததந்த கிரகங்கள் ஒருவருக்கொருவர் இலாபஸ்தானத்திலிருக்க அந்த ஜாதகனுக்கு சதாகாலமும் இராஜயோகமாயிருக்கும் எ று 182

ஆறுளோன்குறைந்தோனுட்சி யம்மனைக்கீருராக
வேறுபட்டவர்க்குமந்திரி விரையமாய்நிற்கமற்றோர்
கூறுகொண்டெட்டுக்கெட்டாக்கூடாமனின்ருராகில்
தூறுபட்டுலகமெல்லாந் துர்ச்சனயோகமாகும்.

(இ ள்) கிரகங்கள் கேந்திரத்திலமர்ந்து திரிகோணத்தில் பாபக்கிர கங்களிருந்தால் சுகமே கிடையாது. ஆனுல் ஆபரணமணிந்த இடை யையுடைய பெண்ணே அதிக செல்வந்தராயிருப்பர் எ று

அரவமுஞ்சனியுங்கூட வந்தணனிரவிசேர
உரமுடன்சுங்கன்செவ்வாயொருவருக்கொருவரெட்டாய்க்
குறையுறுமதியும்புந்தி கூடியேநிற்குமாகில்
முறையுடன்போமேசெல்வ மொய்குழன்மானேகேளாய்.

(இ ள்) சந்திரனிருந்த இராசிக்கு இருபுறமும் பாபக்கிரகங்கள் முன் பின்னுமிருந்தாலும் இராகுடன் எட்டாமிடத்திலிருந்தாலும் இந்திரபதி யைப் போன்றவனுலும் பாக்கியத்தை அனுபவிக்கமுடியாத கண்டந் தோன்றும் எ று 184

**சனியடனரசனிற்கச் சந்திரனுடனேபுந்தி
முனியுடன்பாம்புஞ்செவ்வாய்-முழுகதிர்கூடநிற்க
இனியிவர்நின்றிடத்துக் கிருப்பிடமாறெட்டாகில்
தனியனுய்நிற்பன்யோகந் தவிர்த்திடுந்தரித்திரயோகம்.**

[இ-ள்] உதயலக்கினம் அந்த அடைவாயிருக்கக் கண்ட மூண்டாகும் இலக்கினதிபதி சந்திரனுடைய ஸ்தானதிபதியாகில் எமகண்ட யோகமென்பதாம் முன்னோர்கள் சேகரித்து வைத்திருக்கும் பொருளெல்லாம் செலவாய்விடும் எ று

**மந்தனுஞ்செவ்வாய்கூடி மதிக்கேழில்வந்துநிற்கத்
தொந்தமாயிரவிபாம்பு தொடுத்துநாலிவர்க்கேயாக
அந்தமாய்வெள்ளிபொன்னு மம்புலிக்காரெட்டாகில்
எந்தனுளாகிலுந்தா னிவனுக்கேயோகமில்லே.**

[இ-ள்] சூரியனும், சனியும், இராகும், சேர்ந்திருக்க குரு, வெள்ளி புதனும் அவர்களைச் சேராமலும் பராமலும் ஆறு எட்டு என்னும் ஸ்தானங்களில் இருந்தால் அந்த ஜாதகனுக்கு யுத்தகளத்தில் லுற்றதைப் போல் பந்து மித்திரரில்லாமல் போய் விடும் எ று 186

**அணைத்திருகோணகேந்திர மமர்ந்துநாலேந்துகூட்டம்
பணைத்துமிந்தடைவேநின்றுர் பாக்கியவானேயல்ல
இணைத்திருவோன்றிரண்டு மிருந்திடில்யோகமில்லே
பிணைத்துமுன்றென்றிரண்டு மிருந்திடிற்பிழைப்பேயில்லே.**

(இ.ள்) சனியும் இராகும் சேர்ந்திருக்க இலக்கினஸ்தானத்திற்கு நட்பாக சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்க சுபக்கிரகங்கள் ஆருமிடத்திலாகிலும் அஷ்டமஸ்தானத்திலாகிலு மிருக்கும் போது ஜனனமான ஜாதகனுக்கு இருப்பதற்கு இடமில்லாமலும் புசிப்பதற்கு பாக்கியமில்லாமலும் யுத்தகளத்தைப்போல ஜாதகனுடைய குடும்பத்தார் அழிந்துபோவதுடன் ஜாதகனும் மரணமாவான் எ று 187

**ஒருவிடமொருவனுய்மற் றெருவிடமிருபேர்நிற்கத்
திருகில்பின்னெருவனுகத் திரும்பவே மூன்றுபேரும்
அருகில்பின்னெருவனுகி லவனுக்கேயோகமில்லே
மருவுகண்டுரைத்தார்சுங்கன் மானிடரறியவேண்டி.**

(இ-ள்) சந்திரனுடைய ஸ்தானமாகிய கடகத்தில் இராகு யிருக்கும்போது எந்த ஸ்தானமாகிலும் ஜனன லக்கினமாயிருந்தால் பலவித கொடுமை யுண்டாகும் வலபுரத்திலாகிலும், இட புரத்திலாகிலும் இருக்கும் கிரகங்களின் ஆக்ஷி உச்சமாயிருக்கும் நோக்கத்தை கண்டாலும் அந்த ஜாதகனுடைய பூர்வீக சொத்துகளெல்லால் செலவாகி ஜாதகனு மிறப்பதாகும் எ று 188

சிவிகையோகம்

**சந்திரவிலக்கினுதி சதிர்கோணமுதித்திட்டாலும்
வந்தெதிர்கூடினுலும் வலமிடத்திரிநாலேந்தாய்
கொந்தலர்குழலினுலே குலவியேநின்றுராகில்
இந்திரப்பதிபோல்வாழ்ந்திங் கிருப்பனேவபதுநூருப்.**

(இ ள்) குருவும் சுபகிரகங்களும் சேர்ந்திருக்க சனியும் அங்காரகன் புதன் சுக்கிரனும் கூடினுலும் செவ்வாயும் இராகுவும் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தாலும் ஜனனமான ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ று 189

**இந்திரநால்வருக்கு மிடர்குறையிருக்கலாகா
அந்தொருமதியுமீன மமரருமிருக்கலாகா
வந்தொருநான்கிற்சந்திரன் வளர்ந்துச்சவமிசையாகிற்
செந்துரநுதலினுளே மிகுதியாய்ச்சிவிகையுண்டே.**

[இ-ள்] ஆருமிடத்திலாகிலும் பனிரெண்டாமிடத்திலாகிலும் சனி சந்திரனுமிருக்க இரண்டாமிடத்திலாகிலும் ஆருக்காருமிடத்திலாகிலும் மூன்றுமிடத்திலாகிலும் மற்றகிரகங்களிருந்தால் ஜாதகன்மரணமாவான் எ று 190

**உதித்தலக்கினத்தான்வீற வுயர்மதியிடத்தானட்பாய்க்
கதித்தவரேழுக்கேழாய்க் கடந்துடனுலேந்தாகி
எதிர்த்துடன்குருசுங்கற்கு மிதுநிலையாகிநின்றுல்
விதித்திடமுண்டுபின்பு வேண்டியசிவிகையேறும்.**

[இ ள்] எட்டாமிடத்திற் கெட்டாமிடத்தில் சனி தனியாயிருக்கும் இராகு பகவான் சேர்ந்திருந்தால் அஷ்டமஸ்தானத்திற் கெட்டாமிடத்தில் குருவும் சூரியனும் புதனும் சேர்ந்திருப்பதுடன் எட்டாமிடத்திற் கஷ்டமஸ்தானத்தில் சந்திரன் செவ்வாய்சேர்ந்திருந்தால் நான்காமிடம் எட்டாமிடத்திலாகிலும் சுக்கிரனிருக்க ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ று 191

**அரசற்குஞ்சுங்கனுற்கு மதிகுறியாகிநிற்க
முரசொத்துமதியுங்கூடி முன்பவருடனேசேர
இரவியத்துடனேகாரி யிவருடன்சேய்ப்பார்ப்பின்றேல்
விரசமுற்றுடையமாதே வேண்டியகெசங்களுண்டே.**

[இ-ள்] சூரியனிருந்த இராசிக்கு எட்டாமிடத்திற்குடையவனுடைய ஸ்தானமே ஜனனலக்னமாயிருக்க குவுக்கு அஷ்டமஸ்தானத்தோனிருந்த ஸ்தானத்தில் சூரியனிருக்க சந்திரனுக்கு அஷ்டமாதிபதியுடன், ஜனன இலக்கினத்திற்கு அஸ்டமஸ்தானுதிபதியும் சந்திரனும் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ று 192

ஆயுரியோகம்

முன்ஞெத்துவரமற்ருேர் முன்போலக்குறியாய்நிற்க
அன்பதோடாறுதேச மகண்டசாம்ப்ராஜ்யயோகம்
கொன்ஞெத்தராஜராஜர் கூர்ந்துகைக்கூப்பினிற்பர்
மின்ஞெத்தவிடையினுளே மிகையோகஞ்சுங்கனீதி.

(இ ள்] இரண்டு கிரகங்கள் இலக்கினத்தில் சேர்ந்திருக்காமல் தனியாயிருக்க, அவர்க்கு இரண்டு கிரகங்களிருக்க ஆனுல் முன்ஞல் ஓரு கிரகமிருந்தால் நன்மையாகாது, அந்த ஜாதகன் விளையாடுவதற்கு முன்ஞலேயே குழந்தையிலேயே மரணமாகும் எ று

சுங்கனுேடரவமற்ருேற் சூழ்கின்றகுறிபோனிற்க
எங்கணுமரசர்கூட்ட மிவனேயேதொடர்ந்துனிற்பர்
செங்கருவான்போற்கோடி செகயோகபோகபாக்கியம்
அங்குறுமரசர்சூழ்வுற் றவற்கிவன்மூர்த்தியாவன்.

(இ-ள்) சந்திரனிருக்கும் ஸ்தானத்திற்கு முன்பும் பின்ஞலும் பாபக்கிரகங்களிருக்க ஏழாமிடத்திற்கு நான்காமிடத்தில் சனியிருக்க சுபகிரகங்களும் மற்ற கிரகங்களுக்கு ஆறு, எட்டு பனிரெண்டாமிடத்திலிருக்க அந்த ஜாதகனுடைய மாதுர்வம்ஸமும் குழந்தையும் மரணமாகும் எ று

உதித்திடமிடத்தோன்லாப மதியிடனதற்கிலாபம்
பதித்திடவரவம்பொன்னும் பருவெள்ளியிருந்தவீட்டார்
குதித்துடனிவற்கிலாபங் கூடாமற்றன்னியராகில்
விதித்துடவயதுநூறும் விண்ணுலகெங்குமாள்வன்.

(இ ள்) சந்திரனுக்கேழில் செவ்வாயும் நான்காமிடத்திலும் இரண்டாமிடத்திலும் பாபரிருக்க சூரியனுடனே நாலாமிடத்தானும் சேர்ந்திருக்க சந்திரனுக்கு ஆருமிடத்தில் குரு உதயமாகி ஆருமிடத்திலாகிலும் எட்டாமடத்திலாகிலுமிருந்தான் பிறந்த குழந்தைக்கு மரணமுண்டாகும் எ று 195

ஆட்சிவீடதற்கிலாப மவரவர்நின்ருராகிற்
காட்சிதந்தரனுர்போலக் கனசெல்வமிகுதியுண்டு

தாட்சியின்றதற்குளுச்சந் தானிருப்பாரேயாகிற்
சாட்சியாயநந்தஞ்செல்வந் தழைத்திடுஞ்சிவிகையோகம்

[இ ள்] நான்காமிடத்திற்கு நாலில் செவ்வாய் இருக்க அந்த ஸ்தானங்களுக்கு மத்தியில் சந்திரனும் சனியுமிருக்க குருவும், சுக்கிரனும் அஸ்தமனமாயிருக்க இலக்கிஞதிபதியும், சூரியன் சந்திரனுடைய ஸ்தாஞதிபதிகள் எட்டாமிடத்திலிருக்க ஜனனமான குழந்தையுடன் மரணமாகும் எ று 196

அரவமேநின்றவீட்டுக் காகும்லாபத்தின்மந்திரி
உரமுள்ளசுங்கன்பாம்புக்கொரு மூன்றினிற்கத்தானும்
சிரமதன்பாம்புக்கேழில் செல்வனுய்நின்ருனுகில்
துரகதகெஜமாந்தொளி யோகமாய்ச்சொல்வர்மாதே

[இ ள்) இலக்கிஞதிபதியும், பூர்ணச்சந்திரனிருந்த ஸ்தானத்திற்கு எட்டாமிடத்திற்கு பின்புறமாக சனியிருந்த ஸ்தாஞதிபதியும் பலயீனமாயிருக்க சுபகிரகங்களும் பார்வை செலுத்தாமலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சந்தேகமில்லாமல் மரணமாகுமென்றுணவீர் எ று 197

நிறைமதியதற்குமற்ருேற் நிற்கவேலாபமாக
அறையதிர்கூடநில்லா தவற்கவர்லாபமாகக்
குறைவின்றிநின்ருராகிற் கொடுப்பரேயமிர்தயோகம்
பிறையுயர்ந்ததுபோற்செல்வம் பெலக்குமென்பிருகுசொன்னுர்

[இ ள்) எந்த ஸ்தாஞதிபதியாகிலும் வக்ரம்அஸ்தமயமாயிருந்தால் அந்த ஸ்தானமும் தீது அந்த ஸ்தானத்தின் நவகிரகங்களுந் தீதாக நீசமடைந்திருந்தால் சரீரவேதனை யதிகமாயிருப்பதுடன் தாயும்பிள்ளை இருவருக்குமென்று சொல்லவேண்டும் எ று

கெண்டயோகம்

அணியிருகூட்டகேந்திர மமர்த்திடிற்றிரிகோணத்தும்
துணித்திருந்தோர்கள்பாப ராயினுஞ்சுகமேயில்லை
பணியணியிடையினுளே பற்ருத செல்வமுண்டு
மணியரவுள்ளேயாகின் மாண்டிடுங்குழவிதானே

[இ ள்] கிரகங்கள் ஒருவர்க்கொருவர் கேந்திரமாகிலும் கோணமாகிலும் சேராமலுமிருந்தாலும் இரண்டு கிரகங்களை சேர்ந்து கேந்திர கோண ஸ்தானத்திலிருந்தால் அந்தகிரகங்களுக்குப் பகை கிரகங்களும் கேந்திரகோணம் பெற்றிருந்தால் ஜாதகனுக்கு நன்மையும், துன்பமும் விபரமாய்ச்சொல்வோம் கவனிப்பீர்கள் எ று 199

சந்திரனிரிப்பிடத்துச் சரியிருபுறமாய்ப்பாபர்
முந்திபின்னிருவர்கூடி முகந்தெட்டிலரவனின்றல்
இந்திரபதியானலு மிறந்திடும் பாக்கியனில்லாக்
கொங்தலர்குழலினளே குழவியு மன்றேசாமே

(இ ள்) நான்கு கிரகங்கள் சேர்ந்து கேந்திர கோணஸ்தானத்திருந்தாலும், சுக்கிரன் இவர்கட்கு கேந்திரமானலும் கோணமாயிருந்தாலும், ஆனல் சந்திரனும் சேர்ந்து இந்த கிரகங்களுக்கு நான்கு ஐந்தாமிடங்களிலிருக்கலாகாது ஆனல் சப்த கிரகங்களும் ஒன்ருய் சேர்ந்திருந்தால் அடியிற் குறிபித்தயோக பலனுண்டாகும் 200

உதையமிந்தடைவேயாகிற் சிதையுமேகுழவிதானும்
அதையதானுதையோனகி யம்புலி வீட்டனகி
இதையுடனிருந்தராகிலெமகண்ட யோகமென்று
புதைபொருட்செல்வமுண்டாம் போய்விடுங்குழவிகூட.

(இ ள்] மேற்குறிப்பித்த விதமாய் கிரகங்களிருந்தால் அந்த ஜாதகன் தன்தாயை சம்பததுடன் கீர்த்திப்ரகாசமாய் ஐஸ்வரின்வானயிருப்பதுடன் குதிரை வாகனமும் பல்லக்குவாகனமுடையவனுப் இராஜயோகத்தை யனுபவிக்கும் சிம்மாசனமும் பொருந்தியிருக்கும்படியான தனதரன்ய சம்பத்துடன் நூறுவயதுவரை பூமியில் ஜீவிப்பதற்காகும் எ று

அருக்கனர்மந்தன்சேயு மவ்விடம்பாம்புநிற்க
குருநீலன் வெள்ளிபுந்தி கூடாமலாரெட்டாகில்
இருக்கவேபாக்கியமில்லையிவன் பிறந்தவ்விடத்திற்
செருகளம்போலேபிள்ளை சேர்ந்திடுமெமபுறத்தே

[இ ள்) கேதுகோண கேந்திரமிருப்பதற்கில்லாமல் குரு வக்கிரமாயிகுந்த ஜாதகனுக்கு பலவிதமாகிய அவகேடாகிய துன்பங்கள் துயரங்களுண்டாகி நூறுவயது வரையிலும் பலவித இடையூறுவருக்கே யல்லாமல் வாகனயோகமில்லை எ று 202

மந்தனும்பாம்புங்கூட மனைக்குநாடுரவிசேயும்
தொந்தமாய்நிற்கமற்ருேர் சுபருமேயாறெட்டாகில்
செந்திடத்ததுவும் பாக்கியஞ் செல்வமுநாசமாகும்
பொந்திடக்கிலேசனகிப் போகுமன்றிரவுனில்லா.

(இ ள்) கிரகங்கள் ஒன்று, இரண்டு மூன்ருன ஸ்தானங்ககளிருந்தாலும் அவ்விதமின்றி அந்தந்த ஸ்தானங்களில் மாறி மாறியிருந்தாலும் ஜாதகனுக்குப் பலவிதமாகிய கஷ்டநஷ்டமுந்துயரமுண்டாகும் எ று

இந்திடவணியேயாக வெந்திவீடுதையமாகில்
வந்திடுந்தீம்புண்டாகும் வலமிடமாகிலுந்தான்
நொந்திடுமாட்சியுச்ச மாகினுநோக்காடுண்டு
சிந்திடுஞ்செல்வமெல்லாஞ் செலவழிந்துயிரிழக்கும்

(இ-ள்) கிரகங்கள் ஜனன இலக்கினத்திலும் இரண்டு மூன்ருவது ஸ்தானத்திலும் ஒவ்வொரு கிரகங்களாய் நிற்காமல் மறுபடியும், மூன்று, இரண்டுமாயிருக்கவும் மறுபடியும் மற்றகிரகவீடுகளும் மூன்று, ஒன்று, இரண்டாக சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு வரவுக்கு தகுத்தலாபம் வருமேயல்லாமல் அதிகமான செல்வமில்லையென்றுணர்வீர் எ-று. 204

பார்ப்பனும்சுபர்கூடிப் பற்றியேயணியாய்நிற்கக்
கார்ப்புடனுதையமந்தன் கனல்புந்திசுங்கன்கூட
நேர்ப்புடன்செவ்வாய்பாம்பு நிலவுபொன்னணியேயாகில்
சீர்ப்பெறவுதித்தகாளை செத்திடுமிரவுநில்லா.

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு இரண்டு பக்கம் மூன்று கிரகங்களிருக்க மற்றகிரகங்கள் தனித்தனியாயிருக்க அதிகயோகமில்லாமலிருந்தாலும் ஆயுள் அதிகமாய் பூரணயுசாயிருப்பதற்காகும் எ று. 205

ஆறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
ஈறுமோராறுக்காறி லிருந்திடவிரவிபாம்பும்
ஓராறுக்காறுமூன்றி லொருவனுய்ப்பூமனிற்கப்
பேராறுக்கேழ்மூண்மற்ருே ரிருந்திடிற்குழவிசாமே.

(இ-ள்) ஏதேனுமொருராசியில் நான்கு கிரகங்கள் கூட்டங்கூடி இருக்க, அதற்கிருபக்கத்திலும் மூன்று கிரகங்களிருக்க, மற்றுமுள்ள கிரகங்கள் வேறுகிரகங்கள் சேர்க்கையின்றி ஒவ்வொருவராகவே இருப்பாரேயாமானல் அந்தஜாதகன் புகழ்ச்சியடையத்தக்க செல்வமில்லையென்பதே என்றும் அவன் வயதுள்ளவரையில் வறுமையுடையவனுய் பிரபல்யமடைய யோகமில்லாதவனய் கெண்டயோகத்தையே அனுபவிப்பானென்றுங் கூறுக எ-று 206

ஒரெட்டிற்கெட்டிற்காரி யொருமையாம்பாம்புஞ்சேர
ஏரெட்டிற்கெட்டில்ராஜ னிரவியும்புந்திகூட
சீரெட்டிற்கெட்டிற்சோமன் முடிகியேசெவ்வாய்கூட
நாலெட்டிற்செட்டிற்சுங்க னசமாய்க்குழவிசாமே.

(இ-ள்) கிரகங்கள் ஒன்றிரண்டாக ஒவ்வொரு ஸ்தானத்திலிருக்க மற்ற கிரகங்கள் இரண்டிரண்டாக சேர்ந்திருந்தாலும் ஒருவர்க்கொருவர் பார்வை செலுத்தாமல் ஆறு எட்டு யென்னும் சஷ்டமஸ்தானத்திலிருந்தால் முன்னேர் சேர்த்துவைத்திருந்த ஆஸ்தி பூஸ்திகளெல்லாம் செலவழித்துண்பார்கள் எ-று. 207

இரவிக்கோரெட்டோனின்ற விம்மனையுதையமாக
அரவுக்கோரெட்டோனின்ற வம்மனையிரவியாகப்
பரவியமதிக்கெட்டோனும் பண்புள்ளவுதையத்தெட்டோன்
உரமுடன்சோமன்கூடி லோரிரவுதனிற்சாமே.

(இ-ள்) ஆருமிடத்தில் சந்திரனிருக்க ஆறுகிரகங்கள் அணியணியாய் சேர்ந்து நிற்காமலும் பார்வைசெலுத்தாமலும் ஒருவர்க்கொருவர் ஆறு எட்டாமிடமாகிய சஷ்டாஷ்மஸ்தானத்திலிருந்தால், பெரியோர் சேகரித்தது வறுமையாற்கலங்கி பரதேசி கோலமாய்த் திரிவதற்காகும் எ-று 208

கூடியவிருவர்முன்னே கூடாமலொருவனிற்கத்
தேடியவதற்குமுன்னே செப்புமோரிருவர்நிற்க
நாடிமுன்னொருவனின்று னலமில்லைபிறந்தபிள்ளை
ஆடிடுமதற்குமுன்னே யறுதியாமெமபுறத்தே.

(இ ள்) இரண்டாவது ஸ்தானாதிபனும் இலக்கினாதிபதியும், மூன்ருமிடத்தானும் மற்றகிரகங்களுக்கு இரண்டாமிடத்திலிருந்து தீதாக குறிப்பிட்டு நின்ருல் அந்த ஜாதகனுக்கு அவயவபங்கமாவதுடன் மனங்கலங்கி கைப்பொருள் சேதமாவதுடன் அண்டிபிழைக்கும் ஸ்தானத்திலும் பலவித கஷ்ட நஷ்டங்களேற்பட்டு அற்பாயுசாயிருப்பதற்காகும் எ-று 209

திங்கள்பின்முன்னிரண்டு பாபருந்திரண்டுநிற்க
மங்களவானேழந்த மனைக்குநான்மந்தனுக
அங்குளசுபருமற்ருேர்க் காறெட்டுபனிரெண்டாகில்
ஈங்குளமாத்ருவம்ச மிறக்குமேகுழவிகூட

(இ-ள்) கிரகங்கள் தானிருக்கும் ஸ்தானத்திற்குத் தவருக மற்ற கிரகங்கள் தமது ஸ்தானத்திற்கு ஆறு எட்டாமிடத்திலிருந்தாலும், அல்லது ஆக்ஷி உச்சமாயிருந்தாலும், அந்த ஜாதகன் சேகரித்த தனதான்ய சம்பத்தெல்லாம் பலவிதமாய் சிதறிபோவதுடன் இருக்கும் ஸ்தானமும் தவறி கலங்கி நிற்பதுடன் அற்பாயுசாயிருப்பார்கள் எ-று

சோமனுக்கேழிற்செவ்வாய் நாலிருபுறமும்பாபர்
ஆமெனுமலரியோடே யந்நாலோனுங்கூடக்
காமனுக்காரின்மன்ன னுதையவானெட்டிநின்ருற்
சாமெனுங்குழவிமாதா சரியன்றேயிரவுமட்டில்

(இ-ள்) இலக்கினாதிபதிகள் இரண்டாமிடத்திலிருக்க, மற்ற கிரகங்கள் அஷ்டமஸ்தானத்தில் ஆக்ஷி உச்சமாய் வாகன ஸ்தான மாகிய நாலாமிடத்திலிருந்தாலும், தன்னிடமிருந்த தனதான்யம் பொன்பொருளும் போவதுடன் பலவிதமான அலைச்சலும் கஷ்டமும் துன்பமும் நேரிடுவதுடன் அற்பாயுசாயிருக்கும் எ-று 211

நாலுகால்செவ்வாய்நிற்க நடுவதிற்சோமன்மந்தன்
மேலுகந்தரசன்சுங்கன் மேலன்றியஸ்தமிக்கில்
ஏலுடனுகையத்தானு மிராப்பகைவீட்டானெட்டில்
ஆலுகந்தமர்ந்தமாதே யன்னையுங்குழவிசாமே.

(இ-ள்) கிரகங்கள் கேந்திரகோணமாய் சேருமுறைபல்லாமல் ஆக்ஷி உச்சமானுலும், சுபக்கிரகங்கள் சுபஸ்தானத்திலிருந்தாலும் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு வறுமைசூழ்ந்து பொன்பொருள் பூஸ்திதியெல்லாம் போவதுடன் அற்பாயுசாயிருப்பதற்காகும் எ-று 212

முந்தியோருதையத்தானு முழுபிறையிடத்தனெட்டோன்
பிந்தியேசனியும்வீட்டான் பெலவீனமாகநல்லோர்
வந்திருந்தன்றேற்பார்வை வலமிடத்தில்லாதாகிற்
சந்தேகமில்லைசாவு சரியிதுவிதியம்மட்டே.

(இ-ள்) இராசிநாதன் கேந்திரகோணத்தில் அணியணியாக நின்ருலும் அந்தஸ்தானுதிபதிகள் உச்சநட்பாயிருந்தாலும், அந்த ஸ்தானுதிபதிகள ஒருவர்க்கொருவர் பகையாய் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுடைய வாழ்நாள் குறைந்து ஆஸ்தி பூஸ்திதியாகிய செல்வமெல்லாம் வீணுகக்குலைந்து அழிந்துபோகும் எ-று 213

எந்தொருவீட்டாராகி லிடவரவற்குண்டேயாகில்
அந்தொருவிடமுந்தீதா மதற்குகாரகருந்தீதே
நொந்திருந்தனரேயாகி னேக்காடுமதிகமுண்டு
செந்திருவரையும்பற்றுஞ் செகத்துதித்தோற்குச்சொல்லே.

(இ-ள்) இலக்கின தானுதிபதிகள் மூன்ருமிடத்திலிருந்தால் கொடுமையாய் வாழ்ந்தவனுயிருந்தாலும், அந்த சுக சவுக்கியமெல்லாங் குறைந்து கஷ்டமும் கவலையுமாய் திரிவதற்காகும் எ-று 214

ஒருவருக்கொருவர்கேந்திர கோணமுமணியாய்க்கூட்டம்
இருவராய்க்கூடிகேந்திர கோணமுமணியாய்க்கூட
திருகுளோராகிக்கேந்திர கோணமுமணியாய்நிற்க
வருவதுநன்மைதீமை வயணமிங்கறிந்துசொல்லே.

(இ-ள்) சூரியன், சனி, செவ்வாயாகிய கிரகங்களின் இரண்டு பக்கத்திலு மற்ற கிரகங்களிருந்தால் உடனே மரணமுண்டாகும் செவ் வாய் கிரகத்திற்கு இந்த விதமான அடைவாயிருந்தால அநேகவிதமான சுகசம்பத்தமைந்தயோக பாக்கியமுண்டாகும் ஆனல் கிரகங்களின் பார்வையைக் கவனித்து பலனை கவனிப்பீர்கள் எ-று, 215

நாலுபேர்கூடிகேந்திர கோணமுமணியாய்க்கூட
ஏலுடன்சுங்கன்கூடி லிவர்குநால்கோணமாகில்
ஆலுகந்தானுங்கூடி யிவர்குநாலைந்தேயாகச்
சேலுடனேழுபேருஞ் சேர்ந்தனரேயாகில்.

(இ-ள்) அஷ்டமாதிபதி ஆருமிடத்திலிருக்க செல்வமில்லாமல் வறுமை சூழும் மற்ற கிரகங்களும் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால், ஜாதகனுக்கு ஆஸ்திபூஸ்திதி அழிந்து அனுதையாயிருப்பதுடன் அற் பாயுசாயிருப்பதற்காகும் எ-று 216

தனபதியுடையனுவன் றனலாபமதிகமுண்டு
மனையதிலசுவமுண்டு மகிழ்ச்சியுஞ்சிவிகையுண்டு
பொனின்பதிக்கதிபனுகிப் பொற்சிங்காதனமுமுண்டு
இனிப்பதுமுடையோனுகி யிருப்பனேவயதுநூருய்.

(இ-ள்) கெடுதியாக இலக்கினத்தில் பாபக்கிரகங்களிருக்க சுபக் சிரககள் நான்கு ஆருமிடத்திலிருந்தால் ஜாதகனுடைய தனதான்ய சம்பத்தெல்லாம் பலவிதமாய்ச் பெருகி மென்மேலும் விருத்தியாகி நூறு வயது வரை ஜீவித்திருப்பான் எ-று 217

இந்தணிகோணகேந்திர கூட்டமுமிருப்புந்தப்பி
அந்தணன்றிகைத்துநிற்க வவகேடுமுடனேயுண்டு
நொந்துடனிருப்பர்நூறு வயதுடன்றனிலேலாபம்
எந்திடிற்சதியேயாக வாகனயோகமில்லை.

(இ-ள்) சந்திரனுடன் புதன்சேர்ந்தும், சனியுடனே குரு சேர்ந் திருக்கவும், இலக்கினுதிபதியுடன் சூரியனும் சுக்கிரனும் சேர்ந்திருக்க, குருவுக்கு அஷ்டமஸ்தானத்தில் செவ்வாயும் இராகும் சேர்ந்திருந் தாலும், அதிபதியான யோகமில்லாமல் வறுமையால் கலங்குவதுடன் அற்பாயுசாயிருக்கும் எ-று 218

ஒருரெண்டுமொன்றுமூன்ரு யொன்ரெண்ணுய்நிற்கவன்றி
இருவொன்றுமூன்ரெண்ருக விருக்கவுமன்றிப்பின்பு
திரியொன்றுமொன்றிரண்டா யொன்ருகவிருந்தாராகில்
நெறியுண்டகஷ்டமுண்டு நின்றநாட்டுயரமுண்டே.

(இ-ள்) ஜனன இலக்கினத்திற்கு கேந்திரகோணுதிபர்கள் சுகஸ் தானத்திலிருந்தாலும் அல்லது ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் அவர்கள் சுபராயிருந்தாலும், நான்கு கிரகங்கள் வக்கிரமாயிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் சுகமில்லாமல் மாரகமுண்டாகு மென்றறிவாய்மாதே எ-று

ஒன்ரென்றுமூன்றிரண்டு மொன்ரென்ருல்நிற்கவன்றிப்
பின்ஞென்றுமூன்றிரண்டு பின்னிரண்டொன்ருய்நிற்க
அன்றன்றிமூன்ரென்றிரண்டு மொன்றிரண்டணிகிநின்ருல்
அன்றுருஞ்செல்வமல்லா லதிகமாய்ச்செல்வமில்லை.

(இ-ள்) கிரகங்கள் ஒன்ருய்ச்சேர்ந்து மேன்மையாயிருந்தாலும் இலக்ஷமிகடாக்ஷமுண்டாகும். அவ்விதமின்றி அந்த கிரகங்கள் சுபக் கிரகங்கள் நான்காமிடத்திலிருந்தால் ஜாதகனுக்கு வறுமை சூழ்ந்து மாரகமுண்டாகும் எ-று 220

இருக்கவேநால்வர்கூடி யதற்கிருபக்கமூவர்
நெருக்கமாய்நிற்கமற்ருேர் நின்றிடஒருவராகச்
செருக்கவுஞ்செல்வமில்லை சென்மசீதளனுய்நிற்பன்
பெருக்கவேயோகமில்லைப் பெலனுண்டாமாயுள்யோகம்.

(இ-ள்) கிரகங்கள் கூட்டமாயிருந்தாலும் சந்திரன் கேந்திர கோணஸ்தானத்திலிருந்தால் சுபக்கிரகங்கள் நான்குபேர் அமிசையில் நிசமாயிருக்க அங்கிதாதிபதி துன்பமாய் நீசமாய் அஸ்தமாயிருந்தால், சதாகாலமும் துன்பமும் துயரமாய் செல்வமெல்லாம் போய்விடும் எ-று

ஒன்றிரண்டொன்றிண்டா யோரொருவிடமாய்மற்ருேர்
நின்றிடவொன்றுக்கொன்று நேரிலாதாறெட்டாகிற்
கொன்றிடுஞ்செல்வமெல் லாங்குடியதமாகச்செய்யும்
என்றுடன்சுங்கன்சொன்ன திதுமொழிதப்பாமாதே.

(இ-ள்) கிரகங்கள் அணியாய்க் கேந்திரஸ்தானத்திலிருந்ததாலும் கோண ஸ்தானத்திலிருந்தாலும் அந்த கிரகங்களில் நால்வர் நீசமாயிருப் பதுடன் அந்த கிரகங்களின் அங்கிசமும் அவ்விதமேயிருந்தால் அந்த ஜாதகனுக்குத் துன்பமும் துயரமுமேலிட்டு மாரகமுண்டாகும் எ-று 222

ஆறிடமதினின்ருறு பேருமேயணியாய்னிற்க
வறுமற்ருெருனின்ற விடத்துக்கேயாறெட்டாகில்

நீறுபட்டதுபோற்செல்வ நில்லாமற்குடிவிட்டோட்டும்
வேறுபட்டுலகமெல்லாம் வெருண்டுடன்றிரிவன்ருனே.

(இ-ள்) நான்கு கிரகங்கள் ஒருவர்க்கொருவர் பகையாயிருக்க அவர்கள் கேந்திரகோணஸ்தானத்தில் அணியணியாய் சேர்ந்திருந் தாலும் நன்மைசெய்பவர்போல இலாபங்காண்பித்துகைப்பொருளெல் லாம் செலவாகும்படியாய் நாசஞ்செய்வார்கள் எ-று 223

இரண்டுமொன்ரென்றிரண்டு மற்றுளோரிவர்க்கிரண்டாய்க்
கொண்டுநின்றிடமுந்தீதாய்க் குறியதாய்நின்ருராகிற்
கண்டிடுமநேகங்குற்றங் கலங்கியேபொருளும்போகும்
அண்டியவிடமுந்தப்பி யவதியும்வயதுமற்பம்.

(இ-ள்) கிரகங்கள் சேர்ந்து கூட்டமாயிருந்தாலும் ஜாதகனுக்குள் லக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும் அவ்விதமின்றி சுபக்கிரகங்கள் நான்காமிட ஸ்தாஞதிபதிகளாயிருந்தால் யாதொரு லாபமில்லாமல் மாரகமடையும் படியாய் செய்வார்கள் ஏ-று 224

கூடிநின்றிடத்துமற்ருேர் குறிதப்பியாறெட்டாக
ஆடியேயாட்சியுச்சமாகினும் மாதேகேளாய்
தேடியசெல்வமெல்லாஞ் சிதறிடுமிடமுந்தப்பி
வாடியேநிற்பன்கண்டாய் வயதுமேயற்பமாக

(இ-ள்) சந்திரன் கேந்திராதிபதியாஞலும் கோஞதிபதியாஞலும் கிரகங்களின் கூட்டம் சேர்ந்திருந்தாலும் அவர்கள் சுபராயிருந்தாலும் நான்கு கிரகங்கள் அமிசையில் நீசமாயிருந்தால் அந்த ஜாதகனுக்குப் பலநாளுந்துன்பமும் துயரமும் நேரிட்டு தனதான்ய சம்பத்தெல்லாம் அழிந்துபோகும் எ-று 225

உண்டிரண்டொன்றுமொன்று மொருரெண்டிமற்ருேரெட்டாய்க்
கண்டிடவாட்சியுச்சங் கருதிலாநலமாஞலும்
அண்டியேபொருளுமுன்போ மவதியுங்கெடுதியுண்டு
கொண்டுபோம்நிலைமைதப்பிக் குறியிதுவயதுமற்பம்.

(இ-ள்) கிரகங்களின் கூட்டமொன்ருய் சேர்ந்து கேந்திரஸ்தானத் திலிருந்தாலும் அல்லது கோணஸ்தானத்திலிருந்தாலும் அந்த கிரகங் கள் நான்குபேர் பகை நீசமாயிருந்தாலும் அந்தஸ்தானமே அங்கிசமா ஞலும் ஜாதகனுக்கு பலவித துன்பமேற்படுவதுடன் அற்பாயுசென்ரே சொல்லப்படும் எ-று 226

பிரதியோக காண்டம் முற்றிற்று. ஆக 9049.

ஆயுள் காண்டம்

இராசி சக்கரம்

விரயம் ஸ்தானம்	இலக் கினம்	தன குடும்ப ஸ்தானம்	தீர ஸ்தானம்
இலாப ஸ்தானம்			சுக ஸ்தானம்
ஜீவன ஸ்தானம்			புத்ர ஸ்தானம்
பாக்ய ஸ்தானம்	ஆயுள் ஸ்தானம்	களஸ்திர ஸ்தானம்	சத்குரு ஸ்தானம்

தீர்க்காயுள்

செல்வராய்க்கேந்திரகோணஞ் சேர்ந்துநின்றணியுமாகில்
அல்லவராட்சியுச்ச மாகிலுமாதேகேளாய்
எல்லவாநலமாஞலு மெட்டாறுமாகநின்ருர்
பொல்லவராகக்செல்வம் போய்விடும்வயதுமற்பம்.

(இ-ள்) இவ்விதமாக அநேகங்கோடி பொருள்களுண்டாகுமென்று சுக்கிரன் சொன்ன நீதிவாக்கியங்கள் உலகத்தினர்கிடைகுமோ கிடை யாதோவென்ருல் ஜாதகர்க்கு சுக்கிரனிருக்கும் ஸ்தானத்தை கவனித்து சொல்வாய் மாதே எ-று 1

மதிபதியதற்குத்கேந்திர கோணணியாகநின்றிங்
கதிபதியுச்சநட்பு மாகிலுமாதேகேளாய்
பதியவர்க்கொன்றுக்கொன்று பகைத்துமாறெட்டேயாகில்
விதியதுகுறைந்துசெல்வம் வீணிலேகுலேந்துபோமே.

(இ-ள்) மேற்குறிப்பித்தவிதமே ஜாதகன் ஜனனமான நாழியைக் கணக்கெடுத்து எந்தலக்கினம் உதயமாகிறதோ அந்தலக்கினத்தையே முதலாகக்கொண்டு கணிதாராய்ச்சியுடன் பனிரெண்டு ஸ்தானமும் கண்டு அந்தஸ்தானத்தில் கிரகங்களிருக்கும் ஸ்தானபலனிறைந்து பெரி யோர் சொல்லுவார் ஆனல் கிரகங்களிருக்கும் நக்ஷத்திர சாரநிலேயைக் கவனித்து வேதமூர்த்தியைப்போல பலனுரைத்தால் ஜகத்திலிருப்பவர் களெல்லாம் புகழ்ந்துரைக்கும் ஜோதியைப்போலிருப்பான் எ-று 2

ஒன்றிரண்டொன்றுமூன்று மொன்றுமாய்நிற்கக்குற்றம்
என்றுள்ளசுகமுந்தப்பி யிருப்பிடமனையுங்குற்றம்
நன்றுள்ளஞகிவாழ்ந்த நலங்குன்றிக்கஷ்டமாகி
நின்றுடன்றிரிவன்ருனே நிலேயிதுகுறிதப்பாதே.

(இ-ள்) அஷ்டமஸ்தாஞதி தியும், சனியும், ஆக்ஷி பெற்றிருக்கும் போது சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்கும்போது அவர்களுடனே சந்திரனுமிருக்க மற்ற கிரகங்கள் நாலாமிடத்திலிருந்தால் எவ்வளவு ஈனஸ்திதியாயிருந்தாலும் ஆயுள் விர்த்தியுண்டாகி தரித்திரங்கள் நீங்கும்படியான தனவந்தஞயிருப்பதற்காகும் எ-று 3

சூரியன்மந்தன்சேயைச் சூழ்ந்திருபுறத்தின்மற்ருேர்
சாரியராகநிற்கச் சாவதுமுடனேயுண்டு
வீரியர்க்கிவ்வடைவேயாகில் வேண்டியயோகமுண்டு
பாரிவையறிந்துகொண்டு பாருளோர்க்குறைப்பாய்மாதே.

(இ-ள்) சனியும், புதனும் சுக்கிரனும் இராசிநாதனும் இலக்கினுதிபதியும் கூடடக் கிரகங்களாய் கூடியிருக்க மற்ற கிரகங்கள் அவர்க்கு நாலாமிடத்திலிருக்க விசேஷமாய் தனதான்ய சம்பத்துண்டாயிருப்பதுடன், நூறுவயது வரையிலும் வெகு பாக்கியவாஞயிருப்பதற்காகும் எ-று 4

எட்டணியாறுமாக விருந்திடிற்செல்வமில்லே
மட்டினிலெட்டாருக மனேயவர்நின்ருராகில்
விட்டிடுமாயுணில்லா வீணிலேதனமும்போகும்
தொட்டணேயாமற்செல்வந் தூரவேநிற்குமாதே,

(இ-ள்) அஷ்டமாதிபதியும் புதனும், சுக்கிரனும் சந்திரனும் இலக்கினுதிபதியும் சேர்ந்திருக்கும் ஸ்தாஞதிபதி ஆக்ஷியாயிருக்க, மற்ற கிரகங்களிருந்தால் ஸ்தாஞதிபதிக்கு சனி இருடரத்தி லெங்கிருந்தாலும், தனதான்ய சம்பத்துடன பூர்ணுயுசாயிருட்பதற்காகும் ஏ-று 5

கெடுதியாயுதையம்பாபர் கிட்டியேநாலாருக
அறுதியாய்நல்லோர்நிற்கு மவரவற்காறெட்டாகிற்
பரிதியாய்பட்டாற்போலப் பறந்திடுஞ்செல்வமெல்லாம்
பிரிதியாயுதித்தக்காளே பெயர்ந்தெழுமெமபுரத்தே.

(இ-ள்) அஷ்டமத்திற் கெட்டாமிடத்தில் மற்ற கிரகங்கள் இரண்டு பக்கத்திலும் சேர்ந்திருக்குமாஞல் வெகுவிதமான திரவிய லரபமாயிருப்பதுடன் நூறுவயதுவரையில் சுகஜீவியாய் கிருஷ்ணனேப்போல சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும் எ-று 6

மதியுடன்புந்திசேர மந்தனேடரசனிற்க
விதியடனிரவிசுங்கன் வேந்தனுக்கெட்டிற்பூமன்
கதிபெறப்பாம்புகூடக் கலந்துடன்பூமனின்ருல்
அதிபதியோகமில்லே யவனுக்கேவயதுமற்பம்.

(இ ள்] சனி ஆக்ஷியாயிருக்க மற்ற கிரகங்கள் இரண்டு பக்கத்திலும் சரியாகயிருக்க சனியிருந்த ஸ்தானத்திற்கு முன்இராசியே அம்ஸாலக்சினமாயிருந்தால் இந்த ஜாதகனுக்கு வயது நூறு வரையிலும் தனதான்ய சம்பத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும்மாதே எ று 7

செல்வமாய்க்கேந்திரகோணத் தாருமேசுகமாய்நிற்க
அல்லவென்ருட்சியுச்ச மாகிலுமேலாய்நிற்க
நல்லவராகிலு நான்குபேர்வக்கிரமாகித்
சொல்லவஞ்சுகமேயில்லே தோன்றிடுமரிட்டமாதே.

[இ ள்] சனியின் ஸ்தானத்தில் நான்கு சிரகங்கள் சேர்ந்திருக்க சந்திரனும் அவர்க்கு நாலாமிடத்திலிருக்க சனியும் அதர்க்கு நான்கிலிருந்தால் ஜாதகனுக்கு நூறுவயது வரையிலும் குதிரைவாகனுதிகளும் திரவிய சம்பத்துடனும் வாழ்த்திருப்பதற்காகும் எ று 8

கூட்டமுமணியுமாகிக் குறைந்துனின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பிநன்ருே ரொருநான்குபேருமாகிற்
சேட்டமேயில்லேகேளாய் சீவனுக்கழிவுமாதே.

[இ ள்] கேது பகவானிருத்த ஸ்தானத்திற்கு ஆறு ஏழு எட்டாமிடங்களில் சுக்கிரனும், புதனும் குருவும், சுபமாயிருக்க மற்ற கிரகங்களும் எந்த ஸ்தானத்திலிருந்தாலும் ஜாதகனுக்கு வயது நூருகுமென்றறியாய் பெண்ணே எ று 9

அல்லவென்றணியுங்கூட்ட மதிகேந்திரகோணமாகில்
நல்லவராகிநிற்க நான்குபேரமிசைநீசம்
சொல்லிவரங்கிசாதி துன்பநீசாஸ்தமாகிற்
பொல்லதுவருமேகூடப் போய்விடுஞ்செல்வமெல்லாம்.

[இ ள்] அஷ்டமாதிபதியும் அவர்க்கு எட்டாமிடத்ததிபதியும் குருவும், சுக்கிரனும், சந்திரனும், சனியும் சேர்ந்து ஒரே ஸ்தானத்திலிருந்தால் குறையில்லாத தனதான்ய சம்பத்துண்டாயிருக்கவும் நூறுவயது

வரையிலும் திரவிய சம்பத்துடனும் ஆனை குதிரை பெருத்த தனவந்தஞய் ஜீவித்திருப்பதற்காகும் எ று 10

இன்பமா யணியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்பதாய் நின்ருராகி லதிநான்குபேருநீசம்
தன்பத மாகினின்ரே ரங்கிச மதுவேயாஞல்
துன்பமா பாயுள்செல்வஞ் சொல்வது மற்பமாமே.

[இ ள்] முன்குறிப்பித்த சந்திரனும் சனியும் சேர்ந்த ஜென்மம் சுக ஸ்தானத்திலிருக்க அவர்க்கு நாலாமிடத்தில சுபகிரகங்களிருந்தாலும் சனி நின்ற ஸ்தானத்திற்கு நாலாமிடத்தில் குருவும் சுக்கிரனுமிருந்தால் நூறுவயது வரையிலும் செல்வந்தஞக ஜீவித்திருப்பதற்காகும் எ று 11

அல்லவே நான்குபேரு மதிசை யாகினிற்க
நில்லுமவ் வீட்டார்தாமு நீசமுடால்த மாகிற்
செல்வராய் க்கேந்திரகோணஞ் சேர்ந்தணி யிருந்திட்டாலும்
நல்லவர் போலனின்று நாசமே புரிவர்மாதே.

[இ ள்]சனியுடனே மேற்குறிப்பித்த குருவும் சுக்கிரனும் சேர்ந்திருந்தாலும் அவர்க்கைந்தாமிடத்திற் ஐந்தில் மும்மூன்று பேராய் நிற்க ஜாதகன் நூறுவயது வரையிலும் தனதான்ய சம்பத்துடன் உலகில் ஜீவித்திருப்பான் மாதே எ று 12

கூட்டமு மணியுமாகிக் குறைந்துனின்ற வருமேலாய்த்
தேட்டமா யிருந்திட்டாலுந் திருகதிலுண்டு கண்டாய்
ஒட்டமாய்த் திரும்பினன்ரே ரோருநான்கு பேருமாகிற்
சேட்டமே யில்லேகேளாய் சீவனுக் கழிவுமாதே.

[இ ள்] மூன்று கிரகங்களுடனே சனி பேர்ந்திருக்க இரண்டாமிடத்தும் இலக்கினத்திலும் சுபகிரகங்களிருந்தால் ஜாதகன் நூறு வயது வரையிலும் தனந்தான்யம் பொருள் பூஸ்திதியுடனும் வாழ்ந்திருப்பதற்காகும் எ று 13

அல்லவென் றணியுங்கூட்ட மதிக்கேந்திர கோணமாகி
நல்லவ ராகிநிற்க நான்குபே ரமிசைநீசன்

சொல்லிவ ரங்கிசாதி துன்பதீ சால்திரபாகிற்
பொல்லது வருமேகூடப் போய்விடும் செல்வமெல்லாம்.

[இ ள்] சனி மகரகும்பத்தில் ஆக்ஷிபாய் நீசமில்லாமல் அம்ஸா ராசியில் உச்சமாயிருந்தால் தனதான்ய சம்பத்து மேலும் மேலும் பெருகி சுக ஜீவியாய் நூறு வயது வரையிலும் சீவித்திருப்பதற்காகும் எ று 14

இன்பமா யணியுங்கேந்திர மிருந்திடிற் கூட்டங்கோணங்
அன்பதாய் நின்ருராகி லதிஞன்கு பேருநீசன்
அன்பத மாகிநின்ரே ரங்கிச மதுவேயாகில்
துன்பமா யாயுள்செல்வஞ் சுபமது மற்பமாமே.

[இ ள்] இராகு உச்சமாக சந்திரன் ஆக்ஷியாக்க சுக்கிரனும் குருவும், மேற்குறுப்பித்த கிரகமிகளும் நாலாமிடத்திலிருந்தால் ஜாதகனுக்கு குறையாத பெருஞ்செல்வமும் சுகபோக பாக்கியமும் பெற்று நூறுவயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும் எ று 15

இப்படி யனேகங்கோடி யெண்ணேணப் பொருள்களுண்டு
மெய்ப்பட சுங்கனீதி மேதினி யோர்க்குக்கிட்டா
தெப்படி யென்னிற்கேளா யெடுத்தோது மானுமைக்குச்
சொற்படுஞ் சுங்கன் சூட்சிச் சோதித்துச் சொல்வாய்மாதே.

[இ ள்] பனிரெண்டாமிடத்தானும் சனியும் ஆயுள் கொடுத்தாலும் மற்ற ஏழு கிரகங்களும் ஒருவருக்கொருவர் சுபராயிருந்தால்ஜாதகனுக்கு விசேஷ யோகமுண்டாகி தேவர்கட்கும் மேலான யோகபாக்கியத்துடனே நூறு வருஷம் வரையிலும் சுகஜீவியாயிருப்பதற்காகும் எ று 16

சொல்லுவர் பெரியோராவர் தோன்றிடு மலரேதெய்வம்
அல்லொடு பகலுமாக வதினுடைச் சாரங்கண்டு
ஒல்லுமோர் வேதமூர்த்தி யுரைத்ததென் றறியலாகும்
செல்லுமே தேசமெல்லாஞ் ஜெகச்சோதியாக நிற்பன்.

[இ ள்] கிரகங்கள் ஒன்ருய் சேர்ந்திருந்தாலும் வரிசையாய் நின்றிருந்தாலும் கிரகங்கள் அம்ஸையாயிருந்தால் ஜாதகனுக்கு விசேஷ யோகபலன்களுண்டாவதுடன் சுகமாயிருப்பதற்காகும் கிரகங்கள் மறைந்திருந்தாலும் நூறு வயதுவரையிலும் தன தான்ய சம்பத்துடன் செல்வந்தஞக வாழ்ந்திருப்பதற்காகும் எ று

அஷ்டமவிடத்தான்மந்தன் னுட்சியிற்கூடநால்வர்
திட்டமாய்கூடிநின்ற திங்களுமதிலேநிற்க
நட்டமில்லாமல்மற்றோர் நாலுநாலாகிநின்றால்
பொட்டெனவயதுண்டாகிப் போய்விடுந்தரித்திரங்கள்.

[இ ள்] இலக்கினுதிபதியும் சந்திரனிருந்த இராசிநாதனும் அஷ்டமாதிட தியும் இராகும் இவரிருந்த இராசிநாதனும் புதனுடனே சேர்ந்து ஆறுகிரசங்களும் ஒருவருக்கொருவர் பகையில்லாமல் சுபமாயிருந்தால் நூறுவயதுவரையில் தனதான்ய சம்பத்துடனே ,சுகசீவியாயிருப்பதாகும் எ று 18

மந்தனுல்புந்திசுங்கன் மதிவீட்டானுதையத்தோனும்
அந்தமாயக்கூடமாறே ரவற்குநாலேந்தேயாகில்
தொந்தமாய்செல்வமுண்டு தொண்ணூறும்பத்தும்கண்டு
வந்நாள்முதலாய்க்கொண்டுவளர்ந்துடன்பாக்யமுண்டே.

[இ ள்] அஸ்டமஸ்தானத்திலிருக்கும் சனியை சுபகிரகங்கள் பகை நீசமில்லாமல் பார்த்தாலும் இவர்க்கு நாலாமிடத்தில் பாபகிரகமில்லாமலிருக்கும் போது இலக்கின த்திற்கு எட்டுக்கு அஷ்டம ஸ்தானத்தில் சந்தினிருந்தால் அந்த ஜாதகன் சிரஞ்சீவியாக சீவித்திருப்பதற்காகும் எறு

எட்டவன்புந்திசுங்க னிந்துவுமுதையத்தானும்
மட்டினிற்கூடினிற்க மனையவற்றாட்சியாகச்
சட்டெனமற்றோர்நின்ற சரியிருபுறமாய்ச்சேர்ந்தால்
பொட்டெனவயதுண்டாகும் புகலருஞ்செல்வமுண்டே.

[இ ள்] அஷ்டமத்திற் கஷ்டமஸ்தானத்தின் இரண்டு பக்கமும் சுபகிரகங்களிருந்தாலும் சுக்கி)னும் குருவுமிருந்தாலும் இலக்கினத்தில் சந்திரனிருந்து சுக்கிரனுக்கு ஏழிலிருந்தாலும் சனிக்கு நாலில் செவ்வாயும் சூரியனுமில்லாமலிருக்கும்போது பிறந்த ஜாதகன் எமபுரத்தையடைவான் எ று 20

எட்டினிலெட்டேமற்றோ ரிருபுயஞ்சரியாய்ச்சேர
இட்டிடுமநேகசெல்வ மெதிரில்லாயோகமுண்டு
விட்டிடாதிருக்குநூறு விண்ணவர்க்கதிகனுகிக்
கட்டுடன்வாழ்வன்கண்டாய் கருமுகில்வண்ணன்போல

(இ-ள்) சனிக்கு நான்கில் சூரியனும் செவ்வாயுமில்லாத கோனுதிபதி கேந்திராதிபதி சந்திரனும், கடகமில்லாத ஆறு ஸ்தானங்களிலும் அஷ்டமஸ்தானத்திற்கு இரண்டாமிடங்களில் சுகமாயிருந்தால் ஜாதகன் நூறு வயது வரையிலும் சுகசீவியாஇருப்பானென்று சொல்வாய் மாதே எ று 21

மந்தனுமாட்சியாய்மற் றவரிருபுறமாய்நிற்க
முந்தவோர்மந்தனுக்கு முன்மனையமிசையாக
இந்தடவாகினின்று லிவனுக்கேவயதுநூறு
சொந்தமாய்செல்வமுண்டு தொல்புவியோர்க்குமாதே.

(இ ள்) நான்கு கேந்திரத்தின் கிரகங்களும் திரிகோணதிலிருக்க இராகு முதலானவர்க்கு ஏழாமிடத்தில் பாபகிரகங்களில்லாமலும் தனஸ்தானுதிபதி அஷ்டஸ்தானுதிபதியானுல் அந்தஜாதகன் நூறுவயதுவரை பூர்ணுயுசா இருப்பதற்காகும் எ று 22

கரியிடமதனினுன்கு பேருமாய்கூடினிற்க
அரியிடமகனுங்கூட வவர்க்குநான்மற்றோராக
எரியிடமகனுமாட்சிய மிசையிலிருந்தானுகிற்
பரியிடச்செல்லமுண்டு பார்தனில்வயதுநூறே.

(இ ள்) பகை நீசமில்லாத சூரியன் பார்வையில்லாமல் குரு வக்கிரமில்லாதபார்வைபெற்று சுக்கிரனுடனே சந்திரனும் இலக்கினத்திலிருந்தால் அஷ்டமத்திற் கஷ்டமாதி பொருந்திருந்தால் ஜாதகனுக்கு வயது னூருகு மென்றுணர்வீர்கள் 23

செங்கருநீலனின்ற சீர்மனைக்காறேழெட்டில்
சுங்கனும்புந்திபொன்னுஞ் சுபமதாயிருக்கமற்றோர்
எங்கணுமிருந்தாராகி லிவனுக்கேவயதுநூறு
குங்குமனையமாதே குறியிதுநெறிதப்பாதே.

(இ ள்) இராசிநாதனும் இலக்கினுதிபதியும், பாபக்கிரகங்களின் அங்கசத்திலிருக்க, இராசி லக்கினத்திற்கு பின்னிடத்தார்கள் சுபராகிலும் சுக்கிரனுடனே சந்திரன் சேர்ந்து இலக்கினுதிக்கு நாளில்சூரியனும் செவ்வாயுமிருக்கப் பிறந்த ஜாதனுக்கு சதாகாலமும் சஞ்சீவிசிலேபோலிருப்பதாகும் எ று 24

எட்டுடனெட்டுவீட்டா னிருடனரசன்சுங்கன்
பொட்டெனமதியுமந்தன் புகுந்தொருவிடத்தினின்றால்
விட்டிடாதிருக்குஞ்செல்வ மேதினிலிருப்பதுநூறும்
மட்டிடாச்செல்வமுண்டும தகெஜதுரகயோகம்.

(இ ள்] இராகுக்கு அஷ்டமஸ்தானத்தில் செவ்வாயும் வளர்பிறைச் சந்திரனுக்கெட்டாமிடத்தில் புதனும் சனிக்கு பனிரெண்டாமிடத்தில் சூரியனும் நாளில் குருவும் புதனுக்குதையமாக நீசமில்லாமலிருந்தால் அந்த ஜாதகனுக்கு நூறுவயதுவரையிலும் சுகமாய் சீவித்திருப்பதற்காகும் எ று

சேர்ந்திருவோருங்கூடச் சென்மநா லிடமேயாகப்
பூர்ந்தவர்க் கொருநாலாகப் புண்ணிய ரிருக்குமந்தன்
சார்ந்துனின் றிடத்துநான்கிற் சருவுபொன் சுங்கனுகில்
ஏந்துபொன் செல்வனுகி யிருப்பனே வயதுநூருய்.

[இள்] அஷ்டம ஸ்தானுதிபதியிலிருக்கும் ஸ்தானத்திற்கு இரண்டு பக்கமும் சுபகிரகளிருந்தால் குறையில்லாத சனிக்கு ஏழிலாகிலும் நாலிலாகிலும் சுக்கிரனும் குருவுமிருக்க வளர்பிறைச் சந்திரன் சூரியனுக்கு ஆருமிடத்திலிருக்க ஜாதகன் நூறுவயதுவரை சீவிந்திருப்பதற்காகும் எ று

அற்பாயுசு

இருந்திட மந்தனேடே யிருவருங் கூடிநிற்கப்
பொருந்திவர் கைந்திற்கைந்திற் போய் மூன்று பேராய்நிற்கத்
தரும்விதி நூருய்னின்று தனபாய்க்கிய முடையனுவன்
செரும்பவ ளிதழின் மாதே செப்பினன் சுங்கன்ருனே.

[இ ள்) இலக்கினுதிபதியும் இராசிநாதனும் நீசமில்லாமல் சூரியன் சேர்ந்தாலும் பார்த்தாலும் அந்த ஸ்தானத்தில் தேய்பிறைச் சந்திரனிருக்க அந்த ஸ்தானத்திற்கு நாலில் சனியும் புதனுமிருக்க இராசி இலக்கினுதிபதியை குரு பார்த்தால் சனியும் சுக்கிரனும் சேர்ந்தால் உடனே மாரத முண்டாகும் எ று

மூணிபே ருடனேமந்தன் முதல்வனுகி நிற்கப்
பூணிரண் டொன்ருய்மற்றைப் புண்ணிய னின்ருராகிற்
காணுமே செல்வமிஞ்சிக் கனக்கவே வாழ்வன்மாதே
ஆணுடன் பெண்ணும்பெற்றிங் கவனூறு வயதிருப்பன்.

[இ ள்] இலக்கினத்திற் கெட்டில் சனி சனியாயிருக்க சந்திரனுக் கெட்டில் செவ்வாயிருக்க குரு இவர்கட்கு ஏழாமிடத்திலிருக்க அந்த ஸ்தானத்திற்குச் சரியாய் சூரியனிருந்த ஏழாமிடத்தில் சனியிருந்தால் அந்த ஜாதகனுக்கு பலவித துன்பமும் நேரிட்டு மாரகமடையச்செய்யும் எ று

மகரகும் பத்தின்மந்தன் மழிநீச வமிசையன்றி
உயருச்சவ மிசையாகி யோங்கியேனின்ரு ராகிற்
கிகரமொத்ததுபோற்செல்வஞ் சேர்ந்துனின்றுலகில்வாழ்வன்
விபரமுற்றுடையனுகி மேதினி யிருப்பநூருய்

இ ள் ஜனன லக்கினத்திற்கு அஷ்டம ஸ்தானத்திற்கு கெட்டில் சனி இராகு சூரியனிருக்க சந்திரனுக்தகட்டிற்கு எட்டில் குருவும் செவ்வாயுமிருக்க சுக்கிரனும் டதனு‍ர் பார்வை செலுத்தாவிட்டால் குழந்தை பிறந்த எட்டாவது நாளில் மாரகமுண்டாகும் எ று

நீலனு முச்சமாக னிலவது வாட்சியாகி
மேலெனு மரசன்சுங்க னிவறகுமே நாலாய்னின்ருற்
பால்பெருஞ் செல்வமுண்டு பாக்கிய வானுமாக
ஏல்பெரும் யோகமுண்டிங் கிவனுக்கே வயதுநூறு.

[இ ள்] சூரியனின்ற இராசிக்கு அஷ்டம் ஸ்தானுதிபதியும் சனியும் சேர்ந்திருக்க இலக்கினத்தில் செவ்வாயிருக்கவும்இந்த கிரகங்களை சுபக் கிரகங்கள் பார்க்காவிட்டால் அவர்களுடனே சந்திரனில்லாமல் இராகு சேர்ந்திருந்தால் மிகவும் அன்பாக பிறந்த ஜாதகன் அப்போது மரணமாகு மென்றுணர்வீர எ று

ஆறிரண் டிடத்தான்மந்த னுயுசு கொடுத்தாலுண்டாம்
ஏறுமற் றேழுபேரு மிவற்கவர் சுபமேயாகில்
வீறுமே யோகம்பற்றி விண்ணுளோர்க் கதிகனுகப்
பேறுவோ ரதிகனுகிப் பெரியவ னுவனூருய்.

[இ ள்) இராகுக்கு நான்கில் யாருமில்லாவிட்டாலும் பாபக் கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்கு அந்த ஸ்தானுதிபதி அந்த வீட்டிற்கு நாலிருக்க ஜாதகன் ஜனனமாகும்போது கிரகங்களை சுபகிரகங்களை பராமலிருந்தால் பிறந்தபோதே மாரகமுண்டாகும் எ று

கூடியே யிருந்திட்டாலுங் கோணமாய் னின்றிட்டாலும்
நாடியே யணியாய்னின்று நல்லுச்சவ மிசையாகில்
ஓடியே வருமேயோக மொளித்துநின் றசைந்திட்டாலும்
தேடியே பிடிக்குஞ்செல்வந் திரும்பவே வயதுநூருய்.

[இ ள்] ஒன்பது கிரகங்களுமிருந்த ஸ்தானுதிபதிகள் ஒருவருக்கொருவர் நட்பில்லாமல் சத்துருவாயிருக்க அன்றியும் அந்த கிரகங்கள்

ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் கொடுமையாகும் நற்பலனை யனுபவிக்காமல் மாரகமுண்டாகும் எ று 32

உதித்தவன்சோமன்வீட்டானோரெட்டோனீலனாரும்
கதித்தவனிருந்தவீட்டான் கனகனோடாறுபேரும்
ஒருத்தருக்கொருத்தர் துன்பமில்லையேயுறவேயாகில்
விதித்ததுவயதுநூறு விண்ணுளோ ரறியத்தானே.

[இ ள்] எந்த கிரகமாகிலும் ஆக்ஷியாருக்க அவர்க்கு பின்னால் நான்கு கிரகங்கள் இருந்தால் அந்த கிரகங்கள் கேந்திரகோணஸ்தானத்திலிருந்தாலும் அந்தஜாதகனுக்குமோஷமுண்டாகுமென்று சொன்ன வாக்கியந்தவருமல் பிறந்த சிசு உடனே மாரகமடையும் எ று 33

சனிக்கெட்டிற்பாபரில்லாச் சலிப்பிலார்கூடப்பார்க்க
இனிமட்டிலிவற்குநாலா யிருந்திடப்பாபரன்றி
செனித்திட்டதெட்டுக்கெட்டிற் சீதளனின்றானாகில்
செனித்திட்டுவருமோர்பாலன் சிரஞ்சீவியாகனிற்கும்.

[இ ள்] அஷ்டமஸ்தானத்தில் சந்திரனும் ஏழில்புதனும் சூரியனுக்கு எட்டில் இராகும் சுக்கிரனுக்கெட்டில் செவ்வாயும் ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் சுபகரமாகாது மரணமே சம்பவிக்கும் எ று 34

எட்டுடனெட்டினிற்க விருபக்கஞ்சுங்கன்ராசன்
விட்டிடனுதயஞ்சோமன் வெள்ளிக்கேழாகினிற்க
மட்டுடன்சனிக்குநாலின் மண்மகனிரவியன்றி
கட்டுடனுதித்தகாளை கண்டிடாதெம்புரத்தே.

[இ ள்] இலக்கினத்திற் கிரண்டு பக்கமும் பாபக்கிரகங்களிருக்க ஜனனலக்கினத்திலும் பாபகிரகமிருக்க ஜென்மாதிபனும் பாபியாயிருந்தால் அவர்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தாலும் கொடுமையும் மாரகமுஞ் செய்வார்கள் எ று 35

வீறுமோர்சனிக்குநான்கில் வெண்கதிர்பூமனில்லார்
மாறுமுக்கோணகேந்திர மதியுமேசகடமின்றி
ஆறுமிக்ககறிரண்டோ னவன்சுகமானான்மாதே
நூறுமட்டிருப்பனென்று நுவலுவர்நூல்வல்லோரே.

[இ ள்] இலக்கினாதிபதி பலயீனமாயிருக்க சூரியன் எட்டாமிடத்திலிருக்க சந்திரனின்ற இராசிநாதன் அஸ்தமிக்க இவர்க்கு ஏழில்

செவ்வாயிருக்க இலக்கினாதிபதி பகை கிரகங்களுடனே சேர்ந்திருக்க சனியும் சப்தமஸ்தானத்திலிருந் தால் மாரகஞ்செய்வார் 36

நாலுகேந்திரத்துமன்னர் நலமாய்முக்கோணஞ்சேர
ஏலுகந்திருக்குநீல னிவர்க்கேழிற் றீயோர்னில்லா
மேலுகந்தனத்தோன்மீறி மேருவிலெட்டோனானால்
ஆலுகந்தமர்ந்தமாதே யவனாறுவயதுள்ளோனும்.

(இ-ள்) செவ்வாய் கேந்திரகோணத்திலிருக்க பஞ்சமாதிபதியும் சனியும் இராகும் அவர்க்கு நலாமிடத்தில் சூரியனுமிருக்க சுபகிாகங்கள் பார்வையில்லாமலிருந்தால் ஜாதகன் பிறந்தபோதே மரணமாகுமென்றறிவீர் எ று 37

கதிக்கொருவீனமில்லாக் கனலவன்பார்வையின்றி
மறுத்தொருவக்கிரமின்றி மன்னவன்பார்வையாகிக்
குறித்திருவுடனேசோமன் கூடவேயுதையனிற்கப்
பறித்தவர்கெட்டுக்கொட்டோன் பருநலமானூறே.

(இ-ள்) சூரியன் அஷ்டமஸ்தானத்திலிருக்க விரயஸ்தானத்தில் சனியிருக்க ஸதிரராசிமில் செவ்வாயிருக்க சுபகிரகங்கள் பார்வையில்லாமலிருந்தால் ஜனனகுழந்தை உடனே மரணமாகுமென்றுணர்வீர் எ று

பதிமதிவிதியுநல்ல பாபரங்கிசமேயாக
விதிமதியின்னிடத்தா ரிவரு மசுபரேசேர
விதிமதிபதிக்கேநாலில் வெய்யவன்பூமனிற்கிற்
சதிபதிமாதேகேளாய் சஞ்சீவிச்சிலைபோலாமே.

(இ-ள்) சப்தமஸ்தானத்தில் சனி இருக்க இலக்கினத்தில் சூரியனிருக்க தேய்பிறை சந்திரன் குருவுடனே சேர்ந்திருக்க செவ்வாய் இராகுடனேசேர்ந்திருக்க சுபகிரகங்கள் இடபுறவலபுறமாகிலும்பார்வை செலுத்தாமலிருந்தால் ஜாதகன் பிறந்தபோதே மரணமுண்டாகும் எ று 39

நீலனுக்கெட்டிற்பூம னிறைமதிக்கெட்டிற்புந்தி
சாலற்கிராறிற்றீயுங் காமனுக்கொருநால்வேந்தன்
நூலனுக்குதையமாக நோயிலாதிருந்தாராகிற்
பாலனுக்கொருநூருகும் படருமேயாயுரியோகம்.

(இ-ள்) செவ்வாய் இலக்கினத்திலும். இராகுக்கு விரயஸ்தானத்தில் சனியிருக்க சூரியன் அஷ்டமஸ்தானத்திலும் ஏழாமிடத்தில் செவ்

வாயுமிருக்க சுபகிரகங்களிருக்கும் ஸ்தானாதிபதிகள் நீசமாயிருக்கும் போது பிறந்த குழந்தையின் ஜீவன் உடனே பிரிந்துபோகும் எ று 40

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கஞ்சுபரேநிற்க
மட்டில்லாச்சனிக்கேழ்நாலின் மன்னவன்வெள்ளிநிற்க
விட்டிடாப்பிறையுயர்ந்து வெய்யவற்காறிலாகி
இட்டமாயிருக்கிற்காளை யிருப்பனேவயதுநூறுய்.

(இ-ள்) ஜாதகன் ஜெனனமாகும்பேபது இலக்கினத்தில் சந்திரனும் சனியுமிருக்க இலக்கினதிபதிக்குபகையாய் சுபகிரகங்கள் பார்வையில்லாமல் அஷ்மாதிபதி அஸ்தமமாளுல் அச்சமயம் ஜனனமாகும் குழந்தைக்கு பலவிதமான ரோகமுண்டாகி மாரகமுண்டாகும் எ று 41

அற்பாயுள்

விதிபதிநீசமின்றி வெய்யவம்கூடம்பார்க்க
அதின்மதிகுன்றினிற்க வதற்நால்சனியேபுந்தி
மதியதின்குருநோக்கில் லாமந்தனும்வெள்ளிகூடிற்
சதிபதிமாதேகேளாய் சாவதிங்குடனேயுண்டு

(இ-ள்] தேய்பிறையில் சனியுடனே சுபகிரகங்கள் பார்வையில்லாமல் இலக்கினதிபதி சூரியனுடன் சேர்ந்திருக்க இராசிநாதனுடனேசெவ்வாய் சேர்ந்து குருவும் புதனும் அஷ்மஸ்தானதிபதியும் சோந்திருக்க சனி பலவீனமாயிருந்தால் ஜனனமாகும்குழந்தைபிராணனேடிருக்காது எ று 42

உதையத்துக்கெட்டின்மந்தனொருவனுய்நிற்கத்தானும்
மதியத்துக்கெட்டிற்பூமன் மன்னவரிவர்க்கேழாக
அறையொத்துவிரவினின்ருங் கதற்கேழ்நாள்மந்தனுகில்
விதியற்றுனில்லாதாகி வினையுமேதீம்பாய்மாதே

(இ-ள்) பத்தாமிடத்ததிபதியும் சூரிய சந்திரனிருக்குப்ஸ்தானதிபதிகளாகிய கிரகங்கள் அஸ்தமயமாயிருக்க இலக்கினதிபதி சந்திரனும்சனியுடனே சேர்ந்திருக்க இராகும் செவ்வாயும் அவர்கட்கெட்டாமிடத்திலிருக்க சுபகிரகங்கள் பார்வை செலுத்தினுலும் குழந்தை பலவித துயரடைந்து அம்பலமாகும் எ று 43

உதித்தெட்டுக்கெட்டின்மைந்த னுரகனுமிரவினிற்க
மதித்தெட்டுக்கெட்டினல்ல மன்னவர்பூபன்சேரக்

கதித்திட்டுசுங்கன்புந்தி காணவுமில்லாதாகில்
விதித்தெட்டு நானிமில்லா வினையுமே தீம்பாய்மாதே

(இ-ள்) உத்தம கிரகங்கள் இலக்கினத்திலிருக்க குருவும் சந்திரனும் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருக்க இலக்கினதிபதியும் விரயஸ்தானதிபதியும் அஷ்டமத்திலிருக்கும் பிறந்த குழந்தை மரணமுண்டாகும் எ று 44

அருக்கனுக்கெட்டோன்மந்த னமர்ந்திடவுதையம்பூமன்
இருக்கவுமிவரைநல்லோ ரின்பமாய் ..ருராகிற்
பருக்கவேசோமனின்றிப் பாம்புடனின்ருராகில்
உருக்க.. ..த்தகாளை யொருநாளுநில்லாமாதே

[இ ள்] சுபகிரகங்கள் மத்தியில் நான்கு பாபகிரகங்களிருக்க இலக்கினதிபதியும் சந்திரனும் அசுபமாய் பாபருடன் சேர்ந்து அஷ்டமத்திலிருக்க ஜனன குழ்ந்தை அன்றைய இரவிற்குனே மரணமாகும் எ று 45

நீலனுர்தனக்குநான்கி னின்றிடவாரற்றுனும்
கோலமாய்த்தீயர்நின்ற குடிமனையதற்குநான்காய்ப்
பாலராய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவேகூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுநில்லா

[இ ள்) சந்திரனுடனே அஷ்டமஸ்தானதிபதியும் பாபக்கிரகங்களும் இலக்கினத்திலிருக்க இராசிநாதனும் பாபரும் சேர்ந்துசந்திரனுக்கு அஷ்டமத்திலிருக்க குருபார்வை செலுத்தாமலிருந்தால்ஜனனமானகுழந்தை மரணமாகும் எ று 46

ஒன்பது பேருநின்ற நிலையதிலொருமையில்லாத்
துன்பமாயெட்டுக்கெட்டாய்த் தோன்றியேநின்ருராகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கிலுந்தீமையாகும்
நன்பலன்கொடுப்பதில்லைநட்டமாமுதித்தகாளை

[இ ள்] எட்டாமிடத்தானும் அவனுக்கு அஷ்டஸ்தானதிபதியும் சேர்ந்திருக்க அவர்களுக்கு இரண்டு பக்கத்திலும் பாபகிரகங்களிருக்க எட்டுக்கெட்டாமிடத்தில் இராகு பலத்திருக்க அவர்களை குரு பார்க்காவிடடால் ஜாதகன் உடனே ஐந்து நாழிகையில் மரணமாகும் எ று 47

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின்புநால்வர் நிற்கச்
சாட்சியாய்கேந்திரகோணஞ் சரியவர்நின்றிட்டாலும்

மோட்சமுன்டென்றுதானே மொழிகின்றவாறுதப்பாச்
சாட்சியாய்ப்போமேகாளை தனக்கிருப்பில்லைமாதே.

[இ ள்) அஷ்டமாதிபதியும் பனிரெண்டாமிடத்ததிபதியும் இருந்த ஸ்தானத்திற்கு ஆருமிடம் எட்டாமிடத்திற் சேராமல் அவருடன் இராசீ நாதனும் இலக்கினாதிபதியுஞ் சேர்ந்திருக்க சுக்கிரனும் குருவும் சேர்ந்து சூரியனுக்காகிலும் அஷ்டம விரயஸ்தானங்களில்லாமலிருந்தால் அன்றைய தினத்தில் இரவிற்குனே குழந்தை மரணமாகும் எ று 48

பெரியநூற்கெட்டின்மந்தன் பெரியசோமற்கேழ்புந்தி
அறியவற்கெட்டிற்பாம்பு மரும்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்ச நிற்கினுஞ்சுகமேயில்லைச்
சரியதாமிடமானுலுஞ் சாவதுநிஜமே கண்டாய்.

[இ-ள்] இலக்கினத்தில் சூரியனிருக்க பத்தாமிடத்திலும் இரண்டாமிடத்திலும் சனியும், செவ்வாயுமிருக்க, சந்திரனும் இராகும் அந்த கிரகங்களுக்கு அஷ்டாஷ்டம ஸ்தானத்திலிருக்க பாம்புகளால் பகைவனுகிய சூரியனுக்கு ஆருமிடத்தில் குருநிற்க தேய்பிறை சந்திரனும் அஷ்மஸ்தானுதி அஸ்தமயமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 49

பறித்தவிலக்கினத்துக் கிருபக்கம்பாபர்நிற்க
மறுத்துநின்றிடிற்பலத்தின் மனையினிற்பாபியாகச்
செறித்தவர்க்கேழிற்பாபி சென்மாதிபாபியாகிற்
குறித்தவராட்சியுச்ச மாகிலுங்கொடுபோங்காலன்.

(இ ள்] இலக்கினுதிபதியும் பாபக்கிரகங்களும் சந்திரனும் இராகும் புதனும் சனிநின்ற ஸ்தானத்திற்கு ஆருமிடத்திலிருக்க குரு இவர்கட்கு சாஷ்டாஷ்டம ஸ்தானத்திலிருந்தால் இலக்கினுதிபதியும் இராசிநாதனும் பகையாயிருக்க. குரு இவர்களை பார்த்திருந்தாலும் கர்ப்பசிசு உடனே மரணமாகிவிடும் எ று 50

விதித்தவனீனமாக வெண்கதிரேழினிற்க
மதித்தவனஸ்தமிக்க மங்களனிவர்க்கேழாகப்
பதித்தவர்பகையேசேரப் பாஸ்கரன்மகனேழாகில்
ஈதித்தவர்நின்ருராகி லேந்திழைமாதேகொல்வர்.

(இ-ள்) இலக்கினுதிபதியும் சந்திரனிருந்த இராகிநாதனும் சூரியனுடனே சேர்ந்து குருவுக்கு அஷ்டமஸ்தானுதிபதியும், சந்திர

னுக்கு அஷ்டமாதியுப் சனியும் பார்வை செலுத்தவும், புதனும் இராகும் சனியும் நான்குக்கு நாலாயிருந்தாலும் குரு சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலிருந்தாலும் ஜனனமான சிசு மரணமடையும் 51

தஞ்சமாய்கேந்திரகோணங் தரைமகனொருவனிற்க
அஞ்சுநான்முடவன்பாம்பு மவர்க்குநான்கிரவியாக
மிஞ்சியேசுபருஞ்சேர்ந்து வலமிடப்பார்வையின்றி
நஞ்சுடனுதிர்த்தகாளை நாசமன்றிரவுதன்னில்

(இ ள்] சுபகிரகங்களில் ஒருவராயினும் இலக்கினத்தைப் பாராமலிருக்க அந்த ஸ்தானத்தில் சந்திரனும் பாபக்கிரகளுமிருக்க சப்தமஸ்தானம் நான்காமிடதுதிலும் சூரியனும் சனியுமிருக்க பத்தாமிடத்தில் இராகு சுக்கிரனும் குரு விருந்தாலும் ஜனனமான குழந்தைமரணமாகும் எ று 52

வீசுங்கதிரோனெட்டிருக்க விரைய மாவுஞ்சனியிருக்கக்
தேசத்திரமிடமாகச் செவ்வாயொருவன்கதித்திருக்கப்
பேசும்பெரியோர்நோக்கின்றிப் பெருமைதவிர்த்துபேதையைப் [போல்
நாசக்குழவியன்றிரவு னடக்கும்வழிதானெமபுரத்தே.

[இ ள்] சுக்கிரன் நீசமாயிருக்க பனிரெண்டாமிடத்தில் சூரியனும் இராகுமிருக்க சனி தனியாகசந்திரனுக்கு அஷ்டமஸ்தானத்திலிருக்க இவர்களுக்கு நாலாமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 53

ஏழோரிடத்திற்சனியிருக்க வெதிரானிடத்திலிரவியனும்
தாழ்வாம்பிறையந்தணனிடத்திற் றரணிசுதன்பாம்புடன்கூட
வாழாநின்றப்பெரியோரும் வலமிடத்தாகிலுநோக்கிமின்றி
வீழாததன்முன்னேநடந்து வீயுங்குழவியன்றிரவே.

(இ ள்] வளர்பிறைச் சந்திரனிருந்த ஸ்தானத்திற்கு ஐந்தாமிடத்தில் சூரியனிருக்க இலக்கினுதிபதி ஒன்பதாமிடத்திலிருக்க செவ்வாய் சந்திரனுடனிருக்க குரு விரயஸ்தானத்திலிருக்க இராகு ஏழாமிடத்திலிருந்தால் மரணமாவான் எ று 54

நிழமகனுதையம்பாம்பு நின்றிடவிரையமந்தன்
பிலனுடனிரவியெட்டிற் பின்னேழிற்செவ்வாய்நிற்க
நலங்கொடுநல்லோற்நிற்கு நகருளோர்கீனமாகிற்
குறிகொண்டுகண்டபோது குறிகிடுங்குழவிசீவன்.

(இ ள்) ஜனன லக்கினத்திற்கு கோணகேந்திர ஸ்தானுதிபர்கள் சஷ்டாஷ்டமஸ்தானத்திலிருந்தால் சஷ்டாஷ்டமஸ்தானுதிபதிகள் கேந்திரகோணத்திலிருக்க சந்திரனுடனே நீசா பலவீனமாயிகுந்தால் ஜனனமான சிசுவுக்கு ஜீவனில்லாமல் பிரிந்துபோகும் எ று 55

ஆயுள் காண்டம் முற்றிற்று ஆக 698 :

பிரதி அரிஷ்ட காண்டம்

மினம் $4\frac{1}{4}$	மேஷம் $4\frac{1}{4}$	ரிஷபம் $4\frac{1}{2}$	துன $5\frac{1}{4}$
கும்பம் $4\frac{1}{2}$	பனிரெண்டு இராசிகட்கும் 60 நாழிகை ஆகும்.		கடகம் $5\frac{1}{2}$
மகரம் $5\frac{1}{4}$			சிங்கம் $5\frac{1}{4}$
தனுசு $5\frac{1}{2}$	விருச்சி $5\frac{1}{4}$	துலாம் 5	கன்னி 5

பிறக்கும்பொழுதேயுதையமதிற் பிலனேடாரலரவமுதமே
சிறக்குமதியோடிருமந்தன் சென்மாதிக்கோர்பகையாகி
நிறக்குநல்லோர்நோக்கின்றி நிலையத்தெட்டோனஸ்தமிக்கிற்
பறக்குங்குழவியிரவுநில்லாப் பத்தாதணையும்பலரோகம்.

(இ ள்) அஷ்டமாசிபதியும் எடடுக்கு எட்டாமிடத்ததிபதியும் பாபக்கிரகங்களாயிருந்தாலும் சந்திரனும் சூரியனும் சனியும் அவர்க்கு ஏழாமிடத்திலிருக்க, குருவும் சுக்கிரனும் இவர்கட்கு நாலாமிடத்திலிருந்தாலும் ஜனனமான ஜாதகன் மரணமாகும் எ று 1

பிறைதேய்ந்தெட்டிற்கரியினுடன் பெலநோக்கின்றியுதையாதி
சிறையுந்திரவியுடன்கூடிச்செவ்வாய்மதியிடத்தானுடனே
இறைபூந்தெட்டோ னரவமுடனுரெட்டாகநிற்கிலுமே
குறைசேர்ந்திருக்கக்கொடுங்கூற்றன் குறுகுங்குழவியிரவு
[நில்லா

(இ ள்) அஷ்டமாதிபதிக்கு ஆரும் வீட்டில் சனியிருக்க நான்காமிடத்தில் செவ்வாயிருக்க இவர்க்கு நான்கில் குரு சூரியன் சந்திரனும் சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை ஒரே தினத்தில் மரணமாகும் எ று 2

பத்தாவுதையத்ததிபதியும் பருமதியிடத்தானல்தமிக்கப்
பெத்தார்மதியுயரசனியுடனே பேரோடரவஞ்செவ்வாயும்
இத்தோடரவர்க்கெட்டாகிப் புண்ணியரிவரைநோக்கிநின்றேல்
அத்தாடியத்துக்கதுமுன்னே யம்பலமாகுங்குழவியுமே.

(இ ள்) இராகுநின்ற ஸ்தானத்திற்கு நாலாமிடத்தில் சனியிருக்க இவர்களுக்கு பத்தாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் புதனுமிருக்க அவர்களிருக்கும் ஸ்தானததிற்கு ஏழாமிடத்தில் சந்திரனும் செவ்வாயுமிருந்தால் ஜனனமான குழந்தைக்கு கொடுமையான மாரகமுண்டாகும் எறு

குதிகொண்டநல்லோர்நிற்க குருமதியாறெட்டாக
மதிகொண்டுபாபர்வீறி மனைக்குநான்காசுநிற்க
விதிகொண்டவிடத்தான்வீறி விரையமுன்னவனுமெட்டிற்
பதிகொண்டுநின்ருராகிற் பறந்திடுங்குழவிசீவன்.

(இ ள்] சந்திரனுக் காருமிடத்தில் சனியிருக்க கர்ணுதிபதியாய் செவ்வாயிருக்க இலக்கினத்திற்கு ஆருமிடத்தில சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை ஆறு மாதத்தில் மரணமாகும் எ று 4

நல்லவர்நால்வர்பாபர் நடுவதினிற்கமற்ருேர்
சொல்லுதையாதிசோமன் சுகமின்றிப்பாபர்கிட்டி
நில்லதிலுதையமெட்டோ னிலையவனெட்டிநின்ருல்
வில்லமுத்ததிகமாதே வீயுமன்றிரவுதண்ணில்.

(இ ள்) இலக்கினத்தில் சனியிருக்க வீரியஸ்தானமாகிய மூன்ருமிடத்ல் சூரியன் குமாரனுகிய சனியிருக்க, ஐந்தாமிடத்தில் இராகும் சந்திரனிருக்க இலக்கினத்திற்கு பனிரெண்டாமிடத்தில் சுக்கிரனும் குருவும் புதனுமிருக்க, ஜனனமான ஜாதகன் மரணமாகும் பெண்ணே எ று

பறநிலைமதியினெட்டோன் பாபருமுதையநிற்கக்
குறிமதியிடத்தான்பாபர் கூடியேமதிக்கெட்டாக

அறிவுநூல்வேதமூர்த்தி யவருமேபாராராகில்
முறிபடுங்குழவிசீவன் மூவைந்துநாழிதன்னில்.

(இ ள்] சந்திரனிருந்த ஸ்தானத்தில் சனியிருக்க, சந்திரனுக்கு வலபுரமாக இராகு குரு சுக்கிரனிருக்க செவ்வாய்க்கு இரண்டில் புதனிருக்கும் போது ஜனனமான ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ று 6

எட்டுடனெட்டோன்கூடி யிருபுரம்பாபியாகக்
கட்டுடனெட்டுக்கெட்டிற் கரியரான்மிகைத்துநிற்க
மட்டுடன்வேதநூலான் மனையவர்பாராராகில்
விட்டுடன்போமேசீலன் விழுமைந்துநாழிதன்னில்.

(இ ள்) அஷ்டமாதிபதி இருந்த ஸ்தானத்தில் சூரியனும் இராகுமிருக்க அவர்கட்கு ஏழாமிடத்தில் செவ்வாயிருக்க சனி சந்திரனிவர்க்கு ஆருமிடத்தில் சுபக்கிரகங்கள் நீசமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 7

ஈராறெட்டோர்கேந்திரமதி லிருந்த மனையாராறெட்டிற்
சேராதவருடன்மதிபதியுஞ்சென்மத்துடனுஞ்சேர்ந்திருக்க
காராதுடன்வெள்ளிமந்திரியுங் கலந்தேழிரவிக்காகினுமே
ஈராறெட்டுநில்லாதிங் கிரவேகுழவியிறந்திடுமே.

[இ ள்] லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி நீச்சம் பெற்றும் ஜெனன லக்கிஞதிபதியோடு குறன் சகிதம்பெற சந்திரனின்ற ராசிக்கு ஏழாமிராசியில் சூரியனும் சனியும் இரண்டிற் சுக்கிரன் புதனும் இருப்பாரேயாஞல் அக்குழவிவுடனே இறந்துபோமென்றே கூறுவாயாக எ று

இரவிநின்றிடமுதைய மதா யீரைந்திரண்டிடக்கரிசேயாய்ப்
பரவிநின்றிடச்சந்திரனும் பாம்புவர்க்காறெட்டாகில்
அரவுபகையானவர்க்காறி லந்தணர்நிற்கவுமதிக்கெட்டாய்க்
குறையுடனேட்டோனஸ்தமிக்கிற் குழந்தையேகுமெமபுரமே.

[இ ள்] அஷ்டமஸ்தாஞதிபதி நீசமாயிருக்க அவர்க்கு பின்ஞலிருக்குங்கிரகம் அஸ்தமயமாயிருக்க இலக்கிஞதிபதிக்கு வலது பக்கத்தில் செவ்வாய் சேர்ந்திருக்க சனியும் இராகும் சந்திரனுக்கேழாமிடத்திலிருக்க இரண்டாமிடமாகிய தன ஸ்தானத்திற் சுக்கிரனும் புதனுமிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று

விதியுடனிரண்டொருபாபருமே விடமதியரவமுங்கரியுடனே
மதியுடன்புந்தியுங்கரிக்காருய்மன்னவனிவர்க்கா றெட்டாகில்
அதியுதைமதியவர்பகையாகவந்தணரிவரைநோக்கின் றேற்
கதிகுய்யத்துடன்கருமாண்டு கழன்றுவிடு மேகாசினியில்.

(இ-ள்) குருவுக்கு எட்டாமிடத்தில் சனியும், சந்திரனுக்கும் குருவுக்கும் ஆருமிடத்தில் இராகும், செவ்வாய்க்கு பின்ஞலிருப்பவர் அஸ்தமயனமிருக்க அவருடனே புதன் நீசமாயிருக்க கர்ப்ப சிசு மரணமாகுமென் றுரைப்பாய் பெண்ணே எ று 10

சுந்தரனிடத் தானுதைபதியுஞ் சூரியனுடனே கூடவுமே
மந்திரியெட்டோன் மதிச்கெட்டோன் மந்தனுமாரலும் பார்க்
[கிலுமே
புந்தியும்பாம்புங்கரிநாலாய்ப் பொன்வெள்ளிக்கேழினு மாகினுமே
இந்திரபதி யோடானுலு மிறந்திடுமெமபுர வழியதுவே.

(இ-ள்) சூரியனும் இலக்கினத்திற்கு எட்டாமிடத்தானும் ஜனன லக்கினத்திலிருக்க அவர்களுடன் சனியும் செவ்வாயுமிருக்க அவர்களுக்கு எதிரெதிராகச்சுபகிரகங்களில்லாமற் போனுல் ஜனனமான குழந்தை அன்றையதினமே மரணமாகும் எ று 11

உத்தமரொருவர் நோக்கின்றி யுதையத்திடமதிற் பாபருமே
சத்தமவிடமது நான்கினுமே சரிவரவாரலு மந்தனுமாய்ப்
பத்தினும் பாம்பிராவெள்ளிபாலாய் பொன்னுய்நிற்கிலுமே
செத்திட்டன்றே குழவியுமே சேர்ந்திடுமெமபுர வழியிதுவே.

(இ-ள்) சூரியனுக்கு அஷ்டமாபதி ஏழில் சனியுடன் சேர்ந்திருக்க இலக்கிஞதிபதி தலைமையாய் அஸ்தமமாயிருக்க சந்திரனுக்கு அஷ்டமாதிபதியின் பின்ஞல் சந்திரனுக்கு சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை அன்றைய இரவிற்குளே மரணமாகும் எ று 12

ஈனமாயிருக் கச்சந்திர னீராறிலிரவிபாம்பும்
தானுமோர் மதிக்கோர்நெட்டிற் சனியுமே யொருவஞக
சீனமேயிவர்க்கு நான்கிற் செவ்வாயு நின்ருஞகில்
தேன்மொழி மாதேகேளாய் செத்திடுங் குழவியன்றே.

(இ-ள்) புதனும், சுக்கிரனும், கன்னியிலிருக்க சனியும், நாலாமிடத்தில் சனியிருக்க, பாபகிரகம் இரண்டாமிடத்திலிருக்க சூரியன் பனிரெண்டாமிடத்திலிருக்க செவ்வாய் பத்தாமிடத்திலும் ஆருமிடத்திற் குரு இருந்தால் ஜனனமான குழந்தை சந்தேகமில்லாமல் உடனே மரணமாகும்எ று 13

பருமதிநின்றிடத்துப் பகலவனேந் தேயாகத்
தரும்விதியொன்பதாகித் தரைமகன் மதியோடாகத்

குருபதி விரையமாகிக் கொடும்பாம்பு மேழிநின்றால்
வருமது தீம்புண்டாகிக் குழவியுமன்றே மாளும்.

(இ ள்) ஜனன இலக்கினத்தில் சனியும் இராகும் சேர்ந்திருக்க குரு ஏழாமிடத்திலிருக்க இவர்கட்கு நாலில் செவ்வாயிருக்க சூரியன் தனியாயிருக்கும்போது ஏழாமிடத்தில் சந்திரனிருந்தால்ஜனனமான குழந்தை இரண்டு மாதத்தில் மரணமாகும் எ று 14

நன்றிய கோணமேந்திர நகருளோ ராறெட்டாக
னின்றிட வீராறெட்டோர் னிற்கவே கேந்திரகோணம்
அன்றிய மதியோடின ராயினுன் மாதேகேளாய்
சென்றிடச் செய்வதெல்லா னின்றிடாதிருக்குஞ் சீவன்.

(இ ள்) புதன், சனி, சூரியன் ஏழாமிடத்திலிருக்க புதனுக்டகழில் இராகு சந்திரனிருக்க குருவுக்கு ஏழில் சுக்கிரனும், செவ்வாயுமிருக்க ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 15

எட்டுடனெட்டுவீட்டி லிருந்தவன் பாபராகில்
மட்டுடன் சோமன்காரி மகிழ்ந்துடனவர்க்கேயேழிற்
பொட்டெனவிரவினிற்கப்பொன்சுங்கனிவர்க்கேநான்கிற்
கட்டுட னிருந்தாராகிற் கடினமாய் மரணமாமே.

(இ-ள்) ஜனன லக்கினத்திலாயினும் பனிரெண்டாமிடத்திலாயினும் ஆறுமிடத்திலாயினும் சனியிருக்க சந்திரன் ஏழாமிடத்தில் செவ்வாயுடனே சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 16

எட்டவர்க் காறுவீட்டி லிருந்தவன் சனியேயாகிப்
பெட்டென நான்கிற் செவ்வாய் பிரியமாய்னிற்கத்தானும்
மட்டற விவர்க்கேநான்கின் மன்னவ னிரவிதிங்கள்
ஒட்டுற வாகனின்று லொருநாளின் மரணம்பிள்ளை.

(இ-ள்) சனிக்கு இரண்டு பக்கத்திலும். சூரியனும் செவ்வாயும் சேர்ந்து நிற்க எட்டாமிடத்தில் இராசியிருக்க சுபகிரகங்கள் சூரியனுக்கு பின்னிடத்திலிருக்க சனி இலக்கினத்திற்கு அதிபதி நீச்சமாயிருக்க அவருடனே சேர்ந்திருந்தால் ஜனனமான குழந்தை அப்போதே மரணமாகும் எ று 17

பாம்புனின் றதற்குநான்கிற்பத்தியே சனியுநிற்கத்
தேம்புட னிவற்குப்பத்தில் வெய்யவன் சுங்கன்புத்தி

ஆமிட மதற்கேயேழி லம்புலிசெவ்வாய்நின்றாற்
காம்பிள முலையினாளே கடினமாய்ச் சாவுமுண்டே.

(இ ள்) சஷ்டாஷ்டம ஸ்தானாதிபதியுடன் சேர்ந்த சந்திரன், குரு சுக்கிரன், வேறுபட்டு அஷ்டஸ்தானம் ஆறுமிடங்களிலிருப்பதுடன் ஒருவரை யொருவர் சேராமலிருந்தால் ஜனனமான குழந்தை உடனே மரணமாகும் எ று 18

மதிக்காறின் மந்தனிற்க மருவிடையிதற்கேயேழில்
அதிர்க்கோண மாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தானாகிற்
பதிக்காறி லிரவிபுந்தி பாங்குடன் சேர்ந்தேநிற்க
விதிக்காறு மாதந்தன்னில் விளையுமே மரணமாக.

(இ ள்) சூரியனும், சுக்கிரனும், செவ்வாயும் சேர்ந்து இலக்கினத்திலிருக்க சந்திரன் நீசமாயிருக்க இராகு இலக்கினாதிபதியும் அஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜனன மான குழந்தை உடனே மரணமாகும் எ று

விதியதிர் சனியேனிற்க வீரிமுன் னிரவியின்சேய்
அதியதிற் கைந்திற்பாம்பு மவருடன் மதியுநிற்கப்
பதியதற் கீறுராகப் பருசுங்க னரசன்புந்தி
சதிரத மாகிநின்றாற் சாவதுமெய்தான்மாதே.

(இ-ள்) பகை கிரகங்கள் ஐந்தாமிடத்திலிருக்க நாலாமிடத்தில் ஆறுமிடம் எட்டாமிடத்திலிருந்தாலும் பகையான கிரகங்கள் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 20

சோமனாரிந்த வீட்டின் சொல்லிடஞ் சனியேநிற்கச்
சோமனார் வலமாயாறிற் றீயருங் குருவுஞ்சுங்கன்
பரமனா ரிவற்கேரெண்டிற் பனிபுந்தி கூடிநிற்க
ஏமனார் கூடவந்திங் கிழுத்துடன் போவன்றானே.

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு முன்னும் பின்னும் சனியும், இராகுமிருக்க சந்திரனுக்கு எட்டாமிடத்தில் குருவும், சுக்கிரன், மூன்றுமிடத்திலும் சூரியன் நாலாமிடத்தில் நின்றால் ஜனனமான குழந்தைக்கு மரணமுண்டாகும் எ று 21

எட்டவ னிருந்தவீட்டி லிரவியும் பாம்புங்கூட
மட்டெனவர்க்கேயேழின் மகிழ்ந்துடன்செவ்வாய்சேர
விட்டவ னிடத்தில்மந்தன் விண்மதியிவர்க்கேயாறில்
மட்டுடன் சுபருநீச மாயினுற்குழவி சாமே.

(இ-ள்) சுக்கிரனுக்கு எட்டு பனிரெண்டாமிடத்தில் சூரியன் சனி செவ்வாய் குரு நிற்க அந்த ஸ்தானத்திற்கு எட்டில் இராகுநிற்க சனிக்கு நான்கில் சந்திரனிருக்கும்போதுஜனனமான குழந்தை ஒரு வருஷத்தில் மரணமாகும் எ று 22

தாழ்த்திய வெட்டோனீசஞ் சதிர்பின்னே னஸ்தமிக்க
வாழ்த்திய வுதையத்தானும் வலமது செவ்வாய்கூட
வாழ்த்திய வரவங்காரி மதிக்கேழி னின்றுராகி
போற்றிய தனத்திற்சுங்கன் புந்தியு நின்றுற்சாமே.

(இ ள்) ஏழு இலக்கிணம் பத்தாமிடத்தில் சனி செவ்வாய் பாபகிர கங்கலிருந்தாலும் சந்திரன் சுபகிரகங்களின் ஸ்தானத்திலிருந்தாலும் இராகு எட்டாமிடத்திலிருந்தாலும் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 23

குருவினிற் கெட்டிற்க்கரி குருமதிக் காறிற்பாம்பு
பிறருக்கு மாறிற்சேய்க்கும் பிறகினே னஸ்தமிக்க
மருவொக்கப் புந்திநீச மகிழ்ச்சியில் லாமனிற்க
கருவற்றுப் போமேபிள்ளை கண்டுடனுரைப்பாய் மாதே.

(இ ள்) கோணாதிபதிகள் சேர்ந்து அஷ்டம ஸ்தானத்திலிருந்தால் சந்திரனும் குருவும் எட்டாமிடத்திலிருக்க செவ்வாய் இரண்டிலிருக்க இராகு நாலிலிருக்கும்போது ஜனனமான குழந்தை மரணமாகும் எ று

கதிருதையத்துக் கெட்டோன் கனக்கவேயுதையஞ்சேர
அதைச்சரி காரிசெவ்வா யமர்ந்துட னிருக்கத்தானும்
எதிரதிர்ச் சுபரில்லாம் லிருக்கினு மாதேகேளாய்
சதிரொரு நாளுநில்லாச் சாவது வருவதுண்டே.

(இ ள்) சூரியன் சந்திரன் சனியும் ஒன்ருய்ச் சேர்ந்து நிற்க குரு எட்டாமிடத்திலும் இராகு கோணத்திலிருக்க தன ஸ்தானத்திற் செவ் வாயும் சுக்கிரனுமிருந்து ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 25

அருக்கனுக் கெட்டோனேழி லதிர்ச்சனி கூடிநிற்க
உருக்குமா யுதையத்தானு மொருமையா யஸ்தமிக்கப்
பெருக்கமாய்ச்சோமற்கெட்டோன்பின்புடன் மதியுஞ்சேர்ந்தால்
அருக்கமாய்ப் பிறந்தபிள்ளை யன்றிரவதனிற் சாமே.

[இ ள்] செவ்வாயும் சனியு மெட்டாமிடத்தில் இலக்கினதிபதியு டன் சூரியன் சேர்ந்திருந்தால் இலக்கினத்தில் அஷ்டமாதிபதியிருந் தாலும் பிறந்த குழந்தை மரணமாகும் எ று 26

புந்திமதிசுங்கன்கன்னி பொருந்தியநான்கின்மந்தன்
விந்திய பாபரெண்டில் வெய்யவன்விரையநிற்க
அந்தியுஞ் செவ்வாய்பத்தி லாறினிற் குருவேநின்றுர்
சந்தேகமில்லை மாதே சாவதுமுடனேயுண்டு.

[இ ள்] பிதுர் ஸ்தானதிபதி நீசமாயிருந்தாலும் மூடமானாலும் அஷ்டமாதிபதி நீசமாயிருந்து ஐந்தாமிடம் அஷ்டமஸ்தானத்திற் கெட்டாமிடத்தான் பலஹீனமாயிருந்தும் சந்திரன் பகை க்ஷேத்திரதிலி ருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகுமென்று சொல்வாய்மாதே எ று 27

செனித்தொரு வளவிற்காரி சேர்ந்திட வரவங்கூட
இனிக்குரு வேழினிற்க விவர்க்குநால் பூமன்சேரத்
தனித்தொருவீட்டில்வெய்யோன்றனக்கேழிற்சோமனின்றுற்
கனிக்கர மானபிள்ளை கண்டிருமா தஞ்சாமே.

[இ ள்] விரயஸ்தானக் கடகமாயிருந்து குரு மகரத்திலிருந்து நீச பார்வையாய் பார்க்க சிம்மத்திலிருந்து வெறும்சந்திரனிருந்தாலும்ஜனன மான குழந்தை மரணமாகும் சுக்கிரனும் குருவுடனே சம்பந்தமானாலும் கும்பத்திலிருந்து ஜென்மாதிபதியால்பார்வை பெற்றாலும் ஒரு மாதற்குள் ளாக ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 28

கரிமுகில் வண்ணன்காரி கதிரவ னேழினிற்கப்
பிரியமாய்ப் புந்திக்கேழிற் பெருநாளன் சோமன்சேர
அரியதாய் குருவுக்கேழி லவ்வெள்ளி பூமனிற்கச்
சரியதாய் நிகழுமாகிற் சாவதுமுண்டு மாதே.

[இ ள்] சந்திரன் குரு சனி இவர்கள் சேர்ந்திருக்க அஷ்டமாதிபதி பகைநீசமாய் அஸ்தமயமாயிருக்க கேந்திர கோணாதிபதிகள் பகைநீச மாய் பலமில்லாமலிருந்தால் பிறந்த குழந்தை மரணமாகும் எ று 29

உதையமாமதி பண்ணிரண் டாயினுமாறெட் டாயினுமே
இதையாதிபதிக் கேழினிற்சனி யொருவனுமேநிற்கச்
சிதையாமதி யேழிடமாகவே சேரவும் பூமகனுர்
வதையாதி யெவருமொரு குழவிமாண்டிடுமே.

(இ ள்] சனி நாலாமிடத்தில் செவ்வாய் பகையாயிருக்க சூரியன் நான்கில் தனியாயிருந்தால் தேய்பிறைச் சந்திரனுக்கு அஷ்டம ஸ்தா

னம் உதய லக்கினமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 30

மந்தனுர்க்கிருபக்கங் கதிரோன் செவ்வாய் மகிந்துடனெட்டி
லொருபாம்பேநிற்க தொந்தனுய்ச்சுந்திரர்க்கே சனியேழாகிற்சுப
வரு
ருமேயிரவி விடையின்னிடம்தாக வந்தனுருதையத்துக்கதிபதி
நீசமாகியேவி ரைத்திடமதனில் அந்தகனுர் புரமதின்மதிப்பாகவே
யவிந்து குழவி வருவதரிதாகவே போய்விடுமே.

[இ ள்] ஜனன லக்கினத்திற்கு ஜனும் இராகுமிருக்க சனி மறைவுஸ்தானத்திலிருந்தாலும் குரு அஸ்தமயமாயிருந்தும் சுக்கிரனும் நீசமாய் சூரியன் சந்திரனுக்கெட்டில் பகையாயிருந்தால் பிறந்த குழந்தைக்கு மரணமுண்டாகும் எ று 31

ஆறெட்டுக் குடையோர்சேர்வுற் றம்புலிராஜன்சுங்கன்
மாறிட்டு மெட்டாருக மறுத்தங்கே கூடாராகிக்
கூறிட்டவுதையந்தன்னிற் குறிவிடை நிற்கத்தானும்
வேறிட்டுப் போமேபிள்ளை வீவதோராண் டிரண்டில்.

[இ ள்] இலக்கினுதிபதி நீசமாய் இராசிநாதன் அஸ்தமயமாயிருக்க சனியும் அ ஷ்டமாதிபதியும் இலக்கினத்திலிருக்க செவ்வாய் நாலிலும் ஏழாமிடத்தில் இரா குமிருந்தால் பிறந்த குழந்தைக்கு மரணமுண்டாகும் எ று 32

இரவிசுன்செவ்வாய்தானு மிருந்தோரின் னிடத்தார்சேர்ந்து
கருதுதை யத்தினிற்கக் கனமதி யீனமானுல்
அரவுமோ ருயிரெட்டாக வமந்துட னிருந்தாராகில்
தரவுறும் பிள்ளைநில்லாச் சாவதுகுழவிமாதே.

[இ ள்] பாபகிரகங்களுடனே இலக்கினுதிபதி சேர்ந்திருக்க சுபகிரகங்கள் பார்வையில்லாமலும் சந்திரனுக்கெட்டிலிலுருக்க இலக்கினுதிபதிக்கு செவ்வாய்க்கும் ஏழிலிருக்கும்போது ஜனன மான குழந்தை மரணமாகும் எ று 33

பகையோரந்தி லிவ்விடத்தாரு மிகையோர் நான்கிற்சேர்ந்திடவே
மிகையோர்நான் கிடத்தாரு மேலெட்டாறி லிருக்கினுமே

வகையொருபொல்லா தொருவனுமே வந்துதையத்தினின்
றிடவே
நகைபருவத்தினிற் சேந்திடுமே நமனுருலக நண்ணுதலே.

[இ ள்] செவ்வாயும் சனியும் இலக்கினத்திலிருக்க சந்திரனும் சூரியனும் ஏழாமிடத்திலிருக்க நான்காமிடத்தில் இராகு நின்ருலும் இவர்கட்கு ஆறு எட்டாமிடத்திலிருந்தாலும் தாயுடன் குழந்தையும் மரணமாகும் எ று 34

கண்டிட னுதயமுன்னும் பின்னுமாய் சனியேபாம்பும்
விண்டிடு னின்ருராகில் விண்மதிக் குருவுமெட்டில்
மொண்டுடன் சுங்கன்மூன்றின் முழுமதிர்நான்கினின்ருர்
கொண்டுடன் போவர்தூதர் குழவியைக் கூறுசெய்தே.

[இ ள்] பத்தாமிடத்தானும் ஏகாணுதிபதியும் நீசமாயிருக்க இலக்கினுதிபதியும் ஏழாமிடத்தானும் அஸ்தமயமாயிருக்க தேய்பிறைச் சந்திரனுயிருந்தால் குழந்தை மரணமாகும் எ று 35

சுங்கனுக் கீராறெட்டிற் சூரியன்காரி செவ்வாய்
அங்கனேர ரசேனின்ற வதற்கெட்டிலரவநிற்கப்
பொங்கமாய்ச் சனிக்கே நான்கிற் போயிருந்தவனுஞ்சோமன்
இங்கித மாகநின்ரு லிவனிமோ ராண்டிற்சாவன்.

[இ ள்] ஜன்ன இலக்கினத்திற்கு இராகு செவ்வாய் சனியும் சேர்ந்திருக்க அஷ்டமாதிபதி நான்காமிடத்திலிருந்தால் ஜனனமானகுழந்தை மரணமாகும் எ று 36

ஏழுடனுதையம்பத்தி லிருக்கவேசனிசேய்தீயர்
வாழ்மதி நல்லோராண்டில் வருந்தவத் திடத்திருந்தால்
தாழ்வுடனரவுமெட்டிற் றளர்ந்திட திருந்தானுகில்
வாழ்வுடன் கூடப்போமே வந்தநா ளதனிற்சாகும்.

[இ ள்] இராகு, சூரியன், சனி, செவ்வாயும் நான்காமிடத்திலிருந்தாலும் இராகு கோணத்திலிருந்தாலும் அவர்களுக்கு ஆறு எட்டாமிடத்திலிருந்தாலும் குழந்தைக்கு அரிஷ்டமுண்டாகும் எ று 37

கோணத்தார் சேர்வுற்றெட்டிற் கூடியே சனியுநிற்க
நாஞெத்த மதியும்வேந்த ஞலிறண்டாகி நிற்கத்

சேணுற்ற செவ்வாய்ரெண்டிற்செம்புள்ளி பாம்புநான்கிற்
காணுற்ற நின்ருராகிற் கருதியே குழவிசாமே.

[இ ள்) இலக்கினுதிபதி கேந்திரகோண ஸ்தான த்திலிருந்தாலும் கேந்திர கோணுதிபதிகள் ஆறு எட்டாமிடத்திலிருந்தால். ஆறு எட்டாமிடத்ததிபதிகள் கோண ஸ்தானத்திலிருந்தால் ஜனனமானவர் சுகமுந் தப்பி பூமியிலிருக்க முடியாது எ று 38

ஆதித்தன் காரிசோம னமர்ந்துடன் கூடிநிற்கச்
கோதித்துக் குருவுமெட்டிற் கோணமே யரவநிற்கச்
சாதித்துத் தனத்திற் செவ்வாய் சரியவ ருடனேசுங்கன்
வேதித்து நின்ருராகில் வீயுமே யாண்டிரண்டில்

[இ ள்] தேய்பிறைச் சந்திரன் சனிக்கு எட்டாமிடத்திருக்க சூரியனுடனே இராகுசேர்ந்துஜனன இலக்கின த்தைப்பார்த்தால்குழந்தைக்கு மரணமுண்டாகும் எ று 39

தோஷ நிவர்த்தி

போமென்று சொல்வாய்மாதே பூமனுர் சனியுமெட்டில்
ஆமென்ற லக்கினத்தால வனுமே யிறவிகூடில்
ஏனென்ற வுதையந்தன்னி லெட்டவ னிருக்கதானும்
நாமென்று சொல்லவேண்டா நமனது கொண்டுபோமே.

(இ-ள்) சனிக்கு எட்டாமிடத்தில் சூரியனிருக்க பூரணசந்திரனை இராகு பார்த்தால் ஜனனமான குழந்தைக்கு மரணமுண்டாகு மென்றறிவாய் மாதே எ று 40

போமென்று சொல்லாமே பிதுர்நவ நீசமூடம்
ஆமென்று சொல்லலாமே யந்தெட்டுக் கெட்டோனீனம்
நாமென்று சொல்லப்போமோ நன்மதிபகையுமாறுற்
சாமென்று சொல்வாய்மாதே சார்ந்தொரு காளைப்பேறு

(இ-ள்) ஜனன லக்கின த்தில் சுபகிரகங்களிருந்தாலும்பார்த்தாலும் ஜனனமான ஜாதகனுக்கு அரிஷ்டமில்லை வயது அதிகமாகும். ஆனால், தேய்பிறைச்சந்திரன் இலக்கின த்திலிருந்து சுபக்கிரகங்கள் வக்கிரம் அஸ்தமயமாயிருந்தால் ஜனனமான குழந்தை மரணமாகும் எ று 41

இடந்தடவாகநின்ரு லிதிற்குருபார்வையாகில்
வந்தடவாகிநின்றுவழிபார்க்குமெமபுரத்தே
செந்தடவாகிச்சுங்கன் சென்மாதிபார்வையாகிற்
பொந்திடத்திருந்தமர்தம் போய்விடுமென்றுசொல்லே.

(இ ள்) எட்டாமிடத்தான் இரண்டாமிடத்தானுடனே வளர்பிறைச் சந்திரனிருக்க இலக்கினுதிபதி ஏழுக்குடையவர் கேந்திரகோணத்தில் சுபமாயிருக்க திரிகோணுதிபதியும் சுபக்கிரகங்களிருக்கும் ஸ்தான பலனறிந்து சொல்லுவாய்மாதே எ று 42

பிறையிறைசனியும்பாவி பிரியமாய்நிற்கக்கூட
நறைபிறப்பில்லாவெட்டா னலங்குன்றியஸ்தமிக்க
இறைபிறந்ததியுங்கேந்திர கோணருநலமேயன்றித்
தரைபெறல்சொல்லலாமோ சாவதுநிஜமேமாதே.

(இ-ள்) இலக்கினத்திற்கு திரிகோணுதிபதிகள் அசுபராயிருந்தும், கேந்திர ஸ்தானுதிபரும் அசுபராயிருப்பதுடன் பனிரெண்டாமிடத்ததிபதியும் எட்டாமிடத்ததிபதியும், சமமாக இருந்தாலும் கிரக நிலைமையின் வகையறிந்து சொல்வாய்மாதே எ று 43

புல்லதாசனிக்கேநான்கிற் பூமனுர்பகைத்தேநிற்க
ஒல்லையிலிரவிநான்கி லொருவர்கூடாமனின்ருல்
மல்லதாய்ப்பிறையுந்தேய்ந்து மதிக்கெட்டிலுதயநின்ருற்
சொல்லலாஞ்சாகுமென்று துணிந்துடனுலகின்மாதே.

[இ ள்] ஜன்ன இலக்கின த்தில் பாபக்கிரகங்களிருக்க புதனுடனே மற்ற கிரகங்களும் இருந்தாலும் சூரியனும் சுபகிரகங்களும் ஒருவருக்கொருவர் பகையாயிருக்க ஜாதகன் ஆயுள்வரையிலும் துன்பமும் துயரமுமாயிருக்கும் எ று 44

மறித்தொருசனியனிற்க மற்றும்பொன்னஸ்தமிக்க
மறித்தவன்சுங்கனீசம் வெய்யவன்மதிக்கேயெட்டிற்
பறித்தவன்பகையோர் சேர்ந்துபாம்புசேய்க்குதையனிற்ருற
குறித்துடன்சொல்வாய்மாதே குழவியுஞ்சாமேயென்று.

[இ ள்) இலக்கினுதிபதி உச்சமாயிருந்தாலும் சுபக்கிரகங்கள் நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு அச்சமும் பயமுண்டாயிருக்கும்ஆனல்சத்துரு ஸ்தானுதிபதி நீசமாய் மற்ற கிரகங்கள் நட்பு ஆக்ஷி உச்சமாயிருதால்

ஜாதகனை சகலரும் புகழ்ந்துரைக்கும் படியான கீர்த்திப்பிரகாசமாய் சகலருக்கும் நல்லவராய் மேன்மையாய் இருப்பதற்காகும் எ று 45

செறித்தலக்கினதிநீசஞ் சென்மாதியஸ்தமிக்கக்
குறித்தங்கேசனியுமெட்டோன் கூடியேயுதையஞ்சேராக்
கறித்தோருசெவ்வாய்நான்கிற் கண்டிடிலேழிற்பாம்பு
தெறித்துடனின்றுனுகின் மரணமேகுழவிதானும்.

[இ ள்] இலக்கினதிபதி ஆக்ஷியாயிருந்தாலும் சிற்சிலசமயம் தாழ்மையாயிருக்கும் சில கிரகம் நீசமாயிருந்தால் மற்ற கிரகங்களின் பலத்தினுல் கொஞ்சம் மேன்மையுண்டாயிருக்கும் ஆனுல், ஆக்ஷியினுல் மகிழ்ந்து தாக்ஷியைத் தள்ளக்கூடாது, இரண்டும் சபலமாய்ப்பார்த்து தான் பலன் சொல்லவேண்டும் எ று 46

சேராதபாவியோடே சென்மாதிகூடிநிற்கப்
பாராதநல்லோர்நின்று பனிமதிக்கெட்டாய்நிற்கக்
காராமனுதையத்தானுங் காரிசேய்க்கேழினிற்க
வாராதேவருமேதீம்பு வையகந்தன்னின்மாதே.

(இ ள்) கிரகங்கள் பகையாயிருந்தால் அவர்களே சில சமயம் நன்மை செய்வார்கள், நன்மையாயிருந்தால் பகையும் நேரிட செய்வார்கள் இந்த கிரக நிலைகளைச் சரியாய்க் கவனித்துப்பார்த்து உலகில் பிறந்த ஜாதகர்களுக்குப் பலன் சொல்லவேண்டும் எ று

ஒருமையாய்க்காரிசெவ்வா யுதையத்திற்சேர்ந்துநிற்க
அருமையாய்ச்சோமனேழி வலரியுங்கூடனிற்கப்
பிரியமாய்நான்கிற்பாம்பு மிதற்கரசெட்டாருகிற்
கரியதாம்பிள்ளைகூடக் கலந்துடன்சாமேமாதே.

(இ-ள்) கிரகங்கள் ஆட்சி, பகை நட்பு, நீசமாயிருக்கும் ஸ்தான பலனைப்பார்த்து கேந்திரகோணம். சஷ்டாஷ்ட விரயஸ்தானம்இலாபஸ்தானத்தில் கிரகங்களை ஆராய்ந்துணர்ந்து பலன் சொன்னுல் சந்தேகமிர து பெண்ணே எ று 48

பத்துடன்பத்துவீட்டிற் பதியவர்பதியாய்நிற்க
இத்துடன்கோணத்தாரு மிழிகுலமாயிருக்க
மத்துடனுதயமேழோன் மனமிடைந்தஸ்தமிக்கச்
செத்துடன்போமேபிள்ளை க்ஷணசந்திரனுமானுல்

(இ·ள்] நவக்கிரகங்களுமிருந்த இராசி நிலையை ஆராய்து பார்த்து. சஷ்டாஷ்டம விரயஸ்தானம் கேந்திரகோணஸ்தான முதலாகியவையனைத்தும் கவனித்தும், குருசந்திரனின்றஸ்தானத்தையும்பார்த்துதன் பலன் சொல்லவேண்டும் எ று 49

விண்ணவர்பிறக்கிற்றீது விளையும்வாறேதோவென்னில்
நண்ணவர்சுகப்படாம னலக்கமாமறிப்பேயாகிக்
கண்ணவர்பாம்புஞ்சேயுங் கரியவனிவர்கள்சேரிற்
கொண்ணவர்நாலாய்நிற்பர் கொடுங்கணைவிழியினுளே.

(இ-ள்) சனியிருந்த ஸ்தானத்தைப்பார்த்து இலக்கினபலனைச் சொல்லவேண்டும் சூரியனின்ற ஸ்தானத்தைக் கவனித்துதகப்பனுக்குப் பலன் சொல்லவேண்டும், இராகு கேதுக்கன் நின்ற ஸ்தானத்தைப் பார்த்து ஜ தகனுடைய யோகத்தைச் சொல்ல வேண்டும் சுக்கிரனின்ற ஸ்தானத்தைப் பார்த்து களஸ்திரத்தின் பலனைச் சொல்ல வேண்டும்எ று

வையகத்துதித்தபேர்க்கு வருகின்றவரிட்டமெல்லாம்
பொய்யரவிரவிகாரி பூமனுநான்காய்க்கோணம்
மெய்யரவாகினின்று மிகைத்தவர்க்காறெட்டாகிற்
கையறமாதனின்று கலங்குவர்புவியின்மாதே.

(இ ள்) செவ்வாய் கிரகம் நின்ற ஸ்தான பலனைப் பார்த்துச் சகோவரர்களின் பலனைச் சொல்வாய், புதனிருக்கும் நிலையைப்பார்த்துவித்தை கணிதாராய்ச்சியின் பலனைச்சொல்லவேண்டும். இவையெல்லாம் சந்திரனிருந்த இராசியைப் பார்த்துப் பலன் சொல்லவேண்டும் மாதே எ று

மண்ணுவோர்பிறக்கிற்றீது வருவதுகேளாய்மாதே
நண்ணுளோர்கேந்திரகோண நகருளோராறெட்டாகக்
கண்ணுளவீராறெட்டோர் கதித்துநாற்கோணஞ்சேர்ந்தால்
எண்ணுளசுகமுந்தப்பி யிருப்பதுமில்லைகண்டாய்.

(இ ள்) சனி செவ்வாய் சந்திரனுக் கெட்டாமிடத்திலிருக்க குருவுஞ் சுக்கிரனும் சேர்ந்திருக்க இராகுக்கும் சந்திரனுக்கும் அஷ்டமஸ்தானத்தில் சூரியனிருக்க ஜாதகன் எவ்வளவு முயற்சியாய் பந்தயங்கூறி சாமார் தியஞ்செய்தாலும் பகை நேரிடும் எறு 52

மரணமேயெனச்சொல்லீன மதியுமேசனிக்கேயெட்டில்
அருணனையரவந்தீண்டி லக்கனமிறப்புநோக்கி

இரணமாய்ப்போமேபிள்ளை யிருப்பதுபொய்தான்மாதே
அரணினிலிருந்திட்டாலு மன்றிரவதனிற்சாவே

(இ ள்) அஷ்டமஸ்தானாதிபதி சூரியனாயிருக்கவும், சந்திரனின்ற இராசிக்கு அஷ்டமத்திலிருந்தாலும் அஷ்டமஸ்தானத்தில் குரு சேர்ந்திருந்தாலும் இராகு இருந்த ஸ்தானத்திற் கெட்டில் சுக்கிரனிருந்தாலும் ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ று 53

தோஷ நிவர்த்தி

சாவதுமெய்தான்சொல்வாய் சனிக்கெட்டுலிரவினிற்க
ஆவதுகலையுயர்ந்த பூரணமதியைப்பாம்பு
நாவதுநீட்டிப்பார்க்க நானிலத்துதித்தகாளை
போவதுமெய்தான்சாவே பொல்லாதகெடுதிமாதே.

(இ ள்) சுக்கிரன் சந்திரனுக் கெட்டாமிடத்திலிருக்கவும் குரு இலக்கினத்திற் கெட்டிலிருக்கவும் அஷ்டமஸ்தானாதிபதி இராகுடனே சம்பந்தமாய் எட்டுக்கெட்டாமிடத்திலிருக்கவும் குரு புதன் சூரியனும் சனிக்கு எட்டாமிடத்திலிருக்க ஜனனமான குழந்தை பலமாயிருக்குமாதே எ று.

பூரணபெலத்தினோடு புண்ணியர்சுபமேயாகிற்
காரணமில்லைசாகக் கனக்கவேவயதுமுண்டு
சீரணமதியேயானூர் செல்வருந்தாழ்ந்துநிற்பர்
கூரணிப்பாபர்மேலாய்க் கொல்லுவர்கொஞ்சநாளில்.

(இ ள்) சூரியனுக்கு சஷ்டாஷ்டமத்தில் குரு இருந்தாலும் பார்த்தாலும் இவர்கட்கு நான்காமிடத்தில் இராகு இருக்க, இவருக்கு சஷ்டாஷ்டம ஸ்தானத்தில் சனியிருக்கும்போது பிறந்த குழந்தை மரணமாகும் எ று 55

எட்டிரண்டுடனேசோம னீனமில்லாமனிற்க
விட்டொருபதினுன்கேழுக் கினியவர்மேலாய்நிற்பர்
மட்டொருகலையினின்றூன் மாறுமுக்கோணர்மேலோர்
தொட்டதுகுறிதான்பார்த்துச் சொல்லவும்வேண்டுமாதே.

(இ ள்) இலக்கினாதிபதியும் சூரியனும். சந்திரனுடனிருக்க சனிக்கு அஷ்டமத்தில் குருவுமிருக்க நாலாமிடத்தில் சுக்கிரனும்செவ்வாயுமிருக்க இவ்விதமாய் ஜாதகனுக்கு அற்பசுகமாயிருக்கும் எ று 56

மூன்மூன்றுபிறையிற்பொல்லா மூன்றுகோணத்தாரபொல்லார்
யுன்மூன்றுபிறையிற்கேந்திரப் பதியரும்பொல்லாராவர்
தன்னுறுபனிரண்டெட்டோர் சமனுகவிருப்பர்தாமும்
வன்காதலுள்ளமாதே வகையறிந்தெடுத்துச்சொல்லே.

(இ-ள்) உதய லக்கினாதிபதி பார்வையானல் உபயலக்கினத்தை பாராவிட்டால், சந்திரனைப் பார்த்து உண்மைநிலை தெரியாவிட்டால் கிரகங்களின் செய்கையைப்பார்த்து யாதொரு நினைவுமில்லாமல் இலக்கின பலனைச் சொல்லவேண்டும் எ று 57

பொல்லாத பாபர்நிற்கப் புகுந்திடப்புந்திதானும்
எல்லாருநலமேயாவ ரிருந்திடவிரவிநல்லோர்
சொல்லாதபகையேகொண்டு தோன்றியவயதுமட்டும்
இல்லாதுசொல்லப்போமே விளங்கிள்ளைக்கினியமாதே.

(இ-ள்) இவ்விதமாக சொல்வதற்கிசைந்த எத்தனை குறியாகுமென்ருல் நன்மையாக ஜனனமானவர்கன் நல்ல ஸ்தானங்களின் கிரகளிருப்பதுபோல நல்ல முகூர்த்த சுபனமருவும் சாந்தியும் செய்வற்கெல்லாம் துயரப்படச் செய்யும் எ று 58

உச்சமேயாகினல்லோ ரொருவேளைநீசமாகும்
அச்சமேபொல்லாதாகி யவருமேதீம்பாய்நிற்பர்
குர்ச்சமேய்நீசமாகிற் கொள்குமோருச்சமுண்டே
மெச்சவேநல்லோராகி மேலாகிநிற்பர்மாதே.

(இ-ள்) சுபகர்மம் செய்யும்போது சொல்தனம்வேறே வேண்டியதில்லை கிரகங்களின் கேந்திரமிருந்தால் தோஷ நிவர்த்தியாகும் சுபவிகளெல்லாம் கவனித்தால் நன்ருயிருக்கும் கேந்திரஸ்தானாதிபர்களெல்லாம் நன்மையான பலன் கொடுப்பார்களென்றுரைப்பீர்கள் எ று 59

பிரதி அரிஷ்ட காண்டம் முற்றிற்று, ஆக 451.

தனக் காண்டம்

மீனம் $4\frac{1}{4}$	மேஷம் $4\frac{1}{4}$	ரிஷபம் $4\frac{1}{2}$	மிதுன $5\frac{1}{4}$
கும்பம் $4\frac{1}{2}$	பனிரெண்டு இராசிகட்கும் 60 நாழிகை ஆகும்.		கடகம் $5\frac{1}{2}$
மகரம் $5\frac{1}{4}$			சிங்கம் $5\frac{1}{4}$
தனுசு $5\frac{1}{2}$	விருச்சி $5\frac{1}{4}$	துலாம் 5	கன்னி 5

தனலாபம்

ஆட்சியாய்நின்றபேர்க்குத் தாட்சியுங்கொஞ்சமுண்டு
தாட்சியாய்நின்றபேர்க்கிங் காட்சியுங்கொஞ்சமுண்டு
ஆட்சியைமகிழ்ந்துபார்த்துத் தாட்சியைதள்ளவேண்டாம்
கேட்சியாயூடுதாக்கிச் சரிப்படச்சொல்வாய்மாதே.

(இ ள்) தனபாக்கிய லாப ஸ்தாஞதிபதிகள் சுபக்கிரகங்களுடனே சேர்ந்திருக்க இலகிஞதிபதியும் ஆக்ஷியாயிருக்க இந்த கிரகங்கள் பாப கிரகங்கள் பராதிருந்தாலும் இலக்கிஞதிபதி உச்சம் ஜாதகன் வெகு பொருள் சேகரித்தித் தனவந்தஞயிருப்பதற்காகும் எ று 1

பகையென்றுசொன்ஞர்ச்சொல்லும் வகையிலேநல்லதாகும்
நகையென்றுசொன்ஞல்வந்து பகையாகநிற்குமாதே
மிகைவகைதெளிந்துபார்த்து மேதினிதனிலேநன்ருய்
வகைதொகையறியாதார்க்கு வகுத்துரையினியமாதே.

(இ ள்) ஜீவனஸ்தாஞதிபதியின் முன்ஞலும் பின்ஞலுமிருக்கும் கிர கங்கள் ஸ்தான த்திலிருக்க, இலக்கிஞதிபதியும் தஞதிபதியும் சேர்ந்து இலாபஸ்தானத்திலிருக்க செவ்வாயும் சனி வீட்டிற்கு பனிரெண்டாமி டத்தில் சூரியனிருக்க அந்த ஜாதகன் தனவந்தஞயிருப்பதற்காகும் எ று 2

ஆட்சிநட்புச்சநீசமறியவே பகையுங்கூடச்
சாட்சியாயுதையங்கொண்டு சதிர்கோணமீராறெட்டும்
மாட்சியாய்லாபம்ரெண்டு மகிழ்ந்திதிலூடுதாக்கி
ஆட்சியாய்ப்பார்த்துச்சொன்ஞ லையமொன்றில்லைமாதே.

(இ-ள்) தன தாஞதிபதி லாபஸ்தானத்திலிருக்க, இராகு அவர்க்கே ழாமிடத்தில் குருவுடனே சேர்ந்திருக்க இலாபஸ்தாஞதிபதிஇலக்கிஞதி பதிக்கும் தனஸ்தாஞதிபதிக்கும் ஏழாமிடததிலிருக்க சூரியனும்செவ்வா யும் சனியும் இராகு பார்வையில்லாதிருக்க மன தைரியத்துடனே மகா தனவந்தஞக வாழ்ந்து இருப்பதற்காகும் எ று 3

ஒன்பதுபேருநின்ற நிலைதனையூடுதாக்கி
இன்பமாய்ப்பார்த்தொன்றுக்கொன் றிருப்பதுகேந்திரகோணம்
தன்பதிக்கீராறெட்டிற் றனலாபமாஞேர்கொண்டு
பொன்பதிமதிக்கேபார்த்துப் போம்பலன்சொல்லலாமே.

(இ ள்] சுபக்கிரகம் இலக்கினத்திலிருந்து சப்தமஸ்தாஞதிபதிக்கு ஏழிலிருந்தால் செவ்வாய் சேர்ந்து அவருக்கேழாமிடத்திலிருக்க, இவர் களுடன் சனி செவ்வாய் முதலான பாபகிரகங்களும் சூரியன் இராகு இவர்களைப் பாராமலிருக்க ஜாதகன் வெகு பொருள் சேகரஞ்செய்து தன வந்தஞய் வாழ்ந்திருப்பதற்காகும் எ று 4

காரியைப்பிடித்துப்பார்த்துக் கடுகவேவிதியைச்சொல்வாய்
சூரியன்றனைப்பிடித்துக் சொல்லுவாய்பலன்பிதுர்க்கு
விரியபாம்பைப்பற்றி விளங்கவேயோகஞ்சொல்வாய்
சோர்விலாச்சுங்கன்றன்ஞற் களத்திரபலனைச்சொல்லே.

[இ ள்] சுபக்கிரகங்கள் கேந்திரகோணத்திலிருக்க அவர்களுடன் சுபக்கிரகங்கள் சேர இவர்கட்காராமிடத்தில் சனியிருக்க அந்த ஜாதக ஞுக்கு பலவிதமாய் திரவியஞ்சேரும் எ று 5

பூமஞனுடன்பிறப்பைப் போதவுமறிந்துசொல்வாய்
நாமஞல்பேரும்புந்தி நல்கணக்கினியபுந்தி
தாமஞர்முகத்திஞலே தையலேசொல்லக்கேளாய்
சோமஞர்முதலாய்க்கொண்டு சொல்லவேவேண்டுமாதே.

[இ ள்) தனஸ்தானம் பாக்கியஸ்தானம் இலாபஷ்தானமாகிய மூன்றிடத்தின் அதிபதிகளின் ஸ்தானத்திலும் ஐந்தாமிடம் ஆருமிடத்திலும் மற்ற கிரகங்களிருக்க சனியும், இராகும், ஏழாமிடத்திலிருக்க இவர்களை சுபகிரகம் பாராமயிருக்க அந்த ஜாதகனுக்கு திரவிய நாசமாகும் எ று

மந்தன்பூமன்மதிக்கெட்டின் மற்றோர்குருவுஞ்சுங்கனுமே
வந்தங்கிருந்தவரவினுக்கும் வகையாயிரவிமதிக்கெட்டில்
நொந்தங்கிருந்தார்சகலமுமே நேக்காடாகவிளையுமது
பந்தயங்கூறிச்சொன்னாலும் பலியாதிவர்க்குப்பகைவருமே.

(இ ள்) தனநஷ்டம் பத்தாமிடத்தானும் ஏழாமிடத்தானும் இரண்டாமிடத்தானும் சூரியனுடனே சேர்ந்திருக்க மற்ற கிரகங்களும் அஷ்டமாதிபதியும் சத்துரு ஸ்தானாதிபதியுடனே சேர்ந்து மித்துருகிரகபார்வையில்லாமற்போனல் திரவிய நாசமாகும் எ.று 7

எட்டோனிரவியாயினுமே மதிக்கெட்டாயிற்பகையாமே
கட்டாயமர்வுற்றெட்டினதற் கெட்டாயரசன்கூடினுமே
கெட்டோனரவமிருந்திடத்துக் கெட்டாய்சுங்கனிருக்கிலுமே
கெட்டோன் கெட்டாலப்போதுக் கிட்டுயிரிழிந்துமாண்டிடுமே.

[இ ள்] ஐந்தாமிடம் மூன்று எட்டில் சனி, இராகு, சூரியனுமிருக்க குரு சுக்கிரன், புதன். இந்த கிரகங்களைப் பராமலிருந்தாலும் இலக்கினத்திலிருந்தாலும் தனபாக்கியமில்லாமல் தரித்திரனயிருப்பதற்காகும் எ று

மட்டாய்ச்சுங்கன்மதிக்கெட்டின் மலர்ந்தேயரசன்விதிக்கெட்டில்
எட்டாயிருந்தோனவர்க்கெட்டி லிரவுபாம்புமிருந்திடவே
எட்டாய்ச்சனியர்க்கெட்டாகிற் குருபுந்தியைரவியும்விட்டாற்
சிட்டாய்பறந்திடுங்குழவிச் செகமேலிருப்பார்க்குரைமாதே.

[இ ள்] இலக்கினம் இரண்டு இலபாம் அஷ்டமஸ்தானத்தில் சூரியனும். சனியும், இராகுமிருக்க மற்ற கிரகங்கள் ஆறு அஷ்டமஸ்தானத்திலிருக்க அவர்களுடன் சந்திரன், குரு, சுக்கிரனிருக்க சூரியனுக்கேழில் சந்திரனுமிருந்தால் இந்த ஜாதகனுடைய திரவியமெல்லாம் நாசமாகும் எ று 9

இரவியாறெட்டிற் பொன்னவனிருக்கநோக்கப்
பரவியுயர்ந்தயிறைக்கே யிருநான்கிற்பாம்புநிற்க
அரவுநின்றவவ்வீட்டுக் காறெட்டமரச்சேய்சனியும்
மருவியிருக்குமதுவாகிற் செனித்தகுழவிமாண்டிடுமே

[இ ள்] ஜனன இலக்கனம், மூன்று, எட்டாமிடங்களில் பாபகிரகங்களிருக்க இலாபஸ்தானத்தின் முன் பின்னாலும் பாபக்கிரகங்கள் நின்லும், சந்திரன் நீசமாய் பனிரெண்டாமிடத்திலிருந்தாலும் ஜாதகனுடைய திரவியமெல்லாம் நாசமாவதுடன் கெட்டழிந்து ஏழையாயிருப்பதற்காகும் எ று

உதையத்தாரு மிரவியுமதியினிற்க
மதிபொத்தசனிக்கேயிருநான்கின் மன்னவனும்
அதைத்தொரு நான்கிற்சேய்சுங்கன்
விதியத்துடனிருப்பது மிப்படியே.

[இ ள்] தன ஸ்தானம் நாலாமிடத்தில் சூரியனிருக்க, செவ்வாய் தர்மஸ்தானத்திலிருக்க நான்காமிடத்தில் சனியிருக்க, இலக்கினதிபதியிருக்கும் ஸ்தானத்திற்கு நாலாமிடத்தில் புதனிருக்க, இரண்டாமிடத்தில் இராகு நின்று, சனிக்கு நான்காமிடத்திலிருக்க ஜாதகனுடைய இனத்தார்களால் திரவிய நாசமாகும் எ று

தனக் காண்டம்-முற்றிற்று, ஆக 407

ரோக காண்டம்

விரய ஸ்தான	இலக் னம்	தனஸ் ானம்	தைரிய ஸ்தான
இலாப ஸ்தான	இந்த பனிரெண்டு ஸ்தானங்களிலும் கிரகமிருக்கும் நிலையை பார்த்து பலன் சொல்லு		சுகஸ் தானம்
ஜீவன ஸ்தான			புத்ரஸ் தானம்
பாக்ய ஸ்தான	ஆயுள் ஸ்தான	களஸ ஸ்தான	ரோகஸ் தானம்

ரோக மின்மை

உதையாதிபார்க்க வுபமதுகாணுதாகில்
மதியாகப்பிடித்துப்பார்க்க வண்மையுந்தெரியாதாகில்
கிரகாதியாகப்பார்க்க கிடைத்திடுமுள்ளதெல்லாம்
விதியாகச்சொல்வாய்மாதே வேறொருநினைவேயன்றி.

[இ ள்] சந்திரனிருக்க இராசிநாதனும் நல்ல சுபஸ்தான த்திலிருக்க இலக்கினுதிபதி ஆறு எட்டாமிடத்திலிருக்க சுக்கிரனும், குருவும், ஜனன லக்கின த்திலிருக்கும் போதுஜனன மான ஜாதகனுக்கு வியாதிவந்தாலும் விலகிவிடும் அவர்களுடனே சந்திரனும் சேர்திருந்தால் ஜாதகனுக்கு வியாதியே கிடையாது எ று 1

இப்படிச்சொல்லதக்க தெத்தனைகுறியோவென்னில்
நற்படியுதித்தோர்நல்ல நகரம்போற்கிரகம்போலச்
சொற்படிநன்முகூர்த்தஞ் சோபனமருவுஞ்சாந்தி
அப்படிப்பலனீயாது மனையவுமதுவேயோகம்.

[இ ள்] ஜனன லக்கின த்திற்கு இரண்டு பக்கமும் சுபக்கிரகங்களிருக்க சந்திரனிருந்த இராசியாலும் சுபகிரகங்களும் குருவும் பார்வை செலுத்தினுல் ஜாதகனுக்கு ரோகமே கிடையாது ஜனன இலக்கின த்தில் சுக்கிரனிருந்தால் இந்த ஜாதகனுக்கு எத்தகைய வியாதியும் மனுகாது எ று 2

சுபமதுசெய்யுங்கர்மம் சொற்றனம்வேறேவேண்டாம்
நிபமதிலட்சந்தோஷ நிறுத்துமேகிரககேந்திரம்
இபமதாய்ச்சுபங்களெல்லா மெத்திக்குமதுவேநன்று
உபமதுகேந்திரநல்லோ ருறுதியினதுதான்சொல்லே.

[இ-ள்] சந்திரனிருந்த இராசிக்கு இரண்டு பக்கத்திலும் சுபகிரகங்களிருக்க குரு, ஏழாமிடத்திலிருக்க ஜனன லக்கின த்தில் சுக்கிரன் சனியாயிருக்கும் பிறந்த ஜாதகனுக்கு ரோகமில்லாமலும் பண்டிதனுகவுமிருப்பதற்காகும் எ று 3

தனபாக்கியலாபமானோர் தாழ்விலாச்சுபரேசேர
மனையோக்கியமின்றியநல்ல மனையாட்சியுச்சமாக
இனசவுக்யமிலாபாப ரிவரையேபாராரல்ல
வினவுறுமாதேகேளாய் வேண்டியபொருளுண்டாமே.

(இ ள்] இலக்கினுதிபதியை சுபகிரகங்கள பார்த்தாலும் இவருக்கு இரண்டுபக்கமும் பாபகிரகங்களில்லாமல் சுபக்கிரகங்களே இருந்தாலும் அவர்களுடனே சந்திரனுஞ் சேர்ந்திருந்தால்ஜாதகனுக்கு சதாகாலமும் வியாதியில்லாமல் சுக சவுக்கியமாய் வாழ்ந்திருப்பதற்காகும் எ று 4

கன்மாதிமுன்பின்னேருங் கலந்துடன்றனமேசேரச்
சென்மாதிதனத்தோன்கூடிச் சேர்ந்துடனிலாபஞ்சேர
மண்மாதினுதிர்த்தோனீலன் மனையீராறிரவிபாராப்
பெண்மானினனையமானேபெருந்தனத்தவனுய்வாழ்வன்.

[இள்] சதுர்த்த கேந்திரகோணம் மூன்றும் செவ்வாயிருந்தாலும் பார்த்தாலும் கிரகங்கள் எதிர்நோக்கமில்லாமலிருந்தாலும் பாபகிரகங் சேராமல் சந்திரன் வீரியஸ்தானத்திலிருந்தாலும் அந்த ஸ்தானம் சுபர் வீட ாயிருந்தாலும்ஜாதகன் ரோக பயமில்லாமல் சுக சவுக்யமாய் வாழ்ந்திருப்பதற்காகும் எ று 5

தனத்தவனிடத்தான் லாபன்றனியராயவர்க்கேழ் பொன்னன்
சினத்துடனிலாபமானோர் சென்மாதிதனமேழாகக்
கனத்துடனிரவிபூமன் காரியுமரவநோக்கா
மனக்திடமாகநின்றான் மகமேருகிரிபோல்வாழ்வன்.

[இ ள்] அஷ்டமஸ்தானம் இலக்கினமஸ்தானங்களில் சூரியனிருந்தாலும் பார்த்தாலும் அவர்களுடன் இலக்கினுதிபதி சேர்ந்திருந்தால்

ஜாதகனுக்குப் பொல்லாத பித்தரோக முண்டாயிருக்கும், அவருடனே சூரியனிருந்தால் சதாகால பித்த வியாதி விடாமலிருக்கும் எ று 6

உத்தமனுதயங்கூடிச் சத்தமர்க்கேழினிற்க
நித்தமன்மனையோன்கூடிக் கொற்றவர்க்கேழயாகில்
இத்துடன்சனிசேய்தீய ரிரவிபாம்பிவரைப்பாராப்
பெற்றதன்றவமேயென்னப் பெருமையாய்ப்புவியில்வாழ்வன்.

[இ ள்) ஜனன லக்கினத்தில் சந்திரனிருக்க அவருடன் பாபக்கிரகங்கள் சேர்ந்திருதிதாலும் கடக இராசியும் விருச்சிகராசியுமாயிருந்தாலும், அன்றியும் மேற்குறிப்பித்த கிரகங்சள் பனிரெண்டு அஷ்டமஸ்தானத்திருந்தாலும் அந்த ஜாதகனுக்கு சதாகாலமும் க்ஷயரோகமாயிருப்பதுடன் மாரகமும் நேரிடும் எ று 7

சுபர்கோணகேந்திரர்க்கேழ் சுற்றியேபாபரின்றி
அவர்கேந்திரகோணமானே ரம்மனைச்சுபரேசேர
இவர்க்கதிகாரிதீயு மிருந்திடமீருராகில்
எவரிதற்பிறப்பானுது மேந்திழைதனமுண்டாமே.

[இ ள்] சரராசியில் சந்திரனும் சுக்கிரனும் தனியாயிராமல் பாபக்கிரகங்களுடனே சேர்ந்திருக்க, இராகுஞ் சூரியனும் சேர்ந்திருக்க அவர்கள் சஷ்டாஷ்டம ஸ்தானமாயிருந்தால் அந்த ஜாதகனுடைய வமிசத்தார்க்கெல்லாம் க்ஷயரோகமாயிருக்கும் எ று 8

தனமதுபாக்கியலாபந் தலைவருமிருப்பிடத்து
மணமதுற்றைந்திறைந்திலாரின் மந்தனராறேழாகி
இனமதுசுபர்நோக்கில்லா திருக்கினுமாதேகேளாய்
குணமதுதனமேநாசங் குறியிதுதப்பாதாமே.

(இ-ள்) சந்திரன் இரண்டு எட்டிலிருக்க புதனும் குருவும் செவ்வாயைப் பார்க்க இலக்கினதிபதி வக்கிரமாயிருக்கும் கிரகத்தினுடனே சேர்ந்திருக்க சந்திரனும் செவ்வாயும் பார்வை செலுத்தாமல் அஷ்டமஸ்தானதிபதி இலக்கினத்திலிருந்தால ஜாதகனுக்கு சுரநோயுண்டாகும் எ று 9

த ன ந ஷ் ட ம்

பத்தொருவேழிரண்டோன் பாஸ்கரனுடனேகூடி
மற்றெருவீராரெட்டோர் மனையதிர்க்கூடினுலும்

சத்துருவுடனேகூடிச் சனிக்குநால்சசியுமாகி
மித்துருபார்வையின்றேல் மிகுதியுந்தனமேநாசம்.

(இ-ள்) ஜனன லக்கினத்தில் பாபக்கிரகங்கள் சேர்ந்திருக்க இரண்டு எட்டில் சுக்கிரனிருக்க இலக்கினதிபதி நீசமாயிருக்க, குருவும் சந்திரனும் நின்ற ஸ்தானத்தைப்பாபகிரகங்கள் பார்த்தால் ஜாதகனுக்குப்பிரமிய ரோகமுண்டாகும் எ று 10

அஞ்சுமூன்றெட்டிற்காரி யாரலுமிரவினிற்க
நஞ்சுபொன்சுங்கன்புந்தி நலமதியிவரைப்பாராச்
செஞ்சுடர்க்கிரணன்பக்கல் சேர்ந்துடனுதயனின்றல்
மிஞ்சிடுபாக்கியமில்லை மிகத்தரித்திரமேயுண்டு.

[இ ள்) எட்டாமிடம் இரண்டாமிடத்தில் இருந்தாலும் இலக்கினத்தில் செவ்வாயிருக்க சந்திரனிருந்த வீட்டில் இராகிருக்க அந்த ஜாதகனுக்குப் பீடை வியாதியுண்டாகி சதாகாலமும் துயரப்படச்செய்யும் எறு

எட்டொரிரண்டிலாப மிரவியுங்காரியாரால்
மட்டிடோராறெட்டாகி மதிகுருசுங்கனிற்க
விட்டிடோரிரவிச்கேழில் விடையுமேயுதையனின்றல்
இட்டொருநாளுரில்லா திவன்றனநாசமாமே.

(இ-ள்) எட்டாமிடத்தில் செவ்வாயிருக்க ஏழாமிடத்தில் பாபகிரகங்களிருக்க. இரண்டாமிடத்தில் கேது இருந்தால் அந்தஜாதகனுக்கு சதாகாலமும் இரண வியாதியுண்டாகி துன்பமடையச் செய்யும் எ று 12

உதையமூன்றெட்டிற்பாப் ரோங்கிடவிலாபமுன்பின்
பதியவேமுன்பின்பற்றிப் பாபரேநிற்கக்கூட
மதியுமேயீனமாகி மனமிடைந்தீராருகிற்
சிதையுவேதனமுநாசஞ் சீர்கேடனுகிவாழ்வன்.

(இ ள்) இலக்கினத்தில் சனியிருக்க, சந்திரன் ஆறு எட்டாமிடங்களிருத்தால் இவர்களை செவ்வாய் பார்த்தால் ஜாதகனுக்கு கிரத்திரோகமுண்டாகும். அந்த லக்கினத்தை சந்திரனும் பாபக்கிரகங்களும் பார்த்தால் இரத்த ரோகமுண்டாகும் எ று 13

தனத்தினுலிரவினிற்கத் தரைமகன்ருர்மமானுற்
செனித்தநான்மந்தனுகச் சென்மாதிக்கொருநால்புந்தி

மனத்திலரவனிற்க மந்தனுக்கொருநான்காகில்
இனத்தினாற்றனமோச மிருமூன்றிற்சுங்கனால்.

(இ-ள்) மகரத்திலாகிலும் கும்பத்திலாகிலும் சந்திரன் பாபக்கிரகங்களுடனே சேர்ந்திருந்தாலும் சஷ்டாஷ்டமத்திலிருந்தாலும்ஜாதகனுக்கு சதாகாலமும் ரணரோகத்தினால் துன்பப்படுத்தும் எ று 14

செனித்தவன்மதியுநல்ல சேர்ந்திடஞ்சுபமேயாக
விதித்தமனாறெட்டாகி வெள்ளிபொன்னுதையமானாற்
குறித்தொருநாளும்ரோகக் கொண்டிராதலறியோடும்
பறித்தவனுடனேசோமன் பற்றினால்ரோகமில்லை.

(இ ள்) இலக்கினாதிபதியும் இராகும் உதியலக்கினத்திலிருக்க எட்டாமிடத்தில் சனியும் பாபக்கிரகங்களுமிருக்க, சூரியனும் மேற்குறிப்பித்த கிரகங்களுடனே சேர்ந்து இலக்கினத்திலிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் வெள்ளை குஷ்டமாயிருக்கும் எ று 15

உதித்தமளிலக்கினத்துக் கோரிருபக்கநல்லோர்
மதித்தவற்றிடத்தினல்லோர் மன்னவன்பார்வையாகிற்
குதித்ததப்புரத்தேயோடிக் கூப்பிடும்ரோகமில்லை
செனித்திடத்திருந்தாற்சுங்கன் சேராதிரோகந்தானே.

(இ-ள்) ஜனன லக்கினத்தில் பாபகிரகங்களும் இராகும் சேர்ந்திருக்க நாலாமிடத்ததிபதி நீசமாய் அஸ்தமனமாயிருக்க சனி சந்திரனுடனே சேர்ந்து விரயஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு மார்புவலியுடன் சூலைரோகமுண்டாகும் எ று 16

மதிக்கிருபக்கநல்லோர் மன்னவனேழினிற்க
உதிந்தொருவிடத்திற்சுங்க னொருவனாய்நின்றாராகிற்
பதித்தொருரோகமில்லாப் பண்டிதனாகிநிற்பன்
இதற்கொருரோகமின்றேன் றேந்திழைமாதேசொல்வாய்.

(இ-ள்) எட்டாமிடத்தில் சூரியனும் செவ்வாயும் சனியுமிருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் இலக்கினாதிபதி பகை க்ஷேத்திரத்தில் நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் விடாத தலைரோகமுண்டாகி மார்பின் சூலைரோகத்தினாலேயே கண்டமுண்டாகும் எ று

உதையாதிபதியைநல்லோ ரோங்கியேபார்ப்பாராகில்
இதையிருபக்கநல்லோ ரிருக்கிலும்பாபரின்றி

அதையாதிமதியுஞ்சேர்வுற் றவ்விடாலவனேயாகிற்
சுதமகன்போலவாழ்வன் சொல்லுவாய்ரோகமில்லை.

[இ ள்] அஷ்டமஸ்தானாதிபதி நீசனும் சனி செவ்வாயுடன் சந்திரனும் பாபகிரகமும் ஜனன லக்கினத்திலிருக்க, சுபகிரகங்கள்அவர்களைப் பாராமலும் சேராமலிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் வியாதியும் தலை நோயும் சூழ்ந்து கொடுமை செய்யும் எ று 18

சதிரநால்கோணமூன்றாற் சவுமியரிழிக்கநோக்க
எதிரதிற்கூடிநில்லா திருக்கலும்பாபரன்றி
மதுரமாய்மதியும்வீறி மனையதுநலனேயானால்
விதரணமாகவாழ்வன் வினைதீர்புரோகமில்லை.

[இ ள்) செவ்வாய் ஆறாமிடத்திலிருக்க, சுக்கிரனும் சந்திரனும் சனியும் சேர்ந்து இலக்கினத்தைப் பார்க்க புதனுக்கெட்டில் குரு நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு உயிரைப் போக்கும்படியான பொல்லாத ரோகமுண்டாகும் எ று 19

ரோ க ம்

எட்டினிலுதையத்தன்னி லிரவியுமிருக்கநோக்கப்
பொட்டெனவுதையோன்கூடிற் பொல்லாதபித்தரோகம்
கட்டியகச்சிநாளே கனல்வண்ணனிருந்திட்டாலும்
விட்டிடாதிருக்கும்பித்த ரோகமென்றறிந்துகொள்ளே.

(இ ள்] சுக்கிரனும் சூரியனும் எட்டாமிடத்திலிருந்க இவர்களுக்கு ஏழாமிடத்தில் செவ்வாயிருக்க சந்திரன் பகை க்ஷேத்திரத்திலிருந்தாலும் குரு நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு ரணரோகமுண்டாகும் எ று 20

சீனமாய்மதியிருக்கச் சேர்ந்திடப்பாபர்தானும்
ஈனமாங்கடசுந்தேளு மிடர்சுரவாகிநின்றால்
ஈனமாமீராறெட்டி லிருக்கினுங்க்ஷயமேயுண்டு
மானமேயுடையமாதே மடிவனேக்ஷயரோகத்தில்.

[இ ள்] ஆறு பனிரெண்டு இரண்டாமிடத்ததிபதிகள் பாபக்கிரகங்களுடனே சேர்ந்திருக்க ஜன்மஸ்தானாதிபதியுடனே பாபக்கிரகங்கள் பார்க்கவும் சூரியன் நீசமாய் குரு பகையாகவுமிருந்தால் இந்த ஜாதகனுக்கு மனந்திகிலடைந்து இரண்டு கண்ணுந் தெரியாதவனாயிருப்பான் எ று 21

சரமதிராசிசுங்கன் றனியிராப்பாபர்கூட
அரவதிற்சனியுஞ்சோம னவருமேயாரெட்டாகி
உரமுளவிலக்கினுதி யோரையுமாறெட்டாகில்
வரமதிலுதித்தோர்க்கெல்லாம்வந்திடும்க்ஷயரோ கந்தான்.

(இ ள்) பனிரெண்டாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் சந்திரனும் சேர்ந்திருக்க, இராகும் செவ்வாய் இரண்டிலிருக்க அவர்களுக்கு ஏழாமிடத்தில் குருவிருக்க பகை கேந்திரஸ்தானத்திலிருப்பவர் நீசமானலும் மூடமானலும் தேய்பிறைச்சந்திரன் அமிசையில் நீசமாயிருந்தால் ஜாதகன் குருடனுயிருப்பதற்காகும் எ று 22

இந்தரெண்டெட்டிற்புந்தி யிராசனுங்குசனைநோக்க
வந்திடஉதயத்தானும் வக்கிரனேக்கக்கூட
சந்தோஷமதியுஞ்சீண சவுமியர்பார்வையன்றி
அந்தெட்டுக்குடையோன்லக்ன மாகினுர்சுரமேயுண்டு.

(இ ள்) ஆருமிடத்தில் குருவுடனே சந்திரன் சேர்ந்திருந்தாலும், தனஸ்தானம் பனிரெண்டாமிடத்திலிருந்தாலும், ஜனனலக்கினத்தில் இராகிருக்க குரு சனியுஞ் சேர்ந்து கோணஸ்தானத்திற்கு பின்னுலிருந்தால் ஜாதகனுக்கு கேந்திரமில்லா குருடனுயிருப்பதற்காகும் எ று 23

லெக்கினம்பாபர்நிற்க ரெண்டெட்டில்வெள்ளியாகில்
இக்கணமுதையத்தானு மிழிகுலமாயிருக்க
மெய்கருசோதினின்ற விடமதிற்பாபர்நோக்கில்
மிக்கெனுந்தனத்திளுளே பிரமியவியாதியுண்டே.

(இ ள்) மூன்ருமிடம் லாபஸ்தானத்தில் குருவிருக்க அவருக்குமுன்னுலும் பின்னுலும் பா. கிரகங்களிருக்க அந்த ஸ்தானமே செவ்வாய் அங்கீசமானல் சந்திரனும் நீசமாயிருந்தால் ஜாதகனுக்கு கைகாலூனமாய் சரீர அசதியுண்டாகும் எ று 24

எட்டிரண்டிடத்தில்ராகு விருக்கிலுமுதையஞ்செவ்வாய்
மட்டுடன்சோமனின்ற மனையதிற்பாபர்நிற்க
விட்டிடதிருக்கின்மூலம் விடையனும்விரையமானல்
தொட்டிடும்பீடைவியாதி தோன்றியமுதலாய்மாதே.

[இ ள்] சரராசி இலாபஸ்தானமாகவும் ஐந்தாமிடம் ஸ்திரராசியாகவும் ஏழாமிடம் உபய இராசியாகவுமிருக்கும் ஸ்தானுதிபர்கள் கேந்திர

ஸ்தானத்திலிருக்கஜாதகனுக்குசதாகாலமும்சுரரோகமனவிசாரமாயிருப்பதுடன் இரவில் எதையாகிலும் கண்டு பயந்தால் பேய் பிடித்துக்கொள்ளும் எ று 25

எட்டினிற்செவ்வாய்நிற்க வேழினிற்பாபர்நிற்க
மட்டினிலெட்டிரண்டின் மணியாரக்கேதுநின்ருல்
தொட்டிடுந்திலகமாதே தோன்றியமுதலாம்ய்த்தானே
விட்டிடாரெணங்கள்ரெண்டு வீழ்வனேகுதரோகத்தில்

[இ ள்] ஜனன லக்கினத்தில் செல்வாயிருந்தாலும் பார்த்தாலும் ஜாதகனுக்கு சதாகாலமும் தீராத மூலரோக முண்டாயிருக்கும். ஆனல் சுபக்கிரகங்கன் பார்வை செலுத்தினுல் ஐந்து வருஷம் வரையிலும் கண்டமுண்டாகும் ஆனல் பாபகிரகங்கள் பார்வை செலுத்தினுல் மாரகஞ் செய்வார்கள் எ று 26

சனியுதையத்தினிற்கச் சந்திரனுரெட்டாக
இனிகுசனிவரைப்பார்க்க விவனுகேகிரந்திரோகம்
பனிமதியுடனேபாபர் பார்க்கிலுமிரத்தரோகம்
அணிமதிக்குன்றிநின்ரு லாசனரோகமுண்டே

[இ ள்] ஜனன லக்கினத்தில் சூரியனிருந்தால் பூதம்போற்கானும் சனி இருந்தால் கரிய பூதமாக காணும் செவ்வாயிருந்தால் விஷ ஜந்துக்களால் கடியுண்டு மாரகமடையச்செய்யும், ஜாதகனுக்கு இந்த கலவரத்தினுல் அஷ்டம சனி பிடித்ததுபோலிருக்கும் எ று 27

மகரகும்பத்திற்சோமன் மாறியேபாபர்கூட
அகமுறச்செனித்தராசிக் காரெட்டுமாமேயாகில்
நகருதைராசியாள னட்பின்றிநீசமாகில்
விகற்பமாய்க்கெடுதிரோகம் விளையுமேயனேகமாக

[இ ள்] இலக்கினத்தில் குரு இருந்தால் தெய்வ பக்தியிற்சிறந்து பகவத் பக்தியானந்தமாயிருக்கும். சுக்கிரனிருந்தால் துர்கை தோஷமாகும் கேது இருந்தால் பேய் பிசாசுகாணும் ஆனல் ஜனன லக்கினத்தை சுபக்கிரகங்கன் பார்த்தால் அவையெல்லா ல் நசிந்தழியும்படியாய்க்கொல்வார்கள் எ று 28

உதித்தலக்கினத்தில்ராகு வுடையவன்கூடநிற்கப்
பதித்திடத்தெட்டின்மைந்தன் பாபருங்கூடநிற்கக்
கதித்தவனிரவிலக்னங் கலந்துடநின்ருராகிற்
செனித்தநாள்முதலாய்மாதேஜென்மாதிவெள்ளைகுஷ்டம்

[இ ள்] ஆருமிடத்ததிபதி இலக்கினத்திலிருக்க ஆருமிடத்தில் இலக்கிஞதிபதியும் ஐந்தாமிடத்ததிபதியும் செவ்வாயும் சேர்ந்திருக்க தேய்ப்பிறைச்சந்திரனும் கூடிஞல் ஜாதகனுக்குச் சதாகால மும் தீராத நோயிருக்கும் எ று 29

செனித்தலக்கினத்திற்பாபர் சேர்ந்துடனிராகுனிற்கக்
குறித்நாலோனுநீசங் குணவீனமல்தமாகில்
இனிக்கரிசோமன்கூடி யிவனுமேக்ஷீணமாஞல்
மனத்தொருநாளுனில்லா மார்பினில்சூலேகாணும்

[இ ள்] ஜனன லக்கினத்தில் கேது இருக்க, குறி கண்பத்து ஏழு நாலாமிடங்களிலிருந்தால் சுபரும் பாபரும் பாராமலிருந்தால் ஜதாகனுக்கு சதாகாலமும் நித்திரையின் கனவில் பல தெய்வக்களின் தோற்றங்காணும் எ று 30

எட்டினிற்பாதிசேய்க் கிங்கிருந்ததுமுடவஞகில்
தொட்டுடன்பாபர்பார்க்கத் தே॥ றியவுதையத்தோனும்
மட்டுடன்பகையடைந்து மடிப்பஸ்தநீசமாஞல்
விட்டிடாமார்பிற்சூலே விளேயுமேயதனிற்கண்டம்

(இ-ள்) ஜனன லக்கினத்தில் சுக்கிரனிருக்க ஏழாமிடத்தில் சனியிருக்க தேய்பிறைச் சந்திரனே சுபகிரகங்கள் பாராமல் பாபக்கிரகங்கள் பார்த்தால் ஜா தகனுடைய கினவில் பேய் பிசாசு பூதகளெல்லாம் தோற்றும் எ று 31

ரோக காண்டம் முற்றிற்று ஆக. **468**

தனக் காண்டம்

மீனம் $4\frac{1}{4}$	மேஷம் $4\frac{1}{4}$	ரிஷபம் $4\frac{1}{2}$	மிதுன $5\frac{1}{4}$
கும்பம் $4\frac{1}{2}$	பனிரெண்டு இராசிகட்கும் 60 நாழிகை ஆகும்.		கடகம் $5\frac{1}{2}$
மகரம் $5\frac{1}{4}$			சிங்கம் $5\frac{1}{4}$
தனுசு $5\frac{1}{2}$	விருச்சி $5\frac{1}{4}$	துலாம் 5	கன்னி 5

அட்டமத்தோன் நீசனு மதுதனிற்கரிசேயாகில்
நட்டமாய்த்திங்கணிற்க நல்லுதையத்திற்பாபர்
இட்டமாய் நல்லோர்பாக்க விருக்கவுமில்லாதாகிற்
பொட்டெனவருமேரோகம் பொல்லாதகிரசிற்பீடை

(இ-ள்) புத்திர ஸ்தாஞதிபதி ஆக்ஷியாய் குருபகையில்லாமல் பாபக்கிரகளில்லாமல் சூரியனுக்கு பனிரெண்டாமிடத்தில் சனியிருக்க, நான்கு எழுபத்தாமிடத்திலிருந்தால் இந்த ஜாதகனுக்கு அநேக புத்திரர்கள் பிறந்து பெரிய குடும்பஸ்தராய் குறையில்லாமல் வாழ்ந்திருப்பதற் காகுமென்றறிவீர்கள் எ று 1

பூமனுமாறினிற்கப் புகுந்திடவெள்ளிதானும்
சோமனுஞ்சனியுங்கூடிச் சொல்லுதையத்திற்பார்க்க
காமனுக்கெட்டின்மன்னன் கருதியேநீசமாஞல்
போமதுசீலனில்லாப் பொல்லாதரோகந்தீதே

(இ ள்) ஐந்தாமிடத்திற்கு ஐந்தாமிடத்ததிபதிகள் அவரவர்களின் ஸ்தானத்தைப்பார்த்தாலும் குரு ஆக்ஷியாய் தனுசிலிருக்க இராகும் செவ்வாயும் சூரியன் புதன் சனி முதலானோர் இரண்டு ஆறு எட்டாமிடத்திலிருந்தால் இந்த ஜாதகனுக்கு அநேக புத்திரர்களிருப்பார்கள் எ று 2

கங்கனெட்டதனினிற்கச் சூரியன் கூடச்சேர
இங்கிதமானபூம னிவற்கேழிலுதையமாக

அங்குமோர்சோமனின்ற வங்நிலைபகையுமானால்
இங்கிதராசனீஜ மாகினாலிரணமுண்டே

(இ ள்) புத்திர ஸ்தானத்தில் சுபகிரகங்களிருக்க மித்துருகிரகங்களுடனே புத்திரஸ்தானாதிபதி சேர்ந்திருக்க சத்துரு கிரகங்களும் பாபகிரகங்களும் சேராமலும் பாராமலும் குரு சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குப்புத்திருண்டாகும் எ று 3

ஆறுமீராறிரண்டி லம்மனையாரும்பாவி
சேருமேயாகினல்லக் சென்மாதியுடனேபாபர்
பாருமேபரிதிநீசம் பகையடைந்தரசனின்றால்
மாறுமேநேத்திரம்ரெண்டு மனந்தடுமாறிநிற்பன்

(இ-ள்) இலக்கினத்திற்கு நாலு ஆறுமிடத்தில் சுபகிரகங்களிருக்க குரு ஆக்ஷி உச்சமாயிருக்க ஆறுமிடத்திற்கு முன்னோனாகிய பஞ்சமஸ்தானாதிபதி ஏழாமிடத்திலாயினும் இலாபஸ்தானத்திலாயினுமிருக்க ஆறு, பனிரெண்டு எட்டாமிடங்களில் பாபக்கிரகங்களிருக்க ஜாதகன் தனதான்ய சம்பத்தும் புத்திர பாக்கியங்களும் பெற்றிருப்பதற்காகும் எறு 4

இரவிசுன் மதியுங்கூடி யிழிந்திடப்பனிரெண்டாக
அரவுசேயிரண்டினிற்க வவக்கேழிலரசனாகட
பகைகேந்திரத்திலானோர் பகைநீசமூடமானாற்
குரைமதியமிசைநீச மாகினாற்குருடனாமே

(இ-ள்) குரு பலத்து ஆக்ஷி உச்சமாயிருக்க ஐந்துக்குடையவன் நட்பாயிருக்க, சத்துரு கிரகங்கள் ஐந்தாம் வீட்டைப் பாராமலிருக்க, பாபக்கிரகங்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு விசேஷமாகப் டத்திரர்கள் பிறப்பார்கள் எ று 5

இருமூன்றுமிடத்திற்சோம னிரணியன்கூடநிற்க
வருதனமருவீராறில் வந்திடவுதையம்பாம்பு
குருசனியுடனேகூடிக்கோணத்தின்பின்னேநிற்க
வருமதுநேத்திராணி மைவிழிமாதேகேளாய்

(இ-ள்) குரு நீச அஸ்தமய வக்கிரமில்லாமல் கோணஸ்தானத்திலிருக்க இரண்டு ஐந்தாம் வீட்டுக்கதிபர் லாபஸ்தானத்திலிருக்கசெவ்வாய் சனியும் ஆறு எட்டாமிடத்திலிருக்க ஐந்தாம் வீட்டில் சுபக்கிரகங்களிருந்தால் புத்திரபாக்கிய மதிகமாயுண்டாகும் எ று 6

மூணிலாபத்தின்மன்னர் முன்பின்னாய்ப்பாபர்நிற்க
வேறுமென்றாரனீச மங்கிசையதுவேயானாற்
பேணுமோர்மதியுமூன்றும் பிறையுடனீனமானாற்
காணுமேகைகாலூனங் கண்டிடுமசதியாக

(இ ள்) குருவும் சந்திரனும் பகைவருடமே சேராமல் செவ்வாயும், சூரியனும் சனியும் நான்கு, ஏழு, பத்தாமிடத்திலிருக்க இந்த ஜாதகனுக்கு சதாகாலமும் மேடைமூதிர்சார்ந்து சுகத்தை யனுபவிக்கச் செய்யும் புத்திரருண்டாகும் எ று 7

சரசதிலாபமாகச் சதுரைந்துதிரமேயாக
உரமதுவுபையமேழா யுடையவர்கேந்திரமாகிற்
சுரமாய்க்காணும்பின்னே சோகமாய்விசாரமுண்டு
இரவிலோர்சுகமில்லாம லிவனுக்கேபேய்பிடிக்கும்

(இ-ள்) செவ்வாய் சனி சூரியன் குருமுதலானோர்களும் சுக்கிரன் புதனும் இலக்கினாதிபதிக்காகிலும் புத்திர ஸ்தானாதிபதிக்காகிலும் உறவாயிருக்க, அந்த ஜனன லக்கினத்தை பாபர் பாராமல் சுபர்பார்வை செலுத்தினால் இந்த ஜாதகனுக்கு வெகு புத்திரருண்டாகும் எ று 8

இருந்திடமதனிற்பூம னிருக்கவுங்காணமூலம்
வந்திடுந்தீராதாகும் வல்லவர்சுபர்நோக்கானால்
நேர்ந்திடுந்தீம்பைத்தாண்டி னோக்கினாற்றீயர்கொல்வர்
இந்தடைவாகச்சீவ னிறந்திடுங்குருநோக்காட்டால்

(இ-ள்) இலக்கினாதிபதி ஐந்தாமிடத்தலில்லாமல் சனியும் செவ்வாயும் சூரியனில்லாமல் குருவும் இராசிநாதனும் சுக்கிரனும் பார்வை செலுத்தாமல் ஐந்தாமிடத்தோனுடன் சேர்ந்து ஐந்தாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு வெகுபுத்திரர்களுண்டாகும் எ று 9

சூரியனிருந்தோர்ககேளாய் சொல்பூதமாகக்காணும்
காரியோனிருக்கிற்கணேனுங் கருமகாபூதமாக
வீரியனிருக்கினல்ல விஷமதுகடித்துக்காணும்
கூரியோன்சிந்தையாகிற் கொண்டவெட்சனிபிடிக்கும்

(இ ள்) ஐந்தாமிடத்திற்கு ஐந்தாமிடத்தானும் இருந்த ஸ்தானத்தைப் பாபகிரகங்கள் பாராமலும் மிகுதியான அஸ்தமயமில்லாமல் இருபுரத்திலும் பாபகிரகங்கள் நில்லாமலுப் பகை நீசமில்லாமல்கிரகங்களிருந்தால் ஜாத்கனுக்கு அநேக புத்திராகளுண்டாகும் எ று 10

மந்திரியிருக்கினல்ல மறைய தேவதையேகாணும்
சந்திரனிருந்தாற்றுர்க்கை தோஷமாம்பிசாசுகேது
அந்தரசானசுங்க ஞகில்ராட்சசியேயாகும்
நந்துறுமசுபர்பார்க்கி ன்சித்துடன்கொல்வர்மாதே

(இ ள்) பத்துக்குடையோன் ஐந்தாமிடத்திலுமிருந்தோர்க்கேழாமிடத்திலிருக்க, நாலாமிடத்ததி தியும் ஐந்தாமிடத்ததீபதி பத்தாமிடத்ததிபதியும் சேர்ந்து சனியுடன் ஏழி நக்க செவ்வாயும் ஐந்துக்குடையோனும் பார்வை செலுத்தாமல் பாபகி கங்கள் பாராமல் ஒதுங்கி நின்ருலும் ஐந்தாமிடத்தை சுபக்கிரகங்கள் பார்க்க வெகு புத்திரருண்டாகும் எ று

ஆறவலுதையனிற்க வைந்துதையோனுஞ்செவ்வாய்
வேறதுனில்லாக்கூடி வேண்டிறயிடத்தினிற்க
ஏறவுமில்லாச்சோம னிருபிறையாகினின்ருல்
தேறவொடாமனிற்குந் தெளியாதசுரமேகாணும்

[இ ள்] குரு பகவான் ஐந்தாமிடத்தைப் பாராமல் இலக்கினதிபதி சனியின் எதிரியில்லாமலும், ஐந்தாமிடத்திலில்லாமலும் சேராமலிருந்தாலும் அவர் ஐந்து ஏழாமிடத்ததிபதியுடனில்லாமல் சந்திரனுக்கு எதிரில்லாமலுமிருந்த ஜனனமான குழந்தை நிலைத்திருக்காது எ று 12

கற்பனையுதையந்தன்னிச் கண்டிடிற்கேதுவானுல்
நிற்பதுகுளிகன்பத்தேழ் நாலினினின்ருனகில்
அர்ப்பருஞ்சுபருமற்ரே றவரையோபாருராகிற்
சொர்ப்பனமதனிற்றெய்வம் போலவேதோன்றுமாதே

[இ ள்] மேஷத்தில் செவ்வாயிருக்க அந்த ஸ்தானமே ஐந்தாமிடமாக ஜனன லக்கினத்தில குரு இருந்தால் ஜாதகனுக்கு அநேக புத்திரருண்டு ஆனுல் ஏழாமிடத்தில் சனி இல்லாமலிருந்தால் உண்மையாய் விளங்கும் மாதே எ று 13

உதையற்திற்சுங்கனிற்க வோரேழின்முடவனுகச்
சிதைவுற்றசோமன்றன்னைச் செல்வரும்பாராராகிப்
பதையுற்றபாபாபார்க்கிற் பிசாசுகள்பூதர்காட்சி
விதமொத்தயிலினுளே மேலுரைவியாழநீதி

[இ ள்] விருச்சிகத்தில் சூரியனிருக்க ஐந்தாமிடமும் அந்த ஸ்தானமாயிருந்தால் குரு தனுசிலிருக்க, திரிகோணஸ்தானத்தில் சனி இல்லா

மல் பிறந்த ஜாதகனுக்கு புத்திர பாக்கியமுண்டென்று சொல்வாய்மாதே எ று 14

வெகு புத்திரர்

பஞ்சமனுட்சியாய்ப்பொன் பகையிலாப்பாபரன்றிக்
செஞ்சுடர்க்கீராருறிற் சீர்தவமந்தன்பக்கம்
மிஞ்சிநான்கேழுபத்தின் மிகுதியினின்ருராகிற்
கொஞ்சியேயனேகம்புத்திரர் குறைவிலாதிருப்பர்தாமே

(இ-ள்) சிங்கத்திற்குரிய சூரியன் ஆக்ஷியாயிருக்க குருமேஷத்திலிருக்க சனி மீனத்திலிருக்க புத்திர ஸ்தானுதிபதி சத்துருகிரக சம்பந்தமில்லாமலிருந்தால் அந்த ஜாதகனுக்கு திரளான புத்திரர்களுண்டென்று சொல்வாய் மாதே எ று 15

அஞ்சுடனஞ்சுவீட்டா ரவ்விடம்பார்வையாகி
மிஞ்சியாண்டளப்பனுட்சி மேருவினிற்கத்தானும்
நஞ்சுகொண்டிருந்தோனரன் ஞாயிறுபுந்திநீலன்
வஞ்சிரண்டாரெட்டாகிற் புத்திரரனேகமுண்டே

(இ-ள்) ஐந்தாமிடத்திற் பெண் கிரகங்களிருக்க அந்த ஸ்தானுதிபதிஆண் கிரகமாயிருந்தால்இலக்கினதிபதி புருஷகிரகமாயிருந்து சந்திரனிருந்த இராசிநாதன் பெண் கிரகமாய் கேந்திரகோண ஸ்தானத்தில் குருவோடு சேர்ந்தால் அந்த ஜாதகனுக்கு ஆணும் பெண்ணுமாய் பிறக்கும் எ று 16

புத்திரவிடத்தேநல்ல புண்ணியவான்கணிற்க
மித்துருவானோர்பக்கல் புத்திரவானுஞ்சேரச்
சத்துருவானபாபர் சரியத[illegible]ய்நில்லாராகிப்
பத்திருமறையோனுற் பாராளப்புத்திரருண்டே

(இ-ள்) சந்திரனிருந்த இராசி ஆண் இராசியாய் சிருவிருந்த ஸ்தானத்திற்கேழில் ஐந்தாமிடத்ததிபதி பெண் கிரகமாயிருந்து கேந்திர ஸ்தானத்திலிருந்தால் பஞ்சம ஸ்தானுதிபதியும் பெண் கிரகமாயிருந்தால் அந்த ஜாதகனும் புத்தரர்களும் விசேஷமாயுண்டு எ று 17

நாலாறுவிடத்தினல்லோர் நற்குருவுச்சமாட்சி
மேலாறுபின்னேனேழின் மிகுத்திலாபத்தினிற்கத்
தானுறுபனிரண்டெட்டிற் ருழ்வுள்ளபாபர்சேரப்
பாலாறுமுடையோனுகிப் பாராளப் த்திரருண்டே

[இ ள்] சுக்கிரன் ஐந்தாம் வீடாகிய குரு வீட்டிலிருக்க குரு நின்ற ஸ்தானம் சிறப்பு பொருந்திய சந்திரன் வீடாக ஐந்தாமிடத்ததிபதி நின்ற ஸ்தானத்தில் சுக்கிரனிருக்க இந்த ஜாதகனுக்கு புத்திரிகள் விசேஷமாயுண்டென்று சொல்வாய் மாதே எ று 18

அரசனுர்பெலத்துநிற்க வவ்வைவந்துக்குடையோனட்பாய்
சரசமாயைந்தாம்வீட்டைச் சத்துருபாராராகில்
அரசராம்பொல்லாராட்சி யுச்ச மாயிருக்கத்தானும்
விரசமாயநேகம்புத்திரர் விளையுமே மரிப்பபில்லாமல்

(இ ள்] சந்திரன் ஐந்தாமிடத்திலிருக்க அந்த ஸ்தானம் சுக்கிரன் வீடாயிருக்க ஐந்தாமிடத்ததிபதியும் சுக்கிரனும் மத்திய ஸ்தானத்திலிருக்க குரு இரண்டாமிடத்திலிருக்க இந்த ஜாதகனுக்குப் பெண்கள்விசேஷமாயிருக்கும் எ று 19

குருவொருவீனமில்லாக் கோணத்தினடுவேநிற்க
அருகிருவைத்து வீட்டா னவனுமேலாபமாகில்
திருகொருபாபரந்தச் சேய்க்காரியாறெட்டாகில்
வருமொருவைந்தினல்லோ ராகினுபுத்திரருண்டே

[இ ள்] குருவும் ஐந்துக்குடையவனும் சேர்ந்திருக்கும்போது இவர்க்கேழாமிடத்தில் பெண் கிரக அங்கிசமானல் குரு பாராமல், பாபக்கிரகங்களிருந்தால் அந்த ஜாதகனுக்கு சதாகாலமும் புத்திரிகளே விசேஷமாயிருப்பார்கள் எ று 20

மலடரிய

அந்தணன்சோமனுக வவற்கொருபகையுமில்லாச்
செந்தணன்மேணியானுஞ் செஞ்சுடர்க்கிரணன்காரி
வந்தனேயாமறபத்தேழ் நான்குடனிருப்பதன்றேற
சந்ததமேடைமீதிற் சாரவும்புத்திரருண்டே

(இ ள்] ஜனன லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் சனி இருக்க எட்டாமிடத்தில் செவ்வாயிருக்க ஏழாமிடத்தில் குருவிருக்கஐந்தாமிடத்ததிபதி சூரியனுடனே சேர்ந்திருக்க சந்திரனுடனே இராகு சேர்ந்துசனிக்கு ஏழாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகன் மலடென்று ஜோதிஷ நூலாராய்ச்சியுடையோர் புகல்வார்கள் எ று 21

ஆரல்கரிவிடையழலன்மறையோனந்தவனுக்கேயுறவாகி
சேரர்க்குருசீதளன்புதல்வன் செவ்விடைவெள்ளியுமேயாகில்

ஆரர்கிருவைந்திடமானதையோ ரையுமருவன்றியேசுபர்பார்க்க
வீரர்கினியதைபீதனுட்சினும் விண்ணுலகாளவும்வெகுபுத்திரர்

[இ ள்] பத்துக்குடைவன் பின்னல் செவ்வாய் ஐந்தாமிடத்தில் சூரியனுடனே சேர்ந்தாலும் பார்த்தாலும், சனியும் இலக்கினதிபதியும் சேர்ந்திருக்க ஐந்தாமிடத்ததிபதி நீசமாயிருந்தால் ஜாதகன் ஆயுள்வரையிலும் மலடாயிருப்பதற்காகும் எ று 22

கல்லுண்டான வனைந்திடமன்றிக் கரியோனிலகன் பகலில்லா
வில்லுண்டானவனும் முதயவனு மேருவில்வெள்ளிக் கெதிரல்ல
சொல்லுண்டானவனைந்தோன்கூடிச் சொற்சிறுமீனடிதலையில்லா
அல்லுண்டானவனைந்தடியானு லவர்க்கேவெகுபுத்திரருண்டாம்.

(இ ள்) ஐந்தாமிடத்ததிபதி நீசமாயிருக்க, அந்த ஸ்தானத்தை குரு பார்த்தாலும் சனி ஐந்துக்கும் ஏழுக்குடையவனேடு சேர்ந்திருக்க இலக்கினதிபதி சூரியனுடன் செவ்வாயுடனும் சேர்ந்தாலும் பார்க்கப் பட்டாலும் அந்த ஜாதகன் பூமியிற்பிறத்த நாளாய் மலடனுயிருப்பதற்காகும் எ று 23

அஞ்சிடமஞ்சோன்மந்திரி யவரிருந்திடத்தைப்பாபர்
மிஞ்சிடப்பாராராகில் மிகையஸ்தமானமில்லா
தொஞ்சிடமுன்பின்பாபர் தோன்றியநில்லாராகிற்
கொஞ்சிடவநேகம்புத்திரர் கொடும்பகை நீசமன்றேல்.

(இ ள்) ஆறு எட்டுக்கதிபதிகள் சேர்ந்து ஐந்தாமிடத்திலுருக்க குரு நீச ஸ்தானத்திருருக்க, குரு ஐந்தாமிடத்ததிபதியும் சேர்ந்து லக்கினத்தில் சனியும் குளிகனும் சேர்ந்திருந்தால் அவர்களை அஷ்டமாதிபதியும் சந்திரனும் செவ்வாயும் பார்த்தால் அந்த ஜாதகன் மலடனுயிருப்பதற்காகும் எ று 24

ஈரஞ்சுடையோனேரஞ்சிலிருந்தோர்க்கேழினன்குடையோன்
ஓரஞ்சுடையானீரஞ்சி லொருமித்திரருஞ்சனிக்கேழிற்
பாரஞ்சிடையினேக்கமில்லாப் பாபரொதுங்கிநிற்கிலுமே
சேரஞ்சிடையின்சுபர்நோக்கசெழிக்கவெகுபுத்திரருண்டே.

(இ ள்) ஆறுக்குடையோன் சூரியனுடனே சேர்ந்து எட்டிலிருக்க இரண்டு மூன்றில் எட்டாமிடத்ததிபதி வச்சிர கிரகத்துடன் சேர்ந்திருக்க

குரு நீசமாயிருக்க இலக்கினத்தில் சனியும் சந்திரனுமிராகும்சேர்ந்திருந்தால் ஜாதகன் மலடாயிருப்பான் எ று .5

மன்னவனஞ்கிஞேக்கில்லா மனையவன்கரியதற்கெதிரில்லா
என்னவனஞ்சிலிருக்கில்ல விருபாலருக்கன் குசனில்லா
அன்னவனஞ்சேழ்போக்கில்லாவம்புலிநின்றவர்க்கெதிரில்
சொன்னவனஞ்சேழ்கரியில்லாச்சொல்லுங்குழவியதுநில்ல

(இ-ள்) பத்தாமிடத்தில் பாபகிரகங்கள் நீசமாயிருக்க இலக்கினுதிபதியும் சுக்கிரனும் சந்திரனும் ஐந்தாமிடத்திலிருக்க, ஏழாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு புத்திரர்களிருக்காது எ று 26

ஆட்டினில்ாரனிற்க வஞ்சிடமதுவேயாக
வீட்டினிற்குருமீனுகில் வேண்டியபுத்திரருண்டு
கேட்டவர்குரைக்கலாகுங் கேடிலாதிருக்குமாதே
ஒட்டுரையேழின்மந்த னிருந்திடாதிருக்கின்மெய்யே.

(இ ள்) சனி ஐந்தாமிடத்திலிருக்க சந்திரனுடனே பாபக்கிரகங்களும் ஐந்தாமிடத்ததிபதி நட்பாயிருக்க குருவுடனே பாபகிரகம் சேர்ந்து உதயராசியிருக்க அந்த ஜாதகனுக்கு பிள்ளைகள் பிறந்தாலும் நசிந்து போகும்படி சொல்வாய் எ று 27

கேளினிற்செந்தீவண்ணன் சென்னித்ததுக்கைகந்தேயாக
ஆளுமோரரசன்வில்லி லமர்ந்துடனிருந்தானுகில்
மாளுமுக்கோணம்பின்னே மந்தனுமில்லாதாரால்
கேளுநீபுத்ரருண்டு கேட்டவர்க்குரைப்பாய்மாதே.

(இ ள்) ஐந்துக்குடையவனுடனே பாபகிரகங்கள் சேந்திருக்க அவர்களுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்க குருவும் பாபகிரகங்களும் மத்தியிலிருக்கசந்திரன் செவ்வாயுட்னே சேர்ந்திருக்கஅந்தஜாதகனுக்கு பிறக்கும் புத்திரர்கள் மரணமாய்விடும் எ று 28

அரியவனுட்சியைந்தா யமர்ந்தொருகுருவேமேஷம்
பெரியவனுகிமந்தன் பேருளமிநுனமாகில்
அதிற்சந்தியுடனே புந்திசத்துருவன்றிநிற்கத்
தெரியவர்க்கெட்டோர்க்கின்னங் திரள்புத்திரரென்றுசொல்லே.

(இ ள்) ஐந்தாமிடத்தில் சூரியனிருக்க அவர்க்குநாலுக்கும் ஐந்துக்கும் அதிபதியாக சனி செவ்வாயிருக்க நான்காமிடத்தில் குரு விருக்க

இலக்கினத்தில் சந்திரன் தேய்பிறைச் சந்ர்ரனுயிருக்க அந்த ஜாதகனுக்கு பிறக்கும் புள்ளைகள் மரணமாகும் எ று 29

இருந்தவனைந்திற்பெண்ணு யிடமவனுணேயாகிப்
பிறந்தவன்புருஷனுகிப்பெருமதியிடத்தோன்பெண்ணுய்ப்
பொருந்தவர்கேந்திரகோணம் பொன்னுகேயாகிநின்ருல்
வருந்தவம்வேறேவேண்டாம் வந்திடுமாணும்பெண்ணும்.

(இ ள்) ஆருமிடம் நாலாமிடத்திலும். சூரியனும் சனியுமிருக்க, அதற்கு நாலாமிடத்தில் குரு செவ்வாயுமிருக்க மூன்ருமிடத்தில் ஐந்தாமிடத்திலிருந்து குருவுக்கு நான்கு ஏழாமிடமாயிருக்க இலக்கினத்தில் சுபக்கிரகமிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளைகள் மரணமாகும் எ று 30

மதித்தலம்புருஷனுக மன்னவரிருப்பிடத்துக்
செதிர்த்தலமைந்தோன்பெண்ணுய் கேந்திரமாகிநின்ருர்
பறித்ததற்பெண்ணேயாகிப் பஞ்சமத்தோனேநிற்க
விதித்திடிமானும்பெண்ணும் வேண்டியதிரளேயுண்டு.

[இ ள்] சுக்கிரன் இலக்கினம் மூன்ருமிடத்திலிருக்க் இலக்கினுதிபதி நீசமாயிருக்க குரு நல்ல ஸ்தானத்திலிருந்தாலும் சனி சூரியனும் செவ்வாயும் நடபுஸ்தானத்திலிருந்தால் ஜாதகனுக்கு புத்திரரும் புத்திரிகளும் பிறந்தாலும் மரணமடைவார்கள் எ று 31

வெள்ளியுமைந்திநிற்க வியாழனுக்கதுவீடாகத்
தெள்ளியமறையோநின்ற சீர்மனைச்சோமற்காக
அள்ளியவைந்தோனின்றவம்மனைச்சுங்கர்க்காக
முள்ளில்செண்பகமேல்வீசு மொய்குழற்பெண்களுண்டே.

(இ ள்] ஜனன லக்கினத்தில் பாபகிரகங்களிருக்ககர்மஸ்தானத்தில் பகை கிரகமிருக்க இலக்கினுதிபதி ஆறு எட்டாமிடத்திலிருக்க தர்மஸ்தானத்தில் இராகு இருக்க செவ்வாய் ஐந்தாமிடத்திலிருக்க அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளை அப்போதே மரணமாகும் எ று 32

அம்புலியைந்திநிற்க வம்மனைசுங்கர்க்காக
நம்புநல்லைந்தோன்சுங்க னடுமனையதனிற்கூடச்
செம்மறையவன்ருன்ஞெண்டில் சேல்பெண்ணங்கிசமேயாகல்
இம்மனிலிருக்குமட்டு மிவனுக்குப்பெண்களுண்டே.

(இ-ள்] பூரண சந்திரனும் குரு சேர்ந்தாலும் ஐந்தாமிடத்ததிபதியும் சுக்கிரனும் மூடமாயிருக்க சனி ஆருமிடத்திலிருக்க குருஐந்தாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் குழந்தை நாசமாம மரணமாகும் பெண்ணே எ று 33

பொன்னவனைந்தோனின்ற பொருதினியதனுங்கூட
நின்றவனிதர்க்கேழ்நின்றே னிலெபெண்ணங்கிசமேயாக
மன்னவர்பாராராக மற்றதீக்கோட்களின்றி
என்னவனிருந்தாராகி லெந்நாளும்பெண்களுண்டே.

(இ-ள்) சுபக்கிரகங்களும் சேர்ந்திருக்க அவர்களுடன் குருவும் கலந்திருக்க ஐந்தாமிடத்தோனும் பாபக்கிரகம்பலவானுய் சேர்ந்திநக்குமாஞல் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளை மரணமாகும் எ று 34

மலடறிய

உதையத்துக்கைந்தின்மந்த னேரெட்டிற்பூமனிற்க
அதையத்துக்கேழில்ராஜ னைந்தவன்கனலிற்சேர
மதியத்திலரவஞ்சேர்ந்து மந்தனுக்கேழேயாகில்
விதியத்தின்மல:_னென்று விளம்பினர் நூல்வல்லோரே.

(இ-ள்) இலக்கிஞதிபதியும், சந்திரனும் ஐந்தாமிடத்திலிருக்க குருவும் சுபகிரகங்களும் பார்வை செலுத்தாமல் அவர்களிருந்த ஸ்தானமும் பகை நீசஸ்தானமாயிருந்தால் அந்த ஜாதகன் முன்ஜன்மத்தில்செய்த பாபத்திஞல் புத்திரர்களில்லையென்று சொல்வாய் பெண்ணே எ று 35

பத்துடன்பின்சேயைந்திற் பகலவனிருக்கநோக்க
ஒத்துடன்காரிலாப முதையனுங்கூடிநிற்க
அத்துடனைந்தோனீச மாயிஞன்மாதேகேளாய்
செத்துடன்பிறப்பில்லாமற் சென்மாதிமலடஞவன்.

[இ ள்] குருவும் சந்திரனும் சேர்ந்திருக்கும்போது வேறெந்த கிரகமும் பாராமல் ஐந்தாமிடத்திலிருக்குமாஞல் அந்த ஜாதகனுக்கு சதாகாலமும் புத்திர நாசமாயிருக்கும் ஆஞல், சுபகிரகங்கள் தானே யென்று நினைக்கலாகாது எ று 36

புத்திர காண்டம்-முற்றிற்று, ஆக 468.

சகோதர காண்டம்

விரய ஸ்தான	இலக்னம்	குடும்ப தானம்	சகோத ஸ்தான
இலாப ஸ்தான	இராசி சக்கரம்		சுகஸ் தானம்
ஜீவன ஸ்தான			புத்ரஸ் தானம்
பாக்ய ஸ்தான	ஆயுள் ஸ்தான	களஸ ஸ்தான	ரோகஸ் தானம்

அந்தமாயைந்தோனீச மதிற்குருபார்வையாகின்
மந்தஞரைந்துக்கேழின் மழவிடைசேர்ந்துநிற்க
இந்தொரிலக்கிஞதி யீரவிசேய்பார்க்கக்கூட
எந்தநாளளவுமட்டு மிருப்பனேமலடஞக.

(இ ள்) மூன்ருமிடத்தில் பாபகிரகமிருக்க அந்த ஸ்தானத்திற்கு முன் பின் விருக்கும் கி, கங்கள் அஸ்தமனமாயிருக்க, சனி ஒன்பதாமிடத்திலிருக்க இவர்க்கு நாலாமிடத்தில் வச்சிரகிரகமிருக்க அந்த ஸ்தானத்தை சுபர்பாராமல் பகை கிரங்ககளிருந்தால் அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாவல் தனியாயிருப்பதற்காகும் எ று 1

ஆறெட்டுக்குடையோர்சேர்வுற் றைந்திடமாகநிற்க
வேறிட்டுமறையோனீசம் வேந்தனுமைந்தோன்சேரக்
கூறிட்டவுதையங்காரி குளிகனுங்கூடிநின்ருல்
மாறெட்டின்மதிசேய்சேர்ந்தான மலடனேமலடன்மாதே.

(இ-ள்) இலக்கினத்திலும் இரண்டாமிடத்திலும்செவ்வாயும்,இராகு ஐந்தாமிடத்திலிருக்க இலக்கிஞதிபதியும் சனியும் சேர்ந்திருக்க சந்திரனுடனே இராகு சேர்ந்திருக்கும் இந்த ஜாதகன் சகோதரரில்லாமல்தனியாயிருப்பதற்காகும் பெண்ணே எ று 2

இருமூன்றுக்குடையோரெட்டி லிருந்திடவிரவிகூட
வருமூன்றிலிரண்டிலெட்டோன் வக்கிரன்சேர்ந்துநிற்கக்

குருநாணிநீசமாகிக் கொண்டிடுமுதையநீலன
பருவானமதியும்பாம்பும் பற்றிஞன்மலடனுவன்.

(இ ள்) குரு, எட்டாமிடத்திலிருக்க செவ்வாயும் சனியும் சேர்ந்திருக்க குருவும் மூன்ருமிடத்ததிபதியும் சேர்ந்திருக்க அவர்களுடனே இராகு சேர்ந்து ஆருமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுந்கு சகோதரரில்லாமல் ஒவ்வனுகவே தனியாயிருப்பதற்காகும் எ று 3

ஈரைந்திற்பாபியாகி யினியவர்நீசமாக
ஓரைந்திலுதையத்தானுமொருவெள்ளிமதியுங்கூடப்
பாரைந்துக்கேழிற்பாம்பு பற்றியேநின்ருனுகில்
ஆரைந்துதபமானுலு மவனுக்கேபுத்திரரில்லை.

[இ ள்] ஆருமிடத்ததிபதி மூன்ருறுடத்திலிருக்க சந்திரனுடனே இராகு சேர்ந்திருக்க மூன்ருமிடத்ததிபதி எட்டிலிருக்க சனிக்கேமில் செவ்வாயிருக்க இராகும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாமல் உலகிலிருப்பான் மாத்த எ று 4

முடவனுரைந்தினிற்க முதற்பிறையுடனேபாபி
இடமதாவைந்தோனட்பா யினிக்குருவுடனேபாபி
திடமதாயுதையந்தன்னிற் சிதனுமேநின்ருனுகில்
நடவதேபுத்திரருண்டாய்நசித்துடன்போமேசொல்வாய்.

[இ ள்] சுக்கிரனுனே சேர்ந்து சூரியன் மூன்றிலிருந்தால் செவ்வாய் ஐந்தாமிடத்திலும் அவர்கேழாமிடத்தில் சந்திரனுமிருக்க, ஜனனலக்கினத்தில் இராகுசேர்ந்திருக்க சனியுடனே மூன்ருமிடத்ததி திசேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு சகோதரனில்லாமல் தனியாயிருப்பதற்காகும் எறு 5

அஞ்சவன்பாபிசேர வதனிடைச்சுபரேநிற்க
மிஞ்சியேகுருவும்பாபர் நடுவதின்மிகையோராகக்
கொஞ்சவனுனதிங்கள் குசனுடன்சேர்ந்துநிற்க
வஞ்சியேபிறக்கும்பிள்ளை வகையறமடிந்துபோமே.

(இ ள்) மூன்ருமிடத்ததிபதியும்யுடனே பாபக்கிரகங்களும் சந்திரனுப்சேர்ந்திருக்க அவர்கட்கெதிரில் இராகு நிற்க வளர்பிறைப் சந்திரனுக்கேழில சனியிருக்க, குரு நின் ற ஸ்தானத்திற்கு ஏழு ஆருமிடத்தோனும் சேர்ந்திருந்தால இந்த ஜாதகனுக்குப் பின் சகோதரரில்லைமாதே எ று 6

அஞ்சினிலலரிநிற்க வவர்க்குநானுந்தோனுக
மிஞ்சினுன்மந்தன்பூமன் மிகுத்தநானரசேநிற்க
தஞ்சுதையத்திற்சோமன் ருன்குன்றிநின்ருனுகில்
இஞ்சிபோதித்தபிலுள்ளை யிறந்திடுநாசமாக

[இ ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்திருக்க இலக்கினத்திலும்மூன்ருமிடத்திலும் சூரியனுடனே மூன்ருமிடத்ததிபதியிருக்க சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் மூன்ருமிடத்தில் இராகு இருக்க நான்கில் சந்திரனிருந்தால் அந்த ஜாதகனுக்கு பின் சகோதரரில்லை மாதே எ று 7

ஆறுநாலலரிமந்தனதற்குநால்குருசெவ்வாயும்
வீறிநாலைந்தோனிற்க வேந்தற்குநாலேழாக
தூறிஞலுதையந்தன்னிற் சுபருமேநின்ருராகில்
மாரிலாவுதிக்கும்பிள்ளை மரணமாநாசமாக

[இ-ள்] மூன்ருமிடத்தில் பாபக்கிரகங்களிருக்க செவ்வாய் நீசமாயிருப்பதுடன் மூன்ருமிடத்ததிபதிக்கு இருபுறமும் பாபக்கிரகங்களிருந்தாலும் இராகு சனி சூரியனும் சந்திரனுக்கு நான்காமிடத்திலிருந்தாலும் ஜாதகனுக்குப் பின் சகோதரரில்லை எ று 8

மூஞென்றிற்சுங்கனிற்க முன்னவனீனமாக
வேணிமென்றரசனல்ல விடமதாய்நிற்கத்தானு
பூணுகொண்டலரிகாரி பூமனு மறவேயாகில்
வேணுமேயாணும் பெண்ணும் விளைவதுமடியுந்தீம்பாய்

(இ-ள்) மேற்குறிப்பித்த விதமே இருந்தாலும் அந்த ஸ்தானத்தில் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் சந்திரனும் புதனும் சுபக்கிரகங்களும் சேர்ந்தாலும் பார்த்தாலும். சுபக்கிரகங்களின் திசையில் பின் சகோதரர்களுண்டாகும் ஆனுல் நிலைத்திருக்காது எ று 9

சென்மத்திற்பாபிநிற்க சீதரனுடனே தீயர்
கன்மத்திற்பகையோராகக் கருத்துள்ளோராறெட்டாகத்
தன்மத்திலரவஞ்சேர்ந்து தரை மகனேந்தினின்ருல்
துன்பத்திலுதித்தகாளை தோன்றியவன்றேநாசம்

(இ ள்) செவ்வாய்க்கு நாலாமிடத்தில் குருவும் புதனுக்குஏழாமிடத்தில் மூன்ருமிடத்ததிபதியும் சந்திரனுக்கு மூன்று நாலாமிடம் சுக்கிரனும் சனிக்கு ஏழாமிடத்திலிருக்க இம்மூன்று கிரகங்களும் மத்தியில் சூரியனும் இராகுமிருக்க சந்திரனுக்கு செவ்வாய் நாலாமிடத்திலிருந்தால் சகோதரருண்டா குமென்று சொல்வாய் எ று 10

பூரணமதியினோடு புண்ணியயர்மேலானாலும்
காரணமானவைந்தோன் கனகனுமுடமானாற்
சூரணிகாரியாறில் குருவைந்தினின்றாராகில்
வாரணிதனத்தினாளே வருமந்தகுழவினாசம்

(இ-ள்) ஆறாமிடத்தில் சுபக்கிரகங்களிருக்க அந்தஸ்தானாதிபதியும் அந்தஸ்தானத்திலேயேயிருக்க அவர்களைபாபக்கிரகங்கள்பாராமலிருக்க செவ்வாய் ஆக்ஷியாய் விருச்சிகத்திலிருக்க ஐந்தாமிடத்தில் குருஇருக்க இவர்க்கு நாலாமிடத்தில் சந்திரனிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டாகும் எ று 11

நண்ணியசுபரும்பாபர் நலந்தீயர் கலந்துனிற்க
அண்ணியேவருகில்ராஜ னவருடன் கலந்துநிற்கப்
புண்ணியவைந்தோன்பாகி பிலவானாயிருந்திட்டாலும்
நிண்றியமானகாலை நில்லாதுகொஞ்சநாளே

[இ ள்] இலக்கினாதிபதியும் இரண்டாமிடத்ததிபதியும் ஆக்ஷியாயிருப்பதுடன் அவர்களுடனே குரு சேர்ந்திருக்க பாபக்கிரகங்கள் பார்வை செலுத்தாமல் ஆறாமிடம் இரண்டாமிடங்களிலிருந்தால் செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு வேண்டிய சகோதரர்கள் விசேஷமாயிருப்பார்கள் எ று 12

அண்ணியலக்னஞ்சோமனைந்திடஞ்சேரராஜன்
புண்ணியர்பார்வையின்றிப் போயிருந்திடமுந்தீதாய்ப்
பண்ணியபாவத்தாலே பாவரேமிகுத்துநின்றால்
எண்ணொருபுத்திரரில்லை யேந்திழைமாதேகேளாய்

(இ ள்] நாலாமிடத்திற்குப்பின் ஸ்தானமாகிய மூன்றாமிடத்தோன் ஆக்ஷி உச்சமாயிருக்கஐந்தாமிடத்தானும் ஆக்ஷிபாயிருக்க அங்காரகன் புதன் குரு சேர்ந்திருக்க மூன்றாமிடத்தில் சந்திரனும் பனிரெண்டாமிடத்தில் சூரியனுமிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டு எ று 13

வியாழமுந்திங்கள்கூடி வேறொருகிரகம்பாராச்
சகாயமாயைந்தினிற்கச் சந்ததம்புத்திரநாசம்
நியாயமாய்ச்சுபரேயென்று நினைவதில்நினைக்கலாகா
துபாயமாய்ப்பார்த்துச்சொல்வா யுபமதுகுறிதப்பாதே

[இ ள்) ஒன்பதாமிடத்தில் குரு தனியாயிருக்க சந்திரன் இலாபஸ்தானத்திலிருக்க பாபக்கிரகங்கள் நீசமாய் சுக்கிரன் இல்க்கினத்

திலிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டு மாதே எ று 14

மூணினிற்பாபியாக மின்பின்னோரஸ்தமிக்க
வேறுமேநவத்தின்மந்தன் வக்கிரனிவர்க்கோனான்காய்
காணவேசுபரில்லாமற் கடும்பகையாகிநின்றால்
ஆணாமோரில்லானென்னச் சகோதரமில்லை மாதே.

இ ள்] செவ்வாய் மூன்றாவது ஸ்தானத்தை சுபக்கிரகங்களுடனே பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் இலக்கினாதிபதி சந்திரனாயிருக்க அந்த ஜாதகனுக்கு அநேக சகோதரர்களுண்டாயிருக்கும் மாதே எ று 15

ரெண்டொருவிடத்திற்பூம னிராகுவுமைந்தினிற்கக்
கண்டொருவுதையத்தானுங் காரியுங்கூடிநிற்க
நண்டிருமேனியோட நாகடேகலந்துநிற்க
விண்டொருதனியனாகி மேதினியிருப்பன்மாதே.

[இ ள்] மூன்றாமிடத்திற் செவ்வாயும் தனியாயிருக்க அவர்க்குஏழாமிடத்தில் சனியிருக்க இவர்க்கு முன்னால் இராகு நிற்க சூரியன் ஏழாமிடத்திலிருக்க புதனும் இராகு மிருந்தால் பின் சகோதரன் கிடையாது ஆனால் அந்த காலத்தின் குறிப்பை கவனித்துச் சொல்வாய் மாதே 16

பொன்னவனெட்டினிற்கப் பூமனுஞ்சனியுங்கூட
வின்னவர்க்காட்சியான வேந்தனுமூன்றோன்கூட
அன்னவனரவங்கூடி யாறினினின்றாராகில்
நின்றவனொருவனாகி நிலைபெறநிர்ப்பன்மரதே.

[இ ள்] மூன்றாமிடத்தில் செவ்வாயும் சனியுமிருக்க சுபக்கிரகங்கள் பார்'திருந்தால் சகோதரமார்க்குமுண்டாகும் சூரியனும் மூன்றாமிடத்தானுஞ் சேர்ந்திருந்தால் பத்து வருஷம் பொறுத்தாவது இணைய சகோதர பாக்யமுண்டாகுமென்னும் குறி தப்பாது எ று 17

ஆறவன்மூன்றினிற்க வம்புலியுடனேபாம்பும்
கூறறியுடனேமூன்றோன்கூடியேயெட்டினிற்க
கார்கரிக்கேழிர்ச்செவ்வாய் கருநாகங்கூடிநின்றால்
வேறொருதுணையில்லாமல் மேதினியிருப்பன்மாதே.

(இ-ள்) மூன்ருமிடதில் குருவும் சந்திரனும் சேர்ந்திருக்க இவர்கள் நன்மை செய்களென்றுநிகுணேக்கஉாகாது இவர்களை சுபக்கிரகங்களென்று நம்பலாகாது இது எவ்விதமாயிருந்தால் ஜாதகனுக்கு பின் சகோதரர்கள் கிடையாதெனுங்குறிதப்பாது எ று 18

சகோதர காண்டம் முற்றிற்று. ஆக. 552

மாதுரு காண்டம்

மினம் $4\frac{1}{4}$ 12வது	மேஷம் $4\frac{1}{4}$ 1வது	ரிஷபம் $4\frac{1}{2}$ 2வது	மிதுன $5\frac{1}{4}$ 3வது
கும்பம் $4\frac{1}{2}$ 11வது	பனிரெண்டு இராசிகட்கும் 60 நாழிகை ஆகும்.		கடகம் $5\frac{1}{2}$ 4வது
மகரம் $5\frac{1}{4}$ 10வது			சிங்கம் 5 5வது
தனுசு $5\frac{1}{2}$ 9வது	விருச்சி $5\frac{1}{4}$ 8வது	துலாம் 5 7வது	கன்னி 5 6வேது

சுங்கஞருடனேகூடிச் சூரியன்மூன்றினிற்க
அங்கனேயைச்திர்ற்செவ்வா யதர்க்கேழிற்பிறையுதிக்க
இங்கஞேருதையந்தன்னி லிருந்திடப்பாம்புதானும்
செங்கரியுடனேமூன்ருேன் சேர்ந்திடிலொருவஞமே.

(இ ள்] இலக்கினத்திலும் நான்காமிடத்திலும் சுபக்கிரகங்களிருக்க சந்திரனுடனே நால மிடத்ததிபதி சுபக்சிரகங்களுடனே சேர்ந்திருக்க அவர்களை சூரியனும் சனியும் செவ்வாயும் பாராமலிருந்தால் குருவும், நான்காமிடத்ததிபதியும் சந்திரனையும் இராகு பார திருந்தால் அந்த ஜாதகனுக்கு மாதா பூர்ணயுசா இருப்பதற்காகும் எ று 1

திரிவுடமருவப்பாபர் திங்களுங்கூடிநிற்க
எதிரிடமரவநிற்க விளமதிக்கேழிற்காரி
குருவிடமதர்கேழாறிற் குருமதிநான்கேயாகிப்
பருதியமூன்ருேன்கூடிற் பாலன்பின்னில்லை மாதே.

[இ ள்] பத்தாமிடம், ஏழாமிடம் நாலாமிடங்களில் பாபக்கிரகங்களில்லாமல் சுபக்கிரகங்களே இருந்தால் நான்காமிடக்ததிபதி பாக்கியஸ்தானத்திலிருக்க அவர்களுடன் குருரும் சேர்ந்திருக்க பனிரெண்டாமிடத்ததிபதி ஆக்ஷியாயிருந்தால் ஜாதகனுடைய மாதா சதாகாலமும் சுகமாயிருப்பதற்காகும் எ று 2

காரியுமாரல்கூடக் கண்டொருவுதையமூன்றிற்
சூரியனுடனேமூன்ருேன் சுபருமேபாராராகில்
வீரியவிடையிஞகம் விண்மதிநான்கேயாகிற்
பாரிவனுதித்தபின்பு பாலனேயில்லை மாதே.

(இ-ள்) சுக்கிரன் நான்காமிடத்திலிருக்க சூரியன். சனிசெவ்வாயும் பாராமலிருக்க சந்திரன் ஏழாமிடத்திலும் சுக்கிரன் நான்காமிடத்தில் உச்சமாயிருக்க இலக்கினத்தில் வளர்பிறைச் சந்திரனிருந்தாலும் ஜாதகனுடையதாய் நூறு வயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும் எ று 3

அங்கொருமுன்டிற்பாப ரமர்ந்தொருசெவ்வாய்நீசம்
இங்கொருமூன்ருேன்பாவி யிருபுறமிருந்தாராகிற்
செங்கருவரவங்காரி திவாகரன்சசிக்குநான்காய்
எங்கிருந்தாலுமாதே யினிச்சகோதரமேயில்லை.

(இ-ள்) இலக்கினதிபதியும்' நான்காமிடத்ததிபதியும் ஏழாமிடத்ததிபதியும், பத்தாமி த்ததிபதியும் சேர்ந்து கோணத்திலிருந்தாலும் அந்த ஸ்தானுதி கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகனுடையதாயின் சுற்றம் குறையாமலிருக்கும் சந்திரனையும் மூன்ருமிடத்தையும் செவ்வாய், சனி, சூரியனும் பாராமலிருந்தால் ஜாதகனுடைய தாய் உலகத்தில்நூறுவயது வரையிலும் மிருப்பதற்காகும் எ று 4

இப்படியிருந்தபோதி லிதிற்குருசுங்கன்கூட
நற்படச்சோமன்புந்தி நலமுள்ளோர்கூடப்பார்க்கச்
சொற்படச்சுபர்நலத்திற் ருேன்றிடுஞ்சகோதரங்கர்
மெய்ப்படிநம்பவேண்டா மேலாகிநில்லார்மாதே.

(இ-ள்) வளர்ப்பிறைச் சந்திரன் ஆக்ஷி உச்சமாய் பாபக்கிரகங்கள் பார்வை பாராமல நான் காமிடத்தில் குருவிருக்க அவரைச்சத்துருகிரகங்கள் பாராமல் அவர்கள் கேந்திர ஸ்தானங்களிலிருந்தால் அந்த ஜாதகனுடைய தாய் நூறு வருஷமிருப்பதற்காகும் 5

பூமற்குநான்திற்பொன்னும் புந்திக்கோரேழின்மூன்ருேன்
காமர்குமூன்றுநான்காய்க் கருவெள்ளிக்கரிக்கேழாகின்

மூவர்க்குநடுமூன்ருக மூன்றினிலிரவிபாம்பும்
சோமற்குச்சேய்நான்காகிற் சொல்சகோதரமுமுண்டே.

[இ ள்) நான்காமிடத்ததிப்பதியும் சந்திரனும் ஏழாமிடத்ததிபதியும், சம்தானுதிப்பதியும் சுபகிரகங்களாயிருந்தால் இராகு சூரியன் செவ்வாயை பாராமலிருந்தாலும், ஒன்பது ஆறு, எட்டாமிடத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுடைய மாதாவின் குற்றம் யாதொரு குறையுமில்லாமலிருப்பதுடன் ஜாதகன் நூறுவயது வரையிலுமிருப்பதற்காகும் எ று 6

ஆறினிற்சுபரிருக்க வதர்க்கதியதிலேநிற்க
வேருெருபாபர்பாரா விருச்சிகனுட்சியாகி
ஈரரையரசனிற்க விவர்க்குநால்சோமனுகில்
மேலுரைச்சோதரங்கண் மிகுதியாயுண்டுமாதே.

(இ ள்) நாலுக்கு நாலாமிடத்தில் சுபகிரகங்களில்லாமல் போனுல் நாலாமிடத்தானும் நீசஸ்தானத்திலிருக்க சந்திரன் மீனத்திலிருக்க ஜாதகனுடைய தாய்க்கு மாரகமுண்டாகும் எ று 7

ஒரிருவிடத்தாராட்சி யொருமையாயரசன்சேரப்
பாரிவருடனேபாபர் பார்க்கவுங்கிட்டாதாகி
ஆறிருவிடமாய்நிற்க வாரலுஞ்சுங்கன்கூடி
வீரியசகோதரங்கள் வேண்டியதிரளாயுண்டே.

(இ-ள்) பத்தாமிடத்ததிபதியுடனே சனி, செவ்வாய் பாபக்கிரகங்கள் இராகும் சேர்ந்து நிற்க, நான்காமிடத்ததிபதியும் ஏழாமிடத்ததிபதியும் நீசமாயிருக்க சுபக்கிரகங்கள் பகை, நீசமாய் அஸ்தமயமாயிருக்க தேய்ப்பிரைச் சந்திரனுயிருந்தால் ஜாதகன் தாய்க்கு மாரகமுண்டாகும்

நாலுபின்னவனேயுச்ச நலமுளவைந்தோனுட்சி
சேலுளல சந்தீவண்ணன் சிறுபுந்திவியாழங்கூட
ஏலுளமூன்றிற்சோம னீராறிலறெிமைந்தன்
மேலுடனின்ருனுகின் மிகச்சகோதரமேயுண்டே.

(இ-ள்) நான்காமிடத்தில் சந்திரனிருக்க அவர்க்கு நாலாமிடத்தில் சூரியனிருக்க ஜனன லக்கினத்தில் சனி இருந்து சுபர் சேராதிருக்க குரு ஆறு எட்டாமிடத்திலிருக்க அந்த ஜாதகனுடைய தாய்க்கு மாரகமூண்டாகுமென்றும் குறிதப்பாது 9

ஒன்பதாமிடத்தில்ராஜ னெருவனுய்நிற்கத்தானும்
இன்பமாய்ச்சோமனுறி லிருந்தவர்லாபந்தன்னில்
துன்பமாய்ப்பாபர்நீசஞ் சுங்கனுமுதையநின்ருல்
அன்பதாய்ச்சகோதரங்க ளனேகம்பேருண்டுமாதே.

(இ ள்) நான்காமிடத்திலும் ஏழாமிடத்திலும் பாபகிரகங்கள் நீசமாயிருந்தாலும் சந்திரன் வீட்டிலிருக்கும், சனி அஸ்தமிக்க நாலாமிடத்தில் குருவும் சூரியன் உதயலக்கினத்திலுமிருந்தால் ஜதாதகனுடைய தாய் மரணமாவாள் எ று 10

ஆரலுமுன்ருேன்வீட்டை யவ்விடஞ்சுபரேபார்க்கச்
சேரலாய்ச்கூடிநிற்கச் சென்மாதிமதியமாக
வீறிலாதிருக்கப்பாபர் வேண்டியசகோதரங்கள்
மாறிலாதிருக்குமாதே மணிமுடிசேஷனுக

[இ ள்] குருவும் சந்திரனும் நாலாமிடத்திலிருக்க ஜாதகனுடைய வம்சத்தினரெல்லாம் மரணமாவார்கள் சுபகிரகங்களும் பாராமலிருந்தால் ஜாதகன் கர்ப்பத்திலிருக்கும்போதே மாதா மரணமடைவதற்காகுமெனுங்குறி தப்பாது எ று 11

உண்டுபோமூன்றிற்செவ்வாயொருவனுயிவற்கேழ்மைந்தன்
கண்டுபோஞ்சனிமூன்ருகிக் கனலவனேழேயானுல்
விண்டுபோங்கரிபாம்பானுல் விளைவதுமில்லை பின்பு
கொண்டுபோஞ்சசோதரத்தைக் குறியதுகேளாய்மாதே.

(இ ள்] செவ்வாய் நாலாமிடத்திலிருக்க அவரைச் சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் சந்திரனுக்கு நாலாமிடத்திலிருக்க சனி உதைய லக்கினத்திலிருந்தால் ஜாதகனுடையதாய் மரணமாவாள் எ று 12

அத்துடன்போமோமூன்றி லாரலுங்காரிநின்ருல்
செத்துடன்போமேதப்பிச் செல்வரும்பாராராகில்
வித்துடனறுந்துபோமோவெண்கதிர் மூன்ருேன்சேர்ந்தாற்
பத்துடவருடந்தன்னிற் பலனிதுகுறிதப்பாதே.

[இ ள்] ஆருமிடத்ததிபதியும் நாலாமிடத்ததிபதியும் நான்காமிடத்திலிருந்தாலும் நான்காமிடத்ததிபதி எட்டாமிடத்ததிபதியும் பனிரெண்டாமிடத்திலாகிலும் சந்திரன் இராகுடன் சேர்ந்து சூரியனும் ஜனனலக்கினத்திலிருந்தால் ஜாதகனுடைய தாய் மரணமடைவதற்காகும் எறு 13

நேசமாமூன்றில்வந்து நிகழ்குருசோமன்கூடில்
நாசமேமிவற்கடம்மை நல்லவரைன்னம்போமோ
பாசமாஞ்சுபரேயென்று பார்க்கவுநம்பலாகா
மோசமாஞ்சகோதரங்கன் முடிவதுகுறிதப்பாதே.

(இ ள்] செவ்வாயும், சனியும், சேர்ந்து நான்காமிடத்திலிருக்கநான்காமிடத்ததிபதியும் அஷ்டமஸ்தானத்திலும் பனிரெண்டாமிடத்திலுமிருக்க இவர்களுக்கு ஆறு. எட்டாமிடத்தில் சந்திரனும் இராகும் சேர்ந்திருக்க சூரியன் ஜனனலக்கினத்திலிருந்தால் ஜாதகன் தாய் மரணமாவாள் எ று 14

உதையநால்சுபரிருக்க வுத்தமருடனேநாலோன்
சிதையாமற்சோமனிற்கத் திவாகரன்கரிசேய்பாரா
தகையாகக்குருநான்தாகி லரவமுமதியைப்பாரா
திதையாகனின்ருஞகி லெங்நாளுஞ்சதமேமாதர்,

[இ ள்] சூரியன் நாலாமிடத்திலிருக்க ஏழாமிடத்தில் சந்திரனும் சனியும், சேர்ந்திருக்க ஏழாமிடத்தில் செவ்வாய்இராகும்சேர்ந்துஜனன லக்கினத்திலிருக்க சுபகிரகங்கள் பாராமலிருந்தால் ஜாதகனுடைய தாய் மரணமாவதற்காகும் எ று 15

பத்துநான்கேழிற்பாப ரன்றியேசுபரிருக்க
முத்துநான்கோணும்பாக்ய முன்னரசோனுங்கூட
எத்திஞர்களையீராறி லிருந்தவராட்சியாகிற
கொத்துபோற்றழைத்துமாதே குவலயத்தென்றுநிற்கும்.

[இ ள்] மேற்குறிப்பித்த விதமே பாபகிரகங்களிருக்க அவர்களை குரு சுக்கிரன் பார்த்தால் கொஞ்சம் சரீரவியாதியாய் ஜாதகனுடைய தாய் மிதமா. மெலிர்திருப்பதற்காகும் மேற்குறிப்பித்த கிரகங்கள் ஐந்து ஆருமிடத்ததிபதிகளாஞல் ஜாதகன் தாய் மரணமாவாள். ஆனுல் பொது சுபகிரகங்கள் சேர்ந்திருந்தால் ஜாதகன் தாய் எட்டாவது வருஷத்தில் மரணமாவாள் எ று, 16

விடையுநான்கிருக்கலன்றி வெயிலவன்கரிசேய்பாராக்
குடையுளோனிருக்கவேழிற் குறுகியேசுங்கஞன்கில்
நடையுளோனுச்சமாகி நற்பிறையுதையனிற்க
இடைசிறுமாதேகேளா யிருப்பனேமாதர்நூருய்.

[இ-ள்] சுபகிரகங்களும் பாபக்கிரகங்களும் சேர்ந்து நான்காமிடத்தில் சுத்தமாய் செவ்வாயுடன் சேர்ந்து குருவும் இராகுங்கூடி இலக்கினத்திலிருந்தாலும், ஜாதகனுடைய பதினறு வருஷத்தில் தாய் மரணமாவாள் எ று 17

உதையநான்கேழிற்பத்தோ ஞெருமையாய்க் கோணஞ்சேர
அதையவர்கேந்திரமாஞ லந்தமாதாவின்சுற்றம்
சிதைவிலாசோமன்வீறிற் சேய்காரிபகலோன்பாரா
வதையிலாதிருப்பள்மாதா மண்ணிலிநூறதாகி

(இ-ள்) சுபரும் பாபரும்சேர்ந்துசூரியனிடனில்லாமல்பத்தாமிடத்திலும், பனிரெண்டாமிடத்திலும் சந்திரனில்லாமல் நான்காமிடத்திற்கு நான்காமிடத்ததிபதி ஆக்ஷி பெருமல் கன்னியாராசியிலிருந்தால் ஜாதகனுடைய தாய் நெடுங்காலம் தரையிலும் ஜீவித்திருப்பதற்காகும் எ று 18

மாதுரு காண்டம் முற்றிற்று. ஆக 570

பிதுரு காண்டம்

மதியவற்பெருமையாகி மற்றதீக்கோட்கள்பாராச்
சதிரதிலரசனிற்கச் சத்துருபார்வையில்லா
திவர்கேந்திரநான்காய்நின்ரு லேந்திழைமாதேகேளாய்
விதிய திலுயர்ந்தமாதா மேதினியிருப்பனூராய்

(இ-ள்) ஒன்பதாமிடத்திற்கு ஒன்பதாமிடத்திற்கு ஐர்தாமிடத்தில் சுக்சிரனும் குருவுமிருக்க அந்தஸ்தானங்களில் சந்திரனிருந்தாலும் பார்த்தாலும் தமது ஸ்தானத்திற்குடையவன் ஆக்ஷியாய் இலாபஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகன் பிதா நூறுவயது வரையிலுமிருப்பதற்காகும் எ று 1

சதிர்மதியிடத்தானேழோன் சத்தமஞ்சுபரேயாகிற்
கதிரரவிரவிசேய்க்குக் கண்டுடனி ரைப்பாரா
ததிர்நவமாறெட்டாகி லந்தமாதாவின்சுற்றம்
எதிரொருகுறையில்லாம லிருப்பனேவயதுநூருய்

[இ-ள்) சூரியன், உச்சமாய் கோணுதிபதிகள் ஆக்ஷியாயிருக்க கோண ஸ்தானங்களில் வளர்பிறைச்சந்திரனும் குருவுமிருக்த இராகு, செவ்வாய், சனி, புதன் முதலானோர் ஆறு எட்டு, பனிரெண்டாமிடங்களிலிருக்க இந்த ஜாதகனுடைய தகப்பன் பூர்ணயுசுடன் தனதான்ய சம்பத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும் எ று 2

நாலுடனுலிநல்ல நலமுள்ளோரில்லாராகி
ஏலுளநாலேழோனும் மிருந்திடநீசமாகிச்
சேலுளமதியுமீன மாயினுன்மாதேகேளாய்
பீலுள்ளவன்னைபின்பு பிழைப்பதுமில்லைகண்டாய்

(இ-ள்) சூரியன் சுக்கிரன், குரு சந்திரனும் ஒன்பதாமிடத்திலிருக்க இராகு குருக்கேழாமிடத்திலிருக்க சூரியனுக்கு ஏழாமிடத்தில் சனி, இராகு இல்லாத ஜாதனுடைய தகப்பன் சசல சம்பத்துடன் பொருந்தியவனாய் மரணமில்லாமல் பூர்ணயுசுடன் ஜீவித்திருப்பதற்காகும் எ று

பத்துடன்சனிசேய்தீயர் பாம்புமேநின்றாராகில்
இத்துடனுன்கேழா்னு மிழிகுலமாயிருக்கக்
கத்துடனிருந்தநல்லோர் கனங்குன்றியஸ்தமிக்கச்
செத்துடன்போவாளன்னைச் சீரணச்சந்திரனுல்

[இ ள்] ஐந்து ஒன்பதாமிடத்திலுள்ளோர் உச்சமாய் சூரியன் நட்பாக குருவும் சுக்கிரனும் மேற்குறிப்பித்த கிரகங்களுக்கு நாலாமிடம். ஏழாமிடத்திலிருக்க ஐந்தாமிட த்தில் சனியிருந்தாலும், சூரியனுக்கு ஏழிலாகிலும் ஐந்திலாகிலுமில்லாமல் சந்திரன் கோணதிபதியாயிருந்தால் இந்த ஜாதகனுடைய பிதாவுக்கு தீர்க்காயுசாயிருக்கும் எ று 4

அன்னகர்மதிநான்காக வதற்கு நால்செந்திதீவண்ணன்
இன்னதருதையங்காரி யிருந்திடிற்சுபரில்லாமற
பொன்னவனுரெட்டாகிப் போய்விடுமன்னைநில்லாள்
சொன்னவர்பெரியோரிந்தச் சோதனைக்குறிதப்பாதே

[இ ள்] அஷ்டமஸ்தானதிபதியையும் சூரியனையும் சுபக்கிரகங்கள் பார்க்க சனி, செவ்வாய், இராகும், ஆறு எட்டிலிருக்க ஜனனலக்கினத்தில் சுக்கிரனும் புதனுமிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் பொருள் போகாது எ று 5

இந்தநான்கேழும்பாப ரினியவர்நீசமாகில்
மந்தனுருடனேசோமன் மனையவனஸ்தமிக்கில்
அந்தநாளரசராகி யலரியுமுதையநின்றால்
வந்தநாளன்னை தீம்பு வருமிதுகுறிதப்பாதே

இ ள்) குரு இலக்கினத்தில் பலமாய் இருக்க அந்த ஸ்தானத்திற்கு ஐந்து ஒன்பதில் சூரியன், புதன், சுக்கிரன் சேர்த்திருக்க சனியும் செவ்வாயும் இராகும் சேர்ந்து ஏழாமிடத்திலும் நான்காமிடத்திலுமில்லாத ஜாதகனுடைய தகப்பனுக்கு பூர்ணயுசாயிருப்பதற்காகும் எ று 6

குருமதுநான்கிற்கூடக் கொம்பனையாளேகேளாய்
வருமதுவன்னைக்காகா வங்கிசநாசமாகும்
திருகதுமில்லைகண்டாய் செல்வரும்பாராராகிற்
கருவுடச மாதாநாசங் கண்டிடுங்குறிதப்பாதே

(இ ள்) கேந்திர ஸ்தானத்திற்கு எதிரில் குருவும், சந்திரனுமிருந்தாலும் ஏழாமிடத்தில் சூரியனிருக்க சூரியனுக்கு இரண்டு பக்கத்திலும் புதனும், சுக்கிரனுமிருக்க இவர்களைப் பாபக்கிரகங்கள் பாராமலிருந்தால் அந்த ஜாதகனுடைய தகபபனுக்கு அதிக யோகமும் தன தான்ய சம்பத்தும் பெருகி வாழ்வதற்காகும் எ று 7

பூமகனுன்கினிற்கப் புண்ணியர்பாராராகில்
ஆமவனதனுற்சோப னதற்குநான்கிரவிநிற்கச்
சாமவனுதித்தபோதே சனியுமேயுதையமானுற்
போமதுவன்னைகூடன் பிரிவினையில்லாதாகி.

[இ ள்] சூரியனுடைய புதனும் சனி, செவ்வாயும் சேர்ந்து நான்காமிடம் ஏழாமிடங்களில்லாமலும் சந்திரன், குருவுக்கு நான்கு ஏழாமிடத்திலிருந்தாலும், சுக்கிரனுக்குஐந்தாமிடத்தான் நாலாமிடத்தாயிருந்தாலும் ஜாதகனுடைய பிதா தன தான்ய சம்பத்துடன் வெகு மேன்மையாய் பூர்ணயுசுடன் ஜீவித்திருப்பதற்காகும் எ று 8

மூவிருநான்கோர்கூடி முன்சதுரத்தினிற்க
ஈரிருசதிரத்தாரு மிருநான்கிலீராருகப்
பாரிவர்க்காரெட்டாகப் பனிமதியரவுங்கூடிச்
சூரியனுதையநின்றாற் சொல்லுவாய்மரணமன்னை.

(இ ள்] சுக்கிரனும், குருவும், ஒன்தாமிடத்திலிருக்க சூரியன் இலாபஸ்தானத்தில் வளர்பிறைச்சந்திரன் இலக்கினத்திலிருக்க பாபக்கிரகங்கள் பாராதிருந்தால் பிதுருக்கு நல்ல யோகமும் பூர்ணயுசுமாயிருப்பதற்காகும் எ று 9

நிலமகனீலன்கூடி நிற்கவேயதுநான்காகச்
சிலைமதனீனமாகிச் சீணமாய்நின்றாகில்
நலமில்லாச்சுபர்பாராத தாயினுமாதேகேளாய்
சொல்விதிவேறேயில்லைச் சுத்தமாயன்னைசாவள்.

(இ-ள்) ஒன்பதாமிடத்தில் பாபகிரகங்களில்லாமல் சுபக்கிரகங்களிருந்தாலும் பார்த்தாலும் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் சிம்மலக்கினம் கன்னியாலக்கினத்தில் பிறந்த ஜாதகனுடைய பிதா நூறு வயதுவரை யிருப்பதற்காகும் எ று 10

இரவிநான்கிருக்கவேழி லிளமதிசனியுங்கூடப்
பரவிநான்கேழிற்பூமன் பாம்புமேயுதையநிற்க
உரவிலாதிருக்கநல்லோ ரொருவரும்பாராராகில்
அரமிலாதிருக்குமன்னை யன்றிரவதனிற்சாவாள்.

(இ-ள்) குரு நீசமாயிருக்க ஐந்து ஒன்பதில் செவ்வாயிருக்க சனி இலக்கினதிபதியுடன் சேர்ந்து புதனும், சுக்கிரனும், பாராமலிருந்தால் இராகு. சந்திரனுக் கேழாமிடத்திலிருக்க இந்த ஜாதகனுடைய பிதா மாரகமடைந்திருப்பதற்காகும் எ று 11

இதுவாகவிருக்கத்தீய ரிதிற்குருசுங்கன்பார்க்க
மிதமாகச்சிறுநோக்காடாய மேதினியிருப்பாளாகில்
அதுவாகவைந்தாருஞ லன்னையுமரணமாவாள்
பொதுவாகச்சுபரேகூடி போகுமெட்டாண்டிலன்னை.

(இ ள்] குரு எட்டாமிடத்திலும் சூரியன் பனிரெண்டாமிடத்திலிருக்க அவருடன் சனி கூடிநிற்க, ஒன்பதாமிடத்ததிபதியுடன் செவ்வாய் சேர்ந்திருக்க சூரியனுக்கு ஏழாமிடத்தில் சந்திரனிருக்க ஜாதகன் பிறப்பதற்கு முன்தந்தை மரணமாவதற்காகும் எறு 12

சுபர்பாயிகூடிநான்கிற் சுத்தமாம்மதியோடாரல்
அவர்கூடிச்சுத்தநான்கோ னரவமுங்கூடிநிற்க
இவருடனில்லாதாக விருந்திடிலுதயத்தானும்
நவமுறுகாதேகேளாய் நானுன்கில்வீயுமன்னை.

(இ ள்) சுக்கிரன் அஸ்தமனமாயிருக்க குரு. நீசமாயிருக்க அவர்களுக்கேழாமிடத்தில் செவ்வாயும் சனியுமிருக்க ஒன்பதாமிடத்தில் இராகும், சூரியனும் என்பதாமிடத்ததிபதியும் நாலாமிடத்திலிருக்கும்போது பிறந்த ஜாதகனுடைய தகப்பன் மரணமாவதற்காகும் எ று 13

சுத்தமும்பாபிகூடிச் சூரியனுடனேயில்லா
பத்துமுந்நான்குமேழிற் பனிமதியொருவனில்லா
அத்தமுந்நான்குநான்கோ ஞட்சியில்லாமலில்லா
நித்தமுங்கன்னியாகி நெடுங்காலமிருப்பளன்னை.

[இ ள்] குருவுக்கு ஏழாமிடத்தில் செவ்வாயிருக்க ஒன்பதாமிடத்தோன் அஸ்தமயமாய் மூன்றுமிடத்திலாயினுமிருக்கசனியும், சூரியனும் நான்காமிடத்திலிருக்க, ஜனன லக்கினத்தில் இராகு, இருக்கும்போது பிறந்த ஜாதகனுடைய பிதா மரணமாவதற்காகும் எ று 1

ஒன்பதுக்கொன்பதைந்தில் வெள்ளியோனரசனிற்க
இன்பதிக்கினியோரோடே யிந்துவுங்கூடப்பார்க்கில்
தன்பதிக்கிரணஞட்சித் தானுமேலாபமாகில்
அன்பதுக்கன்பதாகி யவன்பிதாவிருப்பனூருய்.

(இ ள்) சனியும், சூரியனும், நான்காமிடத்திலிருக்க ஒன்பதாமிடத்தானும் செவ்வாயும், புதனும், சந்திரனுக்கு நாலாமிடத்திலும், சனிக்கு ஏழாமிடத்திலிருக்க அவர்களை புதனும், சுக்கிரனும் பாராமலிருந்தால் ஜாதகன் பிறப்பதற்கு முன்னமே தகப்பன் மரணமாவதற்காகும் எ று

இரவியுமுச்சமாகிக் கோணருமாட்சியாகப்
பரவியகோணந்தன்னிற் பருமதிபரசனிற்க
அரவுசேய்முடவன்புந்தி யாறெட்டுபனிரண்டாகில்
திரவியமுடையோனுகித் தீர்க்கமாயிருப்பன்றந்தை.

(இ ள்) சூரியனுக்கு முன்னுள் சனியும், பின்னுல் செவ்வாயும், அஸ்டமஸ்தானந்தில் சுக்கிரனும், குருவுமிருக்க ஒன்பதாமிடத்ததிபதியும் இராகும் சேர்ந்து சனிக்கு ஏழாமிடத்திலிருக்க சந்திரனும், புதனும் இராகுக்கு நாலாமிடத்திலிருக்கும்போது பிறந்த ஜாதகனுடைய பிதா மரணமாவார் மாதே எ று 16

பகல்பக்கஞ்சுங்கன்ராஜன் பருமதியொன்பதாகில்
இகலினியோனும்ராஜற் கேழிடமாகிநிற்க
அல்ழவர்க்கேழிற்காரி யரவுசேய்நில்லாதாகிற்
சகலமுமுடையோனுகச் சாவின்றிப்பிதாவுநிற்பன்.

[இ ள்) சந்திரன், குருவுடன் சேர்ந்து ஒன்பதாமிடத்திலிருக்க, மற்ற கிரகங்கள் அவர்களைப்பாராமலிருந்தால் அந்த ஜாதகன் செய்யும் கொடுமைகள் பிதாவுக்காகமல் மரணமாகும்படியாய் நேரிடுமென்றறிவாய் மாதே எ று 17

அஞ்சொன்பதுள்ளோருச்சா மாயிரங்கதிரோனட்பாய்
இஞ்சொன்மாமறையோன்சுங்க னிவர்க்குமேநான்கேழாகிற்
பஞ்சமாய்ப்பாபிநீலன்பாற்கரற்கேழைந்தில்லாச்
செஞ்சோமன்கோணநின்ருற் றீர்க்காயுபிதாவுக்குண்டே.

(இ ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்து ஒன்பதாமிடத்திலிருக்கஅவர்களைச் சந்திரன் பாராமலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சகோதரரில்லாமல் தனது தகப்பனுக்கும் மாரகமுண்டாகும்படியாய்ச் செய்வானெனனுங் குறிதப்பாது மாதே எ று 18

எட்டோனுமெட்டுவீடோ னிரவிவேகைபரேபார்க்க
மட்டிருகரிசேய்பாம்பும் விட்டிவர்காறெட்டாக
விட்டொருவுதையந்தன்னில் வெள்ளியும்புதனுநின்ருர்
பொட்டெனப்பிதாவின்பாக்யம்போகாது கேளாய்மாதே.

[இ ள்] நான்கு பாபகிரகங்கள் சேர்ந்து ஒன்பதா மிடத்திலிருக்க சுபக்கிரகங்கள் சேர்ந்து பாராமலிருக்க அந்த ஜாதகனுக்கு முன்னல் தாய்க்கு கண்டமுண்டாகும் மாதே இந்த குறி தப்பாதென் றுணர்வாய் எ று 19

ஆரியன்பெலத்துநிற்க வதர்க்கைந்தொன்பதினில்ராஜ
சூரியனுடனேபுந்தி சுக்கிரன்கூடநிற்க
காரியுமாரல்பாம்பு கலந்தேழிஞன்கிலில்லா
மாரியென்மேகம்போல வருஷிக்கும்பிதாவுக்காயுள்.

(இ-ள்] சனி நாலாமிடத்திலிருக்க சூரியனும், இராகும் நான்காமிடத்திலிருக்க ஒன்பதாமிடத்தானிருக்கும் ஸ்தானத்திற்கும் செவ்வாய்க்கும், நான்காமிடத்திற்கும், நாலாவது ஸ்தானத்தை சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் அந்த ஜாதகனுடைய பிதாவின் கண்டந்தவருமல் போகும்படியான மாரகமுண்டாகும் எ று 20

சதிரெதிராஜன்சோமன் சத்தமமிரவிநிற்கக்
கதிரிருபக்கமாகக் கணக்கனும்வெள்ளிநிற்க
இதற்கெதிர்பாபர்பாரா திருக்கினுமாதேகேளாய
பிதுர்க்கதியோகமாகிப் பேருளோஞகிவாழ்வன்.

[இ ள்] ஏழாமிடத்திலும் உதயலக்கினத்திலும் பாபக்கிரகமிருந்து சுபக்கிரகங்களில்லாமல் சுக்கிரனின்ருல் ஏழாமிடத்தானுக்கு பக்கத்தில சூரியனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு மிகவும் தாழ்வான நிலையாயிருந்து நிற்கும்படியான குறி தப்பாது எ று 21

பிதுரு காண்டம் முற்றிற்று. ஆக. 591

———

களத்திர காண்டம்

கனலவனுடனேபுந்தி காரிசேய்நான்கேழன்றிப்
புனனவமிடத்தான்சோபன் பொன்னுக்குநான்கேழாகில்
அகல்வெள்ளிக்கைந்தோஞலே ழாகினு மாதேகேளாய்
சுழல்கொண்டுபிதாவின்யோகஞ் சொல்லவுமநேகமு ண்டே.

(இ-ள்) சனிக்கு, ஏழாமிடத்தில் சுக்கிரன் நீசமாயிருக்க சந்திரன் வீட்டுக்கெதிரில் புதனிருக்க, சப்தமாதிபதி செவ்வாய்க்கும், சூரியனுக்கும் நான்காமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு களத்திரநாசம் பலிக்காது எ று 1

வேறெருகுறையில்லாமல் வெள்ளிபொன்னவமிருக்கத்
தாஞெருமறைவில்லாமற் றனியஞயிரவிலாபம்
ஆறெருகலையினூடே யம்புலியுதையநிற்க
வீறிலாப்பாபர்பாரா ராயினும்பிதுர்க்கியோகம்.

(இ-ள்) குரு மூடமாயிருக்க, செவ்வாய் ஏழாமிடத்திலிருக்க இராகுடனே ஏழாமிடத்ததிபதிசேர இராகுக்கு நாலாமிடத்தில் சுக்கிரனிருக்க சனியும் சேர்ந்திருக்க நாலாமிடத்திலிருக்க மனையாளிறந்தேபோவாள் எ று 2

நவமதிற்பாபரன்றி நலமுளோரிருக்கப்பார்க்க
மனமதினலத்தநல்லோர் மகிழ்ச்சியாய்க்கூடிநிற்க
வனமதின்மிருகமேறி வல்லவன்கன்னியாகில்
இனமதின்மிகுதியாக விருப்பனேபிதா நூருக

[இ ள்) இலக்கினுதிபதியும், ஏழாமிடத்தானும் சேர்ந்து சனிக்கு நான்காமிடத்திலிருக்க, குரு ஏழாமிடத்திலிருக்க அந்த ஸ்தானத்திற்கு நான்கில் சுக்கிரனிருக்க செவ்வாயும் சேர்ந்து சுபக்கிரகங்களின் பார்வை படாமலிருந்தால் மனையாள் மரணமடைவாள் எ று 3

ஆரியனீசமாக வைந்தொன்பதாரநிற்கக்
காரியென்லறத்தோன்கூடிக் கணக்கனும்வெள்ளிபாரா
வீரியவிடையிஞகம் வெண்கதிர்க்கேழேயாகிற்
பாரிவனுதியாமுன்னே பிதர்பதஞ்சோராநிற்பன்.

(இ·ள்) இலக்கினதிபதி நீசமாய்ஏழுக்குடையோன் நீசமாய்பின்னு லிருக்க குருவும் பனிரெண்டாமிடத்திலிருக்க செவ்வாயும் சுக்கிரனும் அவருடனே இருக்க ஜனன லக்கினத்தில் சனியிருக்க அவருடனே சூரியனும் இராகுமிருக்க, தேய்பிறைச்சந்திரனுயிருந்தால்மனைவியர்களுக்கு மரணமுண்டாகும் எ று 4

செங்குருவெட்டிநிற்கத் திவாகரன்பனிரண்டாக
அங்கொருசனியுங்கூட வாரலுநவத்தோன்சேர
இங்கொருநவந்திர்ப்பாம்பு மிரவிக்கேழ்மதியுமானூர்
பின்கருவுதியாமுன்னே பிதுர்படிந்திருக்குமாதே.

இ ள்] தன ஸ்தானுதிபதி பகை நீசஸ்தானத்திலிருக்க ஏழாமிடத்த திபதி நீசமாயிருக்க சந்திரனும். சனியும் சேர்ந்து சுக்கிரனும் கூடி நிற்க சந்திரனும் இராகு சேர்ந்தாலும் இவர்களின் நடுவிலிருந்தால் ஜாதகனுடைய மனையாள் மரணமாவதற்காகும் எ று 5

வெள்ளியோனஸ்தமிக்க வேந்தனுநீசமாகத்
துள்ளியேயதற்கேழ்செவ்வாய் சூரியன்புதல்வனிற்கத்
தெள்ளியநவத்திர்ப்பாம்பு திவாகரனவத்தோநான்காய்
அள்ளியகுழவிமுன்னே யவன்பிதாமரணமாவான்

[இ ள்] சனியும், செவ்வாயும் சேர்ந்திருக்க ஏழாமிடத்தில் சூரியனும், இராகுமிருந்தாலும் பனிரெண்டாமிடத்தில் ஏழாமிடத்திலிருந்தாலும் ஜாதகனுடைய மனைவிகள் மரணமாவார்கள் எ று 6

பொன்னவர்கேழிற்பூமன் பொருந்தியநவத்தோனஸ்தம்
நின்றவர்மூன்றைந்தாகி னீலனுமிரவிநான்காய்
என்றவனுதித்தபோதே யிருந்திடிலுதையம்பாம்பும்
கொன்றிடும்பிதாவைமுன்னே கொடுங்கணவிழியினுளே.

[இ ள்] குருவும், சந்திரனும், ஏழாமிடத்திலிருந்தால் இவர்கள்குற்றமில்லாத சுபக்கிரகங்களென்று சொல்லவேண்டாம் மனைவியாளின் தாய் வீடு போய் வாழுஞ் சுடுகாடுபோல அவள் தாய்வீடு நாசமரவதுடன் மனைவியாளும் மரணமாவாள் மாதேஎ று 7

நீலனுமிரவிநான்காய் நிற்கினுநவத்தோன்பூமன்
மாலெனுமதிக்குநான்காய் மந்தனுக்கேழாயாகிற்
காலனும்பிதாவைத்தேடுங் கனகனும்வெள்ளிபாராப்
பாலனைப்பெறுமுன்னேம பட்டினம்பிதுர் தான்போவன்,

(இ-ள்) சுக்கிரன் மீனத்திலிருக்க குருவுக்குஏழாமிடத்திற்கேழாய் இராகும், சனியுமிருக்க, இவர்களுக்கு நாலில் ஜனன லக்கினமிருக்க சூரியன் ஏழாமிடத்திலுமிருந்தால் மனைவியாள் மரணமாதே எ று 8

இரவிமுன்னீலன்பின்னேயிருநான் கில்வெள்ளிபொன்னும்
அரவுமோர்நவத்தோன்கூடி யந்தநீலர்க்கேயேழிற்
பரவியசோமன்புந்தி பாம்புக்குநான்கேயாகில்
மருவுறுங்குழவிமுன்னே மாண்டிடும்பிதாவுமாதே.

[இ-ள்] ஏழாமிடத்ததிபதி ஆக்ஷியாயிருக்க இரண்டுபக்கத்திலும் பாபகிரகங்களிருந்தால், சுக்கிரன் செவ்வாயுடனே சேர்ந்து ஏழாமிடத்தில் சந்திரன், குரு, புதன் முதலானோர் பார்வை செலுத்தாமலிருந்தால் ஜாதகனுடைய மனையாளிறப்பதுடன் அவனுடைய வாழ்வும் குலைந்து போகும் எ று 9

மதியரசோடுகூடி மகிழ்ச்சியாம்நவத்தினிற்க
மிகுதியோரவரைப்பாரா திருக்கிலுமாதேகேளாய்
சதியவர்செய்யுந்தீமை சத்துருபிதாவுக்காகா
விதியதுமுடியுந்தப்பாக் குறியிதுகூறுய்மாதே.

[இ ள்) சுக்கிரன் சுபஸ்தானத்திலிருக்க பாபக்கிரகங்கள் சுற்றியுமிருக்க சூரியனுடன் ஐந்து ஏழுக்குடையவர்கள்சேர்ந்திருக்கஇவர்களை சுபக்கிரகங்கள் பாராமலிருந்தால் களஸ்திரம் மரணமாவாள் மடிவாள் இந்தக்குறி தப்பாது எ று 10

மந்தன்சேயிருவர்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
இந்தவரவரைப்பாரா திருந்தவர்வரேயானுல்
அந்தமாய்ப்பிறப்புநோக்கி லப்பே தேமடிவுண்விக்கிச்
சொந்தமாய்ப்பிதாவைக்கொல்வர் சொல்குறிதப்பா மாதே.

[இ ள்] சுக்கிரனும் ஏழாமிடத்ததிபதியும் எந்த ஸ்தானத்திலாயினுமிருந்து சுபக்கிரகங்களுடனே சேர்ந்தாலும் பார்த்தாலும் அவர்களுடன் பாபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் பார்வைபெருமலிருந்தாலும், ஜாதகடைய மனைவியாள் கற்புநிலை தவருத உத்தமியான பதிவிரதையாயிருப்பதற்காகும் எ று 11

நாலுபேர்பாபர்கூடி நவத்தினினின்றுராகிற்
கோளுயர்பெரியோர்நல்லோர் கூடியேபார்க்கிலன்றி
மாலிபந்திரும்பவந்தக் குழவிமுன்பிதாவின்கண்டம்
ஆலுகந்தமர்ந்தமாதே யதுகுறிதப்பாதாகும்.

(இ ள்) ஏழாமிடத்தில் சுக்கிரனுடனே சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்க இவர்களை பாபக்கிரகங்கள் பார்வையிடாமலிருந்தால் ஜாதகனுடைய

மனையாள் மேலும் மேலும் விருத்தியாகி குடும்ப சகியாயிருப்பதற்காகும் எ று 12

நவத்திடகரிநான்காக நாகமுமிரவிநான்காய்ச்
செழித்திடநவத்தோனிற்குஞ் செவ்வாய்க்குநான்கேயாகி
மதித்திட நல்லோர்பாராராகினுமாதேகேளாய்
குறித்திடும்பிதாவின்கண்டங்கொண்டு போங்குறிதப்பாதே.

[இ ள்] ஏழாமிடத்திற்கிரண்டுபக்கமும் பாபக்கிரகங்களில்லாமல் இரண்டு பக்கத்திலும் சுக்கிரனும், சுபக்கிரகங்களும் பாபகிரகங்களும் சேர்ந்தாலும் பார்த்தாலும் ஏழாமிடத்ததிபதி ஐந்தாமிடத்தில் வல்லமையாய் நின்ருல் அந்த ஜாதகனுக்கு தாழ்வும் பயமில்லாமல் சிறந்தவளாம் ஒருமனைவியாயிருப்பதற்காகும் எ று

ஏழிடமுதையம்பாபி யிருக்கினுநல்லோரன்றித்
தாழ்வுடன்சுங்கநிற்கச் சனிக்குநான்காகிநிற்கச்
சூழிடமேழோன்பக்கல் சூரியனுரல்கூடில்
தாழ்வுடனகுலைந்துநிற்கும் வருமிதுகுறிதப்பாதே.

(இ ள்] சுக்கிரன் ஆக்ஷிபாயிருக்க ஏழாமிடத்திற்குடையோர் நட்பாக குரு ஏழாமிடத்திலும் சந்திரனுக்கு ஏழில் சுக்கிரனுமிருந்தால் சுபக்கிரகங்களுடனே அசுபக்கிரகங்கள் சேராமலிருந்தாலும் ஆறு. எட்டாமிடத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுடைய மனையாள் அநேகநாள்வரையிலுமிருப்பதற்காகும் எ று 14

மந்தனுர்க்கேழிற்சுங்கண் மனையவனீசமாக
வந்தநாளுடையோன்சோமன் மனைக்கெதிர்புந்தியாக
இந்தவேழுடையன்சேய்க்கே யிரவிக்குநான்காநின்ருற்
பந்தமாய்ச்சொல்வாய்மாதே பலியாதுகளத்திரநாசம்.

[இ ள்] இலக்கினுதிபதி ஆக்ஷியாக குரு, இலக்கினத்திலிருக்க இலக்கினுதிபதி உச்சமாயிருக்க அவர்களுக்கேழாமிடத்தில்வளர்பிறைச் சந்திரனிருக்க சனியையும் செவ்வாயையும் சூரியன் பாராதிருந்தால் அந்த ஜாதகனுடைய மனையாள் நூறு வருஷம் வரையிலிருப்பாள் இந்த குறி தப்பாது மாதே எ று 15

குருமூடமாகிநிற்கக் குசனுமேயேழிற்சேர
அருகாடரவர்த்திேனுடே வவ்வேழுக்குடையோர்கூட
பரிவாடரவர்த்தினுலாய்ப் பாங்குள்ளசுங்கனிற்கக்
கரிகூடநான்கேயாகிற் களத்திரபிறந்துபோமே.

(இ ள்) சந்திரனும் குருவும் பத்தாமிதத்திலிருக்க குருவுக்கு நாலாமிடத்தில் சுக்கிரனிருக்க ஏழாமிடத்தில் பாபகிரகங்கள் ஆக்ஷி உச்சமாயிருந்தால் ஜாதகனுக்கு களத்திர பாக்கிய மகமேருகிரி வளருவதுபோல பெருகும் எ று 16

உதையமேழுடையோன்கூட வொருமையாய்ச்சனிக்குநான்காய்
மதியமேழிடத்தில்வேந்தன் மனைக்குநால்சுங்கனிற்கச்
சிதையவேயுதையஞ்செவ்வாய் சேரவேசுபர்பார்ப்பின்றேற்
கதையதாய்முடியும்பின்னே களத்திறமிறந்துபோமே.

[இ ள்] தனசப்தமாதிபதி, நட்பாகத்தனியாக இராமல் சுக்கிரன், புதன், ஏழாமிடத்திற்கு நான்காமிடத்தில் பாபகிரகங்கள் பாராமலும் இலக்கினத்திற்கு ஏழில் குருவிருக்க சந்திரன் உதயத்திலிருந்தால் சப்தமேகம்போல மனையாள் தனக்கு ஆதாரமாயிருப்பதற்காகும் எ று 17

பெற்றவனீசமாகப் புன்னேழுக்குடையோனீசம்
கொற்றவன்பனிரண்டாகக் குசன்வெள்ளிகூடநிற்க
உற்றவனுதையங்காரி யொருபகலரவுநின்ருற்
செத்திடுங்களத்திரமெல்லாஞ் சீர்ணசந்திரனேயானுல்.

(இ ள்) ஜனன இலக்கினத்தில் புதனும், குருவுமிருக்க, சூரியனுக்கு முன்னுல் சுக்கிரனிருக்க சனி, புதன், செவ்வாய், இராகு மேற்குறிப்பித்த கிரகங்களுடன் சேராமலிருந்தால் ஜாதகனுக்கு களதிதரயோகமுண்டாயிருக்கும் எ று 18

தனமவர்குன்றிநிற்கத் தாழ்வதேயேழோனீசம்
மனதவன்காரிகூட மங்களசுங்கன்சேர
இனன்மதனரவங்கூடி யிவர்நடுவாகநின்ருற்
சினமதுநில்லாதாகுஞ் செத்திடுங்களத்திரமெல்லாம்.

(இ ள்) இலக்கினுதிபதி தன் சப்தமாதிபதி சுபர் அங்கிசத்திலிருக்க குரு, சந்திரன், சுக்கிரன், புதன் சேர்ந்தாலும் பார்த்தாலும் சனி, செவ்வாய், சூரியன், இராகு, பார்வை செலுத்தாமல் மறைவு ஸ்தானத்திலிருந்தால், ஜாதகன் ஒரேமனையாளை மணந்து மகமேருபோல ஓங்கி வளர்ந்திருப்பதற்காகும் எ று 19

களத்திர காண்டம்-முற்றிற்று, ஆக. 610

———

தானுதிபலங் காண்டம்

நீலனுமாரல்கூடி நிற்கவேயேழிற்றனும்
கோலாவிரவிசுங்கன் கூடியேநின்ருராகில்
மேலெனுமேழோனீரா திருக்கினுமாதேகேளாய்
காலனோர்களத்திரங்கள் கருவறுங்குறிதப்பாதே.

(இ ள்] இலக்கினத்திற்கு எட்டாமிடத்தானுடன் சேர்ந்த சூரிய னும் விரயஸ்தானுதிபதியும். மாரகஞ்செய்யுப் படியானபகை கிரகங்களா யிருப்பார்களானுல் சகலருக்கும் பகையாயிருப்பார்கள் எ-று. 1

குருமதிகூடியேழிற் கோலமாய்நின்ருராகில்
மருவிவர்சுபராமென்றுமகிழ்ச்சியாய்ச்சொல்லவேண்டாம்
வருமதுகளத்திரவானி வங்கிசநாசமாகும்
திருகதேயில்லைகண்டாய் தெரிந்துரைகுறிதப்பாதே.

(இ ள்) பூரணச்சந்திரனுக்கு, கொடியோரெவர்களெனில் வக்கி நீசமில்லாத குரு, பனிரெண்டு எட்டாமடத்திலிருந்தால் ஜாதகன் சகல ருக்கும் பகையாயிருப்பானென் றுரைப்பாய்மாதே எ-று 2

வெள்ளியுமீனமாக வியாழமுமேழுக்கேழாய்
பிள்ளியினரவங்காரி பொருந்தியேயிவர்க்குநான்காய்
தெள்ளியவுதையஞ்சேய்க்குச் சீருடனிரவியேழில்
துள்ளியேநின்ருராகிற் றுணைவிபோங்குறிதப்பாதே.

[இ ள்] இலக்கினத்தில் சூரியனும், சந்திரனுமிருக்க அவர்களுக்கு இஷ்டமஸ்தானத்தில் சனியும். செவ்வாய்க்கு ஆருமிடத்தில் சூரியனு மிருக்கலாகாது தேய்பிரைச்சந்திரன் ஏழாமிடத்திலிருந்தால் நன்மை யாகும் சந்திரனும் புதனும் சேர்ந்தாலும் தோஷமில்லை மாதே எ-று. 3

ஏழவனுட்சியாகி யிருபுரம்பாபியாகத்
தாழ்விலாச்சுங்கனிற்கத் தபனவனுடனேகூடி
ஏழ்மதியரசன்புந்தி யிவருமேபாராராகில்
வாழ்வுடன்குலைந்துபோமே வருமிதுகுறிதப்பாதே.

[இ ள்] கேந்திரஸ்தானத்தில வளர்பிறைச்சந்திரனும் குரு சுக்கிர னுமிருந்தால் பாபக்கிரகங்களின் தோஷமனுகாது இவர் ஜன் மத்திலும், ஐந்தாமிடத்திலும் ஓன்பதாமிடத்திலுதவியாயிருந்தால் ஜாதகனுக்கு சகல தோஷமும் விலகும் மாதே எ று. 4

சுங்கனுர் சுபமிருக்கச் சுற்றியேபாபர் நிற்க
அங்ஙனேயிரவியோமுட வைந்தேகேதுடையோர்கூட
இங்கையோர்சுபரும்பாரா திருக்கினுமாதேகேளாய்
பங்கமாங்களத்திரவானி பலிக்குமேகுறிதப்பாதே

(இ ள்) சந்திரனுக்கு, ஆருமிடத்தில் புதனும். செவ்வாயும், சனியு மிருக்க சூரியனுக்கு ஐந்தாமிடததில் சுக்கிரனும், இலக்கினத்தில் குருவும் இருந்தால் ஜாதகனுக்கு பகையேயில்லாமல் இந்திரவிமானம் போல வாழ்ந்திருப்பதற்காகும் எ-று. 5

சுங்கனுரேழோன்றனுஞ் சுகமாக நின்ருராகில்
எங்கனுமிவரை நல்லோ ரிருந்திடப்பார்வையாகி
அங்கொருபாபர்கூடி யவர்பார்வையில்லாதாகிற்
பங்கமில்லாமற்றேவி பதிவிருதையாகிநிற்பள்

(இ-ள்) சனி, செவ்வாய், சூரியன். இராகும் அஷ்டமத்திற்கஷ்ட மாயிருந்தால் நன்மையாகும் வாக்குஸ்தானத்திலிருந்தால் சகல கொடு மையும் விலகிப்போகும் பகையாயிருந்தால் திரவியலாபமு முண்டாகும் எ-று. 6

ஏழிடஞ்சுங்கனுரோ டிருந்தவர்சுபரேயாகித்
தாழ்வுடனிவரைப்பாபர் சற்றுமேபாராராகில்
வாழ்வுடனுயர்ந்துநின்று வருவதுகளத்திரமொன்று
நீள்புகழ்குடும்பதேவி யாகியேநிற்பன்மாதே

(இ ள்) இலக்கினுதிபதி சந்திரனுக்கும் சனிக்கும் மறையுஸ் தானத் திலிருந்தால் சூரியனும் செவ்வாயும் சேராமல் இலாபஸ்தானம் ஆரு மிடத்திலுமிருந்தால இலக்கினுதிபதி சந்திரனும் அவர்க்கு ஏழாமிடமல் லாமல் மற்றஸ்தானங்களிலிருந்தால் சதாகாலமும் நன்மையாகவே யிருக்கும் எ-று. 7

ஏழிருபுரமுநல்லோ ரிருந்துமேபாபரின்றிச்
சூழிருபுரமுஞ்சுங்கன் சுபர்பார்க்கவிருக்கக்கூட
வாழிருமேழோனுந்தில் வலுமையாய் நின்ருராகில்
தாழ்வொருபயமுமன்றித்தழைத்தொருமனைவியானிற்பள்

(இ ள்) குருவுக்கு எட்டாமிடத்தில் சனியும், தனஸ்தானத்தில் சுக்கிரனிருந்தஸ்தானத்திற்கு எட்டாமிடத்திற் செவ்வாயிருக்க, சந்திரனிருக்க ஏழில் புதனும் இராகுக்கு எட்டில் சந்திரனிருக்கலாகாது எ-று.

ஆட்சியாய்சுங்கனிற்க வவ்வேழுக்குடையோனட்பாய்ச்
சாட்சியாயரசனேழிற் சசிக் கேழிற்சுங்கனின்ருற்
சூட்சியாய்ச்சுபரைப்பாபர் சூழிடாதாறெட்டாகில்
ஆட்சியாயுறுங்களத்திர மநேகநாளிருப்பர்மாதே

(இ ள்) இன்ஞெருவிதமான பகையைச்சொல் கவனிப்பீர் சூரியனுக்கேழில் சனி இருக்கலாகாது சனிக்கு நாலிலும் ஏழிலும் செவ்வாயிருக்கலாகாது இராகுக்கு ஏழில் சுக்கிரனிருக்கலாகாது செவ்வாய்க்கு ஏழில் சனியுமிருக்கலாகாது எ-று. 9

குடியவனுட்சியாகக் குருவுதையத்தினிற்க
அடியவனுச்சமாகியவர்க்கேழில்ப்பிறையுதிக்க
வெடியவன்காரிசேய்க்கு விண்ணரவிவரைப்பாரார்
கொடியிடைனிற்பனூருய்க் குறியிதுதப்பாமாதே

(இ ள்) குருவுக்கு எட்டாமிடத்தில் சந்திரனும் இருக்கலாகாது சூரியனுக்கெட்டில் குருவுமிருக்கலாகாது சனிக்கு எட்டில் சுக்கிரனுமிருக்கலாகாது சூரியனுக்கேழாமிடத்திலும் நான்காம் இடத்திலும் இராகும் இருக்கலாகாது எ-று. 10

ஒருபிறைமதியனிற்க வொருபத்திற்குருவேனிற்கக்
குருவரைநான்கிற்சுங்கன் கொம்பனேக்கேழாயாகில்
திருகுவாராமற்பாபர் திகழுச்சமாட்சியாகில்
மருவுறுகளத்திரபாக்கிய மகமேருகிரிபோலாமே

[இ ள்] இராகும் சூரியனும் நான்காமிடத்திலும் ஏழாமிடத்திலுமிருக்கலாகாது சூரியனுக்கு ஏழில் செவ்வாயிருக்கலாகாது இவர்கள் சத்துருக்களாய் நட்பில்லாமல் உபயராசியைப் பாராமலிருந்தால் அந்த ஜாதகனுடைய வரவு செலவை கணக்கெடுத்துச் சொல்லமுடியாது பெண்ணே எ-று. 11

தனமுமேழுடையோர் நட்பாய்த் தனியிராச்சுங்கன்புந்தி
இனமேழுவிடத்துநான்கா யிருக்கினும்பாபர்பாரா
மனேமேழிற்குருவேநிற்க மதியுமேவுதையமானுற்
கனமேழுமேகம்போலேக் களத்திரங்கலந்து நிற்கும்

(இ-ள்) இன்ஞெருவிதமான பகைவிபரமும் சொல்வேன் கவனிப்பாய், குரு இருக்கும், அஷ்டமாதிபதி வந்து சேர்ந்தாலுமாகாது சனி சந்திரன் அஷ்டமாதிபதியுடன் சேரலாதாது. சந்திரன் சுக்கிர ஸ்தானுதிபதி வந்து சேர்ந்தாலுமாகாது எ று. 12

சோதி போல்வெள்ளிவீறிச் சூரியன் முன்னேநிற்கப்
பாதியேழுதயந்தன்னிற் பண்டிதனரசன்சேர
நீதியோரில்லாமந்தனிலமகனிரவிபாம்பு
ஏதிலுமில்லாதாகி யிருக்கு மேல்களத்திரயோகம்

(இ-ள்) சந்திரனுக்கு அஷ்டமாதிபதியும், இலக்கினத்திற் அஷ்டமாதிபதியையும் சூரியனுக்கு எட்டாமிடத்ததிபதியையும் சனியும் புதனுடைய ஸ்தானத்திலிருந்தாலும் இவர்கள் சந்திரனுக்காகாது எ-று. 13

வருமுறைத்னத்தினேழோன் வங்கிசநலனேயாகக்
குருதிங்கள்வெள்ளிபுந்தி குலமுளோர்கூடப்பார்க்க
கரிபூமனிரவிபாம்பு காணுமலோ துங்கினின்ருல்
மருமணமொன்றேயாக மகமேருவாகினிற்கும்

(இ-ள்) சுக்கிரனுக்கு அஷ்டமாதிபதியும், சனியும் சூரியனுடன் குருவும், செவ்வாயிருக்கும் ஸ்தானுதிபதியும் சேர்ந்தாலும் இவர்கள் சுக்கிரனுடனே சேர்ந்தாலும் ஆகாது எ-று. 14

சொல்லுநீபகையாரென்னிற்ரேன் றுதையத்துக்கெட்டோன்
நில்லுமோரவியுங்கூடனிசமதுவிரையமன்ரேன்
கொல்லுமப்பகைதானுண்டு கொண்டிருந்தவருங்கூட
வல்லினுமிருந்தாராகில் வருவதுபகைதானுண்டே

(இ-ள்) இலக்கினுதிபதி சுக்கிரனும், குருவுக்கு எட்டிலிருக்கலாகாது. அவ்விதமாயிருந்தாலும் சுபக்கிரகங்கள் பார்த்தாலும் சேர்ந்தாலும் பகை நட்பென்று அறியாதவர்க்கு இதை கவனித்துரைப்பாய் எ-று. 15

பூரணமதியேயானுற் பொல்லாதாரியாரோவென்னிற்
சீரணமில்லாதாங்கொற்றவனுமேயீராரெட்டிற்
காரணமாகநின்ருர் கனக்கேபகையுமுண்டு
வாரணிதனத்தினுளே வருவது பகைதான் கேளாய்

(இ-ள்) இராகுக்கு ஆறு ஸ்தானுதிபதியும் சஷ்டாஷ்டமம்மாருக்க குருவுக்கு சந்திரனிருந்த ஸ்தானுதிபதி சேராமல் ஆற எட்டாமிடத்தி லிருக்க குருவும் சந்திரனுக்கும், குருவிருக்கும் ஸ்தானுதிபதி சஷ்டாஷ்ட மமாயிருந்தாலும் சூரியனுக்கு சமமாயிருந்தால பகையாயிருப்பார்கள் எ-று. 16

உதையமோரதியுநின்ற வொளிமதிபதியுஞ்சேர்ந்த
அதையதற்கெட்டாய்க்காரி சேய்க்கரசிரவியாகாச்
சிதைவுற்றமதியேற்றிங்க ளிருப்பதுமேழினன்று
இதையிந்துபுந்திநின்ரு லினித்தோஷமில்லை மாதே.

(இ-ள்) இலக்கினுதிபதியும் சுக்கிரனுக்கு எட்டாமிடத்ததிபதியும் புதனுக்காவது. ஆனல் புதனுக்கு அஷ்டமாதிபதி சுக்கிரனுக்காகாது. அவ்விதமான இராசி ஸ்தானங்கள் நலமில்லை தோஷ முண்டாகும் அந்தக்கிரகங்கள் பகையாயிருந்தால் ஜாதகனுக்கு பெருமை கிடையாது எ-று. 17

சொன்னதோர்கேந்திரத்திற் சுபமதியரசன்சுங்கன்
நின்றதிற்கேந்திரமானு னில்லாதுபாபதோஷம்
ஒன்றதிலைந்திற்கைந்தா யொருமையாய்நின்ருராகில்
வென்றதிலுலகிலுள்ள தோஷமேவிலகுமாதே.

(இ-ள்) குருவுக்கு நான்கு ஏழு பத்தாமிடத்ததிபதிகள் சந்திரனுக்கு நட்பாகும் ஆனல் மூன்று ஐந்து ஒன் தாமிடத்ததிபர் சுக்கிரனுக்கு நல்லவராயிருப்பார்கள் சஷ்டாஷ்டம பிரயஸ்தானுதிகள் சனிக்கு நட்பாயிருப்பார்களல்லாமல் சத்ருத்வ மாகாதென்றுணர்வாய் எ-று. 18

சந்திரற்காறிற்புந்தி சரகமாமாறன்மந்தன்
சுந்தரற்கைந்திற்சுங்கன் சொன்னவத்தலத்தில்வேந்தன்
தந்திரமாகனின்ருற் சற்றுமேபகையுமில்லை
இந்திரவிமானம்போல யிருந்துடன்வாழ்வர்தாமே.

(இ-ள்) சந்திரனுக்கு நான்கு ஏழு பத்தாமிடத்ததிபதி குருவுக்கு நல்லவர்கள் வல்லமை பொருந்திய மூன்று ஐந்து ஒன்பதாமிடத்ததிபதி களாயிருந்தாலும் நல்லவர்களேயாகும் எ-று. 19

கனத்துடன்காரிசெவ்வாய் கனமுட னிரவிபாம்பு
கனத்துடனெட்டெட்டாகி யிருக்கினுநலனேயாகும்
மனத்திடமாகனின்ருன் மாறுமேதீமையெல்லாம்
சினத்துடனிருந்தாராகிற் செல்வமும்கொடுப்பர்தாமே.

(இ-ள்) சுக்கிரனிருந்த ஸ்தானத்திற்கு நாலு ஏழு பத்தாமிடத்ததி பதிகள் இராசிக்கு நல்லவர்களாகிய உறவாகும் சந்திரனுக்கு மேலே யிருக்கிறகிரகங்கள் அதிக உறவாயிருப்பார்கள். குரு சஷ்டாஷ்டம விரயஸ்தானுதிபதியாயிருந்தாலும் உறவாயிருப்பார் சனியும் நட்பாயிருப் பதற்காகும் எ-று. 20

உதையமுமதிக்குங்காரியொதுங்கியேனிற்கத்தானும்
சிதையிலேயிரவிசெவ்வாய் சேராமலாபமாறில்
மதிபதியவர்க்கேழன்றி மற்றொருவிடமாய்த்தானே
இதமாகநின்ருராகி லெந்நாளும்பதமேயுண்டு.

[இ-ள்) பாபகிரகங்கள் நின்ற அஷ்டமவிரயஸ்தானுதிபதிகள் சுபக் கிரகங்களுக்கு நல்லவராயிருப்பார்களன்றி பகையென்றறிவீர் அந்த கிரகங்களின் நன்மையையறிந்து சொல்லவேண்டும் எ று 21

கனத்தோர்குருவுக்கெட்டிற் காரியும்விடையுமாகா
மனத்தொருசுங்கனின்ற மனைக்கெட்டிற்செவ்வாயாகச்
சினத்தகோர்மதிக்கேயேழிற் சேர்ந்திடும்புந்தியாகா
இனத்ததோரிரவுக்கெட்டி லிருந்திடுமதியுமாகா.

(இ-ள்) மேற்குறிப்பித்த சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து சோதித்துப் பார்த்தால் தேவலோகத்திலிருக்கும் தேவர்களை போல பலன் சொல்வார்கள் எ று

தானுதிபலக் காண்டம் முற்றிற்று. ஆக. 632

———

திசைச்சக்கிர காண்டம்

———

மீனம் 4¼	மேஷம் 4¼	ரிஷபம் 4½	மிதுன 5¼
கும்பம் 4½	ஒரு தினத்தின் 66 நாழிகையை 12 இராசி அமைந்திருப்ப தின் விவரம்		கடகம் 5½
மகரம் 5¼			சிங்கம் 5½
தனுசு 5½	விருச்சி 5¼	துலாம் 5	கன்னி 4

குரு சொன்னது

இன்னொருபகைதன்கேளா யிரவிக்கேழ்சனியுமாகா
பின்னொருசனிக்கேழ்நான்கிற் பூமனுரிருக்கலாகா
முன்னுறுமரவுகேழின் மூழுசுங்கனிற்கலாகா
இன்னொருபூமனுருக்கேழினுஞ்சனியேயாகா.

(இ-ள்) குரு திசையில் சந்திரன் வரும்போது வலப்புறத்திலும்இடப் புரத்திலுமிருக்கும் இராசி சக்கரத்தைப் பார்த்து பூலோக தேவலோகத் திலுள்ள திரவியத்தைக்களிப்பதற்கு வியாழபகவான் சொன்ன வாக் கியம் தவருது எ று 1

கொற்றவர்க்கெட்டிற்சோமன் கூறினுகுருக்கலாகா
மெய்த்தவரிரவிக்கெட்டிற் கொற்றவனிருக்கலாகா
சுத்தமாய்க்காரிக்கெட்டிற் சுங்கனுமிருக்கலாகா
அந்தவரவிக்கேழ்நான்கி லரவமுமிருக்கலாகா.

(இ ள்] திசையின் பலனைச்சொல்லும்போது புத்திர நாதர்களின் பலனை கவனிப்பதுஎவ்விதமானுலும்சராராசியிலிருந்தால் பகையில்லா மல் நல்லவர்களாக நிற்கும் கிரகங்கள் வந்தால் குறையில்லாமல் உலகத்தலி ருப்பார் மாதே எ று 2

அரவமுகாரிநான்கி லேழிலுமிருக்கலாகா
இரவிக்கோரேழுமாக விருப்பதும்பூமற்காகா

உறவற்றுனிற்கும்வாளு முபமதுபாராராகில்
வரவுடன்போக்குங்கண்டு வகைசொல்லமாட்டார்மாதே.

[இ ள்] வக்கிரம் பிடித்த கிரகங்களின் புத்தியில் சமமாக இருந்தால் நன்மையுண்டாகும் வக்கிரமாயிருந்தாலும் மூடமாயிருந்தாலும் பகை வீட டிலிருந்தாலும் திசாநாதர்களின் புத்தியில் பகைநீச கிரகங்கள் சேர்ந் தால் ஜாதகனுடைய ஜீவனிருக்காது எ று 3

இனியொருபகைதானுண்டீ தியம்புவேன்சொல்லக்கேளாய்
தனிபுறுங்குருவுக்கெட் டான் ருன்வந்துகூடலாகா
சனிமதியுதையமெட்டோர் தாமுமேகூடலாகாப்
பனிசுங்கன்வீட்டோன்வந்து பரிந்திருந்தாலுமாகா.

[இ ள்] திசைகிரகங்களுக்கு இரண்டு மாரக ஸ்தானமிருந்தால் புத்திநாதர்களால் மாரக அந்திரம் வரும்போது பலவிதமான துன்பமும் முண்டாகும் மாரகமும்நாசமுமுண்டாகும் எ று 4

உற்றதோர்மதிக்கேயெட்டோ னுதயத்திற்கெட்டோன்கூட
இற்றதோரிரவிக்கெட்டோன் மந்தரைப்புந்தியூரான்
உற்றகாய்க்கூடினுலு மொருமதிக்கிவருமாகா
அற்றதுசொன்னேனின்ன மாகாது முண்டு மாதே.

[இ-ள்] மூன்று மாரகஸ்தான கிரகங்களைப்பார்த்த சனி எட்டிலிருக்க புதனுடைய திசாபுத்தியில் ஜாதகனுடைய இராசி சக்கிரதிதையனு சரித்து பார்த்தால் மாரகமுண்டாகுமென தெரிந்துக் கொள்ளலாம் எ று 5

சுங்கனுர்க்கெட்டோன்மந்தன் சூரியனிடத்தன்வேந்தன்
பொங்கமாயிடத்தன்சேரப் பூமனுர்வீட்டான்கூடி
அங்ஙனேசுங்கன்பக்க லமர்ந்துடனிருக்கலாகா
மங்கையோற்கினியமாதே மற்றதுஞ்சொல்வேன்கேளே.

[இ ள்] வளர்ப்பிறைச் சந்திரன் சக்சிரத்தில் புதனுடைய திசையா காது சந்திரனுடைய திசாபுத்தியில் ஜாதகனுக்கு பலவிதமானதுன்பமும் துயரமும் நேரிட்டு மாரகமுண்டாகும் எ று 6

உதையாதிசுங்கன்வேந்தற் கெட்டினிலுறையலாகா
இதமாகவிருந்திட்டாலு மேந்திழைமாதேபொல்லார்

அதையோநின்றதுவெபார்த்திங் கூமார்ந்தவர்பகைநட்பென்று
விதமறியாதபேர்க்கு மிதையறிந்தினிகூறே.

(இ-ள்) சனியுடனிருந்தவர் சக்கிரத்தில சூரியன் புத்தி வந்தால் அந்த திசையேயாகாது குரு திசையில் சனி புத்தி வந்தாலும் அவர்கள் ஆறு, எட்டாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு மாரகமுண்டாகு மாதே எ று 7

அரவனுக்காறுவீட்டோ னவருமேயாறெட்டாகி
குருவுக்குமதிவீட்டானுங் கூடாமலாறெட்டாகி
குருவொக்கமதிக்கேயந்த குருவீட்டானுறெட்டாகில்
இரவுக்குச்சமனுய்நின்றிங் கிவருமேபகையாய்நிற்பர்.

(இ-ள்) மாரகஸ்தானத்திலிருந்தவர் இலக்கினத்தையும் குடும்பஸ்தானத்தையும் பார்த்தவர்களும் தேய்ப்பிறைச்சந்திரன் திசைபுத்தியில் வாராமலிருந்தாலும் குருவாயிருந்தாலும் அசுபராய் மாரகஞ்செய்வார்கள் மாதே எ று 8

காணியேசுங்கர்க்கெட்டோன் கருதியேபுந்திக்காகா
பேணியேபுந்திக்கெட்டோன் பெரியசுங்கர்க்குமாகா
நாணியேயிருந்தாராகி னலமில்லைதோஷமுண்டு
பேணியேபகையாய்நின்றுற் பெருமையுமில்லைமாதே.

[இ ள்] அஷ்டமஸ்தானுதிபதியின் திசையினுல் அந்தஸ்தானத்திற்கு எட்டாம் வீ. டின் புத்தியாகாது கேந்திர ஸ்தானுதிபர்களானுல் பொல்லாதவராவார்கள் இவர்கள் திசாபுக்தியானுல் மாரகஞ்செய்வார்கள் எ று 9

அரசற்குநாலேழ்பத்தோ னம்புலிக்குறவேயாகும்
விரசதிர்மும்மூன்றைந்து மூன்றுடன்விட்டார்தாமும்
அரியசுங்கற்குநல்லோ ராநெட்டுபணிரெண்டோரும்
சரசமாயச் சனிக்கே நல்லோரிவர்க்குசத்ருவல்லகாண்டாய்.

(இ-ள்) அஷ்டமஸ்தானதிபதியாக இலக்கினத்திலிருக்க இலக்கினுதி அஷ்டமத்தில் பரிவர்த்தனையாயிருக்க சுக்கிரனுக்கு இரண்டாமிடத்து மாரகாதிபத்தியமுண்டாயிருந்தால் இந்த கிரகங்களின் திசாபுத்தியில் ஜாதகனுக்கு மாரகமுண்டாகும் எ று 10

நலங்கொண்டமதிக்குநான்கே முடன்பத்தோர்கொற்றவர்க்காம்
பெலன்கொண்டமூன்றைந்தோன்பான் பிருகினுக்குறிவேயாகும்

புலன்கொண்டவீராறெட்டோன் பொல்லாதசனிக்கேநல்லோர்
இணங்கொண்டிங்கிருப்பர்மாதே யிப்படிநலன்ருனுண்டே.

(இ ள்] சஷ்டாஷ்டமஸ்தானுதிபதியின் திசாபுத்தினுலும் கேந்திர ஸ்தானுதிபதியானுலும் இவர்களுடைய சக்கிரமானுல் சந்திரன் செவ்வாய் சனி சுக்கிர திசாபுத்தியினுல் அந்த ஜாதகனுக்கு காயமாய் உதிரங்கண்டு மாரகமடைவான் எ று 11

சுக்கிரனிருந்தநான்கேழ் பத்துடன்வீட்டார்தானும்
மெய்க்குறவாமேசந்திரன் மேலுடன்வந்தார்தாமும்
மிக்குறவாமேராஜன் விரையமோடெட்டாரேனும்
நற்குறவாமேயந்த னண்ணுறுமுறவுமாதே.

(இ-ள்) இரண்டு மாரகஸ்தானுதிபர்கள் திசைவரும்போது சந்திரஸ்தானுதிபன் சேர்ந்தால் மாரகஞ் செய்வார்களென்றுரைப்பாய் மாதே எ று 12

நில்லதுபார்பர்நின்ற நிலையதுக்கெட்டீராரேர்
வல்லதுசுபர்க்குநல்லோர் வரும்பகையில்லைமாதே
சொல்லதினலனறிந்து சூட்சியாயறிந்துசொல்வாய்
அல்லதீதறிந்துபார்ப்போ ரமரர்க்குமிக்கோராமே.

(இ ள்) மாரகஸ்தானுதிபருக்கு முன்னுல் சென்ற திசையாயிருந்தால் மாரகஸ்தானுதிபதியே கொல்லும்படியான மாரக கண்டந்தப்பித்திடும் ஒருவருக்கொருவர்க்மேல் பட்டிருந்தால் மாரகஞ்செய்வார்கள் எ று 13

சொன்னதோர்சாஸ்திரத்தைச்சோதித்துப்பார்த்தாராகில்
விண்ணதோருலகிலுள்ள வேந்தனுர்க்கதிகமாவர்
மன்னவருலகிலுள்ள மணிமுனிக்கதிகமாதி
எண்ணவருலகில் வாழ்வுற் றிருப்பர்சொற்கினியமாதே

(இ-ள்] ஆக்ஷி உச்சம் நட்பாயிருக்கும் கிரகங்களுக்கும் நான்காமிடத்திலிருக்கும் கிரகம் மாரகாதிபதியாயிருந்தால் அவர்களுடைய புத்தியில் கொல்லுவார்கள் அவர்கள் பகை நாசம் மூடமாயிருந்தால் அவர்கள் திசையிற்கொல்வார் எ று 14

குருசொன்னது.

பொன்னுடன்தேவமந்திரி பொசிப்புடன்றிசையறிந்து
மன்றினிலுதித்தோர்க்கெல்லாம் வலமிடச்சக்கிரங்கண்டு

விண்ணுடனுலகிலுள்ளோர் விவரமுமறியவேண்டி
எண்ணுடன்வியாழஞ்சொன்ன திதுமொழிதப்பாமாதே.

[இ ள்] இலக்கினம் நான்கு ஏழு பத்தாமிடத்ததிபதி திசைவரும் போது சக்கிரம் பிடித்தவர் கோணுதிபர்களானல் மாரகஞ் செய்யாமல் பூர்ணயுசாயிருக்கும்படி செய்வார்களென்றுரைப்பாய் மாதே எ று 15

திசையவன்பொசிப்பில்வந்தோன் றிருகிலாச்சரமேயாகில்
விசையுள்லசக்கிரத்தான் வெகுண்டதின்பகையில்லாமல்
நிசமதுநல்லோருக நின்றவர்வருவாருகில்
அசைவொருநாளுமில்லை யவனியிலிருப்பன்மாதே.

(இ-ள்) நான்காமிடத்தானுடைய சக்கரத்திற்சார்ந்த கிரகங்களின் புத்தி வந்தால் இலக்கினுதிபதி திசையாகாது சூரியனுடைய புத்தி வந்தால் தோஷமுண்டாகும் இவர்களில் மாரகரில்லா விட்டாலும் கொல்ப வார் மாதே எ று 16

சக்கிரம்பிடித்தோனுண்போன் சமனுகவிருக்கின்நன்மை
வக்கிரத்தாராய்மூடம் வரும்பகையிடமிருக்கில்
நிற்கிறதிசைபொசிப்பி னீசமும்படையோர்கூடில்
நிற்பதேயில்லைசீவ னிசமதுகேளாய்மாதே.

[இ ள்] குரு திசையில் சனி புத்தி வந்தாலும் சுக்கிரன் சந்திரன் குரு புத்தி வந்தாலும் ஜாதகனுக்கு மாரகமில்லாதிருந்தாலும் கண்டாதி கண்டங்களேற்பட்டு மாரகஞ்செயவார்கள் எ று 17

சரியிருமாரகமேயாக வருமதுதிசைநாதர்கே
வருபொசிப்பதற்குத்தானே சரியிருமாரக மேயாக
இருவிதியிடத்தோன்சக்கிர மிருமாரகர்பொசிக்கிற்
கருதொருநாளுநில்லாக் கண்டிடிலுடனேநாசம்.

[இ ள்] சந்திரன் திசையில் புதனுடைய புத்தி வந்தாலும் சுக்கிரன் திசாபுத்தியில் சந்திரன் திசாபுத்தியில் அந்தரமாய் புதனுடைய சக்கிரத்தில் மாரகஞ்செய்வார் எ று 18

மூணுமாரகனேநோக்கி மூடனுறெட்டினிற்கக்
காணவேதிசையோனுகிக் கனலவன்பொசிப்பேயாகி
வேணுமென்றுலுமாக நகருமேசக்கிரமாகிற்
பூணுமேவிதியடைந்து போய்விடுங்குழவிநில்லா.

[இ ள்] கேது திசையில் புதன் சனியின் புத்தி தந்தால்ஜாதகனுக்கு கண்டாதி கண்டந்தோற்றும் மாரகாதிபதியானல் ஜாதகனுக்கு சூது போல் அல்லல் துன்பமுண்டாகி ஜீவன் பிரிந்துபோகும் எ று 19

பூரணச்சந்திரன்சுக்கிரம் புந்தியார் திசையுமாக
வாரணிச்சந்திரனும் வருந்திசைபொசிப்பேயாகி
ஏரணிபுந்தியாரு மெரிசக்கிரம்பொசிப்பேயானுற்
காரணமாகத்தீம்பு கண்டிடுமுடனேசாவே.

[இ ள்] இலக்கினுதிபதியே திசாநாதனுய் எட்டு பனிரெண்டாமிடத்ததிபதிகளுள் புத்தி வந்தால் மாரகஞ் செய்யாமல் சரீர வியாதியாள் விசேஷ பொருள் செலவுநேரிட்டு பலவிதமான கிலேசமுண்டாகிஉலகில் தாழ்ந்தநிலையாயிருந்துதனக்கு சகாயம் செய்பவரில்லாமல்மனந்திகைத் திருப்பான் மாதே எ று 20

சனியுடனிருந்தோன்சுக்கிரன் தபனனுர்பொசிப்பேயாகில்
விதியுடன்றிசையுமாக வேந்தனுர்மந்தனுண்ணிற்
கதிபெறவ றெட்டாகிச் சனியவராகினுலும்
இனியொருநாளுநில்லா வேந்திழைமாதேகேளாய்.

[இ ள்) திசைநாதனுக்கு திரிகோண கேந்திராதிபதி புத்தியில்அரை யாமலிருந்து வாழ்வதற்காகும் ஆறு எட்டு விரயஸ்தானுதிபதிகளானல் கொடுமையான துண்டங்களுண்டாகும் வேறு மாரகஸ்தானுதிபதிகளா யிருந்தால் மாரகஞ் செய்வார் எ று 21

மாரகவிடத்தினின்றோர் மனையவர்குடும்பர்கண்டோர்
சீரணமானச்சந்திரன் றிசைப்பொசிப்பிவரேயானுல்
தேரணிமன்னராகிற் றிரும்பியேகொல்வர்பொல்லார்
ஈரங்குழன்மாதேகேளா யிவரையேநம்பலாகா.

(இ-ள்) சுபக்கிரகங்கள் திசாநாதர்களுக்கு நான்கு ஏழு. ஐந்தாமிடத்தோர்களாகவும் அல்லது இவர்கள் தர்ம கர்மாதிகளாகவும் லாபஸ் தானுதிபதிகளாகவுமிருந்தால் மாரகஞ்செய்வார்கள் மற்ற கிரகபுத்தி வந்தால நன்மையாகும் எ று 22

அட்டமன்றிசையோகி யதற்கெட்டோன்பொசிப்பேயாக
✤நட்டமற்கெட்டோன்சக்கிர நவிலட்டமாதியுண்ணில்
இட்டமாய்கேந்திரமாகி யிவருமேபொல்லாராவர்
துட்டராய்கொல்வர்கண்டாய் தோன்றியேயிருந்தாராகில்

(இ-ள்] சுக்கிரதிசைசை கவனித்து புத்திநாதரிருக்கும்ஸ்தானத்தை யும் கவனித்து பகை நீசஸ்தான நிலேயை ஆராய்ந்துணர்ந்து நட்பு ஸ்தானத்தையும் மாரகஸ்தான நிலேயையும் பார்த்து சொல்குறிதப்பாமல் வியாழபகவான் புகன்ருர் எ று 23

எட்டவனுகமன்ன னிருந்திடவுதையந்தன்னிற்
பொட்டெனவுதையத்தானும் போயிருந்தெட்டினிற்க
மட்டிலாச்சுங்கனுர்கு மாரகமிரண்டேயாகத்
திட்டெனவிவறகேசக்கிரந் திசைபொசிப்பாஞற்சாவே.

[இ ள்] கிரகங்களின் மாரகஸ்தானத்தைக் கவனித்து அஸ்தமஸ் தானத்தையும் பார்த்து சம்மந்தமாயிருக்கும் கிரகங்களின் நன்மை தீமையை பார்த்து சந்திரனிருக்கும் ஸ்தானமும் பார்வை செலுத்தும் கிரகங்களேயும் பார்த்து சொல்லும்படியாய் வியாழபகவான் சொன்ஞர் எ று 24

ஆறெடடுக்குடையோஞகி யவன்றிசைபொசிப்பாஞலும்
ஏறிட்டுக்கேந்திரமாஞே ரிவர்கையிற்சக்ரமாகில்
மாறிட்டமதிசேய்நீலன் மணிச்சக்கிரப்பொசிப்பேயாஞல்
வேறுபட்டுதிரங்கண்டு வீழ்வனேகெண்டந்தப்பா.

(இ ள்] திசைநாதருக்கு ஏழாமிடத்தான் புத்தி வந்தால் அவர்கள் சுபராயிருந்தால விசேஷ திரவியலாபங்கிடைப்பதற்கிசைந்த நன்மை யாயிருக்கும் அசுபராயிருந்தால் நன்மையில்லாத துன்பமடையுமென்று தமிழுணந்தோர் புகல்வார் எ று 25

சேரிருமாகரத்தோன் றிசைவரும்போதுசக்கிரம்
கூரணுப்பிடித்திட்டோனில் கூடினுர்கொல்வன்மாதே.
ஆருமோர்மர்ரகத்தி ல மர்ந்தவன்சக்கிரமேந்திற்
பாரவன்கொல்லானென்று பகர்ந்தனர் நூல்வல்லோரே.

[இ ள்) பொருத்தமான சக்கரதிசையின் புத்தியில் சுபராயிருந்தால் யாதொரு துயாமும் நேரிடாமல் சுபமாகவே இருக்கும் கிரகங்கள் ஒரு வருக்கொருவர் இடையூராயிருந்தால் மாரகஞ் செய்வார்கள் மாதே எ று 26

திசை சக்கிர காண்டம் முற்றிற்று. ஆக 658

இநட்டமன்க்ஷீணசந்திரன் விரையாதிபதியென்றும்சிலர்

சக்கிர காண்டம்

மீனம் $4\frac{1}{4}$ உபயரா	மேஷம் $4\frac{1}{4}$ சரராசி	ரிஷபம் $4\frac{1}{2}$ ஸ்திரரா	மிதுன $5\frac{1}{4}$ உபயரா
கும்பம் $4\frac{1}{2}$ ஸ்தான	இராசி 12 60 நாழிகையை		கடகம் $5\frac{1}{2}$ சரராசி
மகரம் $5\frac{1}{4}$ சரராசி			சிங்கம் 5 ஸ்த்ராதி
தனுசு $5\frac{1}{2}$ உபயரா	விருச்சி $5\frac{1}{4}$ ஸ்திரரா	துலாம் 5 சரராசி	கன்னி 4 உபயம்

சுக்கிரன் சொன்ன

உகந்நமாரகற்குமுன்னே யோடியேதிசையிருக்க
அசைந்தமரகனேகொல்ல வாகாதுகெண்டந்தப்பும்
இசைந்திவற்குசந்தபோதிங் கிருவருங்கூடிக்கொல்வர்
கசந்தமா ரேயாஞர் கண்டமேபிண்டந்தப்பும்.

[இ ள்] ராசிசக்கரத்தைக் கவனித்து பாபகிரகங்கள் திசாடத்தியில் சூரியன் கண்டால் நேரிடும் சுபாசுப பலன்களே சுக்கிரன் சொன்னவாக் கியம் தப்பாது உலகிலுதித்தமனிதர்கள் இதனே கவனித்து பார்த்து பலா பலன் சொல்லுவீர்கள் எ று 1

ஆட்சியமுச்சநட்பு மமர்ந்தவர்க்கொருநான்காக
சூட்சிமாரக ரயாகிற்சுத்தமாய்ப்பொசிப்பிற்கொல்வர்
காட்சியில்லாமனீசங் கடும்பகைமூடமாஞர்
சாட்சியாய்த்திசையிற்கொல்வர் சுக்கிரம்பிடித்தார்சாவே.

(இ ள்] கோண கேந்திராதிபத்திய ஓங்கியே நின்ருலும் கிரகங்கள் நட்பாய் இலாபஸ்தானத்தில் உச்ச அம்சையாயிருந்து வாக்குஸ்தானத் தின் வல்விஜனதீமையெல்லாம் குற்றமில்லாமல் திவ்விய சம்பத்துடன் விலங்குவார்கள் எ று 2

உதையநான்கேழுபத்தோர்க்கொருவேளைதிசையேயானல்
இதைவரும்போதசக்கிர மிருகோணர்பிடித்தாராகிற்
சிதைவொருநாளுமில்லைச் சிரஞ்சீவியாகிநிற்பன்
விதைபதிமாதேகேளாய்விண்ணுளோர்க் குறைக்கும்போதே,

(இ ள்) தனலாபாதி உச்சமாய் இரண்டாமிடத்திலிருந்தால் அவ் விதமில்லாமல் ஒன்பதாமிடத்திலிருந்தாலும் பாபக்கிரகங்கள் அவர்களைப் பாராமலிருந்தால ஆகாக கிரகங்களாயிருந்தாலும் இராசி சக்கிரத்தின் படியே தனலாபமும் பாக்கியசம்பத்து முண்டாகும் எ று 3

சதிரவன்சக்ரமாகச் சார்ந்தவன்பொசிப்புமாகிக்
விதியுடைத்திசையு மாக வெண்கதிர்பொசிப்பு மாக்கி
கதிபெறவந்தாராகிற் கண்டிடுங்கெண்டதோஷம்
இதிலோர்மாரகருமில்லா திருக்கினிங்கொல்வர்மாதே.

(இ ள்) பெண்கள் நாயகமே கேந்திரகோணதிபதிகள் இராசி சக்கி ரத்தின் பின்புரமும் முன்புரமுமாயிருந்தால் கொடுமை செய்வார்கள் மிக நட்பாயிருந்தாலும் சுபக்கிரகங்கள் மேற்கொண்டிருந்தாலும் பாபக் கிரகங்கள் புத்திவரும்போது விசேஷ சம்பத்துடன் உலகில் வாழ்ந்திருப் பதற்காகும் எ று

குருவுடைத்திசையு மாக கொடுநீலன்புத்தியாகில்
அருகொருசுங்கன்சக்ர மந்தணன்பொசிப்பேயாகில்
திருகோர்மாரகமுமில்லா திருக்கிலுமாதேகேளாய்
வருமொருகண்டமாக வந்தபின்கொல்வர்கண்டாய்.

(இ ள்] கேந்திர கோணத்திலிருந்தவர் சுபகிரகங்களாயிருக்க சனி செவ்வாய் சூரியன் பார்வை செலுத்தாமலிருக்க இராசி சுக்கிரத்திலிருக் கும் சுபர்களால தன தான்ய பொன் பொருள் சப்பத்துடன் வாழ்ந்திருப் பதற்காகும் எ று 5

சந்திரன்றிசையோனகச் சக்கிரம்புந்தியேற்கச்
சுந்திரன்றிசைபொசிப்பிற் சிந்தையோனுண்ணலாகி
அந்திரபுந்திசக்ரஞ் சந்திரனுண்ணலாகில்
இந்திரப்பதியோரேனு மிழுத்துடன்கொல்வர்மாதே.

(இ ள்] திசாநாதனுக்கு எட்டாமிடத்தின் அஷ்டமஸ்தானதி இராசி சக்கிரத்தில் குருதிசைக்கு அஷ்டமஸ்தானதிபதி திசையா இருந்தால் இலக்கின விரயஸ்தானதிப்திகளின் புத்தியில் ஜாதகனுக்கு மாரகமுண் டாகும் எ று 6

கேதுவின்றிசையிற்புந்தி கீழ்மகன்பிதாவுமுண்ணிற்
சாதுவின்பூமன்சக்கிரஞ் சனிபொசிப்பாகிற்கெண்டம்
ஏதின்மாரகமேயாகி லேந்திழைமாதேகேளாய்
சூதுபோலல்லலுண்டாய்ச் சுத்தமாய்சீவன்போமே.

(இ ள்) உச்சநட்பு ஆக்ஷியாய் அஷ்டமாதிபதியாய் ஆருமிடத்திலி ருந்தால் இவர்கள் திசையின் புத்திகளில் சக்கரத்தற்குறிப்பிததுபோல் ஜாதகனுக்கு மாரகஞ்செய்வதுடன் ரணவியாதி முண்டாகுமென்று சுக்கிரன் சொன்ன நிலை தவருது எ று 7

உதையாதிதிசையோனகி யோரெட்டீராறேருண்ணிற்
சிதையாமனேக்காடுண்டு செல்வதுமிகுதியுண்டு
மிதமிலாக்கிலேசமாகு மேதினியிருப்புந் தாழ்வாம்
உதவியதோர்கள் கிட்டா ரொளித்துடன்றிரிவன்மாதே

(இ ள்) உச்சமாகவும் உச்சாம்ஸமாகவும் இலாபஸ்தானதிபதியி ன இராசி சக்கிரத்தில் இலாபாதியின் திசையுமாக சுபக்கிரகங்களும் பாபக்கிரகங்களும் இரண்டு எட்டுக்குடையோன் புத்தி வந்தாலும் அச்சாதகன் தன சம்பத்துடையவனயிருப்பதற்காகும் எ று 8

திசைநாதரிருப்பிடத்துத் திரிகோணகேந்திரருண்ணில்
அசையாமனின்றேவாழ்வ ஞறெட்டோன்விரையனுனல்
விசையாகத்தீம்புண்டாகும் வேறுமாரகனேயானல்
நிசமாகச்சீவவானி நினைவதுகேடுசெய்வார்.

(இ ள்) பனிரெண்டாமிடத்ததிபதியும் எட்டாமிடத்ததிபதியும் நீச மாகவும் அஸ்தமானமாகவும் பகை கிரகங்கள் பார்த்தாலும் சோந்தா லும் பலவித துன்பமுண்டாகும் ஆனல் சுபக்கிரகங்களின் திசையான பலன் நடப்பது அதிகமாகும் எ று 9

நன்றவர்திசைநாதருக்கு நான்கேழைந்திடத்தோராகி
அன்றிவர்தர்மகாம மதிலாபமானேராகிற்
கொன்றிடுவோருமற்றோர் குடியவருண்ணிநன்மை
என்றுமேசுகமுமுண்டா யிருப்பனேபுவியின் மாதே.

(இ ள்] இருமாரகஸ்தானதிபதியாகிய அஷ்டமஸ்தானதிபதியும் பத்தாமிடத்திலிருக்க இராசி சக்கரத்தின்படியே இவர்கள் திசையில் சந் திரனுக்கு அஷ்டமஸ்தானதிபதியின் புத்திவந்தால் ஜர்தகன் சக்கிரத் படியே மாரகமடைவான் எ று 10

சக்கிர திசையுமீதிற் பொசிப்பவ னிடமுங்கண்டு
நிற்கிற விதமறிந்து நினைவினுற் பகையுநீச்சம்
மெய்க்குற வதுமறிந்து மேவுமா ரகமறிந்து
சொற்குறி தப்பாதாகச் சொல்லினன் வியாழன்ருனே.

(இ-ள்) மாரகஸ்தானத்திலிருப்பவன் புத்திவந்தால் அந்த கிரகங்க
ளுடன் சம்பந்தமானவரும் பார்வையடைந்த வருமானதிசையில் சக்கிரத்
தின் அடைவின்படியே சந்திரன் நாலிலிருந்தால் ஜாதகனுக்கு மாரக 11
முண்டாகும் எ று

மாரக மறிந்து பார்த்து மடிப்பமல்த மானங்கண்டு
சேர்வு நின்ருேர்நன்மை தீமையு மிடனறிந்து
பார்மதி நினைவறிந்து பார்த்தவ னிருப்புங்கண்டு
சீரகர் பார்வைகண்டு செப்புக வியாழஞ்சொன்னுர்.

(இ ள்] இலக்கினதிற்கு இருபுறமும் மூன்ருமிடத்திலும் பாபக்
கிரகங்களுக்கு முன் பின்னும் அந்த ஸ்தானத்திற்குவலபுரத்திலிருந்தால் 12
சக்கிரத்தின்படியே ஜாதகனுக்கு மாரகமுண்டாகும் என்று

இருந்திடத்திசைநாதர்க்கு மேழிட மானேனுண்ணிற்
பொருந்திடநல்லோராகிற் பொருணலமா கிநிற்கும்
அருந்திநின்றிசைந்தாராகில வருண்ணினன்மையில்லை
திருந்துமிழ்க்கதிகரான செல்வரேசொன்ன நீதி

[இ ள்] இலக்கினத்திற்கு நன்மையான ஸ்தானத்தில் நின்ற திசா
நாதன் ஸ்தானத்தைப்பற்றி பலனையறிந்து சொல்லும்போது இலக்கின
ஸ்தானத்தைட்போல சக்கிரத்தானைப்பற்றி திசாபுத்தி பலனைச்சொல்ல 13
வேண்டும் எ று

பொருந்தியதிசைசக்கிரத்திற் பொசிப்பவர்நலனேயானுல்
வருந்தவும்வேறேவேண்டாம் வருவதுநலனேயானுல்
இருந்தவரொன்றுக்கொன்றே யிடையூர தாகிநின்ருற்
குருந்தையிலிருந்தமாதே கொல்லுவர் குறிதப்பாதே.

[இ ள்) இலக்கினுதிபதி திசையில் சந்திரன் சக்கிரமாயமைந்த
திசையைக்கண்டு புத்திநாதரிருக்குமிடமறிந்தும் மாரகஸ்தானமறிந்து 14
கவனித்தாராய்ந்து பலன் சொல்வாய் மாதே எ று

மிக்கதோர்சக்கிரங்கண்டு மிகைத்தனர்பாபருண்ணும்
தக்கதோர்நிற்கிறத்திற் சரிப்படப்பருதிகாண
இக்கதைசுக்கிரன்சொன்ன திதுமொழிதப்பாதாகும்
ஒக்கவேயுலகிலுள்ளோ ரிக்கருத்தறியத்தானே,

[இ ள்] திசாநாதரிருப்பிடத்திலிருந்து இலக்கினுதிபதி ஸ்தானத்தி
லிருந்து விரயஸ்தானம் வரைக்கும் உள்ள கிரகங்களின் பகை நீசம்அஸ்
தமானமும் ஆக்ஷி உச்சரிப்பு ஸ்தானங்களின் நிலையும் கவனித்து ஜாத
கரிள் மாரகஸ்தான விபரமும் சொன்னுல் விதித்தப்பாமல் சரியாயிருக் 15
கும் எ று

திசை சக்கிர காண்டம் முற்றிற்று. ஆக, 673

திசைபொசிப்பு மாரககாண்டம்

விரய ஸ்தான 12வது	இலக்ன ஜனன 1வது	குடும்ப தானம் 2வது	சகோத ஸ்தான 3வது
இலாப ஸ்தான 11வது	இவ்விதமாகவே ஒ வ்வொருஸ்தானத் திலிருக்கும் கிரகங் களின் பலாபலத்		மாதுர் தானம் 4வது
ஜீவன ஸ்தான 10வது	தையும் இன்னொரு க்கின்னவித பல னென்றும்சொல்ல		புத்ரஸ் தானம் 5வது
பிதுர் ஸ்தான 9வது	ஆயுள் ஸ்தான 8வது	களஸ ஸ்தான 7வது	சத்ரு தானம் 6வது

ஒருகோணகேந்திரபத்திய மோங்கிநின்றிடினுநட்பாய்
இருலாபமிடமுமாகி யிவனுச்சவமிசையாகி
வருமவன்சக்கிரம்வாக்கில் வல்வினைதீமையெல்லாம்
திருகிலாதிருப்பன்மாதே செல்வமுமனேகமுண்டே.

ஜாதகன் பிறக்கும்போது எத்தனையாவது மணி நிமிஷம் உதைய
மாகிறதோ அதை நாழிகை விநாடியாகச்செய்து பனிரெண்டு இலக்கி
னத்தில் எது உதையமாகிறதோ அதையே முதல் வீடாகக் கொண்டு 1
எண்ணி வரவேண்டும்

லாபாதிதனத்தோனுச்சம் ரண்டிடதிருப்பன்மாதே
போகாதவிடத்தோனன்றிப் பொருந்தியநவத்தினிற்க
ஆகாததீமையுள்ளோ ரவருமேயிவரைப்பாரா
தாகாதாசன்க்கிரம்வாங்கிற் றனலாபபாக்கியமுண்டாம்.

27 நக்ஷத்திரங்களிலும் சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது முதலான நவகிரகங்கள் திசாநாதராய் சஞ்சரிக்கும் வருஷங்களின் விவரம் 2

வஞ்சியேகேந்திரகோணர் வலமிடச்சக்கிரம்வாங்கில்
மிஞ்சியேதீமைசெய்யார் மிகநட்பும்பெறுகியுண்டாம்
அஞ்சியேசுபமோர்க்கொண்டிங் கருத்தீயருண்ணினன்மை
கொஞ்சியவுலகில்வாழ்வன் குயிலன்னமொழியினுளே.

கிர்த்திகை உத்திரம் உத்திராடம் மூனறுக்கும் சூரியதிசை 6 வருஷம் 3

நன்றுள்ளகேந்திரகோணத் திருந்தவர்சுபமாய்நிற்கக்
கன்றுள்ளகாரிசேய்க்கு கனவிடையிரவிபாரா
தென்றுள்ளசுபமாய்நிற்கி லிவர்கையிற்சக்கிரம்வாங்கிற்
குன்றுபோலுயர்ந்துசெல்வங் குலாவியேயிருப்பன்மாதே.

ரோகணி அஸ்தம் திருவோணம் இம்மூன்றுக்கும் சந்திரமகாதிசை 10 வருஷம் 4

அருதிசையிடத்தோனெட்டுக் கெட்டவன்சக்கிரமாகிக்
குருதிசைச்சக்கிரத்துக் கெட்டவன்றிசையேயாகி
விதிவரையவர்க்குளுண்ண வாங்கிடுமர கிற்கேளாய்
விதியறவறிந்துசக்கிரம் வேறுபட்டுயிர்தான்போமே.

மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் இம்மூன்றுக்கும் செவ்வாய் திசை 7 வருஷம் 5

உச்சநட்பாட்சியாகி யோரெட்டாய்நின்றோராய்
இச்சையாதிசையுஞ்சக்கிர மிவர்பொசிப்பிவர்க்கேயாகில்
அச்சமில்லாமற்கொல்வ ரவகேடுமுடனேயுண்டு
நிச்சயஞ்சுங்கன்சொன்ன நிலைமொழிதப்பாமாதே.

திருவாதிரை சுவாதி சதயம் இந்த மூன்றுக்கும் இராகுதிசை 18 வருஷம் 6

உச்சமுச்சாம்சையகி யொருலாப மானேன் சக்திரம்
நிச்சமாகிச்சந்திராலாபாதிதிசையுமாக
இச்சையாய்ச்சுபரும்பாப ரீரெட்டோர்பொசிப்பானலும்
அச்சமேயில்லாதாகி யவன்றனமுடையனுவன்

புனர்பூசம் விசாகம் பூரட்டாதி இந்த மூன்றுக்கும் குருதிசை 16 வருஷம் 7

ஈராறுமெட்டுநீச மிழிகுலமஸ்தமானம்
சேராதபகைமையோக ளிடமதுசேரக்கூடல்
ஆரார்கைச்சக்கிரமேனு மறுந்துடன்போமேசொல்லாய்
பார்சுபதிசையேயாகிற் பலன்படலதிகமாமே

பூசம் அனுஷம் உத்திரட்டாதி இந்த மூன்றுக்கும் சனிதிசை 19 வருஷம் 8

எட்டுவீடவனுமாக லிருமரமவர்க்கேயாகித்
திட்டெனப்பத்தினிற்கத் திசைச்சக்கிரமிவர்க்கேயாகப்
பொட்டெனமதிகெட்டோனும் பொசிக்கவும்வருவானகில்
தொட்டதிலருந்துசக்கிரந் துன்பமாய்மாளுஞ்சீவன்

ஆயில்யம் கேட்டை ரேவதி இந்தமூன்றுக்கும் புதன் திசை ! வருஷம் 9

மாரவிடத்தினின்றேன் மனையவன்பொசிப்பேயாக
சேரவுப்பார்வையானுர் திசையவர்சக்கிரமாகிற்
கோரமா விடத்தினின்று கூனுடைமதிநான்காகில்
பாரமாயறிந்துசக்கிரம் பதிநிலையிழந்துசாவன்

அசுவனி மகம் மூலம் இந்த மூன்றுக்கும் கேதுதிசை 7 வருஷம் 10

இருபுரமிரண்டுமூன்றி லிருந்திடப்பாபர்முன்பின்
வருந்திடுமதனினின்றேன் வலிமிடச்சக்கிரமேந்த
திருகெதிர்நின்றேனுண்ண கேந்திரமாய்நின்றோருண்ணில்
மருவலர்குழலினுளே மாளுமேசுங்கன்சொன்னுர்

பரணி பூரம் பூராடம் இந்த மூன்றுக்கும் சுக்கிரதிசை 20 வருஷம் ஆகமொத்தம் நவக்கிரக திசையின் வருஷம் 120

நலங்கொண்டதிசையேநின்ற நன்மனையதனைப்பற்றி
பெலனுண்டுபார்த்துச்சொல்லபிறக்கினே னுதயம்போல
சலநிதிதனக்கீடாகச் சுக்கிரத்தோனைப்பற்றி (யாய்ந்தே
குலனெண்ணிப்பார்த்துச்சொல்வாய் குறிப்பொசிப்பதனை

இவ்] திரைநாதராகிய நவகிரகங்கச் செய்யும் கொடுமைகளை சொல்லுகிறேன் விபரமாய்க் கேட்பீர்கள் கோணகேந்திராதிபர்கள் மாரகம் செய்யமாட்டார்கள் இரண்டு ஏழுவய்து திசை நாதரும் அவ்விதமே ஆகும் தனிமாரகமானல் கொல்வார்கள் எ று 1

உதைபமோர்திசையனுக வோர்மதிசக்கிரமாக
அசையவேதிசைமேற்கொண்டு யொசிப்பவரிடனறிந்து
தசையமாரகமறிந்து சக்கிரப்பொசிப்பறிந்து
இசையுடன்பார்த்துச்சொல்ல யெந்திழைதனத்தினுளே

[இ ள்) மாரகாதிபதியின் திசையின் அஷ்டமஸ்தாஞதிபதி புத்தி
சொல்வான் இரண்டு ஏழுக்கதிபதியான கிரகங்களின் புத்தி வந்தாலும்
கொல்வான் சனியின் கூடச்சேர்ந்த கிரகங்களின் புத்தி நாதனும் மாரக
முஞ் செய்வான் அஷ்டமஸ்தான கிரகங்களின் பகையாயிருந்தால்தமது 2
புத்தியில் கொல்வார்கள் எ று

திசைநாதனிருப்பிடத்துச் சென்மாதிவிரையட்டும்
இசையஸ்தமாளநீச மிழிகுலம்பகைமறிப்பு
விரையுச்சமாட்கிநட்பு வேறுமாரகமுங்கண்டு
நிசமதாய்ச்சொல்வாய்மாதே நிலேயதுகுறிதப்பாதே

(இ-ள்) அஷ்டமஸ்தாஞதிபதியின் திசையில் இரண்டு மாரகஸ்தா
ஞதிட திகளின் புத்தி வத்தாலும் அவர் பகைஸ்தானத்திலிருந்தால்கொல்
வார் எட்டாமிடத்தில் பகை பெற்றிருந்த கிரகமும் கொள்வாய் மாதே 3

திசைநாதன்செய்யுமந்தத் தீதுதான் சொல்லக்கேளாய்
அசையாமனின்ற காணரதிகேந்திரர்கொல்வதில்லே
திசையாகவேழிரண்டு திசைநாதர்கதுவேயாக
நிசமாகமதிக்குமந்தவடைவாஞேன் கொல்வன்ருனே

[இ-ள்] அஷ்டமஸ்தானத்திதிலிருந்த கிரகதிசை வந்தாலும் சந்திர
னுக்கு எட்டாமிடத்ததிபதி புத்திவந்தாலும் கொடுமையே செய்வார்கள்
சப்தமத்திலிருப்பவனுக்கு ஆருமிடத்ததிபதியும் வந்தாலும் கண்டம் நேரி
டும் சந்திரனுக்கு இரண்டு ஏழுக்கதிபர்மளும் மாரகஞ் செய்வார்கள் 4
எ று

வருந்தவன்றிசையிலவந்த வடிவுளோஞகிகொல்வன்
இருந்தவனேழிரண்றி மிவன்பொசிப்பாகிற்கொல்வன்
கருந்தவன்காரிகூட க்கலந்தவன்பொசிப்பாகிற் கொல்வன்
இருப்தவர்பகையேயாஞ லிவருமேகொல்வர்மாதே

[இ ள்) திசாநாதஞகிய சுக்கிரனுக்கு இரண்டு மாகஸ்தாஞதிபதி
யும் வந்தாலும் சந்திரனுக்கு புத்திநாதஞய் வந்தாலும் மற்ற கிரகங்கள்
இவர்க்கு பகையாயிருந்தால் மாரகஞ் செயவாரேனும் குறியாது தான் 5
மாதே எ று

எட்டவன்றிசையுமாக விருமாரகர்பொசிப்பு மாகிப்
பொட்டெனபகையுண்டாகிற் பொகிப்புவந்தளவிற்கொல்லும்
நட்டமுமனேகமுண்டு நகர்விடும்பதிபோந்தீதே
தொட்டவன் போகமட்டுஞ் தொந்தரையுண்டுமாதே

(இ ள்) ஜாதகர்க்கு வருகிற திசையைக் கவனித்து பார்த்து புத்திர
நாதனுடைய பகை யஸ்தனத்தை கவனித்து அவர்களால் கொடுக்கும்
மாரகம் கவனித்தும் சனியுருக்கும் பகைஸ்தானத்தையும் பார்த்து குற்ற
மில்லா நன்மை துன்மைகள் சொன்ஞன் கிரகநிலேயை கவனித்துமாதே 6
எ று

டினிலிருந்தோன்வந்தான் மதிக்கெட்டோன்பொசிபிற்றீது
பொட்டெனவவர்கேயேழீராரவன்பொசிப்பிற்கெண்டம்
மட்டினிற்சோமனின்ற மனக்கேழிரண்டுவீட்டான்
பொட்டெனவாகிநின்ருற் போய்விடுமாவிதானே

(இ ள்] ஜனன லக்கின்த்திஞல் மாரகஸ்தானத்தைப்பற்றி யோ
சிக்கும்போது பாபகிரகங்கள் சேர்ந்து பார்வை செலுத்திஞல் இவை
கவனித்துதான் சொல்வாரென்பர் அவற்றை ஆராய்துணரும் மாரகாதி
பர்கள் காணப்படுவார்கள் ஆகையால் திசாபுத்திரநாதன் இருப்பறிந்து 7
சொல்லவேண்டும் எ று

திசைமரிப்போதேவென்னி லிருமாரமவற்கேயாகி
திசையிருமதிக்குமார ணவனுமேபொசிப்புமாகி
அசையவரிவற்கேபொல்லா தாகாதுபகையேயாஞற்
கொசுமசக்காகக்கொல்வர் குறியிதுகேளாய்மாதே

(இ ள்) சனியினுடைய மாரகமும் இலக்கினம் சந்திரனின்ற இராசி
நாதர் மாரகம் ஆக்ஷி பெற்ற கிரகங்களின் மாரகம் முதலானவர்களே
கவனித்து கிரகங்களின் நட்பு பகையைப் பார்த்துப்பலன் சொல்வாய் 8
மாதே எ று

வருதிசைப்படியேபார்த்து பொசிப்பவன்பகையைக்கண்டு
தருகுமாரகரைப்பற்றிச் சனிநின்றபகையேயாய்ந்து
திருகிலாதூடுதாக்கிந்தீநலன்சொன்ஞன்மெய்யே
மருமணக்குழலிஞளே வருந்திசைபார்க்கும்வாறே

(இ ள்) ஜெனனலக்கிஞதிபதியும் சுக்கிரன் இராகு இவர்கள் ராஜ்
யஸ்தானமென்னும் பத்தாமிட ராசியிலிருக்க அவர்களுக்கேழாமிடராசி
யில் குருவும் சந்திரனும் சேர்ந்து நிற்க நன்மையை தரும் சூரியன் செவ்
வாய் இவர்கள் பத்தாமிடமென்னும் லாபஸ்தானத்திலிருக்கவும் புதனும்
குருவும் நட்பு பெற்றிருந்தாராகில் அந்த ஜாதகன் இவ்வுலகை அரசா 9
ளும் இராஜயோகத்தை யனுபவிப்பான் எ று

உயிருடன் மாரகரைப்பற்றி யொன்றியேதீபர்சேர்ந்து
எதியுட்டுனினறுபார்த்தா லிதைக்கொண்டு போவாரென்க
அதையறிந்துறைக்கவின்ன மதிகமாரகருமுண்டு
வயிரமேயிருப்பறிந்து மருந்திசைபொசிப்பறிந்தே

[இ ள்) ஜனனமான பிள்ளேக்கு இன்னும் சகோதரர்களுண்டா
வென்ருல் சகோதர ஸ்தானங்களிருக்கும் சத்ருமித்திர கிரகங்களிருக்குங்
பிதுர் ஸ்தானம் புத்திரஸ்தானத்தையும் ஆராய்ந்து பார்த்துஅந்த ஸ்தா
னங்களிருக்கும் சனி இராகு கேது முதலான கிரகங்களிருப்பதைப் 10
பார்த்து பலன் சொல்லவேண்டும் எ று

மந்தன்மாரகம் மதியுதையமாரகம்
சொந்தமாயிவர்க ளிவ்விடத்தர்மாரகம்

அந்தமாயப்பத்துபேர் மாரகமறிந்து
வந்ததிசைபகை நட்புரைமாதே

(இ ள்) இராகு நின்ற வீட்டிற்குடைய கிரகம் சந்திரனின்ற ராசிக்கு ஏழாமிடராசியிலிருக்க ஜனன ராசியாதிபதி குரு இராகுவுடன் கூடியிருக்கவும் சுக்கிரன் பத்தாமிடமான ராஜஸ்த்தானத்திலிருக்க அழகு பொருந்திய பெண்ணே அந்த ஜாதகனுக்கு கட்டாயம் ராஜயோகம் சித்திக்குமென்று பெரியோர் கூறுவர் எ று 11

உதித்திடும்பிள்ளைகின்ன முடன்பிறப்புண்டோவெண்ணில்
எதிர்த்திடுஞ்சத்ருமாத்ரு வின்னமும்பிதுருபுத்திரர்
மதித்திடுமரவுகாரி மாமணியிவர்க்கேயெல்லாம்
கதித்தகாரணவன்வீடுங் காரகநிலையும்பார்த்தே

(இ ள்) ஜனனமான குழந்தைக்குச் சொல்லும் ஜாதகத்தைகணித பார்த்து துவாதச ஸ்தானுவிபரமும் கவனித்துச்சொன்னுல் சரியாயிருக்கும் இதை கவனியாமல் வேறே விதமாகத் தேட வேண்டாம் இந்த வாக்கியங்களே சரியாயிருக்கும் இந்த மணிகண்ட கேரள சாஸ்திரம் சரியானதென்று பெரியோர் சொல்லுவார்கள் எ று 12

செனித்திடுமகற்குச்சொல்லுஞ் சீரதுபாகம்போல
குனித்ததுபார்த்துச்சொல்லக் கூறியநிலையா நிற்கும்
வெறித்துநீவேறபார்த்து வெளிபினித்தே வேண்டாம்
மறித்தொருநாளும்பொய்யார் மணிண்டகேரளந்தான்

(இ ள்) வாக்குஸ்தானமென்று இரண்டாமிடத்தில் சுக்கிரன் தனித்திருக்கவும் பிரகாசத்தையுடைய சந்திரன் இராகுடன் சகிதம் பெற்றிருக்கும் நட்கோட்களாகிய புதன் குரு சுக்கிரன் இவர்களிலொருவர் பஞ்சம திரிகோணம் பெற்றிருக்க பதினென்ருமிடவென்னும் லாபஸ்தானத்தில் குருவிருக்க அவனேடு பாவகோட்கள் கூடியிருந்தால் மேர்ச்சொன்ன கிரகங்களின் வாகன யோகம் வீண்போகாதென்று சந்திரனை யொத்த பிறையை யனிந்த பெண்ணே சொல்வாயாக எ று 13

இத்தையேபார்த்துச்சொல்வாயெண்ணெணுக்கருமங்கட்கும்
மற்றுமோர்சாஸ்திரந்தேடி மயங்கிடவேண்டாங்கண்டாய்
வித்தையோரதிகமுள்ள வேதனுர்சொல்லுநீதி
வித்தகமுள்ளநூலில் விதம்போற்தில்லைமாதே

(இ ள்) இந்த மணிகண்ட கேரளமென்னும் ஜோதிடசாஸ்திரத்தை எவ்விதமான காரியங்கட்கும் கவனித்து பார்த்து சொல்லவேண்டும் ஆனுல் மற்ற சாஸ்திரத்தைப்பார்த்து பலன் சொல்லமனமயங்கவேண்டாம் வித்தை அதிகமாயுணர்ந்தகுரு சொன்ன நீதி வாக்கியத்தை போன்ற விஷயத்தின் விதம் கொஞ்சமும் மாறுவதில்லை மாதே எறு 14

திசைபொசிப்பு மாரக்காண்டம்-முற்றிற்று. ஆக. 684

மணிகண்ட கேரள சோதிடம் முற்றிற்று.

சீனிவாச அச்சகம் சூளை, சென்னை-600 112. (1982)